# செல்வநாதம்



1955- 2015
Years



"ஆசிரியர் திலகம்"

**உயர்திரு.இரா.செல்வவடிவேல்**
அவர்களின்

## மணி விழா வெளியீடு

வாழ்க வளமுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வநாதம்

விஞ்ஞான ஆசிரியர்

**உயர்திரு.இரா.செல்வவடிவேல்**

அவர்களின்


# மணிவிழா மலர்

**மணிவிழாச் சபை,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**
**28.06.2015**

“என் கடன் பணி செய்து கிடப்பதே”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் "திலகம்"

**உயர்திரு.இரா.செல்வவடிவேல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழா நாயகன் இராமசாமிச்செட்டியார் செல்வவடிவேல்

## விஞ்ஞான ஆசிரியர்

## 28.06.2015

தாய் : இ.சுப்பம்மாள்

தந்தை : ஆ.இராமசாமிச்செட்டியார்

மனைவி : செ.சியாமளா

பிள்ளைகள் : மிருணாளினி அமலன்
ப.தர்மினி பரமேஸ்வரன்
செ.கணேசவேல்
செ.ரிஷிகோபன்

பேரப்பிள்ளைகள் : ப.ஜெயதுர்க்கா
ப.சுருதிகா

சகோதரர்கள் : குருவம்மாள் சாத்தவராயன்
இரா.பால்ராஜ் (அமரர்)
செல்வராணி கதிர்காமநாதன்
வசந்தி பாலாஜி

தனியார் கல்வி நிறுவன சேவை:
BRIGHT BEEST INSTITUTE - KOKUVIL
01.01.1972 விஞ்ஞான ஆசிரியர்

கற்பித்த தனியார் கல்வி நிறுவனங்கள்:
BOND INSTITUE – யாழ்ப்பாணம்
VIGNESWARA – வேலணை, புளியங்கூடல்
STAR கல்வி நிலையம் – கரம்பன்
PAN கல்வி நிலையம் – பண்டத்தரிப்பு
ROYAL கல்வி நிலையம் – மூளாய், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் கல்வி நிலையம் – வட்டுக்கோட்டை

SCIENCE ACADEMY – நெல்லியடி, அச்சுவேலி.

பிரத்தியேக கல்வி நிலையம் – கொட்டடி, யாழ்ப்பாணம்.

YARL HALL கல்வி நிலையம் – யாழ்ப்பாணம்

MANI கல்வி நிலையம் – நாச்சிமார் கோவிலடி

NIRU கல்வி நிலையம் – கோண்டாவில்

BITSMAN கல்வி நிலையம் – மானிப்பாய்

ERISON கல்வி நிலையம் – யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், வட்டுக்கோட்டை.

ROYAL கல்வி நிலையம் – யாழ்ப்பாணம், நல்லூர்

பொதுப்பணி :

(1) தலைவர், சைவசமய அபிவிருத்திக் கழகம், சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்.

(2) செயலாளர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

(3) உபதலைவர், கலாசாரப் பேரவை, யாழ்ப்பாணம்.

(4) தலைவர், கலை பாட்டுப் பேரவை, யாழ்ப்பாணம்.

(5) தலைவர், வட மாகாண கல்வி அபிவிருத்திக்குழு.

(6) செயலாளர், தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணம்.

விருதுகள்:

(1) ஆசிரியர் திலகம், சொல்லின்செல்வர் – நரசிங்க வைரவர் தேவஸ்தானம், இணுவில்.

(2) செஞ்சொற்செல்வர் – ஸ்ரீகாளிகா தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(3) செஞ்சொல்வாணர் – சைவவித்தியா விருத்திக் கழகம், திருநெல்வேலி.

(4) பிரசங்க திலகம் – பொன்னாலை ஸ்ரீவரதாஜப்பெருமாள் தேவஸ்தானம்.

(5) செஞ்சொற்சுரபூபதி – பிள்ளையார் தேவஸ்தானம், உப்புமடம்.

(6) சமூக திலகம் – கொட்டடி சனசமூக நிலையம்.


(7) சிவநெறிச்செல்வர் – வட்டுக்கோட்டை முருகன் ஆலயம்

(8) சைவத்தமிழ் வேந்தன் – கடையிற்சுவாமி தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(9) யாழ் ரத்னா விருது – கலாசாரப் பேரவை, யாழ்ப்பாணம்.

(10) "தேசபந்" விருது – கலாசாரப் பேரவை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழா நாயகன் பாரியாருடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வநாதம்

## மணிவிழா மலர்

விஞ்ஞான ஆசிரியர்

**உயர்திரு.இரா.செல்வவடிவேல்**

அவர்களின்

மணிவிழாச் சபை யாழ்ப்பாணம்.

60

**2015**

**திரு.ஞான.திருக்கேதீஸ்வரன்**
**மலர் ஆசிரியர்**

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரின் பெயர் : செல்வநாதம்

வெளியீடு : மணிவிழாச் சபை

முகவரி : யாழ்ப்பாணம்

மலர் ஆசிரியர் : திரு.ஞான.திருக்கேதீஸ்வரன்

முதலாம் பதிப்பு : 2015 ஜீன் 28

அச்சுப் பதிப்பு : சாயி பிறிண்டேர்ஸ், இணுவில்.
077 2209474, 021 2242042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# செல்வவடிவேல் மணிவிழாச்சபை



**தலைவர்**. பேராசிரியர் தேவராசா (வணிகத்துறைத் தலைவர் யாழ் பல்கலைக்கழகம்), **உபதலைவர்.** எஸ் மாணிக்கராசா(பிரதிக்கல்வி பணிப்பாளர்),
**செயலாளர்.** ஞானதிருக்கேதீஸ்வரன் , **உபசெயலாளர்.** S.N.பிரேம்குமார், **பொருளாளர்.** சண்.வாமதேவன், **அமைப்பாளர்.** இரா.அருட்செல்வம், P.சுதர்சன்
**செயற்குழு உறுப்பினர்கள்** . ப.சுரேஸ், பா.பாலமகிந்தன், K.றஜீவன், N.நேசகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 60 ஆவது அகவை நிறைவு

சாந்த குணம் படைத்த சிறந்த நல்லாசான்
ஆவல் மீதூர, அன்பு அகத்தூர – மணிவிழாவின்
தேவை மிக உணர்ந்து திரண்டிடும் சமூகமாய்
சேவைக்கு நாமெடுக்கும், பாராட்டு விழாவாகும்.

மணிவிழாச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| * | ஆசியுரை | i - xvi |
| * | "சொல்லின் செல்வர்" இரா.செல்வவடிவேல் அவர்களால் பல்வேறு இதழ்களுக்கும், பத்திரிகைகளுக்கும் எழுதப்பெற்ற சமய இலக்கிய கட்டுரைகளின் தொகுப்பு | |
| (1) | முடிந்த முடிபு | 1 – 2 |
| (2) | நாவலர் இன்றிருந்தால் | 3 – 4 |
| (3) | எது அழகு | 5 – 7 |
| (4) | கருத்துரை | 8 |
| (5) | இவன் ஒரு முட்டாள் | 9 |
| (6) | வீமன் செய்த பூசை | 10 |
| (7) | விழுமிய செல்வம் | 11 |
| (8) | உடலோடு உள்ளத்தை உயர்த்தும் | 12 – 16 |
| (9) | பாட மறந்தது ஏன் | 17 – 19 |
| (10) | கால பைரவர் | 20 – 21 |
| (11) | தாய்த் தெய்வ வழிபாடு | 22 – 25 |
| (12) | திருக்குறளில் அதிகாரமுறை வைப்பு | 26 – 27 |
| (13) | சான்றோர் வழியில் | 28 |
| (14) | கெட்டவர்களைக் கண்டால் ஒதுங்கு | 29 |
| (15) | யாருக்கு யார் உறவு? | 30 |
| (16) | பெரியபுராணத்து அடியவர்கள் | 31 – 33 |
| (17) | யார் பதிவிரதை | 34 |
| (18) | ஆனந்த நிலையம் | 35 – 42 |
| (19) | சமய வாழ்வு காலத்தின் இன்றைய தேவையாகும் | 43 – 46 |
| (20) | பெற்றோரும் பிள்ளைகளும் | 47 – 48 |
| (21) | நீலச் சிற்றாடை | 49 |
| (22) | மானுடவேள்வி | 50 |
| (23) | நன்றே செய்க அதையும் இன்றே செய்க! | 51 – 52 |
| (24) | குருசேவை | 53 |
| (25) | பாரதியின் பார்வை | 54 – 55 |
| (26) | சமயலறையில் சைவம் | 56 – 60 |
| (27) | சுந்தரமகாலிங்கமலை | 61 – 62 |
| (28) | அழுகை பாவங்களை அகற்றும் | 63 – 64 |
| (29) | "மீண்டும் இருட்டறை வாழ்வு வேண்டாம்" | 65 – 66 |
| (30) | சர்வதேச மகளிர் தினம் – 2012 | 67 |
| (31) | "அன்பினால் பண்பினை ஓங்கச் செய்வோம்" | 68 – 69 |
| (32) | "தொண்டே வாழ்வாய், வாழ்வே தொண்டாய்" | 70 – 72 |
| (33) | சைவத்தின் உயிர்நாடி | 73 – 75 |
| (34) | விலைப்பாலை விட முனைப்பால் சிறந்ததன்றோ? | 76 – 77 |
| (35) | இளைஞர்களுக்கு... | 78 – 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (36) | "இளைஞர்களே! உங்களோடு சில நிமிடங்கள்" | 81 – 83 |
| (37) | இளைஞர்களே காதல் செய்வீர்! | 84 – 87 |
| (38) | பாலும் சுவையும் வேறாகும்? | 88 – 89 |
| (39) | நல்லோரார் தொடர்பு | 90 |
| (40) | ஆரோக்கியத்திற்கு வழிகாட்டிய இந்துசமயம் | 91 – 92 |
| (41) | ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் | 93 – 94 |
| (42) | புதியதோர் உலகம் செய்வோம் | 95 – 96 |
| (43) | "புவியை நடத்துக! பொதுவில் நடத்துக" | 97– 98 |
| (44) | இல்லறம் புகுமுன் சிந்தியுங்கள் | 99 – 102 |
| (45) | துயர் துடைக்கும் அருள் நூல்கள் | 103 – 107 |
| (46) | வழிக்குத்துணை | 108 – 109 |
| (47) | மணிவிழா நிகழ்ச்சி நிரல் | 110 – 111 |
| (48) | மணிவிழாச் சபையின் நிறைவுரையாக... | 112 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.




28/6/2015

## அருளாசிச் செய்தி

கல்வி செல்வத்தை அள்ளி வழங்கி மாணவர் சமுதாயத்தை மேலோங்கச் செய்யும் பணியில் சிறப்புற்றுத் திகழும் ஆசிரியர் திலகமாகிய விஞ்ஞான ஆசான் திரு. இரா.செல்வவடிவேல் அவர்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளியிடப்பெறும் மணிவிழா மலருக்கு அருளாசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"மாணவ சக்தி மாபெரும் சக்தி" என்றபடி எதிர்காலம் சிறப்புற கல்வி விருத்தி செய்து "சேவையே தமது தேவை" என்று துலங்குகின்ற ஆசிரியர் திலகம் அவர்கள் அகவை அறுபதில் அளப்பரிய சேவையாற்றும் தன்மையில் உயர்வுற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்தித்து அருளாசிகள் வழங்கி மகிழ்கின்றோம்.

மணிவிழாா நாயகன் நல்லபடி வாழ்ந்து அனைவருக்கும் மகிழ்ச்சியை வழங்கி இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

*இரண்டாவது குருமஹா சந்நிதானம்*
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

சின்மயா மிஷன்
9,செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
19.06.2015

## ஆசியுரை

அன்பான இரா.செல்வவடிவேல் ஐயா அவர்களின் மணிவிழா 28.06.2015 ஆகிய இன்று கொண்டாடப்படுவதும், அதனையொட்டி மணிவிழா மலராக "செல்வநாதம்" வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரிய விடயங்களாகும். செல்வவடிவேல் ஐயா அவர்கள் எமது மக்களுக்கு ஆற்றிக்கொண்டிருக்கின்ற பணி அளப்பரியது. ஈழத்திலே சைவமும் தமிழும் தலைநிமிர உழைக்கின்ற உத்தமர்களிலே ஐயாவும் ஒருவர். செல்வவடிவேல் ஐயா அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்திட, பணி பல செய்திட எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

இறைபணியில்,
**ஜாக்ரத சைதன்யா,**
**வதிவிட ஆச்சாரியார்,**
சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சந்நிதியான் ஆச்சிரமம்

# SANNITHIYAN ACHCHIRAMAM



செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

Selvachchannithy,
Thondaimanaru.

18.06.20.....

## மணி விழா நாயகன் நீடு வாழ!

திரு.இரா.செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு மிக நீண்ட காலமாக ஈடுபாடு கொண்டதோடு அல்லாமல், ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல விதமான பணிகளுக்கும் தன்னாலான சேவையை வழங்குவதில் தன்னிகரில்லா பெருந்தகை.

ஆசிரியர் அவர்கள் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை தமது அறுபதாவது அகவையில் காலடி வைப்பதையிட்டு பெருமிதம் கொள்வதோடு ஐயா அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும் சேவையாற்ற சந்நிதியானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

சுபம் சாந்தி! சாந்தி!!

குருபணியில்,
**மோகன் சுவாமிகள்**
சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVAPOOMI TRUST
# சிவபூமி அறக்கட்டளை

Head Office : Sivapoomi
Kondavil East,
Kondavil.

E - mail :- sivapoomi@gmail.com
Web :- www. sivapoomi.org

T.P.No : 021 222 7938



Incorporated by an order made under section 114 of the trusts Ordinance by the Minister of Justice and Gazette in Gazette Extraordinary No 1685/26 dated 24.10.2010


## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 42 ஆண்டுகளுக்கு முன்பு நான் சந்தித்த இனிய சகோதரன் இரா.செல்வவடிவேல் அவர்களை வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். கல்லூரியின் மாணவ முதல்வனாக, நாகலிங்கம் இல்ல தலைவனாக, கரேட் அணித்தலைவராகவும், பிரபல்யம் பெற்ற சொற்பொழிவாளராக எங்கள் மத்தியில் சிறப்புற்று விளங்குகின்றார். கல்லூரி காலத்திலேயே இவரது நடை, உடை, ஆளுமை தனித்துவம் பெற்று இருந்தது. இளையவர்களாகிய நாம் அவரை ரசித்தோம். 90 காலப்பகுதியில் கம்பன்கழக பேச்சு மேடைகளில் இரவு பகலாக பவனிவந்த நாட்கள் பசுமையாக வுள்ளது. பட்டிமண்டபங்கள், வழக்காடு மன்றங்கள் அனைத்திலும் ஓர் அணித்தலைவராக தன் ஆளுமையால் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். என்றும் என்மீது அன்பும் விசுவாசமும் கொண்ட சகோதரனாக இன்று வரை விளங்கி வருகின்றார். மேடைகளில் சண்டை பிடிக்கிறோம். இறங்கி வந்ததும் ஒருவரையொருவர் அரவணைத்து கொள்வோம். கம்பவாரிதியின் தலைமையில் மிக இக்கட்டான காலகட்டங்களில் மேடைகளை அலங்கரித்த சகோதரன் இரா.செல்வவடிவேல் அவர்களுக்கு இன்று வரை தனித்துவமான ரசிகர் வட்டம் உண்டு.

விஞ்ஞான ஆசிரியராக கடந்த 40 ஆண்டுகள் இம்மண்ணில் சேவை செய்து வரும் அன்பு சகோதரனுக்கு பிரியமானவர்கள் எடுக்கும் மணிவிழா குறித்து பூரிப்படைகிறேன். இறையருளாலும் பெரியோர்களின் ஆசியாலும் பல்லாண்டு வாழ வாழ்த்தி நிறைவு செய்கிறோம்.

நன்றி

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
*தலைவர், சிவபூமி அறக்கட்டளை,*
*தலைவர்,*
*தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க விஞ்ஞான ஆசிரியர்



மதிப்பிற்குரிய விஞ்ஞான ஆசிரியர் திரு.இரா.செல்வவடிவேல் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு கடுமையான பாடத்தை ஒரு மாணவனுக்கு எப்படி இலகுவாகக் கற்பிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டான ஆசிரியர் திரு.இரா.செல்வவடிவேல் தான் எனக் கூறலாம். ஆயிரக்கணக்கான மாணவர்களை தனியார் கல்வி நிலையங்கள் ஊடாக கற்பித்து அவர்களை நல்ல கல்விமான்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வாழ வழிகாட்டியவர் இவர்தான். கால் நூற்றாண்டுக்கு மேலாக விஞ்ஞானத்தைக் கற்பித்து மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் நற்பெயரைப் பெற்றுக் கொண்ட இவர் மாணவர்கள் பெருமளவில் மிகச்சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள காரணமாக இருந்தவர் எனக்கூறினால் அது மிகையாகாது. அனேக மாணவர்கள் கற்பதில் சிரமங்களை எதிர்நோக்கும் விஞ்ஞான பாடத்தை இலகுவில் கற்பிக்கும் ஆற்றல் திரு.இரா.செல்வவடிவேல் அவர்களுக்கே உரித்தான ஆளுமையாகும். இதன் காரணமாக யாழ் மாவட்டத்தில் அவர் கற்பிக்காத கல்வி நிலையங்களே இல்லை எனக் கூறும் அளவிற்கு அவர் பல தனியார் நிறுவனங்களில் விஞ்ஞானத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.

திரு. இரா. செல்வவடிவேல் மாணவர்களுக்கு நல்லாசிரியராகப் பணியாற்றியது போன்றே சக ஆசிரியர்களுக்கு நல்ல நண்பராகவும் விளங்கினார். தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தலைமை தாங்கும் ஆற்றல் கொண்டவராகவும் இவர் விளங்கியமை குறிப்பிடத் தக்கதாகும். இதன் காரணமாகவே தனியார் நிறுவனங்களில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் எப் பிரச்சினைகளையும் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைக்கும் ஆற்றலும் அவரிடம் காணப்பட்டது. வடபகுதியின் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் இயங்கிய இவரின் மனோபாவமே இப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு வித்திட்டதெனக் கூறமுடியும்.

திரு. இரா.செல்வவடிவேல் கற்றலில் மட்டுமல்லாது பல சமூக அபிவிருத்தி அமைப்புக்களுடனும் ஈடுபாடு கொண்டு பல சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். சமூக நலத்திட்டங்களில் ஈடுபாடு கொண்டோரைக் கௌரவித்து "சமூகத்திலகம்; என்ற பட்டத்தினை வழங்கும் கொட்டடி சமூக நல அமைப்புடன் நெருங்கிய ஈடுபாடு கொண்ட இவர் எவர் சமூக சேவையுடன் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அதை ஊக்குவிக்கும் மனோபாவம் கொண்டவராக காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். கல்வி, ஒழுக்கம், சமூக சேவை ஆகிய மூன்று விடயங்களிலும் அக்கறையுடன் தொழிற்பட்டு வரும் திரு.இரா.செல்வவடிவேல் அவர்கள் இந்த வையகத்தில் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து பேருடனும் புகழுடனும் வலம்வர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர். க. தேவராஜா**
(தலைவர், மணிவிழாச்சபை)
தலைவர் / வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சொல்லின் செல்வர்" பற்றி சொல்லால் சில வரிகள்

என் உடன்பிறந்த சகோதரர்களில் ஒருவராகவே இரா.செல்வவடிவேல் அவர்களை இதுவரை காலமும் மதித்தேன், மதித்து வருகிறேன். எதிர்காலத்திலும் மதிப்பேன். இத்தனை நெருக்கமான உறவு கொண்ட என் சோதரனுக்கு "மணி விழா" வந்துவிட்டது என்று ஆயத்தங்கள் நடைபெறுவது என்பது நம்பமுடியாததொன்றாகவே உள்ளது. அவரது சொல்லும் செயலும் உறுதி வாய்ந்தது. அது போன்றே அவர் உடலால் உறுதி பெற்று என்றும் இளமையானவர் போன்ற காட்சி மறக்க முடியாத தோற்றமாக உள்ளது.

விஞ்ஞானத்தை விஞ்ஞானமாக கற்பிக்கின்ற தலைசிறந்த ஆசிரியராக, நல்வழி காட்டுனராக, எதிர் காலத்தை சிறப்பாக படம் பிடித்து இன்றே காட்டுபவராக திகழ்வது எல்லோரிடமும் கண்டு கொள்ளமுடியாத சிறப்பம்சமாகும்.

இன்னும் ஒருபடிமேல் விஞ்ஞானம் கற்பிப்பவர்கள், மெய்ஞ்ஞானத்தை பெரியளவில் நம்புவது இல்லை. ஆனால் சொல்லின் செல்வர் அவர்கள் பிள்ளைகளுக்கு மெஞ்ஞானத்தையும் விஞ்ஞான பூர்வமாக எடுத்துக் கூறுவதில் வல்லவர். வடபுலத்து கோவில்களின் பக்தர்கள் இவரது குரலோசையில் லயித்த காலங்கள் அனேகம்.

யாழ். குடாநாட்டின்' பல்வேறு சபைகளும், சங்கங்களும் இவரின் சேர்மானத்தால் புதுப் பொலிவு பெற்றதை பலரும் வியந்து பேசியதைப் பார்த்திருக்கின்றேன்.

நாவலர் பெருமான்மீது அதீத பற்றும் பெருமையும் கொண்ட இவர், அவரது பணிகளுக்கும் கொள்கைகளுக்கும் உரம் சேர்த்தவர். யாழ். வண்ணை நாவலர் வித்தியாலயத் திற்காக, நாவலர் பெருமானால் தேடி வைக்கப்பட்ட பலகோடி பெறுமதியான கடைகள் காணிகளை கையறுந்த நிலையில் போகாது ஒழுங்குபடுத்திய பெருமைக்குரியவராவர்.

இத்தகைய பல்துறை ஆற்றல் கொண்டவர் கடந்த ஐந்து ஆண்டுகள் வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருந்து ஆற்றிய பணிகள் என்றும் மறக்கமுடியாதது. காலத்தால் அழியாத பல்துறை பணிகளை ஆற்றிய பல்துறை விற்பன்னரான என் சகோதரரனுக்கு மணிவிழா நாளின்போது வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தி கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**சி. மாணிக்கவாசகர்**
(உப தலைவர், மணிவிழாச்சபை)
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னோடு உறவாடிய உற்ற நண்பன்



இரா.செல்வவடிவேல் விஞ்ஞான ஆசானாய் விளங்கிய விந்தை மிகு மனிதன் – தன் குடும்ப நிலை காரணமாக உயர்தரக் கல்வியுடன் தன்னை தனியார் கல்வி நிலையத்தினூடாக ஓர் விஞ்ஞான ஆசிரியராக தன் தடத்தினைப் பதித்து யாழ்மண்ணில் ஓர் பிரபல விஞ்ஞான ஆசிரியராக தன் பெயரைப் பதிவு செய்து இன்று வரை தன்பணி தொடர்கின்ற ஓர் உத்தம புருஷன் இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் இன்று மருத்துவர்களாக பொறியியலாளர்களாக நிகழ்கின்றார்கள் என்பது இவரின் பெயருக்கு புகழ் சேர்க்கின்றது.

ஓர் விஞ்ஞான ஆசானாக இருந்த போதிலும், ஆன்மீக, சமூக பணிகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஓர் சேவையாளன் என் நண்பன் வடிவேல். ஆன்மீகக் கருத்துக்களைத் தனது சொற்பொழிவினூடாக அலை அலையாக தமிழ் பேசும் உலகெங்கும் விதைத்து நின்றவன்.

ஆன்மீகச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள், சுழலும்சொற்போர்கள் என என் நண்பன் ஏறாத மேடைகள் எங்குமே இல்லை. தனது பண்பைத் தொடர்வதற்காக தன்னுடன் இணைந்த இளைய சந்ததியினரையும் வழிப்படுத்திய வல்லமையாளன்.

கம்பன் கழகத்தினூடாக தன் பணியைத் தொடர்ந்து, சைவ பரிபாலன சபையில் நீண்ட காலம் பரீட்சைச் செயலாளராக கடமையாற்றி சிறப்பாகப் பணியாற்றியவர்.

செல்வச்சந்நிதியான் மீதினில் அளவற்ற பக்திகொண்டவராக விளங்கும் எனது நண்பன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் கருமங்களில் பங்காற்றி வருவதுடன், சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை நிகழ்வுகளைச் சிறப்பாக ஆற்றி வருகிறார்.

இவற்றுக்கு மேலாக எனது உற்ற நண்பனாக நான் வடிவேலைப் பார்க்கின்றேன். தனியார் கல்வி நிலையத்தினூடாக தொடர்ந்த எங்கள் நட்பு எங்கள் குடும்ப உறவுவரை தொடர்ந்து வருகிறது. இன்ப துன்பங்களில் தவறாது பங்கேற்கும் உறவுகளாக நானும் வடிவேலும் கலந்துகொள்கிறோம்.

"சொல்லின்செல்வராய்" விளங்கிடும் என் நண்பன் வடிவேலின் மணிவிழா சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**சண். வாமதேவன்**
ஓய்வுநிலை அதிபர்,
யா/கோண்டாவில் இராமகிருஷண ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சொல்லின் செல்வரே வாழி வாழி"





அறுபதில் அகவை காணும்
ஆளுமை கொண்ட ஆசான்
அருங்கல்வி புகட்டி நீயும்
அளவிலாச் சேவை செய்தாய்
அஞ்ஞானம் அகற்றி நீயும்
விஞ்ஞானம் புகட்டி வாழ்ந்தாய்
மெஞ்ஞான அறிவு கொண்டோய்
மேன்மை நற்புகழும் கொண்டாய்.

அண்ணலே அறிவின் செல்வா
அளவில்லா மாணவர் தம்
எண்ணிலா உயர்வுக்காய்
உழைத்த உன் பெருமை கண்டோம்
எத்தனை வைத்தியர்கள்,
எத்தனை பொறியியலாளர்
என்றெல்லாம் ஏற்றம் பெற
என்றுமே உழைத்துவந்தாய்.

விஞ்ஞான மேதை நீயே
மெஞ்ஞான சொல்லின் செல்வா
தமிழ்மனம் கமழும் உள்ளம்
தமிழ் நாவில் துள்ளி ஆடும்
சொற்பொழிவாளன் நீயே
செல்வமாம் வடிவமே நீயே
பற்பல பட்டி மன்றம்
பல மேடைகண்டு கொண்டாய்

உள்ளத்தில் உவகை கொண்டாய்
உத்தம பண்பு கொண்டாய்
பிள்ளைகளின் உயர்வு கண்டாய்
பேர் பல புகழும் பெற்றாய்
பட்டங்கள் பலவும் பெற்றாய்
பண்போடு வாழ்ந்துள்ளாய்
அன்பனே நீ வாழி வாழி
பல்லாண்டு வாழி வாழி.

**ஞான திருக்கேதீஸ்வரன்** (அதிபர்)
K.T.C (கோண்டாவில்)

**இரா.அருட்செல்வம்** (அதிபர்)
A.T.C (இணுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பெருஞ் செல்வம்



கடவுள் மனிதர்களைப் படைக்கும் பொழுது ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு திறமையைக் கொடுத்து இந்த உலகிற்குச் சிருஷ்டிக்கின்றார். ஆனால் ஆயிரத்தில் ஒருவர் பல்துறை விற்பன்னர்களாகப் படைக்கின்றார்.

இராமசாமிச் செட்டியார் செல்வவடிவேல், இந்தக் கதாபாத்திரம். வடபுலத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் தெரியாதவர்களே இல்லை எனலாம். சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோருக்கும் அவரவர் துறைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்றவாறு நாடக்கூடிய கல்வி, கலை, கலாசாரம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், சமூகப்பணி, அறப்பணி. ஆன்மீகப்பணி, சமயப்பணி, தமிழ்ப்பணி என்று எனக்குத்தெரிந்த தசாவதானி செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள் என்னுடைய வயது அவருடைய அனுபவமாக இருந்தாலும் கம்பன் கண்ட இராமன் போல நான் அவருடைய புகழை அருகில் நின்று அனுபவித்தவர்.

ஒரு ஆணினுடைய வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பதைப் போல விழாநாயகனுடைய துணைவியார் திருமதி. சியாமளா செல்வவடிவேல் அவரிடம் நான் கண்ட அறப்பணி ஒரே சொல்லில் கூறினால் இவர் ஒரு அட்சய பாத்திரம். இவ்விருவரும் சேர்ந்து செய்யும் பணிகள் அனுபவித்த அனைவரும் மறந்து விட முடியாத அளவுக்கு இருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

நான் கண்ட செல்வவடிவேல் ஆசிரியரிடம் இருக்கும் வேகம், விவேகம், காரியங்களை முடித்தக் கொடுக்கும் ஆற்றல் ஆகியவை கண்டு வியப்புற்றவர்களுள் நாலும் ஒருவன் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக அவருடன் சமகாலத்தில் தனியார் கல்வி நிலையங்களில் பணியாற்றுபவர் என்ற ரீதியில் நான் ….. அவர் மெய்ஞானத்துடன் போதிக்கும் விஞ்ஞானம் என்பது சந்நிதி முருகன் அவருக்கு கொடுத்த அருள்.

அரச வேலை கிடைத்தும் அதனை ஏற்காது தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பித்து சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகை இரா. செல்வவடிவேல் அவர்களுடைய பவள விழாவிலும் வாழ்த்த இறவன் அருள் புரிய வேண்டும்.

இரா. செல்வவடிவேல் – சியாமளா தம்பதியருடைய பணிகள் தொடர வேண்டும். வாழ்த்துகிறேன் – வணங்குகின்றேன் – பணிகின்றேன்.

என்றும் அன்புடன்
**பி. எஸ். சுதர்ஷன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம்
கொக்குவில்
POTPATHY HINDU SPORTS CLUB
KOKUVIL Reg.No:JD/N/448
e-mail: potpathyhinduSC@gmail.com T.P.No : 021 300 2954 / 0771747999




## அகவை அறுபதில் அழியாப் புகழுடன் எம் விஞ்ஞான ஆசான்......

யாழ் குடாநாட்டின் புகழ்பூத்த விஞ்ஞான ஆசிரியரும், நீண்ட காலமாக சைவத்தையும், தமிழையும் மேன்மைப்படுத்திய " சொல்லின் செல்வர்" எனப் போற்றப்படும் எமது மூத்த ஆசான் உயர்திரு.இரா.செல்வவடிவேல் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு எமது விளையாட்டுக்கழகம் மிகவும் பெருமையடைகின்றது.

ஆசிரியர் அவர்கள் விஞ்ஞானக்கல்வி வளர்சிப்பாதையில் ஆற்றிய சாதனைகளையும் சமூகம்சார் பணிகளையும் நினைவுபடுத்திச் சிறப்பிக்கும் இம் மணிவிழா மலரினை வெளியிடுவதுடன், அவரின் சேவை நலன் பாராட்டு நிகழ்வைச் சிறப்பாக முன்னெடுக்கும் மணிவிழா சபையினர் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எமது பொற்பதிப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் விநாயகர் சனசமூக நிலையத்தில் 1980 – 1982 ம் ஆண்டு வரை இப்பிரதேச மாணவர்களின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தும் வகையில் இலவசமாக கற்பித்தலை சிறப்பாக மேற்கொண்டு பெரும் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது பிரதேசத்தில் இயங்கிவந்த கீன், மணி, விக்கினேஸ்வரா போன்ற தனியார் கல்வி நிறுவனங்களினூடாக விஞ்ஞானக் கல்வியை சிறப்பாக வழங்கி மாணவர்களின் அஞ்ஞான இருளை அகற்றி விஞ்ஞான ஒளியை ஏற்றியுள்ளார்.

இவர் விஞ்ஞானபாட கற்பித்தலுடன் நின்றுவிடாது தமிழையும் சமயத்தையும் வளர்ப்பதிலும் அளப்பரிய பங்காற்றியுள்ளார். இவர் வழிநாடாத்திய பட்டிமன்றங்கள், ஆய்வரங்குகள், கருத்துரைகள் என்றும் சான்று பகர்கின்றன.

எமது விளையாட்டுக்கழகத்தை சிறந்த முறையில் வளர்ச்சியடையச் செய்வதிலும், எமது பொதுக் கட்டமைப்புக்களை நிறுவிச் செயற்படுவதிலும், தன்னால் இயன்ற ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கியதுடன் எமது நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து எம்மை உற்சாகப்படுத்தியுள்ளார். எமது சரஸ்வதி முன்பள்ளி – 2012 கலைவிழா நிகழ்வில் இவரது சேவை எம்மால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர் தனது மணிவிழாவின் பின்பும் ஓய்ந்துவிடாது தனது சேவையை மேலும் சிறப்பாகத் தொடரவும் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நன்றி

B. Balamurali ........ ........
தலைவர் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் செல்ல வடிவேலனே....

சிந்தனையின் வித்தகரே......
சொல்லில் நாவலரே............
செயலின் வல்லவரே............
முத்தமிழின் தேசிகரே...........
பெயரளவில் திருமகளின் புத்திரனே – எங்கள்
செல்வ வடிவேலனே.......

கலைமகளின் கடாட்சம் – தன்னகத்தே
கொண்டு – மாணவர்கள் பலிரின் (பலருக்கு)
விடிவெள்ளியாக நின்றவரே.........

பொது நலம் தன்னகத்தே – கொண்டு
உதவியின் செயல் உருவமாக......
தன்னையே – உருக்கி ஒளிதரும்
பாரினால் ஓய்வு நின்றீரே ........
சொல்லின் வசீகரத்தால் .......
பல மனங்களில் – தனக்கென்று
ஓர் இடம் பிடித்து
பிரசங்கத்தின் வித்தகராக திகழ்ந்து
– நின்றீரே......

புரியாத புதிராக விளங்கிய – விஞ்ஞானத்தின்
தீர்க்க தரிசிபோல – விளங்கி......
எத்தனை எத்தனை மாணாக்கரை
மேதினியில் தோற்றிவித்தீரே.....
உம்முடைய அளப்பரிய செவைக்கு
வையகமே ஈடாவது........

பாரினில் எங்கும் உம்புகழ்' – ஓங்கிட
வானதேவர்கள் உம்மை என்றும் துதிபாடிட
திருமகளும் கலைமகளும் ஒருங்கே
உமக்கென்றும் கடாட்சத்தை
அள்ளி வழங்கிட.....
இம் மேதினியில் உம் கரம்பட்டு
கனவுகள் எல்லாம் நீங்கிட
தீரும் உம் குடும்பம் – சகிதமாக
என்றென்றும் இன்பங்கள் பெற்று
வசந்தங்கள் உம்வாசல் எங்கும் ஊற்றெடுக்க....
நல்லூர் கந்தனருள் அருள் – என்றென்றும்
உம்மைச் சேர
பல்லாண்டு காலம் இவ்வையகத்தில் – தீரும்
உம் குடும்பமும் வாழ வேண்டும்
என வாழ்த்துவோர்.....

**திரு. P. சுரேஸ் (ஆசிரியர்)**
பிரதேச செயலகம்
(வேலணை)

**திரு. S.K. றஜீபன் (ஆசிரியர்)**
பிரதேச செயலகம்
(நல்லூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாநாயகனுடனான பயணம்..
# (கதை அல்ல நிஜம்.)

அறிவு, அனுபவம், வயது என்பன முதிர்ச்சி அடையாத காலத்தில் எவைஎவையெல்லாம் கசப்பினையும் வெறுப்பினையும் தருகின்றதோ, அதுவேஅவற்றின் முதிர்சியின் பின் உவப்பினையும்,விருப்பினையும் ஏற்படுத்துவதோடுஅவை ஈடேறாமல் போயிருந்தால் ஏக்கத்தினையும் தந்துவிடுகின்றது. இது கூட எங்கள் கடந்தகால அனுபவங்களது வெளிப்பாடே..... ஆசிரியர் இரா.செல்வவடிவேல் ஐயாஅவர்களது மணிவிழாமலருக்குஆக்கம் எழுதுவதற்கு இந்தப் பீடீகை தேவையா என நீங்கள் எண்ணலாம். ஆனால் எனக்கு, அறிவு, அனுபவம், வயது என்பன முதிர்ச்சி பெறாத காலத்தில் அறிமுகமாகியவர் என்பதை அறியப்படுத்தவும், அக்காலத்தில் இவரைக் காணும் போது இருக்கும் மகிழ்ச்சியைவிட இவரைக் காணாதபோது கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை என்பதை வெளிப்படையாக தெரியப்படுத்தவுமே இந்தப் பீடிகை. இது எனக்கு மட்டுமல்ல என்னைப் போன்ற பல மாணவருக்கு இருந்தநிலை என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும். இதற்குக் காரணம் அன்றைய காலத்தில் பெற்றோர் ஆசிரியர்களை நம்பினார்கள் ஆசிரியர்கள் பெற்றோரின் நம்பிக்கைக்குஉரியவர்களாக இருந்தார்கள். அப்படியானால் இக்காலத்தில் ஆசிரியர்கள் எப்படி? என்ற கேள்வியைக் கேட்டு சங்கடப்படுத்த மாட்டீர்கள் என்றுநம்புகின்றேன்.

எப்பவுமே வகுப்பில் கடைசிவாங்குவாசிகளாக இருக்கும் எனக்கும் என் நண்பர் குழாத்திற்கும் விஞ்ஞான ஆசிரியரது செயற்பாடு வில்லத்தனமாகவே தெரிந்தது. கேள்வி கேட்பது, ஞானசூனியர்களான எம்மிடம் விஞ்ஞான விளக்கம் கேட்டு எங்கள் Heroism இத்தினை கேள்விக் குறியாக்குவது, எங்கள் பின்வாங்குக் கொள்கையை சிதறடிக்கும் நோக்கில் முன்வாங்கிற்கு முன்வாங்க வைப்பது என நாளுக்குநாள் இவரதுசெயற்பாடு வெறுப்பினையும் கசப்பினையும் ஏற்படுத்தியது. அன்றைய நாட்டு மற்றும் வீட்டுச் சூழல் ஆசிரியரை எம் வழிக்குமாற்றுவதற்கு இடங்கொடுக்காத காரணத்தினால் விஞ்ஞான ஆசிரியருக்காய் எம்மை மாற்றத் தொடங்கினோம் அதனால் தான் இன்றுமணிவிழாமலருக்குஆக்கம் கொடுக்கும் அளவு மாற்றப்பட்டிருக்கின்றோம்.

குழப்படி மாணவர்களாய் அறிமுகமான நாங்கள் ஒருசில மாதங்களில் அன்புக்குரிய மாணவர்களாய் மாறியிருந்தோம் மன்னிக்கவும் மாற்றப்பட்டோம். ஆசிரியர்களது சிறப்பான கற்பித்தலுக்கு மாணவர்கள் வழங்கும் அக்கறையைவிட புறச்சூழல் காரணிகளது பங்களிப்பே மிகமுக்கியமானது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து, அதனை எங்கள் சமூகம் மறந்துவிட்டமையும் இன்றையஆசிரியர்களதுகற்பித்தலின் தோல்விக்குஒருகாரணம். ஏன்பதையாரும் மறுத்துவிடமுடியாது

நான் உயர்தரவகுப்பில் கற்றுக் கொண்டிருக்கும் போது பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற விவாத அரங்கில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அந்தஅரங்கின் நடுவராக, அன்றையஎமது கல்லூரி அதிபர் திரு.க.இராஜதுரைஅவர்களால் செல்வவடிவேல் ஆசிரியர் அழைக்கப்பட்டிருந்தார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் என்னை கண்ட ஆசிரியர் அவர்கள் "படிக்கிறியா இல்லை குழப்படிபண்றியா" என்று அரவணைத்து எனது Flashback இனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுடைத்தார் எங்கள் அதிபரிடம். “இவனும் இன்றைக்கு பேசுகிறான்” என்று என்னை அறிமுகப்படுத்திய அதிபர் எனக்கும் சில credits இனை கஷ்டப்பட்டுபோட்டுக் கொடுத்தார். உடனே “இவன் என்ர மாணவன் சேர், இவங்கள் குழப்படி எண்டாலும் நல்ல பிள்ளையள்” என்று மீண்டும் என்னை தூக்கி நிறுத்தினார் செல்வவடிவேல் ஆசிரியர். இந்த விளம்பரம் இங்கு தேவையா என்று நீங்கள் எண்ணலாம். தேவைதான் ஏனெனில் இரண்டு கல்வித்துறை சார்ந்த பெரியவர்களுமே, தன்னுடைய மாணவனை இன்னொருவர் குறைத்து மதிப்பிடவிடுவதற்கு தயாரில்லாத நிலையில் அன்று இருந்தார்கள் என்பதை சுட்டிக்காட்டவே அதனைக் குறிப்பிட்டேன், இந்தநிலை இன்று அருகிவருகிறதோ என்று எண்ணும் போதுகொஞ்சம் நெருடலாகவே இருக்கின்றது.

அன்றைய விவாத அரங்கின் நிறைவில் மேடையால் இறங்கியபின் என் கையைப் பிடித்து “நல்லாபேசுறாய், நிறையப் புத்தகங்களைப் படி” என்று ஊக்கம் தந்து சென்றவர் ஒருசில வாரங்களின் பின் தனது மயில் வாகனத்தில் (VESPA SELECT) என்வீட்டு வாசலில் வந்து Horn அடித்து என்னை அழைத்தார். “அம்மா அப்பா யாராவது நிக்கினமா” என்று கேட்டார். படிக்கும் போது நாங்கள் தலைகீழாக செயற்பட்டபோது கூட வீட்டுக்குவருவன் என்று சொல்லாத மனுசன் இப்ப எதுக்கு இங்கவந்தார் என்று எனக்கு குழப்பம். எங்கள் உரையாடல் கேட்டு வெளியே வந்த அம்மாவிடம் “என்னைத் தெரியுமோ நான் செல்வவடிவேல் மாஸ்ரர்”அறிமுகம் தேவையில்லாதவரது தன்னடக்க அறிமுகத்துடன்,அம்மாவின் பதிலை எதிர்பார்க்காது” இவன் நல்லா பேசக்கூடியவன், கொஞ்சம் ஊக்கம் குடுங்கோ நல்லாவருவான்” என்று தனது நற்சான்றை பகிர்ந்தார். தொடர்ந்து” வெளிப் Programme இற்கு இவனைக் கூட்டிக் கொண்டுபோறதில உங்களுக்கு ஆட்சேபனை இல்லாட்டி என் ரபொறுப்பில விடுங்கோ” என்று உரிமையோடு பொறுப்புக் கூறலுக்கு உத்தரவாதம் வழங்கினார், ஆசிரியர்கள் மீது நம்பிக்கை வைக்கும் சூழலில் இருந்த அன்றைய காலப் பெற்றோர் மறுப்பு கூறமாட்டார்கள் என்பது ஆசிரியருக்கும் தெரியும். இருந்தபோதும் முறைமை தவறக் கூடாது என்பதற்காய் அந்தக் ஒழுக்கத்தினைப் பின்பற்றியிருந்தார். அன்று தொடங்கிய பயணம் இன்றுவரை தொடர்ந்து கொண்டது மட்டுமல்லாது பல அனுபவங்களையும் பெற்றுத் தந்திருக்கின்றது என்பதற்கு அவரோடு பேச்சுத்துறைக்கு பயணித்த என் நண்பர்களே சான்று.

நல்ல மாணவனை இனங்காண்பது, அவனை சமூகத்திற்கு அறிமுகம் செய்வதுவைப்பது, சமூகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டதன் மாணவன் தவறுவிடும் போது உரியமுறைப்படி செம்மைப்படுத்துவது என்பன நல் ஆசிரியனுக்கே உரியதாகின்றது. எந்த ஒரு ஆசிரியர் தன்னுடைய மாணவனது உயர்வுகண்டு பெரிமிதமும் மகிழ்வும் அடைகின்றாரோ அவரே நல்லாசிரியராகின்றார் அதனை மணிவிழா நாயகனாய் திகழும் ஆசிரியர் செல்வவடிவேல் ஐயா அவர்கள் தன்பணியாய் ஆற்றியிருக்கின்றார், ஆற்றிவருகின்றார் என்பது யாவரும் அறிந்ததே.

மணிவிழா நாயகனோடு நீண்டகால ஆசிரிய – மாணவ, தந்தை – பிள்ளை, மற்றும் நட்புரீதியான உறவு இருந்துவரும் நிலையில் அத்தனைஅனுபவங்களை இங்கு பகிர்ந்துவிட முடியாது காரணம் அச்சுப் பதிப்பு மட்டுப்படுத்தலுக்கு கட்டுப்பட்டே ஆக வேண்டும். இருந்தபோது ஆசிரியரின் அரசியல் பிரவேசமும் எங்கள் ஆதங்கமும் என்ற விடயத்தை சொல்லாமல் நகரமுடியாது. சரியான காலப்பகுதி நினைவில் இல்லை ஆனால் ஒருநாள் மதியநேரம் ஆசிரியர் எனக்கு தொலைபேசி மூலம் அழைப்பு எடுத்திருந்தார். “இன்று இரவு எழுமணிக்கு வீட்டிற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திட்டுப் போ" என்ற செய்தி வழங்கப்பட்டது. வழமையாக பட்டிமன்றம் என்றால் "பேனையும் பேப்பரும் இருக்கிற இடத்திலையா நிக்கிறாய்" என்று கேட்பவர் இன்றுஅப்படிக் கூறவில்லை. மாலை ஏழு மணிக்கு ஆசிரியரது வீட்டிற்குச் சென்றேன் அங்கு வேறுசிலரும் நிற்பது எனக்கு அறிமுகமான அவர்களது மோட்டார் சைக்கிள்கள் மூலம் உறுதிப்படுத்திப்பட்டது.

உள்ளே சென் றஎனக்கும் வழமைபோன்று தேனீர் கிடைத்தது. ஆசிரியர் என்னசொல்லப் போகின்றார் என்ற ஆவல் என்னைப் போன்றே மற்றவர்களுக்கும் இருப்பது,அவர்களின் முகங்களில் தெரிந்தது. "ரீகுடிச்சுக் கொண்டே கதையை கேளுங்கோ" என்று பீடிகையோடு தொடங்கியவர் "நான் அரசியலுக்குள் போவது பற்றி என்ன நினைக்கிறீங்கள்" என்று நேரடியாகவே விடயத்திற்குள் நுழைந்தார். ஏற்கனவே எடுத்த முடிவை அறிவிக்கவே நாம் அழைக்கப்பட்டோமே தவிர எங்களிடம் கேட்டு முடிவெடுப்பதற்கு இல்லை என்பது அந்தநேரம் என்னால் ஊகிக்கமுடிந்தது. இருந்தாலும் மற்றவர்களைப் போல தொடர்ந்து மௌனம் காக்கமுடியாமல் "ஏன் சேர் இந்தமுடிவு" என்று நேரடியாகவே கேட்டேன். "நீண்டகால எண்ணம் இப்போது அழைப்புவந்திருக்கு அதுதான் இந்தமுடிவு" என்று சட்டென்று பதில் தந்தார். மற்றவர்களோடு சேர்ந்து நானும் மௌனம் ஆனேன். "நான் உங்களைஅழைத்தது நான் அரசியலுக்குள் போவதுதொடர்பான முடிவை எடுப்பதற்கு அல்ல" என்று எனது ஊகத்தினை உறுதிப்படுத்தியவர், அரசியல் என்பது என்ன என்பது பற்றி சிறுவிளக்கத்தினை தந்நதார், "அரசியல் தீண்டத்தகாதது அல்ல ஆனால் பெரும்பாலான அரசியல்வாதிகளது நடவடிக்கை அவ்வாறான தோற்றப்பாட்டினை சமூகத்தில் ஏற்படுத்திவிட்டது,அறிஞர் அண்ணா சொன்னதுபோல அறிவார்ந்த மக்கள் வாக்களிப்பதில் அக்கறைகாட்டாத காரணத்தினால் தான் அறிவற்றவர்கள் அதிகாரத்திற்கு வருகின்றார்கள்" என்ற உதாரணங்களை காட்டி அரசியலுக்கும் தனக்கும் இருந்த தொடர்புகளை காலச் சான்றோடு தெரியப்படுத்தினார்.

மேலும் தான் அரசியலுக்குள் செல்வதும் அதற்காகதான் சார்ந்த கட்சிக்காய் செயற்படுவதும் தன்னுடைய தனிப்பட்ட விடயம் எனவும் அதற்காக நீங்கள் எல்லோரும் என்னைப் போலவே செயற்படவேண்டும் என்றோ அல்லது எனக்காகச் செயற்படவேண்டும் என்றோ இல்லை என்பதை தெரியப்படுத்தவே நான் முக்கியமாக உங்களைஅழைத்தேன் என்று தன்னிலையைத் தெளிவுபடுத்தினார்.அதைவிட இலக்கியம் மற்றும் சமயம் சம்பந்தமானவிடயங்களில் ஈடுபாடுகொண்டவர்கள் அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக எங்கள் சமூகத்தில் வித்தியாசமான பார்வையிருக்கின்றது ஆனால் கிறீஸ்தவ, இஸ்லாமிய சமயங்களைப் பொறுத்தவரை அரசியல் காரணிகளை தீர்மானிக்கும் சக்தி அவர்களிடமே விடப்பட்டிருக்கின்றது என்றவிடயங்களையும் எடுத்துக்கூறியதுடன். "உங்களோடுபழகும் போதுநான் என்றும் உங்கள் ஆசிரியராகவும், கலைஞனாகவுமே இருப்பேன்" என்று ஒரு சத்தியவாக்கினையும் வழங்கினார். அப்போது எங்களில் பலர் நீண்ட பெருமூச்சை அடக்கிவிட்டதையும் அவதானித்திருப்பார். மீண்டும் "நீங்களும் என்னைஅரசியல்வாதியாக பார்க்கவேண்டாம்" என்ற செய்தியையும் பகிர்ந்து, தெம்பூட்டி எங்களை வழி அனுப்பிவைத்தார். இது தான் ஆசிரியரதுஅரசியல் பயணம் தொடர்பான எங்களுடனான முதலும் இறுதியுமான கலந்துரையாடல் என்று நினைக்கின்றேன்.

பிற்காலத்தில் இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஆசிரியர் தொடர்பான செய்திகள் தலையங்கங்களாய் வரும் போதும், சூட்சுமமாக வரும்போதும் நான் சங்கடப்பட்டது உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர் இயல்புமாறாதவராய் இருப்பது கண்டு எண்ணிக்கொண்டேன்,சேரும் அரசியல்வாதியாகிவிட்டார் என்று. எது எப்படியோ நல்ல ஆசிரியராய், இலக்கியவாதியாய், இந்துசமயத்தின் பற்றுள்ள ஒரு ஆன்மீகவாதியாய், சமூகஆர்வலராய் பார்த்த ஒருவரை அரசியல்வாதியாக எண்ணுவதற்கு இன்றும் எங்கள் (என்) மனம் தயாரில்லை ஆசிரியர் கூறியதுபோல் எங்கள் மனங்களில் மாற்றம் வரும் வரையாராலும் அதைமாற்றிவிடவும் முடியாது.

மணிவிழாக் காணும் என் ஆசிரியருக்கு ஆக்கம் என்றபோது அக மகிழ்ந்து எழுதத் தொடங்கிவிட்டேன், எழுதிமுடியும் போதுதான் எண்ணினேன் மணிவிழா என்பது அறுபது வயதினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு எடுக்கும் விழா என்பதை. அட சேருக்கும் அறுபது ஆகிவிட்டது என்பது விழாஎ டுத்ததினால் தான் தெரிகின்றது. இன்றுபோல் என்றும் சகலசீருடனும் வாழ மாணவனாய் நின்றுவாழ்த்தி வணங்குகின்றேன்.

**நடராஜா ஐங்கரன்**
அபிவிருத்திஉத்தியோகத்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் இதயத்திலிருந்து.....



"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே நலன்மிக்க நல்லாரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே என்பர் நற்றமிழ் வல்லோர்". கல்விப் புலத்திலோ, செல்வப்புலத்திலோ, சமூகச் செயற்பாடுகளிலோ நல்லவர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் சொந்தச் செயற்பாடுகளுக்கு அப்பாற் சென்று மெய் வருத்தம் பாராது கண்துஞ்சாது எவ்வெவர் தீமையும் கருதாது தன் நலம் மறுப்போடு பொதுப்பணியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். இவர்களை வாழ்த்தி வளமூட்ட வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை.

இவர்களை வாழ்த்துவது வாழ்த்துபவர்களுக்கே பெருமைகளைச் சேர்க்கும் வாழ்த்தைப் பெறுபவர் மேன்மேலும் உற்சாகம் அடைந்து மேலும், மேலும் சமூகப்பணியில் முனைந்து நின்று நற்பணியாற்றுகின்ற மனப்பாங்கினால் மீண்டும் வாழ்த்திய சமூகத்தினரே பயன்பெறுகின்றனர். இந்த வகையில் விஞ்ஞான ஆசிரியர் இரா. செல்வவடிவேல் அவர்கள் கல்வித்துறையில் மட்டும் அல்லாது பல்வேறு சமூக சேவைச் செயற்பாடுகளிலும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்ற பெருந்தகையாவார்.

அவரின் சேவைகளை அறிந்தவர்கள் ஆசிகூறியும் வாழ்த்துக்கள் வழங்கியும் கவிதைகள், கட்டுரைகள் எழுதியும் இம்மலருக்கு அணி செய்துள்ளீர்கள். இவற்றை விழாவுக்கு சிறப்புறச் செய்வதற்கான செலவுகளை மனம் உவந்து பொறுப்பேற்றுள்ளீர்கள், அன்றியும் பல நாட்களாக மணிவிழா நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக நல் ஆலோசனை வழங்கியும், விழா ஏற்பாடுகளையும் தங்கள் தங்கள் சொந்தக் கருமமாக எண்ணியும் தோளோடு தோள் நின்று ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளீர்கள்.

மேலும் இங்கு நடைபெற்ற மலர் ஆக்கப் பணிக்கு கைகொடுத்தும் மனம் ஒன்றி தேவைப்படும் நிதியுதவி எல்லாம் வழங்கி மலர் உருவாக்கத்துக்கு பாடுபட்டுள்ளீர்கள். மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு மலர் மணம் பரப்பவும் நுகரவும் உள்ளன்போடு உதவியுள்ளீர்கள்.

எல்லாமே ஒரு நல்ல மனிதனை வாழ்த்த வேண்டும் என்ற மனிதநேயத்தின் வெளிப்பாடாகவே நாம் கருதுகின்றோம். துன்பமும் துயரமும் நிறைந்த சூழல் என்றாலும் காலத்தினாற் செய்யப்பட்டவற்றிற்கு காலம் தவறாது வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும். அந்த கடமையுணர்விற்கே இந்த விழா என்பதை அறியத்தந்து மனம் நிறைவு அடைகின்றோம்.

"என்கடன் கணி செய்து கிடப்பதே"
" தன்கடன் அடியேனையும் தாங்குதல்"

**ஞான திருக்கேதீஸ்வரன்**
மலராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லின் செல்வர்" இரா.செல்வவடிவேல் அவர்களால்
பல்வேறு இதழ்களுக்கும், பத்திரிகைகளுக்கும்
எழுதப்பெற்ற சமய இலக்கிய
கட்டுரைகளின் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்த முடிபு

மானுடப்பிறப்பு உயர்ந்த பிறப்பு. இப்பிறப்பின் முடிந்த முடிபாவது என்ன? பிறந்தார் இறப்பது நிச்சயம். இதற்கிடைப்பட்ட காலம் எதற்காக? சிலர் புலன்களுக்கு அடிமைப்பட்டு, புலன்களின் வழிப்பட்ட வாழ்வைப் பெரிதாக நினைத்து அதனை நாடி ஓடுகிறார்கள். சிலர் புலன்களைக் கட்டுப்படுத்தி அடக்கி வாழும் துறவு வாழ்வை மேற்கொள்கிறார்கள். எது சிறப்பானது? பிறப்பின் இரகசியம் நோக்கம் தான் என்ன.

அரிது அரிது மானுடர் ஆதல் அரிது என்றார் தமிழ்மூதாட்டி. புலன்களுக்கு அடிமைப்பட்ட வாழ்வு என்பது விலங்கினத் தன்மையது. துறவு வாழ்வை இந்துசயம் வற்புறுத்தியதில்லை என்பதையும் சிந்திக்க வேண்டும். நமது சமயத்தில் தான் இறைவனுக்குத் துணைவி இருப்பதாகவும் அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பதாகவும் கதையுள்ளது. இல்லறவாழ்வு இறைவனால்ஏற்கப்பட்டது என்பதற்காக உருவாக்கப் பட்டவை. இல்லறமே நல்லறம் என்பது பெரியோர் வாக்கு. எனவே இல்லறத்தில் இருந்து கொண்டு இல்லற தர்மங்களைக் கடைப்பிடித்து ஒழுகி பிறப்பின் சிறிதும் சிந்தியாமல் பிறன் மனைவியை அடையக் கருதினால் எத்தகைய சிறப்புக்களைக் கொண்டவரும் இறுதியில் இழிவையே எய்துவர் என்பது வள்ளுவர் கூறும் அறமாகும். கிஸ்கிந்தையின் வேந்தன் வாலியும், இராவணனின் தவறையே செய்கிறான். இலங்கை அரசனுக்கு ஒருபடி மேலாக தம்பியின் மனைவியையே கவர்ந்தான். வாரை, வேந்தன், வாலி மனு நீதியறிந்தவன். அவனுக்கும் முடிவு என்ன? அரக்கனாகப் பிறந்த இலங்கைவேந்தனும் வானர அரசனான கிஸ்கிந்தை வேந்தனும் புலனடக்கம் இன்றி விலங்காக மாறிவிட்ட "குண" அதிசயங்கள்.

இலக்கியப் பிரியர்களின் மனைவியைக் கவரும் இராமாயண கதாபாத்திரம் கும்பகர்ணன் ஆவான். ஆயிரமாயிரம் குடம் மதுவும், அளவிடமுடியாத அடிசிலும் உண்டு. மனிதன் இயல்புக்குப் பொருந்தாத தூக்கமும் உடைய வனாகத் திகழ்ந்தவன் கும்பகர்ணன். முடிந்த முடிபான நோக்கத்தை அடைய வேண்டும்.

அரிதான மானிடப் பிறப்பைப் பெற்று விட்டோம் ஆனால் மனிதர்களாக வாழ்கிறோமா? என்று சிந்திக்க வேண்டும். உடல் அமைப்பால் மனிதர்களாக இருந்து பயன் இல்லை. உள்ளத்தால் மனிதர்களாக வாழ வேண்டும். பின்னர் மனித உள்ளத்தில் இருந்து உயர்ந்த தெய்வ இயல்பைப் பெற வேண்டும். இதுவே பிறப்பின் நோக்கம்.

**எனைத் துணையர் ஆயினும் என்னாம் திணைத்துணையும்**
**தேரான், பிறன் இல் புகல்?**
– குறள் 144 –

இராமாயணம், மனிதன் தெய்வமாகலாம் என்பதையே கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது எனக் கருதுகிறேன். இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன். அவன் தம்பி கும்பகர்ணன், விபீடணன் ஆகியோர் விலங்கு. மனிதன், தெய்வம் எனும் வளர்சசி நிலையைத் தெளிவாக்கும் பாத்திரங்களாகும்.

இலங்கைவேந்தன் "ஈஸ்வரன்" எனும் சிறப்புப் பெயர் கொண்டவன். அத்தகையவனுக்கு இழிவுச்சாவு ஏன் வந்தது? இறைவனைத் தனது இருப்பிடத்துக்கு அழைத்தவன். ஆயிரம் மறை களையும்கற்றவனல்லன் உணர்ந்தவன். இத்தகைய சிறப்புக்குரியவன் புலன்களுக்கு அடிமைப்பட்டு, மாற்றான் மனைவியை அடைய விரும்பி அவளைச் சிறைவைத்தமை விலங்குக்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமல்லவா? ஆயிரம் மறை உணர்ந்து பயன் என்ன?

மாற்றாள் மனைவியைச் சிறைப்பிடித்து வந்து குலநாசத்துக்கு வழி அமைத்து விட்டு மானம் பற்றியா பேசுகிறான்! அண்ணா, சீதையை விட்டால் நீயும் வாழ்வாய் குலமும் இருக்கும் என்று எச்சரிக்கைத் தொனியில் புத்தி கூறியவன் கும்பகர்ணன் ஆவான். பெண் பித்துப் பிடித்தவனுக்கு அறிவு வேலை செய்யுமா? இன்னும் சாப்பிட்டு விட்டுப் போய்த் தூங்கு என்று ஏளனம் செய்தான் இலங்கை வேந்தன். அண்ணா, தம்பி உடையான் படைக்கு அஞ்சான்; இந்த உடம்பு இருக்கிறதே அது உன்னால் வளர்க்கப்பட்டது. உப்பிட்டவனை என்றும் மறக்கமுடியுமா? அதுவும் நீ! என்னுடன் பிறந்த மூத்தவன்! தம்பியிருக்க நீ இறப்பதா? நீர்க்குமிழி போன்றது வாழ்வு. இது உனக்குத் தெரியாதா? இறுதியாக ஒன்று சொல்கிறேன் கேட்டுக்கொள். நான் யுத்தத்திற்குச் செல்கிறேன். மீண்டு வராவிட்டல் உனது நிலையும் அதுவே.

என்பதை திண்ணமாக அறிந்துகொள். அதற்குப் பிறகாவது ஜனகன் பெற்ற பைங்கிளியை விட்டுவிடு என்று கூறிவிட்டுச் சென்றான். யுத்தகளத்தை ஒரு கலக்கு கலக்கி இறுதியாக உருக்குலைந்து இராமாயாணத்திற்குப் பலியானவன் கும்பகர்ணன். இவ்வாறு சுக்ரீவன் கிஸ்கிந்தையில் குரங்காகப் பிறந்து மனிதனாக உயர்ந்தவன். சுக்ரீவன் சில குறைகள் உடையவனாக இருப்பினும், இராமன் என்ற தெய்வத்திடம் சரணாகதிக்கு தன்னை உள்ளாக்கியவன். பக்தியின் உயர்ந்த நிலையைக் காட்டியவன்.

விபீடணன் ஆழ்வாா எனும் அழைக்கப் படும் தெய்வநிலைக்குத் தன்னை உயர்த்திக் கொண்டவன். அனுமனின் உபதேசம் இராவணன் செவியில் விழவில்லை. அதன் பிறகு விபீடணன் தமையனுக்கு தத்துவம் கூறுகிறான். இராமன் கதையில் இடைச் சொருகலாக வரும் இரணியன் கதையை தத்துவப் பொருளாக எடுத்துரைக்கிறான். விபீடணன், தா்மத்திற்கும் அதா்ம சிந்தனைக்கும் இடையில் பாசம் நீங்கிப் பரம்பொருளைப் பற்றுவது தான் சிறந்தவழி என்ற சித்தாந்த சிந்தனைக்கு உட்பட்டு இரத்த பாசத்தை நீக்கி ஜீவாத்மா, பரமாத்மாவை அடையும் நிலைக்கு தன்னை உட்படுத்தி “விபீடணன் ஆழ்வாராக” தெய்வநிலைக்கு உயர்ந்த உன்னதமானவன். அனுமன் கிஸ்கிந்தையில் தெய்வமாக உயர்ந்து வழிபடு நிலைக்கு உயர்ந்தவன். சொல்லின் செல்வரான அனுமரை வழிபட்டால் அறிவு, செயல், ஆற்றல், புகழ், துணிவு, அச்சமின்மை, ஆரோக்கியம், சமயோசிதபுத்தி, பேச்சுத்திறமை எனும் சிறப்புத் தன்மைகள் கிட்டும். அனுமன் விலங்காகத் தோன்றி தெய்வமாக உயர்ந்தவன்.

பிறப்பு எனும் தொடக்கம் எந்நிலையில் ஏற்பட்டாலும் முடிவு எப்படி அமைய வேண்டும் என்பதையே பெரும்பாலான இலக்கியங்கள் எடுத்துக்கூறுகின்றன. புராண இதிகாச கதைகளைப் படிக்கும்பொழுது அவற்றின் பின்னணியில் தத்துவத்தையும் இணைத்துப் பார்த்துப் படிப்பது சிறந்த பயனைத் தரும்.

மானுடராகப் பிறக்கும் நாம், அரிதான இப் பிறவியை நன்கு பயன்படுத்தி நற்பண்புகளினால் மனிதனும் தெய்வமாகலாம் எனும் முடிவு நிலைக்கு உயர்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் இன்றிருந்தால்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவத்தமிழ் மக்களின் தவப்புதல்வன். மார்கழி மாதம் முதலாம் நாள் 128 ஆவது குருபூசைத் தினமாக அமைகிறது. இந்நாளில் நாவலர் இன்றிருந்தால்... எனும் சிந்தனையில் எழுந்த சில விடயங்களை எழுத விளைகிறேன்.

**மாந்தளிர் மேனியானை**
**மலர் விழி யழகினானைத்**
**தீந்தமிழ் வாயி னானைச்**
**செப மணிக் கையினானைக்**
**காந்த மின் சாரம் போலக்**
**கவர்ந்திடும் தோற்றத்தானை**
**ஏந்திசை பலவி னானை**
**என்னுள்ளே வணங்கினேனே**
–கவியோகி–

ஆறுமுகநாவலரைக் கண்டவர்கள் கவியோகியின் கதையை ஆமோதிப்பார்கள். அந்நியர் ஆட்சியில் தமிழும் சைவமும் தன் பொழிவு இழந்திருந்த காலத்தில் நாவலர் தோன்றினார். நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழும், சைவமும் என்னவாகியிருக்கும் என யார் அறிவர்? நாவலர் ஆங்கிலமும் கிறிஸ்தவமும் இலங்கைத் தீவை அவலட்சணப்படுத்த முற்படுகையில் பாசமுள்ள மகன் பார்த்திருப்பானா? மொழியையும் மதத்தையும் யாரும் யார் மீதும் திணிக்க முடியாது, திணிப்பதை பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது. கண்கள் இருந்தும் குருடராக வாழ்வதாயின் உணர்ச்சி அற்றவராக இருக்க வேண்டும். நல்லையின் மைந்தன் "கலைஞானம்" உணர்ந்தவன்.

ஆறுமுகநாவலரின் பணிகளில் தமிழ் மொழியை பாமரமக்களும் புரிந்து கொள்ளும் மொழியாக மாற்றியது முக்கியமானதாகும். அதீத கற்பனையால் எழுந்த கவிதை மொழியை உரைநடையாக்கி உணர்ச்சியூட்டினார். கவித்துவக் காய்ச்சலும், வித்தியாகர்வமும் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதையும் இதையே காரணமாகக் கொண்டு அந்நிய மொழி மோகம் எழுவதையும் நாவலர் உணர்ந்தார். இதற்குப் பரிகாரம் தேடிய மருத்துவராகி உரைநடை கையாண்ட வள்ளலாகத் திகழ்ந்தார். நல்லவை எங்கிருப்பினும் அவற்றைத் தேடிப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கமைய ஆங்கில மொழியில் சிறப்பாக அமையும் குறியீட்டு இலக்கணத்தை, நாவலர் தமிழுக்கு கொண்டு வந்து புகுத்தினார். கிறிஸ்தவ வேதமான விவிலியத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கையில் தமிழ் எண்களையே அதில் பயன்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறுமுகநாவலரின் பணிகளில் "பதிப்பித்தல்" பெரும் பணியாகும். ஏட்டுச் சுவடிகளில் இருந்தவை அச்சுப்பதிப்பாகின. இவரால் பதிக்கப்பட்ட நூல்கள் இலக்கணவழு இல்லாமலும் எழுத்துப்பிழையின்றியும் அமைந்திருந்தன. ஆதாரபூர்வமானவற்றை மட்டும் தெரிந்து வெளியிட்டமை இன்னொரு சிறப்பாகும். திருக்குறளை வெளியிட்டார், ஆனால் வள்ளுவர் கதை எதனையும் வெளியிடாதது உற்றுநோக்கப்பட வேண்டியதாகும். ஆறுமுக நாவலரின் உரைநடை நூல்கள் தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலுமன்றி தற்போது சிங்கப்பூர், மலேசியா, இலண்டன் போன்ற நகரங்களில் பிரதி எடுக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமயத்தின் உண்மைப் பொருளை எடுத்துக்காட்டி வாழ்ந்தவர். அவரது சைவவினாவிடை சைவசமய சாரமாகத் திகழ்கின்றது. சமயக் கோட்பாடுகள், ஆசார முறைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சுகாதாரத்தை முதன்மைப்படுத்துபவனவாகும். சைவ வினாவிடையில் கூறப்பட்டவற்றை நாவலர் கடைப்பிடித்திருப்பார? என தமிழக அறிஞர் ஒருவர் வினா தொடுத்திருக்கிறார். நாவலர் காலத்தையும் அன்றைய காலத்தையும் கருதிக் கொண்டு சிந்தனை செய்ய வேண்டும். வழிபாட்டு ஆசாரமுறைகளில் சில மாற்றங்கள் இன்றைய தேவையாக உள்ளது என்பது மறுப்பதற்கில்லை. நாவலர் இன்றிருந்தால் இம் மாற்றங்களை உள்வாங்க வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுச் சிந்தனையுடையவர்களும் சைவ வினாவிடையின் பெரும்பகுதியை ஏற்றவர்களே!

இப்போது சைவத்தமிழ் உலகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? நாவலர் வழியில் இருந்து விலகி, கந்தபுராணக் கலாச்சாரத்தை மறந்து, உலகமயமாதல் கருத்துக்களுடன் பிணைந்து எங்கோ போய்க்கொண்டிருக் கிறோம்.

உலகில் அழியும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என அறிஞர்கள் கூறி வருகிறார்கள். தேமதுரத் தமிழோசை உலக மெலாம் ஒலிக்க வேண்டும் எனும் கனவு கண்டவர்கள் வாழ்ந்த பூமியில் தமிழ் மொழிக்கு அந்நிலையா என நினைக்கையில்.... நாவலர் பெருமான் தான் கண்முன் தோன்றினார். இன்று ஆக்கபூர்வமான நூல்வெளியீடுகள் இல்லை. தேடுதல் இல்லை. விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. கணணிப் பொறிகள் குவிந்துவிட்டன. ஆனால் இலக்கணப் பிழைகளும் எழுத்துப்பிழைகளும் மலிந்து விட்டன. தமிழகச் சஞ்சிகைகள் தமிழையே மறந்துவிட்டன. மீண்டும் ஆங்கில மோகம் நம்மவர்களில் உருவாகி வருகிறது.

சைவசமயம் சில சமயிகளினால் திசை மாறிப் பயணத்தை ஆரம்பித்திருக்கிறது. மீண்டும் சடங்குகள் முன்னுரிமை பெற்று பக்தி காணாமல் போய்க் கொண்டிருக்கிநது. ஆலயங்கள் சிறப்பாக செயற்படவேண்டும். சைவசமய விழுமியங்கள் போற்றப்பட்டு காப்பாற்றப்படல் வேண்டும். நாவலர் பெருமான் மாற்றுச் சமயத்தை சாடுவதற்காக மட்டுமன்றி உண்மைச் சமயத்தை உபதேசிப்பதை நோக்கமாகக் கொண்டு பிரசங்கம் செய்தார். நாவலரின் பணிகள் சமுதாய நோக்கம் கொண்டிருந்தது. இந்நிலை மாறி சுயநல நோக்குடன் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆலயங்கள் அலங்காரம் செய்வதை விடுத்து மனதைத் தூய்மைப் படுத்தும் அறநிலையங்களாக மாற்றியமைக்க வேண்டும். இளைஞர்களின் வன்முறைச் சிந்தனை மாறுவதற்கு ஆலயங்கள் வழிகாட்டி நிற்க வேண்டும். நாவலரின் பிரசங்க முறை ஆலயங்களில் நல்ல கருத்தை விதைப்பதற்கு பயன்பட வேண்டும். பாடசாலைகள் தோறும் நற்சிந்தனை நடைபெற வேண்டும்.

ஆறுமுகநாவலரின் பணிகளை இதய சுத்தியுடன் தொடரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நாவலர் அமைப்புகள் இம் முயற்சியில் ஈடுபட வேண்டும். குருபூசைத் தினத்தில் மட்டும் நாவலரை நினையாது நாவலரின் உயரிய பணிகளைத் தொடர்வதற்கு பிரகடனம் செய்துகொள்வோம். சைவத்தையும் தமிழையும் அதன் வடிவம் சிதையாமல் காப்பது நாவலருக்கு கைமாறாகும்.

**வரம் பெறு வாக்கி னானை**<br>
**வஞ்சமில் நெஞ்சி னானை**<br>
**உரம் பெரு மேனி யானை**<br>
**உயர் சிவ சமயம் வாழ**<br>
**நிரம்பிய பணி செய் தானை**<br>
**நீள் தவ வேள்வி யானைப்**<br>
**பற்றினார் பற்றற் றாரே**

**நாவலர் அவரே யாவார்**<br>
**நமதுசை வாகமத்தின்**<br>
**காவலர் அவரே! இன்பக்**<br>
**கனி தமிழ் அமுதம் ஊறும்**<br>
**பாவலர் அவரே! எங்கள்**<br>
**பைந் தமிழ் உலகை யாளும்**<br>
**கோவலர் உலகை யாளும்**<br>
**கோவலர் அவரே! வெற்றி**<br>
**கொட்டுக முரசே மிங்கே!**<br>
கவியோகி சுத்தானந்த பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது அழகு

எது அழகு? இவ்வினாவுக்குப் பலரும் பல வழிகளில் விடை காண்பார். ஒவ்வொருவரும் தமது சிந்தனையின் கோணத்தில் அழகைக் காண்பார்கள்.

இன்றைய இளம் சமூகம் உடல் வாகை அழகு என இரசித்து தேனில் விழும் பூச்சியாக மயங்கி இறுதியில் மூழ்கி மாள்கிறார்கள். அங்கலட்சணம் என்பது சிறப்புத் தோற்றமே. அதை மட்டும் கண்டு மயக்கம் அடையக்கூடாது.

இராமாயணத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பன், இராமன் சீதையை வர்ணிப்பான். ஆனால், அந்த அங்க அழகை விட உயர்ந்த யுண்டா? பெண் கருவுற்ற நிலையில் தள்ளாடி நடப்பது ஒரு அழகு! மனைவி குழந்தை பெற்றெடுத்த செய்தி கேட்டு தாயையும் சேயையும் காண்பற்கு ஓடி வந்து இருவரையும் காணும் பொழுது உங்கள் வித்தைக்கு என் அன்புப் பரிசு என்று மௌனத்தினால், புன்சிரிப்புடன் கணவனுக்குக் குழந்தையைக் காட்டும் போது பெண்ணிடத்தில் ஏற்படும் அழகு! இதனைச் சொல்வதற்கு வார்த்தை ஏது?

கணவனும் மனைவியும் சேர்ந்து ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு வருதல் ஒரு அழகு! இந்தக் காட்சியை மனக்கண்ணால் காண்பது ஒரு அழகு! குடும்பத்துடன் சேர்ந்து வழிபடுதல் ஒரு அழகு! இந்த அழகை வள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய் எனப், பெய்யும் மழை.** – குறள் 55 –

அழகு ஒன்று கம்பன் காவியத்தின் இழையோடியுள்ளதை இலக்கிய ஆர்வலர்கள் அறிவார்கள்.

தமிழர் கண்ட குடும்ப வாழ்வு என்பது ஆணும் பெண்ணும் கருத்தொருமித்துக் காதலராக வாழும் வாழ்க்கையாகும். கணவனும் மனைவியும் கட்டிலில் நான்கு சுவரினுள் காம இன்பத்தை மாறிமாறிப் பருகி அந்த இன்ப மயக்கத்தில் சோர்ந்து கிடக்கிறார்களே அத்தகைய நிலை ஒருவகை அழகு! வெறும் உடற் கவர்ச்சியினால் உடல்கள் இணையும் போது ஒருபோதும் இந்நிலை ஏற்படமாட்டது.

குடும்ப வாழ்வில் புகுந்த நிறைவான இன்பத்தினால் விழையும் குழந்தை தனியழகு! ஆண் அப்பாவாகும் போதும் பெண் அம்மா வாகும் போதும் ஏற்படும் அழகிற்கு ஈடு இணை இக்குறளுக்கு ஆயிரம் உரை செய்யலாம். ஆனால் "கொழுநன் தொழுது எழுவாள்" என்பது குறள் அழகு. கந்தசஷ்டி போன்ற புண்ணிய நாட்களில் ஆலயத்தில் தங்கியிருந்து கடும் விரதம் நோற்பவர்கள் பலர் விரதம் முடிந்த பின்னர் உடல் மெலிவுடன் தோற்றுவார்கள். இப்பொழுது இவர்கள் முன்னரைவிட அழகுதன் திகழ்வதைக் காணலாம்.

ஆசிரியர் அழகாகவிருப்பது தன்னுடைய மாணவரின் உயர்வைக் காணும்பொழுதுதான்! பரீட்சைப் பெறுபேறு வந்ததும் சித்தியடைந்த மாணவர்கள் தம் ஆசிரியரை நோக்கி ஓடிவந்து மகிழ்வைத் தெரிவிக்கும் போது ஆசிரியர் அடையும் ஆனந்தம் ஒரு அழகு! சில ஆசிரியர்களுக்கு மாணவனின் வெற்றியை விட அவன் கொண்டு வரும் "சொக்லேற்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே ஒரு அழகு! ஆசிரியன் ஒரு ஏணிப்படி. அதில் மாணவர்கள் ஏறி மேலே செல்ல, ஏணி மட்டும் நிலத்திலேயே இருக்கும். இதுதான் ஆசிரியனுக்கு அழகு. இந்நிலை மாறியதன் காரணமாகவே நாட்டுக்கு இன்று அவலநிலை.

விளையாட்டு வீரர்கள் வெற்றி பெறும் போது மகிழ்கிறார்கள். ஆனால், வெற்றிவாய்ப்பு இருந்தும் எதிரணிக்கு இதனை விட்டுக்கொடுத்து அவன் அடையும் மகிழ்ச்சியிருக்கிறதே அது ஒரு தனி அழகு. வெற்றியை எதிரிக்குக் கொடுக்கும் மனோநிலை என்பது எத்தகையது என்று சிந்தித்துப்பாங்கள். இன்று, தோல்வி ஏற்பட்டதும் அடிதடி, வன்முறை என்று இறங்கும் இரசிகப் பெருமக்கள், வீரர்கள் இதனை உணர வேண்டும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் – இலட்சியம் இருப்பது அவசியம். இந்த இலட்சியத்துக்காக வாழ வேண்டும். இலட்சியத்தில் வெற்றியடைய முயற்சி செய்ய வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் குறிக்கோளை மறத்தலாகாது. குறிக்கோளுடன் வாழ்ந்தவர்களை "அடியார்கள்" என்று பெரியபுராணம் விழிக்கிறது. ஓர் அடியானின் இலட்சியம் சந்தனக் கட்டையை அரைத்துக் கொடுப்பது என்பதாகும். ஒருநாள் சந்தனக் கட்டை கிடைக்கவில்லை. விட்டாரா? தனது முழங்கையை அரைக்கத் தொடங்கி விட்டார். இவரல்லவா இலட்சியவாதி. கையைச் சந்தனமாக்க முயன்றது பக்தி வைராக்கிய அழகாகும்.

தர்மம் செய்வதனால் செல்வத்தை இழந்தாலும் ஒரு அழகுதான். கேட்பவர்களுக்கு வாரிவழங்கும் வள்ளல்கள் தம் செல்வம் தேய்வது பற்றி எப்போதும் சிந்திப்பது கிடையாது. "சீதக்காதி" என்று ஒரு முகமதைப் பெருமகனார் வாழ்ந்து வந்தார். ஏழைகளின் இரட்சகராகத் திகழ்ந்தார். ஒருநாள் விதிப்படி இறை எய்தினார். உறவினர் உடலை அடக்கம் செய்வதற்கு எடுத்துச் சென்று விட்டார்கள். அந்த நேரம் பார்த்து ஏழை ஒருவன் உதவி நாடி அவர் வீட்டிற்கு வந்தான். மரணச்செய்தி அறிந்தான். அந்த வள்ளலின் உயிரற்ற உடலைக் காண்பதற்கு வேதனையுடன் ஓடினான். ஆனால், உடலை அடக்கம் செய்துவிட்டார்கள். உடலைக்கூட அவனால் பார்க்க முடியவில்லை. ஏழை, அருகில் நின்று கண்ணீர் விட்டு அழுதான். ஐயா! உன்னிடம் இருந்து பொருள் பெறுவதற்கு வந்தேன். நீயோ, இவ்வுலகை விட்டு விண்ணுக்குப் பயனமாகினாய்! கேட்டதைக் கொடுக்கும் வள்ளல் பெருமானே! இனி எனக்கு உதவுவார் யாருளர் என்று கதறினான். இவ்வளவுடன் உடல் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மண்குவியலைத் தள்ளியபடி வலக்கை மேலே வந்தது. என்ன ஆச்சரியம். விரலில் தங்க மோதிரம் இருந்தது. இந்தப் பெரியவர் செத்தும் கொடுத்த சீதக்காதி என்று போற்றப்பட்டார். கதை நடந்ததா? என்னும் ஆராய்ச்சி வேண்டாம். இந்தக்கதை ஒரு அழகல்லவா?

தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர்காக்கும்என்று சொல்வார்கள்.ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு மக்கள் தொண்டுதான். ஏழைக்குக் கல்வியறிவூட்டுவதும், உணவு கொடுப்பதும் சிறப்பான தொண்டாகும். இதன் காரணமாகவே அன்னமிடுதல் "மகேஸ்வரபூசை" என்று சிறப்பிக்கப்படுகிறது. தர்மம் செய்து செல்வம் இழந்த நிலையிலும் வயலில் விளைத்த விளை நெல்லை அரிசியாக்கிச் சோறு சமைத்து தோட்டத்துக்கீரையை விதம்விதமாய் உணவாக்கி, அடியாரின் பசி நீக்கிய "இளையான் குடிமாற நாயனார் தம்பதிகள்" வரலாறு புராண அழகாகும். அசாதாரண சூழ்நிலையால் சகல பொருட்களுக்கும் தட்டுப்பாடு, பல வர்த்தகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமக்கள் வழமை போலத்தான் கைங்கரி யங்களைக் காட்டுகின்றார். இதில் வேதனை என்னவெனில் தர்ம வள்ளல்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் சில வர்த்தகப் பிரமுகர் களின் நடவடிக்கைகள் தாம். ஆண்டவன் செல்வத்தைத் தருகிறான் ஏன்? நீயும் மகிழ்ந்து மற்றையவர்களையும் மகிழ்விப்பதற்கு தர்மம் செய்யாத கருமிக்குக் கூட மன்னிப்புண்டு. தர்மவள்ளல்களாக நடிப்பவர்களுக்கு இரௌரம் எனும் நரகம் நிச்சயம். நரகத்துச் செல்வதும் ஒரு அழகுதானே!

ஒருநாள், சோழ மன்னனின் அவைக்குத் தமிழ் மூதாட்டியாம் ஔவையார் வந்திருந்தார். உரையாடல் நிகழ்ந்தது. சோழன் தமிழ்க் கிழவியிடம் கேட்டான். தாயே! உலகில் எது அழகு! இந்த வினாவுக்கு மூதாட்டி பதில் கூறினாள்.

**கரம் தனில் இளைத்த தோகை; சுகிர்த**
**விரதந் தனில் இளைத்த மேனி; நித்தம்**
**கொடுந்திளைத்த நாதா; கொடுஞ்சமரிற்பட்ட**
**வடுத்தொளைத்டத கல் ஆதியாம்**

இப்பாடலே இக்கட்டுரையின் கருப்பொருள் ஆகும். நாயகனோடு கூடி மகிழ்ந்து களைத் திருக்கும் நாயகியும், விரதங்களை மேற்கோண்டு வாடிய பக்தரின் மேனியும், நாட்டுப் பற்றுடன் போரில் ஈடுபட்டு வீழ்ந்த வீரனின் "நடுகல்லும்" சான்றோர் போற்றும் அழகான பொருள்களாகும் என்பது ஔவையின் பதிலாகும்.

அழகு என்பது உடலால் உருவாவதில்லை. அவரவர் உள்ளத்தினால் செஞ்சத்தில் உருவாக்கப்படும் நல்ல எண்ணங்களே பேரழகைத் தரும். அவ்வழகினைப் பெறுவதற்கு நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் கற்க வேண்டும்.

**குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**
**மஞ்சல் அழகும் அழகல்ல- நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு**

**- நாலடியார் -**

எது அழகு? என்பது தெரிந்து விட்டதா? எதனைக் கற்பது என்று கேள்வி பிறந்து விட்டதா? "கண்டது கற்று பண்டிதனாவாயாக"!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரை

எமது தாய் மொழியின் பெயர் "தமிழ்" என்பது. தமிழை "உயர் தனிச் செம்மொழி" என்பர் அறிஞர். தமிழ் மொழி தனித்த மொழி செம்மையான மொழி என்பது பொருள்.

"தமிழ்" என்பதற்கு "அழகு" எனவும் பொருள் உண்டு. இவ்வுண்மையை தமிழ் தழுவிய சாயல் என்பதால் நன்கறியலாம்.

தமிழுக்கு "இனிமை" எனவும் பொருள் உண்டு. இதனைத் தேன்தமிழ், தீந்தமிழ் எனப் பொருள் கூறுவதுண்டு.

நாட்டிற்கு "செந்தமிழ்நாடு" என்று பெயர் வைத்தவர் தேசியக்கவி சுப்பிரமணியபாரதியார். இதில் நாட்டிற்கு அடைமொழியாக நமது மொழியும் மொழிக்கு அடைமொழியாக "செம்மையும்" அமைந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியதாகும்.

"தமிழுக்கு அமுதென்று பேர்" தமிழ் தமிழ் எனக் கூற அது அமிழ்து அமிழ்து என ஒலிக்கும். எனக் கூறி மகிழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை தமிழுக்கு அமுதென்று பேர் அது எங்கள் உயிருக்கு நேர் எனவும் கூறி உயிர்விட்ட கவிஞர் ஆவார்.

எனவே நமது தாய்மொழியாம் தமிழ் என்ற பெருக்கே இவ்வளவு சிறப்பிருக்குமானால் ஏனையவற்றை குறிப்பிட வேண்டியதில்லை. இன்றைய இளம் சமூகத்தினருக்கு "தமிழ்" மொழி பற்றிய விழிப்புணர்வு அவசியமாகிறது.

ஒருவருக்கு தாய்மொழியே சிந்தனை மொழியாக இருக்க முடியும். பல மொழப் பாண்டித்தியம் பெற்றிருப்பது விரும்பப்படும். அதற்காக தாய் மொழியை ஒதுக்குவது சிறப் புடையது அல்ல.

ஆங்கில மொழி மோகம் நம்மை கபளீகரம் செய்ய வாய் திறந்து நிற்கின்றது. இப்படியான சூழ்நிலையில் தமிழ் வளர்த்த பெரியவர்கள் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளும் வகையில் எனது அன்புக்குரிய மாணவன் K.N.நித்தியானந்தன் "தமிழ் வளர்த்த முத்துக்கள்" எனும் வகையில் பத்து தமிழ் அறிஞர்கள் பற்றி எழுதி கட்டுரை நூலை வாசித்தேன். நவாலியூர் சோமசுந்தரப் புலவரில் ஆரம்பித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலான பத்து அறிஞர்கள் பற்றி எழுதி யுள்ளார்.

திருவள்ளுவர் பற்றிய கட்டுரையில் திரு வள்ளுவர் வரலாற்றை எழுத முற்பட்டுள்ளார். வள்ளுவர் கதைகளுக்கு ஆதாரமில்லை என் பதால்தான் நமது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நமது திருக்குறள் பதிப்பில் வள்ளுவர் வரலாறு எதனையும்பிரசுரிக்கவில்லை. திருவள்ளுவர் ஒன்றே செய்தார். அதனை நன்றே செய்தார் என்பதுதான் அவரது வரலாறு.

சுப்பிரமணிய பாரதியாரின் தமிழ் உணர்வு, இறையுணர்வு பற்றிய கட்டுரையில் குயில் பாட்டு முதல் கண்ணன் பாட்டு வரை காதல் உணர்வுகள் வெளிப்படும் விதத்தில் பாடினார் என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். "பாஞ்சாலி சபதம்" எனும் கவித் தொகுப்பில் பாஞ்சாலியைத் தாயாகக் கொண்டு "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" எனப் பாடுகிறார் எனும் கருத்தும் சரியானதாகப் படவில்லை.

நாவலரின் பெயர் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என எழுதப்படல் வேண்டும் எனக் கருதுகிறேன்.

பத்து வரலாறுகளும் "சிறுவர் நூல்" எனும் அடிப்படையில் வரவேற்கப்பட வேண்டும். நமது சிறுவர்களுக்கு தமிழ் வளர்த்த பெரியவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளார்கள். இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள நித்தியானந்தன் நூலை மறுபதிப்புச் செய்வதனால் நூலின் மெருகு கூடும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவன் ஒரு முட்டாள்

அந்த அரசனின் வேலையாள் இருக்கிறானே, அவன் ஒரு விந்தையான பேர்வழி. அரசன் அவனிடம் எந்த வேலை சொன்னாலும் அவன் உடனே அந்த வேலையை எதிர்ப்பு ஏதும் சொல்லாமல் செய்ததேயில்லை. ஏதாவது அநாவசிய சந்தேகங்களை எழுப்பி அரசனைக் குழப்புவது அவன் வழக்கம்.

உதாரணமாக வெளியூரிலிருக்கும் ஒரு மனிதனிடம் ஏதாவது வேலையாகப் போய்வரச் சொன்னால் போதும். உடனே அந்த வேலையாள் "அவர் அங்கு இல்லாவிட்டால் என்ன செய்வது? எத்தனை நாள் தங்குவது? போன்ற சந்தேகங்களை எழுப்புவான். அரசன் குழம்பத் தொடங்குவான். இதனால் இந்த அரசனுக்கு இந்த வேலையாள் மீது அடிக்கடி கோபம் உண்டாகும். அவனை வேலையை விட்டு நீக்கி விடலாமா? என்று எரிச்சல் உண்டாகும். ஆனால் அவனுடைய நேர்மையான குணம், உண்மையான உழைப்பு ஞாபகத்திற்கு வந்ததும் அரசன் கோபத்தை அடக்கிக் கொள்வான்.

அரசனுக்கு அவனை எப்படியாவது திருத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவன் யோசனை செய்து அந்த வேலையாளின் கழுத்தில் "இவன் ஒரு முட்டாள்" என்ற அட்டையைத் தொங்க விடும்படி உத்தர விட்டான். அட்டை கழுத்தில் தொங்கியபடி காலம் சென்றது.

அரசனுக்கு வயதும் கூடியது. நோய்வாய்ப் பட்டு படுத்த படுக்கையாகி இனிப் பிழைக்க மாட்டோம் என்ற நிலையை அடைந்து விட்டான். வைத்தியமும் பலனளிக்கவில்லை. அமைச்சர்கள், தளபதிகள் ஆகியோர் ஒவ்வொருவராக வந்து பார்த்து அரசனுக்கு ஆறுதல் சொல்லி விட்டுச் சென்றனர்.

வேலையாளும் அரசனைப் பார்க்க வந்தான். அரசன் அவனிடம் "நான் இனிப் பிழைக்க மாட்டேன், சாகப்போகிறேன்" என்று வருத்தத்துடன் கூறினான்.

**வேலையாள்: சாதல் என்றால் என்ன?**
**அரசன்: தெரியாது.**
**வேலையாள்: தேரில் போகலாம் அல்லவா?**
**அரசன்: தேர் போகாது.**
**வேலையாள்: குதிரை மேல்?**
**அரசன்: குதிரையும் போகாது, எதுவும் போகாது.**

"அரசே தாங்கள் ஊருக்குப் போவதாகச் சொல்கிறீர்கள் எந்த வழி, எவ்வளவு தூரம், எந்த ஊர் என்பதும் தெரியவில்லை என்கிறீர்கள். குதிரை போன்ற வாகனங்களும் செல்லாது என்கிறீர்கள். ஆனால் அந்த ஊருக்குப் போவது மட்டும் நிச்சயம் என்கிறீர்கள். ஊர் தெரியும், வழி தெரியாது என்கிற நீங்கள் தான் இந்த அட்டைக்க மிகவும் பொருத்தமானவர்" என்று கழற்றி அரசன் கழுத்தில் மாட்டிவிட்டுச் சென்றான் அந்த வேலையாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீமன் செய்த பூசை

மகாபாரதத்தில் ஒரு கதை வருகிறது. அருச்சுணன் கைலாயத்துக்குப் போனான். தெருவழியே போய்க் கொண்டிருக்கும் போது சிவபெருமானுக்குப் பூஜை செய்த பத்திர புஸ்பங்களாகிய நிர்மாலியத்தை வண்டி வண்டியாக எடுத்துச் சென்று சிவ கணத்தினர் ஓர் இடத்தில் கொட்டிக்கொண்டிருக்கிறார்கள். முதலில் அது இன்னதென்று அருச்சுணனுக்குத் தெரியவில்லை. இவை என்ன? என்று கேட்டான்.

"இவை யாவும் நிர்மாலியம், ஒரு பக்தன் சிவபெருமானை பூசை செய்தவை" என்றார்கள்.

"ஒரு பக்தனா இத்தனை பூக்களையும் கொண்டு பூசித்திருக்கின்றான்! என்ற வியப்பு அருச்சுணனுக்கு உண்டாயிற்று." அந்தப் பக்தன் யார் என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் எழுந்தது. "அந்தப் பக்தன் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று அருச்சுணன் கேட்டான்.

"பூவுலகில் பஞ்சபாண்டவர்கள் என்று இருக்கின்றார்களாம்" அவர்களில் மூத்தவர் தர்மபுத்திரர், அவருக்கு அடுத்த தம்பியாகிய வீமசேனர் என்ற சிரோமணியே இத்தனையையும் பூசை பண்ணினார். இதைக் கேட்டவுடனே அருச்சுணனுடைய வியப்பு பன்மடங்கு மிகுதியாகிவிட்டது.

அருச்சுணனுக்கு யோசனை படர்ந்தது. நம்முடைய வீம அண்ணா நிறைய சாப்பிடுவார். அதில் அவருக்கு நிகர் யாரும் இல்லை. அவர் பூசை செய்ததை நாம் பார்த்ததில்லையே! ஒரு கால் பூலோகத்தில் செய்யும் பூசை இங்கே பன்மடங்காக விளையும் போலிருக் கிறது. நாம் நாள்தோறும் விடாமல் சிவபூசை செய்து வருகிறோமே அந்த நிர்மாலியம் இங்கே இமாசலம் போலத்தான் குவிந்திருக்க வேண்டும் என்று எண்ணினான். அதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிடித்து உந்தியது.

"அவருடைய தம்பி அருச்சுணன் என்று ஒருவன் இருக்கிறானே அவன் பூசை செய்த நிர்மாலியம் எங்கேயாவது இருக்கிறதா?" என்று கேட்டான். அதுவா? அரு ஒரு சிறிய பகுதி முன்பே கொண்டுபோய் கொட்டி விட்டோம். இதுதான் எடுக்க எடுக்க மாளவில்லை.

அருச்சுணனுக்கு ஒரே மயக்கம் "கைலாச முறையே தனியாக இருக்கிறதே! அண்ணா எப்போது பூசை செய்தார் என்பதை இவர்களிடம் கேட்டுப் பார்க்கலாம்" என்று துணிந்து "வீமசேனர் எப்போது பூசை செய்தார் இத்தனை நிர்மாலியம் குவியும்படி?" என்று கேட்டார்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? மற்றவர்கள் எல்லாம் நந்தவனம் தேடி மலர் கொய்து வந்து சிவபெருமானுக்கு கையால் அருச்சினை செய்வார்கள். மகா பக்தராகிய அவரோ நந்த வனத்தையே அருச்சினை செய்து விடுகிறார்."

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்க வில்லையே"!

"நந்தவனத்தில் ஒரு மரத்தில் நிறைய மலர் குலுங்கும். அப்படியே கண்ணை மூடிக் கொண்டு அவ்வளவுகளையும்சிவபெருமானுக்கு அருச்சினை செய்வதாக பாவனை செய்வார். அடுத்த கணமே அத்தனை பூக்களும் நிர்மாலி யமாக வந்து விழும். இந்த மாதிரி மானசீகமாகப் பூசை செய்யும் பக்தரைப் பார்ப்பது மிகவும் அருமை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமிய செல்வம்

மனித வாழ்விற்குத் தேவையான செல்வங்களில் கல்விச் செல்வம் முக்கியமானது. இதனை "ஈடு இலாச் செல்வம்" என்றும், "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றும் சான்றோர் கூறியுள்ளனர். நீராலும் பிற செல்வங்கள் கேட்டை விளைவிக்கும். பிற செல்வங்கள், நெருப்பாலும் அழியக்கூடியன. ஆனால் கல்விச் செல்வமோ வெள்ளத்தால் அழியாது. வெந்தழலால் வேகாது, கொள்ளையிட முடியாது. கொடுத்தாலும் குறையாது. இவ்வுலகங்களில் உள்ள செல்வங்களில் உறவுகளுக்கு பங்கிட்டுக் கொள்ள முடியாத ஒரே செல்வம் இக்கல்விச் செல்வமாகும்.

பிற செல்வங்கள் ஒருவனிடம் சேர்ந்தால் நிலைத்து நில்லாமல் அவனை விட்டு விலகி ஓடிப்போய் விடும். கல்விச் செல்வம் ஒருவனை அடைந்து விட்டால் வாழ்விலும், தாழ்விலும், மட்டுமல்லாமல் சாவிலும் உடனிருந்தே அழியும்.

கல்விச் செல்வம் பெற்ற குடும்பத்திலிருந்த பிள்ளைகளுக்கு சில தலைமுறையிலாவது அந்த மணம் கமழ்ந்து கொண்டிருக்கும், பிற செல்வங்களைப் பெற்ற குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு அச்செல்வம் அடுத்த தலைமுறை வரையிலாவது நிலைத்திருக்கும் என்பது உறுதியில்லை.

கல்லாத மக்களும் களர் நிலமும் வேறல்ல. இரண்டும் ஒன்றே. இவைகளைப் பேணுவாார் எவருமில்லை. இவைகளால் பயனும் எவருக்கும் இல்லை. அதனால் இவை இருப்பதும் அழிவதும் ஒன்று போன்றதே. செல்வந்தர் முன் வறியவன் நிற்பது காணக்கூடிய காட்சியே, ஆனால் கற்றவர் முன்னே கல்லாதவன் நிற்பது காணச் சகியாத காட்சியாகும்.

மாடுகளின் முன்னே மக்களை வைத்து ஒப்புநோக்குதலும் உண்டு. எப்போது? உழைக்கும் போது, ஆனால் கல்லாதவன் முன்னே கற்றவரை வைத்து ஒப்பு நோக்குதல் எங்கும் எப்போதுமில்லை.

அறிவு இல்லாதவர் என்று எவரும் எங்கும் இல்லை. ஆனால், அதை வளர்த்து ஒளிவீசச் செய்வது இரண்டும் ஒன்று. கல்வி, பட்டறிவு (அனுபவம்) பட்டு பட்டு அறிவை வளர்க்க பல ஆண்டுகள் வேண்டும். ஆனால் கற்று அறிவை வளர்க்கச் சில நாட்கள் போதும்.

பல துறையில் பல நூல்களைப் படிப்பதை விட ஒரு துறையில் ஒரு நூல்களைப் படிப்பது நல்லது. அவற்றையும் மேற்போக்காக படிப்பதை விட கருத்தூன்றிப் படிப்பது நல்லது. ஆம் அகலமாக உழுவதிலும் ஆழமாக உழுவது நல்லதல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலோடு உள்ளத்தை உயர்த்தும்

மனிதன் உடல் தோன்றிய காலத்திலேயே, யோகாப் பயிற்சி தோன்றி இருக்கிறது. அறியக் கூடிய உடலின் வலிமையைப் போற்றிப் பாதுகாத்து, அழியாத பரம்பொருளிடம் மனத்தை நிலைநிறுத்த உதவும் பயிற்சிதான் யோகம்.

பதஞ்சலி முனிவர் இந்த நிலையை அடைய நமக்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கிறார். ஒரு மனிதன், தனது மூன்று குணங்களையும் ஒருமைப்படுத்தி, இயல்பான கடவுட் பண்புடன் இணையச் செய்வது "யோகம்" என்று அவர் கூறியிருக்கிறார். பதஞ்சலி யோக சூத்திரங் களும் அதைத் தொடர்ந்து பிற்காலத்தில் எழுதப்பட்ட பிருகத் சம்கிதையும் இதை நமக்குத் தெளிவாக்குகின்றன.

மனதை அமைதிப்படுத்துவது புத்திக் கூர்மையை அதிகரிக்கச் செய்வது, சிந்தனையைத் தெளிவாக்குவது ஆகியவற்றுக்கு இன்றைய மருத்துவ முன்னேற்ற வழிகளிலும் கூடத் தெளிவான வழிமுறைகள் இல்லை. ஆனால் யோக வழியில் எந்த மருத்துவமும் இல்லாமல் இவற்றை நமது முன்னோர்கள் மிக எளிதாக அடைந்திருக்கிறார்கள்.

நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எல்லாச் சிக்கல்களையும் நாம் யாரிடமும் மனம் விட்டுச் சொல்ல முடிவதில்லை. அப்போது மனதுக்குள்ளேயே அந்தச் சூழ்நிலையையும் அதனால் நமக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களையும் எண்ணிப் பார்த்து விபரீத நிலைகளைப் பார்த்துக் கொள்கிறோம். இப்படி அடிக்கடி பெறும் அனுபவம் உடல் நிலயில் சிக்கலான கோளாறுகளை ஏற்படுத்தி விடுகிறது. ஆஸ்மா, இரத்த அழுத்தம் கூடுதல், வயிற்றில் அமிலம் கூடி குடல் புண் ஏற்படுதல், நீரிழிவு, தலைவலி, மூட்டுக்களில் இரத்தக் கட்டு போன்ற பலவும் இப்படி நாளடைவில் நம்முடைய உடலில் வந்து சேர்ந்து கொள்ளும் சிக்கல்கள் ஆகும்'.

இன்று இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இதற்கு மாற்றாக யோகப்பியாச முறைகள் புகழ்பெற்ற டாக்டர்களாலேயே உபயோகிக்கப் படுகின்றன். பிரபல மருத்துவமனைகள் பல வற்றிலும் உடலின் பயிற்சிக்குச் சிகிச்சைகள் அளிக்கப்படுவதைப் போல யோக வைத்திய முறை அவசியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

யோகப் பயிற்சி விஞ்ஞான ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறையாகவுள்ளது. யோகப் பயிற்சியைப் பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் ஐ.நா சபை "யோகா தினம்" கொண்டாடுவதற்கு முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

யோக சாஸ்திரத்தில் வல்ல நமது முன்னோர் கள் சமயத்தைப் பற்றிக் கூறும்போது, அது அவர்களுடைய அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டது என்று சொல்லுகிறார்கள். இந்த அனுபவங்களைக் கண்டறிந்தவர்கள் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதை எழுதி வைத்திருக்கிறார்கள். அன்று முதலே இது பூரணமாக வரையறுக்கப்பட்டுக் குரு குலங்களில் மாணவர்களுக்குச் சோதிக்கப்பட்டன என்று சுவாமி விவேகானந்தர் தமது இராஜ யோக உரைகளில் கூறுகிறார்.

ஆண்டவன் ஒருவனேயானாலும் அவனை அடையப் பல வழிகள் உண்டு. அதைப் போலவே பரம்பொருளுடன் ஒன்றிவிடும் நிலையை அடைய யோக வழியிலும் பக்தி யோகம், கர்மயோகம், ஞானயோகம் ஆகிய மூன்று முறைகள் இருப்பதை பகவத்கீதை எடுத்துக் கூறுகிறது. பதஞ்சலி முனிவர் தமது யோக சூத்திரங்களில் அஷ்டாங்க யோக முறைகளைக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) நியம – பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்து மனதை இறைவழிப்படுத்தல்.
(2) யம – அகிம்சை, வாய்மை, ஆசையை ஒழித்தல் போன்ற கட்டுப்பாடுகள்
(3) ஆசனங்கள் – நம்மைச் சுற்றிலும் உள்ள இயற்கையான சூழ்நிலையுடன் நம்மை வயப்படுத்துதல்
(4) பிரணாயாமம் – உலகத்திலுள்ள முக்கிய சக்திகளைக் கட்டுப்படுத்தி நமக்குப் பயன் படுத்திக்கொள்வது.
(5) பிரத்யாகரா – ஐம்புலன்களில் அதிகாரத் திலிருந்து மனதை மீட்டு உள்முகமாகத் திரும்புதல்.
(6) தாரண – மனதை ஒருமுக நிலையில் கூர்மைப்படுத்தல்.
(7) தியானம் – மனதை விரிவாக்க அமைதிப் படுத்தல்.
(8) சமாதி – மனநிலையை உயர்த்திப் பரம் பொருளை உணர்தல்.

இவ்வாறு அஷ்டாங்க யோகம் சாதாரண வாழ்க்கைக் கட்டுப்பாடுகளில் தொடங்கி, மனிதனை மிக உயர்ந்த நிலையில் கொண்டு சேர்ப்பது வரை எல்லாவற்றையும் படிப்படியாகச் செய்கிறது. இவற்றில் முதல் மூன்று நிலை களும் பகிரங்க சாதனைகள் அடுத்த இரண்டு நிலைகளும் அந்தரங்க சாதனைகள். இறுதி மூன்று நிலைகளும் அந்த ராத்ம சாதனைகள், பகிரங்க சாதனைகள் உள்ளத்தைப் பற்றியவை இந்த இரண்டும் ஒருங்கே அமையப்பெற்று பக்குவத்தை அடைந்த பிறகே நாம், படிப் படியாகப் பரம்பொருளை உணரும் அந்தராத்ம சாதனைகளில் ஈடுபடமுடியும்.

பிரணாயாமம் நமது உடலின் உள்நிலை களைச் சுத்தப்படுத்துகிறது. மனதுக்கு வலிமையைத் தருகிறது. ஆசனங்கள் நமது உடலின் பல பகுதிகளிலும் நிறைவைத் தரும் பலத்தை அளிக்கிறது. மயூராசனம், புஜங்கா சனம், சிரசாசனம் ஆகியவற்றில் வழக்கமாக நமது உடல் பளுவைத் தாங்காத உறுப்புகள் அந்த நிறையை ஏற்கின்றன. தசைகளும், மூட்டுக்களும் குறிப்பாக முதுகெலும்பும் முறுக்கேறி வலுப்பெற பஸ்திமேதாசானம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம் போன்றவை உதவுகின்றன.

இவ்வாறு நாம் பெறும் உடல் வலிமை நமது உடலின் பகுதிகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன. சாதாரண தேகப் பயிற்சிக்கும் ஆசனங்களுக்கும் இதுவே முக்கியமான வித்தியாசம்.

மூளைக்கு அடுத்தபடியாக நம்முடைய உள் உடல் நிலைகளைக் கட்டுப்படுத்தும் மிக முக்கியமான உறுப்பு முதுகெலும்பு இதை வலுப்படுத்த யோகாப்பியாசத்தைத் தவிர மருந்து முறைகளோ, உடல் பயிற்சிகளோ இல்லை. முதுகுவலி, கூன் விழுதல், தொண்டைக் கழுத்து வாதம் போன்றவை இன்று மக்களி டையே வெகுதூரம் பரவி இருக்கின்றன. இவை இல்லாத நெஞ்சுரமும் நேர்ப்பார்வையும் தரக்கூடிய யோக முறைகளை நமது முன்னோர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

பத்மாசனம் போட்டுப் பிரணாயாமம் செய்யும் போது நம்முடைய உடம்பின் அடிப்பகுதி நேர்வயப்படுகிறது. உடம்பின் பல பகுதிகளிலும் பிராணசக்தி நம்மை இயக்கு கிறது. இதை வரிப்படுத்தி உடல் சமநிலையை அடையப் பிராணயாமம் உதவுகிறது.

பிராணம் என்பது சூட்சுமமான சக்தி. பிராணயாமம் இந்தச் சூட்சும சக்தியைக் கட்டுப் படுத்துகிறது. வயதான, உடற்குறைகள் உள்ளவர் களும் கூட இதைச் செய்து உடல் வளமும், உடல் வலிமையும் பெறமுடியும். இன்று நாம் பரவலாகக் காணும் அலெர்ஜிகள், மூச்சுக் கோளாறுகள், அடிக்கடி சளி பிடித்தல் போன்ற பல உபத்திரங்களையும் அது நீக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரத்யாகரா" என்பது ஐம்புலன்களிலிருந்து நம்மை மீட்டுச் சுருக்கிக் கொள்ளுதல், இதன் மூலம் ஒரு யோகி தனது இருதயத் துடிப்பு, இரத்த ஓட்டம், உடலில் வெப்பநிலை ஆகியவற்றைக் கட்டுப்படுத்திவிட முடியும்.

மூச்சை அடக்கி பசி, தாகம் ஆகியவற்றின் உபாதையை நீக்கி, உடலை அசைவின்றி வைக்க முடியும். இன்றைய மிக முன்னேறிய மருத்துவ சாஸ்திரத்திலும் கூட இவ்வாறு உடல் நிலைகளைக் கட்டுப்படுத்தும் வழிகள் கூறப்பட வில்லை.

மனம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடையைத் தேடும்போது "மனிதன் என்றால் என்ன?" என்ற கேள்வியும் உண்டாகும். அதற்கு வருகின்ற விடை மனம் என்றால் மனிதன்தான், மனிதன் என்றால் மனம்தான்" என்பதுவேயாகும். ஏனெனில் உடல், உயிர் இந்த இரண்டையும் எடுத்துக்கொண்டு உடல்தான் மனிதனா? என்று கேட்டால், உடலானது மனிதன்தான் என்று பதில் வரும்.

உள்ளத்தின் உள்ளே உள பலதீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடர் வினை கெடப்
பள்ளமும்மேடும் பறந்து திரிவரே கள்ள முன
முடைக்கல் வியில்லாதாரே

என்று திருமந்திரம் கூறுகிறது.

இதில் என்ன ஐயம்? என்று சிலர் கேட்கலாம். உயிர் பிரிந்த பிறகு உடலை மனிதன் என்று எவரும் ஒப்புக்கொள்வதில்லை. அப்படிப்பட்ட உடலும் உயிரும் சேர்ந்து இயங்கும்போதுதான் மனம் என்ற ஒன்று விளக்கமாக இயக்கமாக நடைபெற்று வருகிறது. அதைத்தான் ஆங்கிலத்தில் பெசனாலிட்டி என்கிறோம்.

மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனின் தன்மை. மனத்தின் மாண்பும் உயர்வும் எதுவோ, அதுவே மனிதனின் பெருமையும் உயர்வும் ஆகும். ஆகையால் மனத்தை எந்தளவு தூய்மையாக வைத்துக் கொண்டு வலுப்படுத்திக்கொண்டு நெறிப்படுத்திக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு மனிதனுக்கு வாழ்க்கையில் வெற்றியும் பிறருடைய மதிப்பும் கிடைக்கும். மன வளமே மனிதனுக்கு வாழ்க்கையையும் வளம் நிறைந்ததாக ஆக்கும்.

மனம் எதைப் பற்றிக்கொள்கிறதோ அதை மனத்தால் பதிவு செய்துகொள்ள மந்திரம் உப யோகப்படுகிறது. மனதை நிலை நிறுத்தும் ஓர் மைப் பயிற்சிக்கு மந்திரத்தின் மூலம். பழக்கம் ஏற்படுகிறது. முதலில் விக்கிரகத்தை வைத்துக் கொண்டு செய்யலாம். ஒவ்வொரு எழுத்தும் எங்கிருந்து கிளம்பி ஒலியாக வருகிறதோ, அதைப் பொறுத்து இது இத்தனை நரம்புகளைத் தேடும் என்று இருக்கிறது.

ஓம் என்ற சொல்லை எடுத்துக்கொண்டால், மூலாதாரத்திலிருந்து மூளை வரையில் உள்ள நரம்புகள் யாவும் இவ்வாறு தொடர்புபட்டு இயக்கம் பெறுகின்றன.

நாம் வாழ்க்கயிலே பெற வேண்டிய வளங்களுக்கு ஏழு சம்பந்தங்கள் உண்டு. அவை உரு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல், சுகம், செல்வம் ஆகியவையாகும். அவற்றுக்கேற்ப மந்திரங்களும் அமைந்திருக் கின்றன. அவற்றின் மூலம் நாம் ஒவ்வொன் றையும் அடையலாம். ஒவ்வொரு மனிதனும், தன் தந்தையும், தாயும் பாலுணர்வு தந்த கவர்ச் சியின் மூலம் இணைந்து உறவு கொண்டு, தோற்றுவிக்கப்படுகின்றான். அதனால் பிறவி யிலேயே அவனிடம் பாலுணர்வும், மாறக்கூடிய மன இயல்பும் இருக்கின்றன. இந்த அடிப்படை மன வளத்தின் மூலம் மாற்றப்பட வேண்டுமானால் அதற்கு கூடுதலான, கட்டுப்பாடான, உயர்ந்த சக்தி ஒன்று அவனுக்கு வழிகாட்ட வேண்டியது மிகவும் அவசியம். அதையே அவன் தன் குரு நாதரின் மூலம் பெறுகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்தில் ஈடுபட்டால் உடல் அளவிலே "நான்" என்ற நிலை மாறி, உயிர் அளவிலே "நான்" என்ற எண்ணம் வந்துவிடும். எல்லா உயிர்களுக்கும் நலம் செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு மனப்பக்குவம் வந்துவிடும். அதைத் தான் சுவர்க்கம் என்று சொன்னார்கள். மயக்கத்தில் ஆற்றிய செயல்களால் விளைந்த துன்பங்களைக் களைந்து அமைதி பெறும் உயர் நிலையே சுவர்க்கம் ஆகும்.

கடலும் அலையும் போலத் தெய்வமும் உயிர்களும் ஆகும். ஆசையே அலைகளாக இருப்பது போல, தெய்வத்தின் திருவிளை யாடலே உயிர்களாக இயங்குகின்றது. எனவே, ஆன்மா என்னும் போதெல்லாம் நம்முன்னே இருக்கும் தெய்வம் என்ற பேராதாரம், பரம் பொருள் இயங்குகிறது என்பதே பொருள். அது எல்லையற்ற ஆற்றலுடன் செயற்பட முடியும். ஆசைகளினால் புலன்கள் கட்டுப்படும் நிலை யில், இது தன்னுடன் வரையில் குறுகிவிடுகிறது. இப்படிக் குறுகிக் கட்டுப்பட்டுச் செயலாற்றும் போது அதை நர + அகம் என்று சொல்லுகிறோம். இது இந்த உடலே நான், என்று எண்ணி மயங்கும் நிலை நான் என்பது மனித தத்துவத்தைக் குறிக்கும் ஒரு சொல், நர + அகம் என்ற இரு சொற்களும் இணைவதே நரகம் என்று ஆயிற்று.

இதற்கு மாற்றுச் சொல்தான் சுவர் + அகம். சுவர்க்கம் என்பது இது உயிரே நான் என்று உணரும் சிறப்பு நிலை பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்கமற நிறைந்த மகா ஆகாசத்தின் சிறு கூறுதான். இந்த உடலில் உள்ள உயிர் அதை உணர்ந்து தியானத்தில் ஈடுபட்டால் உடல் அளவில் "நான்" என்கிற நிலைமாறி, உயிர் அளவிலே "நான்" என்ற எண்ணம் வந்து விடும்.

ஞானிக் உலகோர்க்கு நல்வாழ்விற்கென இரண்டு உயர் வழிகளைக் காட்டி இருக்கிறார் கள். அவை அறமும் தவமும் ஆகும். அறம் என்பது தன்னுடைய வாழ்க்கை நெறியைப் பண்புடன் அமைத்துக்கொள்வது, தவம் என்பது மனதைப் புலன்களிலிருந்து விடுவித்து ஆன்மாவை வயப்படுத்தலும், பரவசமாக்குதலும் ஆகும்.

செய்யச் செய்ய இந்தப் பயிற்சியில் பலன் பெறலாம். மூளையின் முன்புறத்திலிருந்து வெளிப்படுவது பீற்றா அலை – புறமனம்மூளையின் பின்புறத்திலிருந்து வெளிப்படுவது. அல்பா அலை – நடுமனம் மூளையின் மேற்புறம், பக்கப் பகுதியிலிருந்து எழுவது (T) தீட்டா அலை – அடிமனம் ஆழ்ந்த உறக்கத்தின்போது வெளிப்படுவது. டெல்டா அலை நிறைபெறும் மனம் நிறைவேற்ற நிலை – துரியாதீதம் எனப் படுவது இதுதான்.

இந்த அமைதியை நாம் சாதாரணமாகத் தூக்கத்தில் பெறுவதைப்போல் விழிப்பு நிலையில் பெற வேண்டும். இந்த முயற்சிதான் தியானம். இதை அடைய வேண்டும். என்ற முனைப்பு இருந்தால் படிப்படியாகப் பெறலாம். தூங்காமல் தூங்கி அமைதி காணவேண்டும் என்றுதான் சித்தர்கள் கூறியிருக்கிறார்களே!

மஹாகாசம் எனப்படும் பிரபஞ்சம் அல்லது பேராதரப் பெருவெளியில், கோடானு கோடி சூரியக் குடும்பங்கள் அடங்கி உள்ளன. அதில் ஒன்றே நமது சூரியக் குடும்பமாகும்.

இந்தச் சூரிய மண்டலத்தில் ஒன்பது கிரகங்கள் அடங்கி இருக்கின்றன. இவை மனிதனுடைய மன எழுச்சியுடனும் உடலில் ஏற்படும் இரசாயன விளைவுகளுடனும் பெரிதும் சம்பந்தமுடையவை. ஒவ்வொரு கிரகத்திலும் உள்ள இரசாயனப் பொருட்கள், உலோகங்கள் அவற்றிலிருந்து வரும் கிரணங்கள் அவற்றுக்கும் பூமிக்கும் உள்ள இடைத்தூரம், இவற்றைப் பொறுத்து மனிதனுடைய உடலிலும் மனத்திலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அக்கிரகங்களை மதித்து, அவற்றோடு தியானத்தின் மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நாம் நமக்கு கேடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம். நன்மை களையும் பெறலாம். சூரியனுடன் தொடர்பு கொண்டால் செல்வம், கீர்த்தி, நீடித்த ஆயுள் ஆகியவை கிடைக்கும். புதன், செல்வம், வெற்றி ஆகியவற்றை அளிக்கும். வெள்ளி உடல், மன அமைதி ஆகியவற்றை அளிக்கும். சந்திரன் உடல்நலம், நட்பு ஆகியவற்றைப் பலப் படுத்தும். செவ்வாய் மன வலிமையையும் வெற்றியையும் அளிக்கும். வியாழன் மூலம் புகழும் மேன்மையும், அறிவும் கிடைக்கும். சனி நீண்ட ஆயுளும் உயர்புகழும் அளிக்க வல்லது. ராகு – கேது இரண்டும் சாயாக் கிரகங்களே. இவற்றை ஒவ்வொன்றுக்கும் மூன்று நிமிடங்கள் தியானித்தால் போதும் . எல்ல வளங்களையும் நாம் பெறமுடியும்.

பிரம்மா, விஷ்ணு, சிவம் என்று சொல்லக் கூடிய இந்த மூர்த்தங்களுக்கெல்லாம் மூலா தாரமாக இருக்கக்கூடியது பிரம்மம். நாம் பல உருவங்கள் கொடுத்து வணங்கக்கூடிய தெய் வங்கள் அனைத்தும் அந்த பிரம்மத்தினுடைய வடிவத்தில் இருந்து ஏற்பட்டது. பிரம்மமாக இருக்கக்கூடிய அந்த உயர்ந்த நிலைமைய நம்மால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது என்கிற காரணத்திற்காகத்தான், அது கீழே இறங்கி வந்து நம்முடைய விரும்பத்திற்கேற்ப நாம் என்ன உருவம் கொடுக்கிறோமோ, அதை ஏற்றுக்கொண்டு நமது கற்பனைக்கு ஏற்ற வழியில் ஒரு நாடகம் நடக்கிறது. இந்த நாடகங்கள் தாம் கதையாக மாறி நம்மை நல் வழிப்படுத்துகிறது.

வணக்கம் செலுத்துவதில் மூன்று வகைகள் இருக்கின்றன. முதலாவது – இரண்டு கரங்களையும் சிரத்திற்கு மேலே உயர்த்தி கைகளைக் குவித்து வணக்கம் செய்வது. ஆண்டவனுக்கு மட்டும்தான் அப்படிச் செய்ய வேண்டும். இரண்டாவது இரண்டு கரங்ளையும் ஒன்றாக முகத்திற்கு நேராக வைத்து வணக்கம் செய்ய வேண்டும். இப்படி குருவுக்கு மட்டும் தான் செய்ய வேண்டும். மூன்றாவது இரண்டு கைகளையும் மார்புக்கு நேராக வைத்து வணக்கம் செய்வது. பெரியவர்களுக்கும் நண்பர்களுக்கும் அப்படிச் செய்ய வேண்டும்.

இதைத்தவிர சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குவதும் உண்டு. அது எட்டு அங்கங் களும் பூமியில் படுவது போல இனிமேல் நான் உனக்குச் சொந்தம். உன் அடிமை, உன்னுடைய தாசன் எனக்கு எல்லாமே நீதான்! என்பது போல சரணாகதியாகும் நிலை இதை நிர்வாண நிலை என்றும் சொல்வதுண்டு.

பக்தியில் நான்கு முக்கியமான பாவங்கள் இருக்கின்றன. வாத்தசல்யபாவம், சக்யபாவம், ஐஸ்யபாவம், மாதுர்யபாவம், இந்த மாதுர்ய பாவம் என்பது நாயக நாயகி பாவம். அந்தப் பாவத்தில் இருக்கிறபோதுதான் நமக்கு பக வானுடைய அருள் முழுமையாகக் கிடைக்கும்.

எப்படி ஒரு மனைவியானவள், தன் மணாளனிடத்தில் அசைவில்லாத பற்றும் ஆசையும் கொண்டிருக்கிறாளோ அப்படி இறைவனிடத்தில் நாம் இருந்தோமேயானால் நம்மீது அவனுக்கு அன்பும் ஆசையும் அதிகமாகும். நாம் என்ன கேட்கிறோமோ அதைக்கொடுப்பான்.

பக்தி என்பது பற்று இறைவனைப் பற்றும் பற்றிற்குப் பெயர்தான் பக்தி. அது குரங்குப் பிடியாக இருக்கவேண்டும். குரங்குக் குட்டி தாயின் இடுப்பைப் பிடித்துக்கொள்ளும். தாய்க் குரங்கு தாவும்பொழுது குட்டி தாய்குரங்கை விடாது. அதுபோல இறைவனை நாம் பிடித்துக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட மறந்தது ஏன்?

உலக மக்கள் யாவரும் இரண்டு விடயங்களில் ஒற்றுமை கொண்டு விளங்குகின்றனர். அனைவரும் சுகபோகங்களில் திளைக்க வேண்டும் என்பதிலும் நீடித்த ஆயுள் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பதிலும் ஒற்றுமை உடையவர்ளாகக் காணப்படுகின்றார். இந்திரலோக சொர்க்கத்தை விரும்பாதவர்கள் யாரும் உளரோ? தேவர்களே நீடித்த ஆயுளுக்காகப் பாற்கடலைக்கடைந்தவர்கள் தானே! இன்பம், சொர்க்கம் எங்கேயிருக்கிறது என்ற வினாவுக்கு விடை காணப்புகின் ஒவ்வொருவரினதும் எண்ண ஓட்டங்களின்படி விடை காணப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

வானுலகில் இரண்டு விண்மீன்கள் உல்லாசமாகப் பிரகாசித்தன. அவர்கள் பூவுலக வாழ்வில் நீண்ட காலம் இணைந்து வாழமுடியாமல் பிரிக்கப்பட்டிருந்த சோடிகள் யார் என்று நினைக்கிறீர்களா? அவர்கள் வேறு யாருமல்ல. கண் துஞ்சாது காவல் புரிந்த இலட்சுமணனும் மாதரசி ஊர்மிளாவும் தான். இந்தச் சோடிக்கிளிகளும் தாம் வாழ்ந்த பூவுலகைக் காண வேண்டும் என்று கருதினர்.

21ஆம் நூற்றாண்டின் விந்தைகளைக் காண்பதற்கு புவிக்கு வந்தார்கள். அவர்கள் முதலில் இறங்கிய இடம் சென்னை அண்ணா சமாதி. சமாதியின் நுழைவாயிலில் கம்பன் சிலையாக இருப்பதைக் கண்டனர். அட என்ன அதிசயம்! கம்பரில் காமரசம் கண்டவரின் நுழைவாயில் தோரணமாக கம்பனை அமைத்திருக்கிறார்களே! வியந்தான் இலக்குவன்.

இலக்குவன் :

விஞ்ஞான யுகத்திலும் இராமன் புகழ் பேசப்படுகிறது. கவிச்சக்கரவர்த்தி இயற்றிய கவிநயம் மிகு பாடல்கள் மக்கள் மனதில் இன்னும் நிலைத்திருக்கிறது. கம்பன் புகழ் பாடி கன்னித்தமிழ் வளர்ப்போர் ஒரு குடும்பமாக உலகளாவி இருப்பது மகிழ்ச்சி தருகிறதல்லவா! என்ன ஊர்மிளா ஒன்றும் பேசாமலிருக்கிறாய்?

ஊர்மிளா :

பிரியநாதனே! என்னைப் பேசாதவர் பற்றி நான் என்ன கூறுவது.

இலக்குவன் :

நீ எதைப்பற்றிக் கூறுகிறாய்?

ஊர்மிளா :

கல்லையும் மண்ணையும் விலங்குகளையும் அறிவு ஜீவிகளாகக் கவிபாடி மகிழ்ந்த கம்பர் பெருமான் என் போன்றவர்களைப் பாட மறந்துவிட்டாரே!

கம்பர் கவியமுதில் ஊர்மிளா மிதிலையிலே அறிமுகமாகிறாள். வில்லை ஒடித்து சீதையைக் கடிமணம் புரிந்து கொண்ட இராமன் பற்றிப் பக்கம் பக்கமாகப் பாடியவர்கள் தம்பியின் குடும்ப விளக்குகளைப் பற்றிப் பாடமறந்ததேன்.

> வள்ளல் தமக்கு இளையோர்கள் தமக்கும்
> எள்ளில் இல் கொற்றவன், எம்பி அளித்த
> அள்ளல் மலர்ந்திரு அன்னவர் தம்மைக்
> கொள்ளும் எனத் தமிரோடு குறித்தான்.
> (கம்பராமாயணம் 1259)

சீதையை வளர்த்த சனகனின் மகள் அல்லவா ஊர்மிளா. சனகனின் தம்பியின் குசுத்துவாசன் பிள்ளைகள் மாண்டலி, சுருதி கீர்த்தி ஆகியோர் பரத, சத்துருக்கனை மணந்தார்கள் என இருவரியில் கூறி முடித்து விடான். கம்பருக்கு இந்தப் பாரபட்சம் ஏன்? சீதைக்கு எந்த வகையில் இம் மூவரும் குறைந்து போனார்கள். சீதை கணவனுடன் கானகம் சென்றாள். ஊர்மிளாவும் கணவனைப் பிரிந்து அயோத்தியைக் கானகம் ஆக்கிக் கொண்ட பெருங் கற்புக்குரியவளன்றோ! அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதரசியை அவள் நாமத்தை மூலத்திலிருந்து தேடிக் கண்டுபிடிக்கும்படி வைத்துவிட்ட கம்பனை என்ன வார்த்தையினால் திட்டுவது.

ஊர்மிளாவுக்கு கம்பன் செய்த துரோகங்கள்தான் எத்தனை? இராமன் கானகம் புகும் செய்தி கேட்டு அயோத்தியே கலங்கி நின்றது. விற்றொழில் காணீர் எனக் கொதித்தெழுந்தான் இலக்குவன், அண்ணனுடன் புறப்படச் சித்தமானான். அண்ணனைத் தெய்வமாகப் போற்றியவன் தன் துணைவி பற்றிச் சிந்தித்தானா? இன்றைய பூவுலக வாசிகளுக்கும் அன்றைய இலக்குவனுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது. கட்டிய மனைவியை விட்டுவிட்டுப் பொருள் தேடுவதாகக் கூறி கடல்கடப்பவர்களை ஒப்புநோக்கிப் பாருங்கள். மனைவி என்பவள் உணர்வற்ற சிலையா? சித்திரப் பாவையாகத் திகழ்ந்தவளை மௌனமாகவே பிரிந்து தமையனுடன் செல்லப் புறப்பட்டானே! ஊர்மிளையின் மனக்குமிறல்களைக் கம்பனால் அறியமுடியவில்லையா? அந்தப் பேதைப் பெண் ஏதும் செய்ய முடியாதவளாய் அயோத்தி அரண்மனையில் வடித்த கண்ணீர் எத்தனை கதை சொல்லும். இதைத் தனியாகக் கம்பன் கவிபாடப் போகிறானா? இலக்குவன் மரவுரி தரித்ததும் அக்கணம் முதல் தானும் மரபுரி தரித்து கிழங்கும் கனியும் உட்கொண்டு தவம் இருந்தாளே, அவளை என்னவென்று புகழ்வது? சுமித்திரை மாமியாராவது பெண்மனதை அறிந்திருந்தாளா? என்றால் இல்லையே, "தம்பியாகச் செல்லாதே, காவலாளியாகச் செல்" "முன்னம் நீ முடிவாய்" என்றெல்லம் உபதேசம் செய்தவள் மகளுக்கு இணையான மருமகளை நினைத்துப் பார்த்தாளா? ஓ..... அப்பொழுது அவள் நாயகன் தசரதன் அயோத்தியில் தானே இருந்தான்.

திருமண பந்தத்தின் தார்ப்பரியம் இன்பத்திலும், துன்பத்திலும் இணைபிரியாது வாழ்தல் என்பது தான்! திருமணத்தில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து "உனக்கு நான்" என்று அக்கினி சாட்சியாக இணைந்தவர்கள் இலக்குவனும், ஊர்மிளையும் அப்படியிருக்க ஊர்மிளையை அயோத்தியில் பிரித்துவிட்டது என்ன நியாயம்? அந்நாட்களில் அவள் எப்படி வாழ்ந்தாள் என்பது இன்றைய சமூகம் அறிந்து கொள்ளவேண்டிய பாடமாகும்.

பூவுலகம் காணப் புறப்பட்டவர்கள் கொழும்பு மாநகருக்கு வந்தார்கள். திருமணம் முடிந்து சில காலத்தில் கணவன் வெளிநாடு சென்றுவிட்டதனால் துணைவியைப் பிரிந்த பெண் ஒருத்தியைக் கண்டனர். புதுத்துணை தேடிக்கொண்டு, வெளிநாட்டிலிருந்து கணவன் பணம் அனுப்ப இங்கு உல்லாசபுரியில் திளைத்திருக்கும் காட்சியைக் கண்டனர். இலக்குவன் ஊர்மிளையை நோக்கி –

இலக்குவன் :

தேவி என்னைப் பிரிந்திருந்த காலத்தில் நீ வாழ்ந்திருந்த வாழ்வு உலக மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு. காட்டில் கிழங்கும் பழங்களும் உண்டு வாழ்ந்தோம். நீயோ அரண்மனையில் காட்டு வாழ்வை வாழ்ந்தாய் என்று அறிந்து கொண்டேன். கம்பர் பெருமான் உன்னைப்பாடி இன்றைய மாந்தருக்கு நல்லறிவு ஏற்பட வழிகாட்டியிருக்க வேண்டும் என்பதை நானும் உணர்கிறேன். உடலாலும் உள்ளத்தாலும் தன்நிலை காத்து, தன் துணைவனுக்கு எல்லாவகை இன்பமும் நல்கி, அவரைத் தன் இதயமாகப் பேணி கணவரின் குலம் சார்ந்தவர்களை மதித்துப் போற்றி வாழ்பவளே உயர்குலப் பெண்ணாவாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நெறியில் வாழ்ந்து காட்டிய தெய்வமே! இனி எப்பிறப்பிலும் உனைப் பிரிய மாட்டேன்.

ஊர்மிளை :

சுவாமிஒரு பெண்ணால் எதையும் தாங்கமுடியும். கொண்ட நாயகனைப் பிரிந்து வாழும் கொடூரத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அப்படியிருக்க பூவுலக மங்கையர் பணத்திற்காக தம்கணவனை விரும்பியே பிரிந்து நிற்பது எனக்கு வேடிக்கை யாக இருக்கிறது. பதின்நான்கு ஆண்டுகளும் கண்மூடாது உங்களை என் கண்விழியில் வைத்திருந்தேன். மனதால் மானசீகமாக தினமும் பூசித்தேன். என் அழகு உங்கள் பொருட்டுத்தானே! அன்பே! அங்கே பாருங்கள். நவீன அழகு சாதனங்களினால் தன்னை அழகுபடுத்திக் கொண்டு காண்போரைக் கவரும் வகையில் செல்கிறார்களே! தமிழ்ப்பண்பு காக்க வேண்டியவர்கள் நாகரீக வயப்பட்டிருக்கும் நிலை காண்பதற்கா பூவுலகம் வந்தோம். சுவாமி! விண்ணுலகம் சென்று விடுவோம் வாருங்கள். கற்புநெறி வாழ்வு வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் யாரும் இன்றைய பெரும்பான்மை மனித சமுதாயத்தைக் காண அஞ்சுவது சரியானது தானே! வான்வெளியில் பயணம் தொடர்கிறது.

இலக்குவன் :

ஊர்மிளை அதோ பார் யார் என்று? வள்ளல் சடையப்பரும், சக்கரவர்த்தி கம்பரும், எங்கே போகிறார்கள். நம்மைப்போல பூவுலகைக் காணும் விருப்பம் அவர்களுக்கும் வந்துவிட்டதோ தெரியவில்லை.

சடையப்பரும் கம்பரும் தம்பதியர் இருவரையும் கண்டு வணங்கினார்கள். எங்கே இருவரும் புறப்பட்டு விட்டீர்கள்? இலக்குவன் வினாத்தொடுக்க, பூவுலகம் காணச் செல்கிறோம் என்று பதில் வந்தது. கம்பரே! நீர் கண்ட கோசலம் இன்றில்லை. "கொள்வாரும் கொடுப்பாரும்" இல்லா நாட்டைக் காணமாட்டீர், "கொலை செய்பவரும் கொள்ளையடிப்பவர் களையும்" தான் காண்பீர்கள். நல்ல சிந்தனைக்கு பூவுலகில் இப்போது இடமில்லை வாருங்கள். எம்முடன் மீண்டும் ஒளியுலகு சென்று விடுவோம்.

கம்பர் :

தேவியார் பேசாது வருகிறார்களே?

இலக்குவன் :

கம்பரே! ஊர்மிளைக்கு உம்மீது கடுங்கோபம்.

கம்பர் :

ராமராம் என்ன வார்த்தை கூறி விட்டீர்கள். என் தெய்வத்திற்கு என்மீது கோபமா? காரணம் அறியத் துடிக்கிறேன் தாயே!

ஊர்மிளை : கண்டவுடன் தெய்வம், தாய் என்றெல்லாம் கூறுகிறீர்களே. நீங்கள் படைத்த இராம காவியத்தில் என்னைப்பற்றி ஏதும் பேசாமல் விட்டு விட்டீர்களே.

கம்பர் :

தாயே! இராம இலக்கியத்தின் உயர்ந்த தெய்வமே நீங்கள் என்னைத் தவறாகக் கருதிவிடக்கூடாது. பதின்நான்கு ஆண்டுகள் நீங்கள் வாழ்ந்த வாழ்வு.....! எண்ணிப் பார்க்கவே என்னால் முடியவில்லை. உங்களைப் பாட நினைத்த போதெல்லாம் என் தாயாக, தெய்வமாக உயர்கற்பின் மாதரசியாக காட்சி தந்தீர்கள். என் தமிழால் எங்கள் சிறப்பைப் பாடமுடியாமல் தோற்றுப் போனதனால் பாடவில்லை. எழுதுதற்கரிய கற்பின் கருப்பொருளே நீங்களே பெண் குலத்தின் தெய்வம்!

ஆயிரம் சீதையும் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால வைரவர்

சிவபூமியாகிய இலங்கையில், சிறப்பாக யாழ். மாவட்டத்தில் வைரவப் பெருமானுக்கு பல தனி ஆலயங்கள் அமைந்துள்ளன. வைரவப் பெருமானை வழிபட்டு பயன் பெறுபவர் அதிகம். "காவல் தெய்வமாக" வைரவர் போற்றப்பட்டு வழிபாடு நடை பெறுகிறது. வைரவருடன் உரையாடினேன், வைரவர் எனக்குப் பின்னாலே வருவர். இப்படியாக வைரவ சுவாமி பற்றிய பல கருத்துக்கள் உண்டு. வைரவர் – காவல் தெய்வம்.

**வைரவர் வரலாறு**

கந்தபுராணத்தில் சிறப்பாகக் கூறப் பட்டுள்ளது. பிரம்மாவும், விஷ்ணுவும் மகாமேரு மலையில் இருந்தனர். அவ் வேளையில் முனிவரும் தேவரும் இருவரையும் வழிபட்டு, தமது மனதில் ஏற்பட்டுள் ஐயத்தைப் போக்கிக் கொள்வதற்கு முயன்று, "பிரம்மா விஷ்ணுவை நோக்கி உருத்திரர் ஆகிய மூவருள் முதலானவர் யார்"? எனக் கேட்டார். மாயை வயப்பட்ட பிரம்மாவும் விஷ்ணுவும் தாமே முதலானவர்கள் எனக் கூறினார்கள். பிரம்மா விஷ்ணுவுக்கிடையில் நீண்ட காலம் தர்க்கம் நிகழ்ந்தது. இவ்வாறு இருவரும் தர்க்கம் நிகழ்த்திக் கொண்டு இருந்தவேளை வேதமும் பிரணவமும் தேவவடிவங் கொண்டு இவர்கள் முன் தோன்றி மேலான உயிர்களுக்கு உயிராய் விளங்கும் சிவனே பிரமம் ஆகும். சிவனே உண்மைப் பொருள் என்றனர். அதனை ஏற்காது தமது வாதத்தைத் தொடர்ந்தார்கள்.

இவர்கள் கொண்ட இயல்பினை அறிந்து சோதியின் இடையில் கயிலை நாதன் உமையுடன் தோன்றினார். நாராயணர் சிந்தை தெளிவுற்றார். ஆனால் பிரம்மா மாயையில் இருந்து விடுபடவில்லை. பிரம்மா உண்மையை உணராதது மட்டுமல்ல, தனது உருவில் கொண்ட ஐந்து தலைகளில் உச்சியில் அமைந்த தலையில் இருந்த வாயினால் சிவனை இகழ்ந்து பேசினார். பிரம்ம தேவருக்கு தொடக்கத்தில் திக்குக் கொன்றாக நான்கு தலையும் உச்சியில் ஒரு தலையுமாக ஐந்து தலைகள் இருந்தன. தீமை உடையவர்கள் எந்தச் சூழ்நிலையினும் தீமையான செயல் களைச் செய்வதற்கு அஞ்சுவது இல்லை. நல்லவர்கள் தீயவர்களின் செயல் கண்டு கோபம் கொள்வதில்லை. மாறாக தீயவர்களுக்கு உண்மை நிலையை விளக்கவே முற்படுவர்.

தீய சிந்தனை உயடையவர்களைத் திருத்தி, தர்மத்தைக் காத்து உண்மையை உணரச் செய்வதற்கு எண்ணிய கைலைநாதர் தமது திருவுள்ளத்திலிருந்து வைரவக்கடவுளைத் தோற்றுவித்தார். வைரவர் பிரம்மாவின் அறியாமையை நீக்கும் பொருட்டு தீமை விளைவித்த உச்சித் தலையைத் துண்டித்தார். நீங்கிய உயிரை மீண்டும் கொடுத்து பிரம்மாவை மாயையிலிருந்து நீக்கினார்.

வைரவர் சுவாமி, அகந்தை கொண்ட அனைவரினதும் உடலில் பாயும் குருதியைத் தானமாக வாங்கி, இதனால் இறந்து போனவர்களுக்கு மீண்டும் உயிரை வழங்கி அகந்தையை நீக்கியருளினால் என்பது வரலாறு. இக்கதையின் மூலம் மக்களுக்கு நன்மை செய்வதற்குத் தோன்றிய அருள் வடிவமே! வைரவர் வடிவம் என்பதனை அறிய முடியும். தீய எண்ணம் கொண்டவரை "இறைவன் உடலில் கெட்ட இரத்தம் ஓடுகிறது" எனக் கூறும் வழக்கம் இன்றும் உண்டு. இரத்தம் அமைப்பிலிருந்து மாறினால் இறப்பு ஏற்படும் என்பது விஞ்ஞான உண்மை. ஒரு மனிதன் திய எண்ணங்கொண்டு தீயவற்றையே செய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாயின் அவன் இறந்தவன். நல்ல சிந்தனை யையும், செயலும் கொண்டவர்களே வாழ் பவர்கள் ஆவார்கள். இதனை எடுத்துக் காட்டும் வகையிலே வைரவர் வரலாற்று உண்மை திகழ்கிறது.

சமூகத்தில் காலபைரவரின் தேவை இன்று மிகையாகத் தேவைப்படுகின்றது. நல்ல சிந்தனை என்பது பூச்சியத்தை அடைந்து விடுமோ என்ற பயம் நல்லவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. எந்தக் காரியத்திலும் தர்ம சிந்தனை மறைந்து போய்க் கொண்டிருக்கிறது. ஆலயங்களில் நிகழும் ஆடம்பர விழாக்கள், கிரியைகள், மந்திரசுத்தமின்மை, எண்ணத்தில் தூய்மையில்லை, விதித்தவற்றை ஒழுங்காகச் செய்யாமை, கடமை தவறுதல்.... இப்படியாக ஒழுங்குகள் தடம்புரண்டுவிட்டன.

மனதில் தோன்றியுள்ள "மாசு" நீங்கினால் அன்றி இறை அருள் கிடைக்காது. உலகத்தின் உயர் தர்மம் "மனதிற் கண் மாசிலனாதல்" என்பது குறள் தரும் நற் சிந்தனை.

காலவைரவர் மனதில் எழும் எண்ணங் களை நீக்கி நமக்கு- சமூகத்திற்கு உயிர் கொடுப்பதற்கு எழுந்து வரும்படியாக நமது பிரார்த்தனைகள் அமையட்டும். எல்லாம் சமாதியாகின்ற பெரியதோர் அமைதியில் பூரண இன்பவடிவமாகித் திகழ்பவர் வைரவப் பெருமான். வைரவரும், முருகனும் குழந்தை போன்ற அழகிய வடிவமுடையவர்கள். தீமையை அழிக்கும் எண்ணம் அகோரமாக இருக்கவேண்டும் அல்லவா! வைரவப் பெருமான் செயல்கள் யாவும் சிவன் செயலே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்த் தெய்வ வழிபாடு

உலகில் முதன் முதலில் கண்விழித்துப் பார்க்கும் குழந்தை தாயைத்தான் பார்க்கிறது. தாய் சொல்லிக் கொடுத்துத்தான் தந்தையை, தெய்வத்தை, உலகத்தையே அறிகிறது.

"தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி
ஏயுமதே நிட்டை"

என்று பெரியோர்கள் இந்த உண்மையை ஆன்ம அனுபவத்தோடு இணைத்துப் பேசி யிருக்கிறார்கள்.

சைவம், வைணவம் என்ற இரண்டு பெரும் பிரிவுகளிலும் தாய்த் தெய்வம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறாள்.

சைவம் தாய்த் தெய்வத்தை அம்பிகை என்கிறது. அந்தத் தாய் இறைவனுடைய கருணைதானே ஒழிய வேறு என்று அல்ல என்கிறது சைவம்.

"அருளது சக்தி ஆகும் அரன் தனக்கு" என்கிறது சிவஞானசித்தியார். இந்தச் சக்தியோடு இணைந்து தான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் இவற்றிற்கேற்ற வேடத்தை சக்தியும் போட்டுக் கொள்கிறாள் என்கிறது சைவசித்தாந்தம்.

**பிரமனாக வேடம் போட்டால் வாணியாகவும்**
**விஷ்ணுவாக வேடம் போட்டால் திருமகளாகவும்**
**உருத்திரனாக வேடம் பூண்டால் ரௌத்திரியாகவும்**
**மகேஸ்வரனாக உருவம் எடுக்கும்போது மகேஸ்வரியாகவும்**
**சதாசிவனாகத் திகழும் போது மனோன்மணியாகவும்**
அவள் வடிவம் எடுத்துக் கொள்கிறாள்.

அதாவது இறைவன் தன் திருவிளை யாடல்களைச் செய்யும் போது அருளின் பலதிற வடிவங்கள் உடனின்று இணைகின்றன.

அம்பிகையின் பார்வை பட்டால்தான் இறைவன் அருள் நமக்குக் கிடைக்கும் என்கிறது சைவம்.

"மடவாள் தானோடும் அருள் காரணத்தின் ருவார்" என்கிறது தேவாரம். பெரிய புராணத்தில் அடியவர்களைச் சோதிக்கும் நேரத்தில் எல்லாம் தனியாக வருகிறார் கடவுள். அவர்களுக்கு அருள் செய்யும் போதெல்லாம் "இடபவாகன ரூடராய், இமயவரை பயந்த பச்சைக்கொடி போன்ற உமையவருடன் தோன்றினார் என்கிறார் சேக்கிழார்.

இறைவன் பார்வை படுமுன் உமையவள் பார்வை படுதல் வேண்டும். அதற்குச் சக்திநி பாதம் என்றும் திருவருள் பதிவு என்று பொருள்.

மனிதனுக்கு உள்ளதுபோல ஆண்டவனுக்கும் அறிவு, விருப்பம், செயல்கள் உண்டு. இவற்றையே இச்சை, கிரியை,ஞானம் என்று சொல்வார்கள். இவைகளையே தத்துவம் உணர்ந்த பெரியோர்கள்இறைவன்பக்கத்தில் அவன் துணைவியராகக் கண்டு மகிழ் கிறார்கள்.

இறைவன் சிருஷ்டி முதலிய தொழில் களைச் சக்தியோடு இணைந்து நின்றே செய்கின்றான். அதனால் சக்தி உலகுக்கு துணைக் காரணமாகின்றாள். சக்தியோடு சேர்ந்தாள் தான் படைப்பு முதலிய தொழில்கள் நடக்கின்றன. பக்தர்களுக்குஅருளும் "பாவனை" நடக்கிறது.

"படைப்பாதி தொழிலும் பக்தருக்கு அருளும் பாவனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பாக மாதராளோடு இயைந்து உயிருக்கு இன்பம் என்றும்

அடைப்பான் ஆம் அதுவும் முத்தி அளித்திடும் யோகம் பாசம்

துடைப்பான் ஆம் தொழிலும் மேனி தொடக்கானேல் சொல்லொணாதே!"

சிவாலயங்களில் தனியான அம்பிகை தோன்றின. வங்கம், லாடம் முதலிய சந்நிதிகள் முற்காலத்தில் இல்லை. பிற்காலப் பகுதிகளில் இருந்து சாக்தர்கள் தமிழகத்தில் சோழர்கள் காலத்தில் தனி அம்மன் சந்நிதிகள் சக்தி வணக்கத் தனிச் சமயத்தைச் கொண்டு வந்தார்கள். இப்போதெல்லாம் கோயில்களில் எந்த நியதியும்இன்றி விரும்பிய தனி வடிவங்களில் உருவாகத் தொடங்கிவிட்டது. ஐயப்பன், சனீஸ்வரன், விஸ்வகரூமா வடிவம் என விரும்பிய வடிவங்கள் அமைக்கப்படுகின்றன.

சப்த கன்னிமார் வடிவச் சக்தி வழிபாடு மிகப் பழமையானது. குக்கிராமங்களில் கூட (தமிழகத்தில்) சப்த கன்னிகை கோயில்கள் ஆலமரத்தின் அடியிலும் அரச மரத்தின் அடிகளிலும்அமைந்திருப்பதைக் காணலாம். 7 கன்னிமார் (சப்த மாதர்களின்) முழுமைப் பிழம்பான அம்பிகை வடிவங்கள் ஒவ்வொரு கோயிலிலும் உருவான பின் வைஷ்ணவி மகேஸ்வரி, பிராமி முதலிய வடிவங்களில் தனிச் சந்நிதியில் கோயில்கொண்டார்கள்.

இந்திர போகத்தை அருள்பவள் இந்திராணி. வீரத்தைத் தந்து பகைவர்களை அழிப்பவள் வாரகி. இம்மை மறுமைப் பயன்களைத் தருபவள் மகேஸ்வரி. காப்பவள் வைஷ்ணவி. ஒடுக்குபவள் காளி.

வீரத்தோடு ஞானத்தை அருள்பவள் கௌமாரி. கல்வியைத் தருபவள் பிராமி. இவர்கள் தான் பழைய சக்தி வழிபாட்டு எச்சங்கள். தனி அம்பிகைச் சந்நிதி ஏற்பட்ட பின்னால் அங்கங்கு கேட்பாரற்றுக் கிடந்த சப்த மாதர்கள் சிவாலய்ங்களில் பரிபால தேவதை களாக மாறிவிட்டார்கள். 7 பேரைத் தனியாகப் பிரிப்பது வழக்கமில்லை.

ஒரு கிராமத்தைக் எடுத்துக் கொண்டால் காவல் தெய்வமாகத் தாய்த் தெய்வமாக இருப்பதைக் காணலாம். இந்தப் பழமையை நினைவூட்டும்வகையில் எந்தச் சிவாலய திருவிழாவினும்கிராமத் தெய்வமாகிய பிடாரிக்கோ, காளிக்கோ முதலில் காப்புக் கட்டிய பின் தான் திருவிழா தொடங்கு கிறார்கள்.

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பரிவாரக் கோயிலாக உள்ள காளி கோவிலில் (தட்டாதெருவுக்கு அண்மையில் உள்ளது) காப்புக் கட்டிய பின்னர் பெருந் திருவிழா நடைபெறும் முறை இன்றும் உள்ளது.

கிராமங்களில் தனிக்கோவில்களில் இருக்கும் தாய்த்தெய்வமாக சக்தியை வழிபடும் மக்கள் உதிரப்பலி கொடுப்பது கூட சில இடங்களில் வழக்கத்தில் இருக்கிறது. உதிரப்பலி கொடுக்கின்ற போது மூலவருக்கு திரை போட்டுவிடும் வழக்கமும் உண்டு. சில கோவில்களில் உதிரப்பலி கொடுக்கும் வழக்கம் இன்றும் உண்டு. அண்மைக்காலமாக பலிகள் நிறுத்தப்பட்டு வருகின்றது. இது சமய வளர்ச்சியில் ஜீவகாருண்யம் விளைவித்த மாற்றமாகும்.

உதிரப்பலியைப் பற்றிய வரலாற்றுச் செய்தி ஒன்று உண்டு. குழந்தைப் பருவத்தில் அச்சத்தால் நடுங்கும் குழந்தை தாய்மையின் அரவணைப்பையே நாடுகின்றது. இதனால் தானோ என்னவோ காக்கும் கடவுள் வடிவங்கள் பெண் வடிவங்களாகத் திகழ்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் பாசம், அங்குசம், உலக்கை, வில், அம்பு, சூலம், கட்டாரி முதலிய வகைகளைத் தாங்கிக்கொண்டு நிற்கும் காவற்தெய்வ மாகிய காளியைப்போருக்குச் செல்லும் மறவர்கள் வழிபட்டுச் செல்வார்கள். வெற்றி பெற்றுத் திரும்பிய வீரர்கள் சினமடங்கிய, மகிஷனை வென்று புன்னகை பூக்க நிற்கின்ற துர்க்கையை வழிபடுவார்கள்.இது பழங் காலத்தில் நடந்தது.

போரில் இரத்தம் வெள்ளமாகப் பாயும் யானையும், குதிரையும், மனிதர்களும் கொல்லப்படுவார்கள். குற்றுயிரும் குறை யுயிருமாகத் துடிப்பார்கள். கை, கால்கள், துண்டிக்கப்பட்டுத் துன்பப்படுவார்கள். வீரர்கள் இந்த வேதனைக் காட்சியைக் கண்டு சோர்வு அடையலாகாதல்லவா? அதற்காகவே காளி கோவில்களில் எருமைகளைப் பலியிட்டு இரத்தத்தைச் சகித்துக்கொள்ளும் மன இறுக்கமும் துணிவும் பெறுவார்கள்.

போர்களுக்காகத் தொடங்கிய இரத்தப் பலி பிற்காலத்தில் சடங்கு அளவாக மாறிப் போயிற்று. இப்போது இரத்தம் சிந்தாமல் போர் நடைபெறுவதனால் இரத்தப்பலி அவசிய மில்லாது போய்விட்டதுபோலும்!

இலங்கையில் மாரியம்மன், கண்ணகி அம்மன் வழிபாடு சிறப்பான தாய்த் தெய்வ வழிபாடாகும். சிலப்பதிகாரக் கதையில் வரும் கண்ணகியும் பத்தினித் தெய்வம் என்ற நிலையில் காலப்போக்கிலே அம்மன் ஆகிவிட்டாள். யாழ்ப்பாணத்தில் கண்ணகி வழிபாடு பல வடிவங்களில் உண்டு. பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, மானிப்பாய், புங்குடுதீவு, நயினாதீவு, சாவகச்சேரி ஆகிய பல இடங்களில் கண்ணகி கோவில்கள் இருந்தன. இவ்வாலயங்கள் இடைக்காலத்தில் "கண்ணகி அம்மன்" கோவில்கள் என அழைக்கப்பட்டு, இப்போது கண்ணகி முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டது. பன்றித் தலைச்சி (கண்ணகி) அம்மன் கோவில் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

காவல் தெய்வ வழிபாடு எளிமையான முறையில் எந்தவிதிகளுக்கும் உட்படாமல் மக்களின் பக்தி உணர்வுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்றது. இந்தத் தாய்த் தெய்வக் கோவில்களுக்குள் "ஆகமம்" புக ஆரம்பித்தது. இதனால் கோவில்கள் வடிவம், பெயர், வழிபடும் முறையில் மாற்றத்திற்குள்ளாகியது. கொடிமரம் வைத்து உற்சவம் நடைபெறும் நிலைக்கு வந்துவிட்டது. இம்மாற்றம் பக்தி உணர்வுக்கும் சக்தி வழிபாட்டிற்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது எனக் கருதுகின்றேன். "காளி ஆத்தா மாரி ஆத்தா" எனக் கூவும் போதுள்ள நெருக்கம் இன்றில்லை.

கேரள மாநிலத்தில் (இந்தியா) கண்ணகி கோவில் உண்டு. சபரிமலை ஐயப்பன் கோவில் போன்றது. குறிப்பிட்ட காலத்தில் மட்டும் இவ்வாலயம் திறக்கப்பட்டு மக்கள் செல்கிறார்கள். பூசையில் பக்தி உணர்வுக்கு ஏற்ப அருகில் சென்று அபிடேகப் பொருட்களைக் கொண்டு வழிபாடு செய்யும் முறையில் நடைபெற்று வருகிறது.

மாரியம்மன் கோவிலில் நடைபெறும் தீ மிதித்தலையும், மதுரையை எரித்த தீ நல்லவர்களைச் சுடாது என்ற கண்ணகி வரலாற்றை நினைவுபடுத்தும் செயல் என்றே கருதுகிறார்கள்.

சிலப்பதிகாரக்கண்ணகிக்கும் இலங்கைக்கும் தொடர்பு உண்டு என ஆய்வுகள் கூறுகின்றன. கட்டுரையில் குறிப்பிட்ட இடங்களில் கண்ணகி நின்று சென்றதாக செவிவழிச் செய்தி உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை அம்மன் கோவிலுக்கு கண்ணகி, கோவலனின் தந்தையர் வந்துவழிபட்டார்கள் என்று ஐதீகம் உண்டு. அம்மா அல்லது அம்மை என்பது தாயைக் குறிப்பதுடன் உலகிற்கு எல்லாம் தாயாகிய மகா சக்தியையும் குறிப்பிடுகிறது. அம்மை என்ற சொல் "அமைதி" என்றும் "அழகு" என்றும் பொருள் படுகிறது.

வீட்டிலே ஒரு பெண்ணை வாழச் செய்யும் போது "விளக்கேற்றி இரு" என்று கூறுவது தமிழ் மரபு.

"பகை பகைத்தீயால் அவியாது, அன்பு நீரில் அழிந்துபோம்" என்பது பொன்மொழி. அன்பை நமக்கிடையில் ஏற்படுத்தும் ஆற்றல் தாய்த்தெய்வ வழிபாட்டின் மூலம் கிடைக்கும்.

வாழ்வு பெருக்கும், தாழ்வு தடுக்கும், வீழ்வு தடுக்கும், ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி! உள்ளத்து ஒளிரும் விளக்கே தாய் – மகா சக்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் அதிகாரமுறை வைப்பு

"கற்க கசடு அறக்கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக"

உயிர்த் தொகுதி பரிணாம வளர்ச்சியில் புல், புழு, விலங்கு... என்று வளர்ந்து கடைசியாக ஆறறிவுடைய மனிதன் பரிணமித்தான். மனிதன், மிருகமும் அல்லன், முழுமனிதனும் அல்லன். மனிதன் மிருகத் தன்மையிலிருந்து விலகி மனிதனாக வாழ்ந்து தெய்வநிலை எய்த வேண்டும் என்பது தான் சான்றோன் அறிவுரையாகும். இன்று மனிதனின் நிலை என்ன?

இன்றைய மனிதன் அவசர உலகில் வாழ்கின்றான். உண்மை இன்பம் எது? என்று தெரியாது அலைகின்றான். இதற்கு யாது காரணம் எனச் சிந்திப்பின் நல்ல கல்வியறிவு இன்மையே என்பது வெளிப்படை.

தமிழ் இலக்கியங்கள் தமிழ் மொழிக்கும் தமிழர் நாகரிகம், பண்பாட்டிற்கும் மகுடமாகத் திகழ்பவையாகும். இற்றைக்கு 2040 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள். தமிழ் இலக்கிய மகுடத்திற் பதிக்கப்பட்ட முத்தாகும். 1330 குறட் பாக்களும் மனிதனை, மனிதனாக வாழ, வழிகாட்டி நிற்கும் அருட் பாக்களாகும்.

திருக்குறளுக்குப் பல சிறப்புக்கள் உண்டு. அதிகாரமுறை வைப்பு அவற்றில் ஒன்றாகும். இதனைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மனித வாழ்விற்குத் தேவையானவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய பாமரரும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் ஒழுங்குபடுத்தியிருப்பது தனிச்சிறப்பாகும்.

"நல்ல கல்வியறிவு" எனும் ஒரு விடயத்தை மையமாக வைத்து நோக்கின் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றம் கடிதல், பெரியாரைத் துணைக் கோடல்.... (அதிகாரம் 40 தொடக்கம் 45 வரை) எனத் தொடர்கிறது.

நாம் கற்கும் கல்வி ஞானத்தை அறிவைத் தருவதாக அமையவேண்டும். கற்கவேண்டிய நூல்கள் எவை? அவற்றைக் கற்கும் முறை யாது? என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். மனக்கசடு அறுப்பவற்றை முதலில் கற்கவேண்டும். அவற்றைப் பொருள் உணர்ந்து கற்கவேண்டும். ஆழ்ந்து கற்ற பின் அக் கல்விக்கு ஏற்ப வாழவேண்டும். ஒழுக்கத்தை உணர்த்தும் கல்வியே இன்றைய தேவையாகும். மனதில் எழக்கூடிய தீய குணங்களை அறவே களையக்கூடிய நூல்கள் தாம் இன்றைய தேவையாகும். ஒழுக்கம் உயிரினும் மேலானது என்பதை உணர்த்தும் அறிவு ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால் அவன், மனிதனாகிவிடுவான். பின்னர் தாம் கற்ற கல்வியை உலகத்தவருக்கு உணர்த்தித் தாம் இன்புறுவர். உலகு இன்புறக்கண்டு கல்லாத ஒருவன் பசி, காமம் எனும் இரண்டின் வாய்ப்பட்டு இவ்விரண்டையும் பெறுவது தான் உலகின்பம் என்ற தவறான சிந்தனைக்கு உட்பட்டுத் தீய ஒழுக்கத்திற் புகும் அவல நிலைக்கு உட்படுகின்றான். கற்றவன் பசியும், காமமும் நாகரிகமான முறையில் பெறப்பட வேண்டும் எனும் ஞானத்தைப் பெற்றவனாகி மனிதனாகிவிடுகின்றான் அல்லவா!

ஒருவர் தான் பெற்ற கல்வி ஞானத்தை மற்றவர்களுக்குப் பொருள் விளங்குமாறு சொல்லுதல் வேண்டும். கற்றோர் கூறுவதை மற்றோர் கேட்கும் செவிச்செல்வமே சிறந்த செல்வமாகும். மனிதர்களுக்கு உணவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் நாச்சுவை அறிவைத் தரும் செவிச்சுவை ஆகிய இரண்டும் வேண்டியன வாகும். ஆனால், நாச்சுவையன்றிச் செவிச் சுவையே அறியாத மக்கள் செத்தால் என்ன? வாழ்ந்தால் என்ன?


எத்தகைய பொருள் பற்றி யார் யார் எடுத்துக் கூறினும் கூறுபவர் பற்றிய ஆய்வை விடுத்து, அவர் கூறியவற்றில் எது உண்மைப் பொருள் என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிவதே அறிவின் பண்பும் செயலுமாகும். உண்மை அறிவு பழி பாவங்களுக்கு அஞ்சும் தன்மையும், அல்லனவற்றை அஞ்சாது எதிர்க்கும் துணிவையும் தரும்.

கல்விஞானம் உடையார் உலகில் மதிக்கப்படும். மனிதர்களாகத் திகழ்ந்து இறப்பின் பின்னும் மக்கள் மனத்தில் வாழும் உயர்நிலையடைவது கண்கூடு. அத்தகை யவர்கள் கர்வம், கோபம், இழிந்த குணம், சினப்புத்தி ஆகிய மனக்குற்றங்கள் வராமல் தடுத்துக் கொண்டவர்கள் ஆவார்கள். ஒவ்வொருவரும் முதலில் தன் குற்றம் அறிந்து, அதனைப் போக்கிக் கொள்ளும் அறிவைப் பெறவேண்டும். தன்னிற் குற்றம் கொண்டு, அதை மறந்து பிறரிற் குற்றம் காண முயல்வது அறியாமை வயப்பட்டதாகும்.

சான்றோர்கள் உலகுக்கு வாழும் வகை காட்டியவர்கள். வள்ளுவர் குறளும் கண்ணன் கீதையும் உலகெல்லாம் பரவியுள்ளன. எதற்குப் பிரச்சாரம் அதிகமோ அதையே மக்கள் பின்பற்றுவர். இன்று பெரும் பாலானோர் சினிமாக் கலாசாரத்தின் வழிப்பட்டு நிற்பதைக் காண்கின்றோம். கல்வியின் மூலம் உலகிற்கு உண்மையான வழிகாட்டியது தமிழ்நாடுதான். ஆனால் தமிழ்ச் சான்றோரின் அருட்செல்வம் எல்லாம் குடத்துள் விளக்குப் போல் குறுகிய வட்டத்துக்குள் முடங்கிக் கிடக்கக் காண்கின்றோம். நமது அருட்செல்வங்கள் குன்றின் மேல் விளக்காக ஒளிரவேண்டும். சான்றோர்களாகிய மாணிக்க வாசகரின் திருவாசகத்தேன் மேற்குலக மாந்தர் உள்த்தையும் கவர்ந்தது. அப்பர் தேவாரம் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று உலகிற்கு உணர்த்தியது. சம்பந்தர் வாக்கு அருள்வழி காட்டியது. சுந்தரர் தமிழ் அன்பு மணம் பரப்பியது. சேக்கிழார் புராணம் வாழ்வைச் செம்மைப்படுத்த உதவியது. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல், இறையருலாடலைக் காட்டியது. பிற்காலத் தவராகிய பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் அனைவரும் சன்மார்க்கத்தைக் காட்டினர். அருணகிரியார் திருப்புகழ் தமிழின் இனிமைக்கு இனிமை சேர்த்தது மட்டும் அன்றித் தம் குற்றம் கண்டு, மக்களுக்குப் புதுப்பாதை காட்டினார். பெரியாரைத் துணைக்கொண்டு, அவர்தம் சொற்களைச் செவிமடுப்பதன் மூலம் மனிதனாக வாழலாம் என வழி காட்டி நிற்கும் திருக்குறள், தமிழ் இலக்கிய மகுடத்தின் முத்தல்லவா!

"கற்றதனால் ஆயபயன் என்கொல்? வால் அறிவன்
நல்தாள் தொழா அர்ளனின்"

குறள் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றோர் வழியில்

சான்றோர்கள் பலரும் தம் வாழ்நாளில் கண்ட உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர். சங்க காலம் தொட்டு இன்று வரை இது நடைபெற்று வருகிறது. நரிவெரூஉத் தலையார் என்னும் சங்கப் புலவர் ஒருவர் நமக்கு அழகியதொரு வாழ்க்கைத் தத்து வத்தைத் தந்து சென்றுள்ளார். வாழ்வில் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும். நல்லதையே செய்யவேண்டும். முடியவில்லையெனில் தீயதைச் செய்யாமல் இருந்துவிடவேண்டும்.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

இது தான் நரிவெரூஉத் தலையாரின் வாழ்க்கைத் தத்துவம், இதன்படி ஒவ்வொருவரும் நடக்கத் தலைப்பட்டுவிட்டால் உலகில் சண்டை இல்லை, சச்சரவில்லை. கூச்சல் இல்லை. குழப்பம் இல்லை.

வாழ்வில் எல்லாருக்கும் எல்லாம் வாய்த்து விடுவதில்லை. நல்லது கெட்டது எல்லாம் கலந்தே நடக்கும். இது நமது முயற்சியிலும் இல்லை. "ஊழ்வினை உடுத்து வந்து ஊட்டும் என்பது இளங்கோ அடிகளார் கூற்றாகும். தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பதும் நாம் அறிந்ததே. இதைத் தான் கண்ணதாசன் தமக்கே உரிய பாணியில்,

"நன்மைகள் தீமைகள் நடப்பன யாவையும் சக்கரச் சுழற்சியில் சமமெனக் கருது நீ"

என்று பாடியுள்ளார். நாம் எவ்வளவு தான் முயன்று உழைத்தாலும் நமக்குச் சேர்வது தான் சேரும், சும்மா இருந்தாலும் கூடச் சிலரக்குச் சில நேரங்களில் ஏதோ ஒரு வகையில் எப்படியோ செல்வம் சேர்ந்து விடும் சேர்கின்ற செல்வமும் சில நேரங்களில் வந்தது போலவே சென்று விடுவதுண்டு.

வாழ்வில் தமக்கு வேண்டுவனவற்றை எல்லாம் கவிஞர்கள் எண்ணிப் பார்த்து இறைவனிடம் விண்ணப்பிப்பதுண்டு வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரும்,

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்தம் உறவு கலவாமை வேண்டும்"

என்று தொடரும் பாடலில் தமது விருப் பத்தைத் தெரிவித்து விண்ணப்பஞ் செய்து ள்ளார். பொய் பேசாது புறம் கூறாத நல்லவா களின் நட்புக்கொண்டு வாழவேண்டும் என்பது வள்ளலாரின் கருத்து அவரைப் பின்பற்றிப் பாரதியாரும் தமது வாழ்வில் நினைத்ததை முடித்து நெஞ்சுரத்தோடு வாழவேண்டும் என்று ஆசைப்பட்டார்.

அந்த ஆசையை "மனதில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும், நினைவு நல்லது வேண்டும்" என்னும் அழகிய கவிதையாக மலர்கிறது தூய நெஞ்சும் துணிவான போக்கும் பாரதியாரின் இரு விழிகள் அந்த வழியிலே வந்த கண்ணதாசனும் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகச் சிலவற்றைக் கொண்டிருந்தார் கண்ணன் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்ததால் அவனிடமே,

"கண்ணா உனைநான் கனிவுடன் கேட்பேன்
எண்ணும் செல்வம் எவை, இலையேனும்
நல்லவன் அன்பன் நன்றி மிகுந்தவன்
என்னும் பெயரே எனக்கருள்வாய் நீ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்டவர்களைக் கண்டால் ஒதுங்கு

**உடன்பாடு இலாதவர் வாழ்க்கை - குடங்கருள்**
**பாம்போடு உடன் உறைந்தற்று - குறள் 890**

உட்பகை எனும் அதிகாரத்தில் உள்ள குறள், உள்ளம் ஒன்றிற்காதவரோடு கூடி வாழ்வது ஒரு குடிசையில் பாம்போடு சேர்ந்து வாழ்வதைப் போலாகும் என்று உறைக்கின்றது.

ஒருவர் தன் வாழ்வில் வெளிப்பகை உடையாரோடு பழகலாம்; ஆபத்தில்லை ஏனென்றால் பகை வெளியே தெரியும். ஆனால் உட்பகை கொண்டு முகம் நக பல்காட்டும் பகைவருடன் மிகவும் எச்சரிக்கை யுடன் பழ வேண்டும். வாளைப் போல், வெளிப்படையாக வெட்டுவேன் கொத்துவேன் என்று வரும் பகைவருக்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஆனால், உறவைப் போல வெளியே நடித்து மறைவாகக் கீழ் அறுக்கும் உட்பகைக்கே நாம் அஞ்ச வேண்டும். இவர்களுடன் பழகுவதைத் தான் துஷ்டரைக் கண்டால் தூர விலகு" என்று நாம் பெரியவர் கள் கூடியுள்ளனர்.

ஒரு யானை ஆற்றில் குளித்துவிட்டு, மறுகரைக்குச் செல்லத் தயாரானது மறு கரையில் பன்றி ஒன்று சேற்றில் விளையாடிக் கொண்டிருந்தது. சுத்தமாக இருந்த யானையைக் கண்ட பன்றிக்கு பொறாமை உண்டானது. யானையைச் சீண்டிப் பார்க்க முடிவெடுத்தது.

ஆற்றுக்குக் குறுக்கே இருக்கும் பாலம் மிகவும் குறுகியது. அதன் வழியாக யானையின் வருகையைப் பன்றி எதிர்பார்த்துக் காத்திருந்தது. யானை பாலத்தில் நுழைந்து நடுப்பகுதிக்கு வந்துவிட்டது. பன்றி உடனே யானையை நோக்கி ஓடியது. ஒடுக்கமான பாலம் என்பதால், எப்படியும் உன் உடம்பில் இருக்கும் சேற்றினை யானை மீது தற்செயலாக மோதுவது போல பூசிவிடலாம் என கணக்குப் போட்டது. சுதாகரித்துக் கொண்ட யானையோ, ஓரமாக நன்றாக ஒதுங்கி நின்று பன்றிக்கு வழிவிட்டது. பன்றி ஏமாந்து போனது இனியும் வம்புக்குப் போனால் ஆபத்தாகிவிடுமெனப் பயந்து அப்படியே சென்றுவிட்டது. மறு கரையில் நின்ற தன் நண்பனான மற்றொரு பன்றியிடம் "நண்பா! பார்த்தாயா! பயந்தான் கொள்ளி யானை! கோவில் பிரசாதம் சாப்பிட்டு கொழுத்து இருப்பது தான் மிச்சம்கு! சிறியவனான என்னைக் கூடப் பார்த்து பயந்து போறதைப் பாரு! என்று சொல்லிச் சிரித்தது.

அதைக்கேட்ட நண்பன் ஏ முட்டாள்! அப்படி எண்ணாதே! யானை ஆற்றில் குளித்து விட்டுப் போகிறது. நீயோ சேற்றில் குளித்துவிட்டு அழுக்கோடு திரிகிறாய். ஒருவேளை யானையின் காலில் சிக்கி யிருந்தால் ஒரே மிதியில் உன் உயிர் போய்விடும். ஆனாலும் அந்த யானை உன்னை மிதித்து தன் காலைச் சேறாக்கிக் கொள்ள விரும்பமில்லை. அதனால் ஒதுங்கிப் போனது என்பதைப் புரிந்து கொள் என்றது.

உலகில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள். கெட்டவாக்ளைப் பார்த்தால் (உட்பகை கொண்டவர்கள்) நல்லவர்கள் அவர்களுடன் மோத முயலாமல், ஒதுங்கிப் போவதே நல்லது. பன்றி மேல் மோதினால் மோதியவருக்கே நஷ்டம்! எனவே உட்பகை உடைய கெட்டவர்களைக் கண்டால் ஒதுங்கிப் போய் விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு யார் உறவு?

முன்னொரு காலத்தில் சித்திரகேது என்ற அரசன் இருந்தான். அவனுடைய ராணிகளைக் கணக்கிடமுடியாது. ஆனால் அவனுக்குப் புத்திர பாக்கியமே ஏற்படவில்லை.

ஒரு சமயம் அவனுடைய சபைக்கும் மகரிஷி அங்கிரஸ் வந்து சேர்ந்தார். அவர் புத்திரசோகத்தால் வாடிய அரசனைப் பார்த்துத் தாம் ஒரு வேள்வி செய்வதாகவும், அந்த வேள்வியின் பிரசாதத்தை மூத்த ராணிக்குக் கொடுப்பதாகவும், அவளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் சொன்னார். கூடவே அவர் ஓர் எச்சரிக்கையும் செய்தார். அரசனுடைய சுகத்திற்கும் துக்கத்திற்கும் அவனுக்குப் பிறக்கும் மகனே காரணமாக இருப்பான் என்றும் சொன்னார்.

மகரிஷி வேள்வியை முடித்து பிரசாதத்தை மூத்த ராணிக்குக் கொடுக்க, அவள் கர்ப்ப வதியாகி விரைவில் ஓர் அழகிய மகனை ஈன்றெடுத்தாள்.

மகன் பிறந்த சந்தோஷத்தில் அரசன் சித்திரகேது மற்ற எல்லா ராணிகளையும் மறந்துவிட்டு, எப்பொழுது பார்த்தாலும் மூத்த ராணியின் மாளிகையிலேயே இரக்க ஆரம் பித்தான். இது காரணமாகக் கோம் கொண்ட மகாராணிகளுக்கு அந்தக் குழந்தையின் மீது கோபம்ஏற்பட்டது. இந்தக் குழந்தையினால்தானே அரசன் நம்மைப் புறக்கணிக்கிறார்? ஆகவே இந்தக் குழந்தையை விடம் வைத்துக் கொன்றுவிட்டால் என்ன, என்று அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆலோசனை செய்தார்கள். ஒருநாள் அப்படியே செய்தும் விட்டார்கள். குழந்தை இறந்தது.

குழந்தை இறந்த செய்தி கேட்டு அரசன் வருந்தினான். பைத்தியம் பிடித்தவன் போல் அரசன் குழந்தையின் உடலையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அப்போது மகரிஷி அங்கிரசும், நாரத முனிவரும் அங்கே வந்தார்கள். துக்கத்தில் ஆழ்ந்திருந்த அரசனைப் பார்த்த அங்கிரஸ், அரசனே! நீ கடவுள் பக்தி கொண்டவன். ஆகவே கடவுளை அடையும் வழியை உனக்குச் சொல்லலாமென்று தான் முதல் தடவை உன் அரச சபைக்கு வந்தேன். ஆனால் நீயோ பிள்ளை வேண்டும் என்ற பைத்தியத்தில் இருந்தாய். ஆகவே நான் உனக்குப் புத்திரனை அளித்தேன். அது காரணமாக நீ இப்பொழுது துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாய். உலகமே இந்த மாதிரித்தான் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறது" என்றார்.

ஆனால் துன்பத்திலிருந்து அரசன் சித்திரகேதுவினால் அவரது வார்த்தைகளின் உட்கருத்தை அறிந்து கொள்ளமுடியவில்லை.

அப்போது நாரதர் ஒரு காரியம் செய்தார். தம் தவ வலிமையினால் குழந்தையின் உடலிலிருந்து பிரிந்து சென்றுவிட்ட உயிரை திருப்ப வரவழைத்தார். அந்த உயிரைப் பார்த்து அவர் ஓ ஜீவாத்மாவே! இதோ பார்! உன்னுடைய அன்னையும் பிதாவும் மிக்க துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள். மீண்டும் இந்தச் சரீரத்தில் புகுந்து அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இராஜ யோகத்தையும் அனுபவி என்றார்.

உடனே ஜீவாத்மா அவரைப் பார்த்து 'தேவரிஷி! இவர்கள் எப்படி எனக்கு அன்னையும் பிதாவும் ஆவர்? உயிருக்கு அன்னையும் கிடையாது. எத்தனையோ பிறவிகள் நான் இவர்களுக்குப் பிதாவாக இருந்திருக்கின்றேன். உறவினராக இருந்திருக் கின்றேன். அதே மாதிரி இவர்களும் எனக்கு இருந்திருக்கிறார்கள். சரீர சம்பந்தம் இருக்கும் வரையில் தான் இந்த உறவெல்லாம். அதற்குப் பிறகு அவரவர் கருமத்திற்கு ஏற்றாற் போல் செல்ல வேண்டியது தான்" என்று சொல்லி ஆத்மா சென்றுவிட்டது.

இதைக் கேட்டதும் சித்திரகேது மன்னனுக்கு ஞானம் பிறந்தது. நாரத முனிவர் செய்த உபதேசத்தைப் பற்றி அவன் இறைவனுடைய பாதார விந்தங்களை அடைந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணத்து அடியவர்கள்

பெரிய புராணத்தில் வரும் அடியவர்கள் மாறுபட்டவர்கள். சிவவேடத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்று நினைத்தார்களே தவிர அந்த சிவ வேடத்தை அணிந்தவன் யார் என்ற ஆராய்ச்சியில் அவர்கள் போகவே இல்லை. இது உலகத்தில் மற்ற இலக்கியங்களில் பார்க்க முடியாத தனிச் சிறப்பாகும். எதிரே இருப்பவன் தீயவன். தன்னைக் கொல்ல வந்திருக்கிறான் என்று தெரிந்தும் கூட அது பற்றிக் கவலைப்படாமல் தாம் இதுவரையில் எந்த சிவவேடத்திற்கு மரியாதை கொடுத்தார் களோ அந்தச் சிவ வேடத்தை அணிந்திருக் கின்றான் என்ற காரணத்தினால் அவன் என்ன செய்தாலும் அது பற்றிக் கவலை இல்லை. தங்களுடைய குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் இன்றியமையாதது என்பதை பெரிய புராணம் சுட்டிக் காட்டு கின்றது.

பெரிய புராணத்தில் வரும் இரண்டொருவர் ஒரு புதுவழியை மேற்கொண்டனர். தங்களுக்கு ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டார்கள். அந்தக் கொள்கை சரியா, தவறா என்று ஆராய யாருக்கும் உரிமையே இல்லை. ஆகவே தாங்கள் வகுத்துக்கொண்ட கொள்கைப்படி வாழ்ந்து வந்தார்கள். என்றாவது ஒரு நாள் அந்தக் கொள்கைக்கு முட்'டுப்பாடு வருமே யானால் உயிரை விடத் துணிகிறார்கள்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக்காட்டாக நிற்பவர். வழி வழியாகத் தொண்டு செய்கின்ற தாங்களும் தங்கள் குடியும் இறையன்பில் தலை நிற்பவர்கள் என்ற எண்ணம் அவர்களுடைய மனத்தின் ஆழத்தில் இருந்திருக்கின்றது. ஆகையினால் தான் இறைவன் கனவில் வந்து வயிற்று வலியை சுந்தரன் வந்துதான் போக்க முடியும் என்று சொன்னவுடன் "மற்றவன் இங்கு வந்து நோய் தீர்க்கும் முன்னர் நீங்காமலிருக்கும் பாதகச் சூலை நோயை இவ்வயிற்றினோடும் கிழிப்பேன்" என்று சொல்லுகின்ற அளவுக்கு அவருடைய துணிவு போய்விட்டது. இது ஏயர் கோன் சிறந்த பக்தர், சிவனடியார் என்பதை உணர்த்துகின்றது. அதை யாரும் மறுப்பதற் கில்லை.

அகங்காரம் மகாரப்மற்று அடியாராக வாழ் வதை விட்டு "நீங்கள் தான் உயர்ந்தவர்கள், நீ போய் ஆட்கொண்ட சுந்தரன் எங்களை விட ஒரு படி கீழ் என்று நினைக்கின்ற போது அந்த அகங்காரம் தலைதூக்குகிறது. ஆகையால் அதற்குரிய தண்டனையாகத்தான் அவர் வயிற்றைக் கிழிக்கும் படியாக ஏற்பட்டது.

பெரியபுராணத்து அடியவர்கள் பல்வேறு தொண்டுகளில் ஈடுபட்டனர். திருக்கோயில் பணி செய்தவர்களும் உண்டு. திலகவதியார், திருநீலநக்கர், புகழ்ச்சோழர் முதலியவர்கள் திருக்கோயில் தொண்டை செய்திருக்கிறார்கள். என்றாலும் நேரடியாக திருக்கோயில் தொண்டு செய்வதை விட மக்கள் தொண்டு செய்தவர்களே அதிகமாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் அடியவர்களுக்கு சட்டி கொடுத்தல், துணி கொடுத்தல், வேண்டுவனவற்றைத் தருதல், அன்னமிடுதல், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்று வரும்போது இவையெல்லாம் மக்கள் தொண்டின் பாற்படும்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையின் பஞ்சம் தீரும் வரையில் அன்னமிட்டது எல்லாம் மக்கள் தொண்டின் பாற்படும். எனவே இந்தத் தொண்டு செய்வதில் ஓர் இன்பத்தை இவர்கள் கண்டார்கள்.

இந்த மக்கள் தொண்டே அவர்களது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும், வீடு பேற்றைத் தருவதற்கும் கருவியாக அமைந்தன என்பதை நாம் அறிய முடிகிறது. இதைவிட இந்தத் தொண்டு செய்வதில் இன்றுகூடப் பலர் நூற்றுக்கணக்கானவர்களுக்கு அன்னமிடுகின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். பலர் திருக்கோயிலைக் கட்டுகிறார்கள். அப்படி இருக்க இவர்களை விட பெரிய புராணத் தில் வருகின்றவர்கள் எந்த விதத்தில் உயர்ந்தவர்கள் என்ற வினா நியாயமான வினாவாகும். இங்கே ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று இருக்கின்றது.

இன்று அறம் செய்பவர்கள் உண்டு. ஆனால் இவர்களது அறச்செயல்கள் இறையுணர்வை அடித்தளமாகக் கொண்டு நடைபெறுகின்றதா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அறச்சாலைகள் அமைத்தலும், கோயில் கட்டுதலும், அன்ன தானமிடுதலும் இறையுணர்வுடன் செய்யப் படுமாயின் வணக்கத்துக்குரிய செயல்களாகும். அதை விடுத்து விளம்பர நோக்குடனும், புகழ் பெறுவதற்கான ஒரு வழியாகவும் கருதிச் செய்யப்படுமாயின், இவர்களின் அறச் செயல்களை பெரியபுராணத்து அடியவர் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கமுடியுமா?

இளையான் குடிமாறநாயனார் வரலாற்றில் நிறைந்த செல்வத்தோடு இருக்கின்ற வரையில் அவர் அன்னம் இட்டார் எல்லாம் கொடுத்தார் எல்லாம் சரி ஆனால்,

"வறுமை பதம் புக உன்னினார் தில்லை மன்னினார்"

என்று சொல்லுவர். இவ்வளவு செல்வம் மல்கியபோது அச்செயல்கள் செய்வது அன்றியும், அல்லல் நல்குரவரான போதிலும் இச்செயல் செய்வார், அதுதான் பெரிய புராணத்தின் நுணுக்கம்.

அறச்சாலைகள், உடை வழங்குதல், அன்னம் இடுதல் போன்றவற்றை சிந்தித்துப் பார்த்தால் சாதாரண விடயங்கள். சாதாரண விடயங்களைச் செய்தவர்கள் எப்படி அடியவர்கள் ஆனார்கள் என்பதைப் பார்க்கும் போது தான் உண்மை விளங்குகின்றது. இவர்கள இதைச் செய்த தினாலே மட்டும் அடியவர்கள் ஆகி விட வில்லை. இதைச் செய்வதற்கு முடியாத ஒரு சூழ்நிலை உருவானபோது, செய்வதற்கு முடியாத ஒரு வறுமை வந்தபோது, செய்வதற்கு முடியாத உடல் பிரச்சினை வந்தபோது, செய்வதற்கு முடியாத குடும்ப சூழ்நிலை உருவானபோது என்ன செய்தார்கள்? அந்த நிலையிலும், அவர்கள் இதை விடாது செய்தார்கள். இந்தத் தொண்டிற்கு இடையூறு வரக்கூடிய சூழ்நிலை உருவானால், உயிரை விட்டு தொண்டை நிலை நிறுத்தினார்களே தவிர, இப்பொழுது முடியாமல் போய்விட்டது, பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கவில்லை. ஆகையினால் தான் இவர்கள் அடியவர்கள் ஆனார்கள் இதிலிருந்து பெரிய புராணத்திலுள்ள அடியவர்களின் பொதுத் தன்மை நன்கு விளங்கும்.

அறிவைக் கொண்டு ஆராய்வது என்பது ஒருவகை, உணர்வைக் கொண்டு ஆராய்வது என்பது ஒருவகை. பெரிய புராணத்திலுள்ள அடியவர்களின் வரலாற்றை அறிவு கொண்டு ஆராய்ந்தால் அவ்வளவு சரிப்பட்டு வராது.

ஒருவர் விளக்கு எரிக்கிறார். அவர் எண்ணை வாணிகர் நிரம்ப வசதியுள்ள குடும்பம். கோயிலில் ஆயிரக்கணக்கான விளக்குகள் எரிக்கிறார். செல்வம் எல்லாம் போன நிலையிலும் விடாது எரிக்க வேண்டுமென்று நினைக்கிறார் அதற்கு புல்லரிந்து அதைக் கொண்டுவந்து விற்று அதில் கிடைக்கும் காசில் விளக்கு எரித்தார். பின்னர் செக்கு இழுக்கும் பணியில் வேலைக்குச் சென்று பணம் சேர்த்து இதே பணியைச் செய்தார். இவ் வனைத்து முயற்சிகளும் தோற்றுப்போகவே எதை வைத்து எரிப்பது என்ற நிலைமை வரும் போது, இனி நம்மால் இந்தத் தொண்டு செய்ய முடியாது என்று நினைக்கவில்லை. அங்கே தான் உறுதிப்பாடு வெளிப்படுகின்றது. இப்படிப் பட்ட அடியார்கள் சூழ்நிலை முற்றிலும் மாறி விட்ட நிலையிலும் கூட இத்தொண்டை நிறுத்த மாட்டேன் நிறுத்தினால் உயிரை விட்டு விடுவேன் என்றார்கள். இதை அறியாமை என்றா சொல்வது, அறிவினால் ஆராய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் இவர்கள் அடியவர்கள் அல்லர். உணர்வினாலே இவர்களை உணர முடியும். இறைவன் அறிவினாலே ஆராயப்படுபவன் அல்லன் உணர்வினாலே உணரப்படுபவன். ஆதலால் இந்த அடியவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் ஒரே வழி உயர்வினாலே தான் அவர்களை அறியமுடியும். இந்த உணர்வுநிலைமைக்கு நம்மை நாம் மாற்றிக் கொள்வோமேயானால் கணம்புல்ல நாயனாரோ அல்லது ஏனைய அடியார்களோ செய்த செயலினுடைய அருமைப்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும். மிகச் சாதாரண செயலைக் கூட ஒரு மாபெரும் தொண்டாகச் செய்தார்கள்.

பெரியபுராணம் பற்றிக் கண்டவற்றை அமைதியாக இருந்து சிந்தித்தால் ஓர் உண்மையை விளங்கிக்கொள்ள முடியும். ஏனைய சமய நூல்களைப் போல அதாவது தேவாரம், திருவாசகம், நாலாயிர பிரபந்தம், அஷ்டப் பிரபந்தம் முதலிய நூல்களைப் போல சமய அடிப்படையில், குறிப்பிட்ட சமயத்தை வளர்ப்பதற்காகவும், அதனுடைய பெருமையைச் சொல்வதற்காகவும், அதை நம்புகிறவர்கள் இறைவனது திருவடியைச் சேர்வதற்குரிய வழியைக் காட்டுவதற்காகவும், அந்தச் சமய நூல்கள் பணிபுரிந்தது போல சேக்கிழார் நூல் இல்லை என்பதை அறிந்து கொள்ள முடியும். என்ன காரணத்தினாலோ பின்னால் வந்தவர்கள் இதை பன்னிரண்டாம் திருமுறை என்று சைவத்திருமுறைகளில் சேர்த்தார்களே தவிர பெரியபுராணத்தின் அடிநாதமாக விளங்குவது சைவ சமயத்தை வளர்ப்பது என்பது முக்கிய மாகத் தெரியவில்லை. சைவ சமயக் கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்த அடியார்களைச் சொல்வதுதான் பெரிய புராணம் என்பதை மறுப்பதற்கில்லை. சைவத்தின் பெருமையையும் பெரிய புராணம் பேசுகின்றது என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதைவிட முக்கியமாக பெரிய புராணம் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது என்றால் இந்த தமிழ் மக்களைத் திருத்துவதுதான் அதனுடைய முக்கிய குறிக்கோளாகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழினம் கீழே விழுகின்ற நிலைமை அடைந்துவிட்டது. சோழர்கள் மறையப்போகின்ற சூழ்நிலை உருவாகிவிட்டது என்பதை அறிந்த சேக்கிழார் இந்தத் தமிழ் மக்களுக்கு ஒரு வழிகாட்ட வேண்டும். குறிக்கோள், இறையன்பு, தொண்டு ஆகியவற்றை அவர்கள் வாழ்க்கையின் குறிக் கோளாகக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டத்தான் பெரிய புராணத்தை இயற்றினார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே சமய நோக்கத்தை விட சமுதாய நோக்கம்தான் அவருடைய முக்கிய குறிக்கோளாக இருந்தது என்பதைப் புரிந்து கொள்வோமானால் தவறு ஒன்றுமில்லை. இவ்வாறு சொல்வதனால் பெரிய புராணத்தினுடைய சமய அடிப்படையையோ, நோக்கத்தையோ குறை கூறுவதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். சேக்கிழாரைப் பொறுத்தமட்டில் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றிருந்தார். ஆதலால் சமயத்தை வளர்ப்பதற்கு இவை போதுமானவ என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். புதியதாக ஒரு காப்பியத்தை இயற்றி அந்தச் சமயத்தை வளர்க்க வேண்டுமென்ற சூழ்நிலை தேவையே இல்லை. அது உருவாகவில்லை. ஆகவேதான் அவர் மக்களை நல்வழிப்படுத்தி சிறந்த வாழ்க்கை உடையவர்களாகச் செய்தால் அது சமய வாழ்க்கையைத் தானே கொண்டுவரும் என்பதனை அறிந்திருந்தார். ஆகையால் பெரிய புராணத்தின் குறிக்கோளாக சமுதாய வளர்ச்சி – சமுதாயம்சிறந்த முறையில்முன்னேறிச் செல்வதைத் தம்முடை வாழ்க்கயின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்பதனை அறிந்து கொள்வோமேயானால் அது பெரிய புராணத்தை உள்ளவாறு அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பதிவிரதை

வாழ்வு இருவகையானது. ஒன்று இல்லறம், மற்றது துறவறம். இல்லறம் என்பது இல்லிருந்து தக்க மனையாளுடன் கூடி இன்புற்று இல்லறக் கடமைகளை ஆற்றிச் சிறப்படைவது.

துறவறம் என்பது, அனைத்தையும் கைவிட்டு ஒதுங்கி காட்டில் சென்று தவம் ஒழுகுவது.

இல்வாழ்வினர் அது வெறுத்தால் துறவறத்தை நாடுவார்கள். துறவு நெறியினர் நெறிபிறழ்ந்தால் இல்லறத்தை மேற்கொள்ளத் தொடங்குவார்கள்.

இப்படிப்பட்ட வாழ்வு நெறிகளில் அந்தக் கணவன் இல்லறத்தை மேற்கொண்டான். அதுவோ கொடுமையான நரகம் ஆயிற்று. அவன் தனக்கு விதித்த விதி அதுவென்று எண்ணியிருந்தான். அந்த மயக்கம் தெளிய, அவன் மனிதன் ஆனான்.

என் வாழ்வு கசந்துவிட்டது. இவளோடு வாழ்ந்து இதுவரை பட்டபாடுகள் போதும். இனி நான் இவளோடு ஒரு நொடியும் வாழ மாட்டேன். சன்னியாசம் ஏற்கப் போகின்றேன். என்னை ஆசீர்வதியுங்கள் என்றான்.

பொதுவாக இல்லற வாழ்வில் இருப்பவன் ஒருவனைச் சன்னியாசம் கொள்ளத் தூண்டுவது குறையாகாது. அறம் எனப்படுவதே இல்வாழ்க்கை என்ற ஆன்றோர் வாக்கினை அது மறுப்பதும் ஆகும். ஆனால் இங்கு உறைத்துள்ள கணவனின் நிலைமையோ முற்றிலும் வேறானது.

இன்பம் செழிக்க வேண்டிய வாழ்வில், துன்பம் போய்க் கூத்தாடியது. அன்பு காட்ட வேண்டிய இல்லாள் அகங்காரியாக ஆட்டிப் படைத்தாள். ஆகவே அவனுடைய முடிவிலும் நியாயம் இருந்தது.

ஔவையாரும் அதனை உணர்ந்தார். இல்லவன் மாட்சியில்லாதபோது அந்த வாழ்வில் அந்த வாழ்வில் உள்ளது என எதுவும் இல்லையல்லவா? அவனை அவர் மனப் பூர்வமாகவே ஆதரித்தார், ஆசீர்வதித்தார்.

**புத்தாவுக்கேற்ற பதிவரதை உண்டானால்**
**எத்தாலும் கூடி இருக்கலாம் - சற்றேனும்**
**ஏறுமாறாக இருப்பாளே யாமாகிற்**
**கூறாமற் சன்னியாசம் கொள்.**

என்று அவன் முடிவை ஆதரித்துப் பாடினார்.

பதிவிரதை – பதியின் கருத்துக்கு இசைய நடப்பதனையே தான் மேற்கொள்ளும் விரதமாக உடையவள். எந்த நிலையிலும் பதிவிரதைத் தன்மைக்கு எதிரான முறையில் நடப்பது அழகல்ல!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த நிலையம்

குடும்பம் பற்றிய பெரியவர்களின் சிந்தனைகள் இருதரப்பட்டனவாகவே இருக்கின்றன. இதன் காரணமாகவே தாரமும் உணர்வுடன் தலைவிதிப்படியே என்றார்கள். உணர்வுடன் அறிவும் கலக்கும் பொழுது குடும்பம் ஆனந்தநிலையம் ஆகிவிடும். அனைத்தும் உங்கள் கையில் தான் இருக்கின்றன.

சிவன் பார்வதி குடும்பப் படத்தில் மயிலும் பாம்பும் சேர்ந்து இருக்க முடியும் எனக் காட்டியிருப்பது பெரும் தத்துவமல்லவா!

புரிந்தவர் துணையாகி ஆரம்பிக்கப்படும் குடும்பம் அன்பு எனும் நீர் ஊற்றப்பட்டு வளர ஆரம்பிக்கிறது. சரியான குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆண் பிரமச்சாரி நிலையில் தனக்காக வாழ்கிறான். கிரகஸ்த நிலையில் மனைவியை இணைத்துக்கொண்டு மனைவிக்காக விட்டுக்கொடுக்க ஆரம்பிக்கின்றான். அன்புடமைக்குக் காரணமாக மழலைச் செல்வம் கிடைத்ததும் கணவன், மனைவி இருவரும் குழந்தைக்காக அனைத்தையும் தியாகம் செய்யத்தொடங்கி விடுகிறார்கள். அன்பு, அருள், தியாகம் இந்தப்படி நிலை தமிழர் குடும்பவாழ்வின் சிறப்பு.

குடும்பவாழ்வில் பிள்ளைச் செல்வம் முக்கியமானதாகும். உலகில் மலர்வதற்காக இறைவனின் இல்லத்தில் இருந்து விழுந்த இனிமை நிரம்பிய இனிய மொட்டே குழந்தையாகும். வானில் இருந்து மாசற்ற நிலையில் விழும் உயிருள்ள ஜொலிக்கும் ஆபரணங்களாக இறைவன் மனிதனுக்கு வழங்கும் அருட்கொடை.

**குழந்தைபற்றி**

படைப்பு பல படைத்து பலரோடுண்ணும் உடைப் பெருஞ் செல்வராயினும் மிடைப்படக் குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் மயங்குறு மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைத்தாம் வாழுநாளே (அறிவுடைநம்பி புறநானூற்றில்)

மின்னல் ஒளியே! விலைமதியா ரத்தினமே! கன்னல் பிளிந்து கலந்த கனிச்சாறே (பாரதிதாசன்)

கற்கண்டுச் சீனி கனிவகைகள் எல்லாம் உன் சொற்களால் நான் அடையும் சுகத்தினுக்கே ஈடாமோ. (அழ வள்ளியப்பா)

இத்தனை சிறப்புக்குரிய குழந்தைகள் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே. என்று நான் சொல்ல மாட்டேன். குழந்தை வளர்ப்பில் பெற்றார் பெரும் கவனமெடுக்க வேண்டும். அவசர உலகில் குழந்தைக்குப் பால் கொடுக்கத் தாய்க்கு நேரமில்லை! பொருளாதார சமூக அமைப்பு — மாற்றம் ஏற்படுத்தியுள்ள விளைவு இது! ஆணும் பெண்ணும் வேலைக்குச் செல்லும் குடும்பங்கள் பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. அவர்களால் தமது சந்ததியைச் சரியான முறையில் நெறிப்படுத்த முடியவில்லை. (சில குடும்பங்கள் விதிவிலக்காக இருக்கலாம்) .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை வளர்ப்பு மிகப் பெரிய கலையாகும். வீட்டில் உள்ள பெரியவர்கள் பாட்டா, பாட்டி போன்ற பல உறவுகள் குழந்தை வளர்ப்பு முறைபற்றி அனுபவப்படிப்புப் பெற்றிருந்தனர். கூட்டு வாழ்க்கை முறையின் பயன் இதுவாகும். இப்பொழுது தனிக்குடும்ப அமைப்பு ஏற்பட்டு உறவுப்பாலம் அறுபட்டுக்கிடக்கிறது. குழந்தை வளர்ப்பு நிலையங்கள் தொடங்கிவிட்டன. அந்தக் காலத்தில் பல பிள்ளைகளைப் பெற்றார்கள் வளர்ததார்கள். இன்று பிள்ளைகள் குறைவு; காட்டுமிராண்டிகளாக வளர்க்கிறார்கள். குழந்தைகள் உடல் ஆரோக்கியமாக வளர வேண்டும் என்பதிற் காட்டும் அக்கறை அறிவுடைய குழந்தைகளாக வளர்க்கப்படல் வேண்டும் என்பதில் காட்டப்படுவதில்லை.

உலகத்தில் சிக்கலான பதவி எது? அம்மா, அப்பா, பதவி எந்தக் தகுதியும் இல்லாமல் (ஆண், பெண் என்பது தவிர) பலர் அம்மா, அப்பா ஆகிவிடுகிறார்கள். விபத்தாகக் குழந்தை பிறந்து விடுகிறது. பொருளாதாரச்சுமை

துன்பமோ! துன்பம்!

சுவாமி சிவானந்தர் "நல்ல பிள்ளை பெறலாம்" எனும் நூல் எழுதியுள்ளார். அதில் தாயிடம் இருந்து பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை மொழிவழி குழந்தை கற்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகளுக்கு முன் அடிக்கடி சண்டையிடும் பெற்றோர் மிக மோசமான முன் உதாரணம்.

உங்களுடைய குழந்தைகளைப் பயத்தால் உன்னுடன் இணைப்பதைவிட மரியாதையுடனும், மிருதுத்தன்மையுடனும் உங்கள்பால் அரவணைத்துக் கொள்வது முக்கியமானது. குழந்தைகளுக்கு ஓடி ஆடி விளையாட முழுச்சுதந்திரம் வழங்க வேண்டும். புரட்சிக்கவி பாரதிகூட குழந்தைப்பருவத்தில் அச்சுதந்திரத்தை இழந்திருக்க வேண்டும். ஆதனால்தான் பின்னாளில் குழந்தைகளுக்கு ஓடி விளையாடு "பாப்பா நீ ஓய்ந்திருத்தல் ஆகாது பாப்பா" என்று பாடினார் போலும் மிகச்சிறு வயதில் பிள்ளைகளைப் பாடசாலையில் இணைத்தல் கூடாது. மூன்று வயதில் பிள்ளையைப் பாலர் பாடசாலையில் இணைக்கலாம்? இங்குள்ள சூழ்நிலையில் பல்கலைக்கழகப் படிப்பை முடிக்கும் வயது சராசரி 30 கல்லூரிப்படிப்பு என்பது இளைஞர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துகின்றன. 6 வயதிற்கு முன்னர் பாடசாலையில் சேர்க்கக்கூடாது எனக்கருதுகிறேன். தனது ஆயுளின் ஏறத்தாள, நான்கில் ஒரு பங்கைக் கல்விக்கூடங்களிலேயே செலவிட்ட பிறகும் வாழச்சொல்லிக் கொடுக்காத – வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்காத – ஒரு சொட்டுத் தன்னம்பிக்கையைக் கூட ஊட்ட முடியாத கல்வி முறையைத்தான் பிள்ளைகள் கற்று வருகிறார்கள். அது மாற்றியமைக்கப்பட வேண்டும். தாய்மொழி, உலகமொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு இவற்றுடன் சமயக் கல்வியும் கட்டாயம் போதிக்கப்படல் வேண்டும்.

பெற்றோர் தமது எண்ணங்களைப் பிள்ளைகள் மீது திணிக்கக்கூடாது. பிள்ளைகளைச் சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கவிட வேண்டும். 'கருவில் திருவுடையார்' என்று பிறக்கும் போது சிறப்புடன் பிறந்தவர்களும் உண்டு. முயன்று பாடுபட்டு முன்னிடத்தை எட்டியவர்களும் உண்டு உணர்தலும் புரியவைத்தலுமே அப்பாவின் கடமை. ஆனால், பணியவைத்தலும் திணித்தலுமே இன்று பல அப்பாமாரின் நோக்கமாகவுள்ளது. இது தவறானதாகும். பிள்ளைகளின் செயல்கள் எல்லைமீறிப் போவதைத் தடுக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் பலர் பிள்ளைகள் தவறுகளை மூடிமறைக்கவே முயலுகின்றனர். எது தவறு, எது சரி என்கின்ற நேர்மை உணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். என்ன தப்புச் செய்தாலும் நாம் காப்பாற்றப்படுவோம் என்கிற எண்ணம் பிள்ளைகளுக்கு உண்டாவது நல்லதன்று. பிள்ளைகளின் தவறுகளை மூடிவிட்டுப் பாசத்தால் நியாயப்படுத்தாதீர்கள்.

குறிப்பிட்ட வயதுவரை வளர்க்கப்பட்ட இளைஞர் (ஆண், பெண் இருபாலாரும்) சுயதரிசனத்துக்கு ஆயத்தமாக வேண்டும். இது கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது இனிமேல்தான் நிறையப் படிக்கப்போகிறோம் என்ற வாழ்க்கை அனுபவத்திற்கு எந்தப்படிப்பும் ஈடாக முடியாது. பல இளைஞர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் புரட்சிப்புயல்களாகக் காணப்படுகிறார்கள். சாதிகள் இல்லையடி பாப்பா என்பாரும் சீதனக் கொடுமையை இல்லாது செய்வோம் என முழங்குவாரும் ஆண், பெண் இருவரும் சமமானவரே! எனக்குரல் கொடுப்பவரும்... இப்படியான சிந்தனை முத்துக்களை உதிர்த்தவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதும் சாதி, சமயம் பார்த்ததுச் சீதனம் பேசி அவசரமாகத் திருமணம் செய்யக்குறிப்பைக் கொடுத்து விடுவார்கள். தரகர்களிடம்! அப்படியானால் படிக்கும் போது ஏற்பட்ட காதல்! அது வெறும் பொழுதுபோக்கு அவ்வளவுதான். இளைஞர்களே உங்களை நீங்கள் சுயதரிசனம் செய்யுங்கள். புரட்சிப்புயல்களாக இருங்கள் வாழ்த்துகிறேன். புஸ்வானம் ஆகிவிடாதீர்கள் சமூகம் உங்களைப் பார்த்துச்சிரிக்கும்.

இளைஞர்களே! உங்களை நீங்கள் செதுக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களைச் செதுக்கவிட்டால் எங்கள் உடல் ரணகளம் ஆகிவிடும். சிந்திக்கத் தெரியாதவனை மன்னிக்கலாம். மன்னிக்க முடியாத எதையும் தீரச்சிந்தித்து முடிவுக்கு வாருங்கள். நல்ல நட்பு, காதல் இன்று தேடினாலும் கிடைப்பதில்லை. இங்கேதான் உனது வாழ்வுக்குச் சாவுமணி அடிக்கப்படுகிறது. உன்னை வளர்த்து வாலிபனாக்கி உலாவவிட்டுள்ள பெற்றோர் கண்ணுக்குத் தெரியாமல் போகிறார்கள். எங்கோ முளைத்த 'காளான்' உனக்குக் கவர்ச்சிப் பொருள் ஆகிவிடுகிறது.எரிக்க வேண்டியவைகளைக் கண்டு சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்! விரும்பியது அமையாவிட்டால் அமைந்ததை விரும்பு என்கிறது உபநிடதம். அமைந்ததை நீ விரும்பியதாய் இருந்தால் நீ விரும்பியதை அமைத்துக்கொள்... அது கல்வியாகவும் இருக்கட்டும் மற்று ஏதுவாயினுமாகட்டும் தன்னம்பிக்கையும் மன உறுதியுமிருந்தால் வாழ்க்கையில் எதுவும் குறைபாடாகாது. அநீதிக்கெதிராகப் போராடப்பழகு... ஆனால் நீயே அநீதியின் வடிவம் எடுக்காதே! வாழ்க்கை ஒரு சறுக்குநிலம். அந்தச் சறுக்குநிலத்தில் விழாமல் நடக்க நம்பிக்கை என்ற ஊன்றுகோலைப் பிடித்துக்கொள். நான் பெரிதா? நீ பெரிதா? இதுதான் இன்று பல குடும்பங்களை நாசமாக்குகின்றது. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடுவதை நிறுத்திக் குடும்பப் பிரச்சினைகளுக்காகப் போராடுங்கள். பிரச்சினை வரும்போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒரு வாரத்தில் ஒருநாளாவது குடும்பச் சட்டசபை கூட வேண்டும். உறுப்பினர்கள் விவாதம் நடாத்த வேண்டும். அப்பா எனும் சபாநாயகர் நடுவுநிலைமையுடன் தீர்ப்புக்கு வர வேண்டும். இதுதான் பிரச்சினையை அணுகும்முறை. குடும்பத்தைக் கோயிலாக்கும் முறை. நல்ல குடும்பத்தை அமைத்து ஆனந்த நிலையம் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் இங்கு பெற்றார் பிள்ளைகளின் செயற்பாடுகள் பற்றிக்கடந்த இரண்டு கட்டுரைகளிற் பார்த்தோம். மூன்றாம் கட்டுரை "முதுமைப்பருவத்தை" மையமாகக் கொண்ட பிரச்சினைகளைத் தாங்கி வருகிறது.

குழந்தை பிறந்து விட்டால் பெயர் செல்லப் பிள்ளை வந்து விட்டான் என்பாரும். கொள்ளிவைக்கப் பிள்ளை பிறந்து விட்டான் என மகிழ்வோருமாகப் பல வகைப்பெற்றோரைக் காண்கின்றோம். இந்த இரண்டு எண்ணங்களும் நிறைவேறாது போகும் சந்தர்ப்பங்களும் உண்டு. மனமுடையும் பெற்றோர் துன்பத்தின் எல்லைக்குச் சென்று விடுகிறார்கள். பெற்றோரைக் கண்ணும் கருத்துமாகப் பார்க்கும் பிள்ளைகள் இருந்தால் அது பூர்வஜென்மப்பலன்! இல்லாவிட்டால் முதுமையை மகிழ்வாக்கிக் கொள்வதற்குத் தயாராகிவிட வேண்டும். பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட வயது வந்து திருமணம் செய்து கொண்டு அனுபவத்தைத் தேடப்புறப்படுகையில், பெற்றோரின் தலையீடு அளவுடன் இருக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் மூக்கை நுழைக்கக்கூடாது அனேகமான வீடுகளில் இதன் காரணமாகவே நிம்மதி இழக்கப்படுகிறது. அனுபவத்தைத் தேடிக்கொள்வதற்கு விட்டுவிட வேண்டும். கேட்டால் மட்டும் ஆலோசனை கூறுவது என்று முடிவு செய்துவிட வேண்டும்.

நமது சமயம் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று ஆச்சிரம முறைகள் பற்றிக் கூறியுள்ளது.

வானப்பிரஸ்தம் என்பதுபற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். கிருகஸ்த நிலையில் இருப்பவன் தனது குடும்பத்தலைமையைப் பிள்ளையிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கும் நிலையில் வானப்பிரஸ்தம் ஆரம்பிக்கின்றது. இந்நிலை வீட்டில் இருந்து கொண்டு பற்றுக்களை நீக்கும் நிலையாகும். எந்த விடயத்திலும் தலையிடக்கூடாது. அதிகமாக மௌனமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். மாறாகப் பல முதியவர்கள் இந்த நிலையை அடைய மறுக்கிறார்கள். அதிக எதிர்பார்ப்புக்களை வளர்க்கிறார்கள். பிள்ளைகளின் சிந்தனை முழுவதும் தம்மைப் பற்றியே அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். வேலைப்பழுவினால் பிள்ளைகளுக்குப் பேசக்கூட நேரமில்லை. முதியவர்கள் மனமுடைகிறார்கள். பேரப்பிள்ளைகளிடம் பேசலாம் என்றால்... முடியாத காரியம்.. மனைவிகூட அருகில் இருந்து பேசத்தயாரில்லை. பல வீடுகளில் அம்மாவையும் அப்பாவையும் கூறுபோட்டுத் தனித்தனியாக்கி விடுகிறார்கள். முதியவர்களின் மனம் குழந்தை மனம்.

நாகரிக வளர்ச்சியின் உச்சமாக முதியோர் இல்லங்கள் அமைக்கப்படுகின்றன. நாம் எங்கே போகிறோம்? என்பதற்கு இவ்வில்லங்கள் நல்ல உதாரணங்களாகும். முதியோர் இல்லங்கள் தொடர்பான எனது கருத்துக்கள் மாறுபட்டதாகும். முதலில் வர்த்தக ரீதியாக உருவாகும் இத்தகைய இல்லங்கள் தடைசெய்யப் படல் வேண்டும். தொண்டு உள்ளத்துடன் ஆரம்பிக்கப்படும் இல்லங்களின் தேவை அதிகரித்து வருகிறது. முதியோர் இல்லங்கள் உடல்நலம், உளநலம் பேணுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். முதியோரை அரவணைத்துச் செல்லும் நிர்வாகக் கட்டமைப்பு இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் பூரணமான முதியோர் இல்லம் இன்னும் அமையவில்லை என்பது எனது கருத்தாகும். விளம்பரம் புகழைநாடும் தொண்டர்களிடம் இருந்தும் முதியோர் இல்லம் மீளவேண்டும். உண்மைத் தொண்டர்கள் தியாகிகள் இவ் இல்லங்களைப் பொறுப்பேற்க வேண்டும். முதியோருக்குச் செய்யும் தொண்டு மகேசன் தொண்டேயாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியிலே சேமிப்பு வைத்திருக்கும் முதியோர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். எனவே வாழும்போது ஒரு தொகையைச் சேமித்து வைக்க வேண்டும். பணமும் இல்லாவிட்டால் நிலமை... பரிதாபகரமானது. "பானையிலே சோறிருந்தால் பூனைகளும் சொந்தமடா" எனும் கண்ணதாசன் வரிகள் சிந்தனைக்குரியன. சிலர் மகனுக்குக் கொடுக்கும் அந்தஸ்தை மகளுக்குக் கொடுப்பதில்லை. மகன் பார்ப்பான் என்ற எண்ணமும் கொள்ளி வைப்பான் என்ற உணர்வும் மகளை ஒதுக்குகிறது. இறுதிக்கடன் செய்யும் உரிமை ஆணுக்குத்தான் என்று எந்த விதியும் இல்லை. 'மீனாட்சி' ஆ ட்சியும் செய்தாள். இறுதிக் கடனும் முடித்தாள் என்பது திருவிளையாடல் புராணம்! பாசமற்ற குடும்பங்களில் மேசை கதிரை போலச் சடப்பொருட்களாக இருப்பதை விட முதியோர் இல்லத்தில் உயிர்ப்பாக இருப்பது ஆரோக்கியமானதாகும்.

நாம் சுமந்த நமது பிள்ளைகள் நம்மைச்சுமக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் இருந்து விடுதலை ஆகிவிட்டால் நமக்கு எந்த வருத்தமும் இருக்க முடியாது. எந்த எந்தப் பொருள்களின் மேலுள்ள ஆசைகளை நீக்கினோமோ அந்தந்தப் பொருள்களால் நமக்கு எத்தகைய துன்பமும் நேருவது இல்லை. முதுமைக்காலம் மகிழ்வாக அமைவது எங்கள் கையில் தான் இருக்கிறது.

தொண்டைமானாறு சந்நிதி ஆலயச்சூழல் ஒரு முதியோர் இல்லம் நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்கள் இச்சூழலில் வாழ்கிறார்கள். இவர்கள் பலதரப்பட்டவர்கள். நோய்க்கு ஆளானவர்கள். மனைவியால் துரத்தப்பட்ட கணவன்மார்கள். பிள்ளைகளினால் கைவிடப்பட்டவர்கள். உற்றார், உறவினர் யாருமற்றவர்கள். இப்படியாகப்பலர்! இவர்களுக்கு முருகன் சந்நிதியும், சந்நிதியான் ஆச்சிரமமும் அமிர்த சஞ்சீவியாகத் திகழ்கின்றன. ஆற்றங்கரையில் அமர்ந்து அருள் பாலிக்கும் ஆறுமுக வேலனின் சூழல் முதியவர்களுக்கு இதமாக அமைகிறது. பக்திச்சூழல், பரம்பொருளைப் பற்றிய பேச்சு, பாட்டு இவை மனத்திற்கு ஆரோக்கியம் தருகின்றன. பரந்த நிலப்பரப்பு, கால்ஆற நடந்து திரியலாம் தம் வயதொத்தவர்களுடன் நடப்புப்பூண்டு பேசி மகிழலாம். பேச்சுக்குத் துணைகிடைத்து விட்டால் முதுமை ஓடிவிடும். உடல் ஆரோக்கியத்துக்குச் சந்நிதியான் ஆச்சிரமம் பொறுப்பேற்றுள்ளது. மூன்று நேரமும் உணவு, தேனீர், மருத்துவவசதி அனைத்தும் கிடைக்கின்றன. ஆச்சிரமத்தின் சுவாமி அவர்களும், அங்கு தொண்டு செய்பவர்களும் உண்மைத் தொண்டர்கள். இரவு நேரத்தங்குமிட வசதி சற்றுக்குறைவாகவுள்ளது. தங்குமிட வசதியும் பூர்த்தியாகி விட்டால் சிறந்த முதியோர் இல்லம் அமைந்து விடும். தியானம், யோகம் ஆகியவற்றிற் பயிற்சிகள் நடைபெற வேண்டும். தியானம் முதியோருக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும்.

குடும்பத்தைக் கோயிலாக்குவோம். குடும்பம் என்பது அலுவலகம் அன்று. இன்றைக்கு நம்மில் பலருக்குப் பரந்ததிறந்த மனம் இல்லை. மனஇறுக்கம் ஒவ்வொரு வரையும் ஏதோவகையிற் பாதிக்கிறது. இதன் விளைவு குடும்பங்கள் சீரழிக்கப்படுகின்றன. குடும்ப உறுப்பினர்கள் அடிக்கடி கலந்து பேசிப் பிறர் குற்றம் காண்பதைத் தவிருங்கள் தனக்கென வாழாத மனோநிலை உள்ளவர்களே குடும்பத்தின் மையப்புள்ளி. குடும்பம் என்பது கூட்டு முன்னேற்றத்திற்கான தளம் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

வீடுகளை ஆனந்த நிலையமாக்கும் திருப்பணியைத் தொடங்குங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நிகழும் மங்களகரமான மன்மத வருடம் ஆனித்திங்கள் 23ஆம்நாள்(28:06:2015) ஞாயிற்றுக்கிழமை அன்று **இலங்கை வேந்தன்** மண்டபத்தில் நடைபெற்ற

**திரு.திருமதி இரா.செல்வவடிவேல்-சியாமளா தம்பதிகளின்**

மணிவிழா நிகழ்வின் போது மணிவிழாத் தம்பதிகளை வாழ்த்தி வழங்கிய **மணிவிழா மங்கல வாழ்த்துப்பா.**

**குலமதொடு நிறைவாழ்விற் கொழித்தே வாழி**

பெருமைநிறை **செட்டியார் இராம சாமி**
பிரியமனை **சுப்பம்மாள்** இயற்று தவத்தால்
இருளகல வெனஇணையு இளைஞன் பாரில்
**இரா.செல்வ வடிவேல்**என் றிகமே போற்ற
அருமைநிறை யொருவாழ்வை அவனி கண்டாய்
ஆசானே! **அறுபதுவாண் டடைந்த வேளை**
தருமவழி **நூறாண்டில் தழைத்தே வாழ**
தமிழணங்கின் தாள்பணிந்து இறைஞ்சி னோமே.

சீராரு மில்வாழ்வு சிறக்க இணையு
திருவாட்டி **சியாமளாப்** பெண்ணா ளோடு
தாராரு வாழ்வினிலீர் **தனய** ரோடு
தகையுமொரீர் **மகளிரையும்** தரணி பெற்றே
பேராரு **நிறைவாழ்விப் புவிகாண் வேளை**
பிரியமொடு **பொன்னாடை மாலை சூட்டி**
நேராரில் **மாணவரும் தொண்ட ராரும்**
நிலமதனில் நிலைத்தொளிர வாழ்த்தி னாரே.

வரமதெனுஞ் சைவமதை வளர்க்கும் நோக்கில்
**வைசபையின் உறுப்பினராய் செயலா ளருமாய்**
உரமதளி **சைவஅபி விருத்திக் கழகம்**
**உய்கிராம முன்னேற்றச் சங்கம் பாலர்**
தரமுயர **அளிபுலமைப் பரிசில் நிதியம்**
தவருறையு **மடமொடாச் சிரமம்** என்றே
அரியபணி பலவும்பார் அறியு மாறே
ஆற்றும்**இரா. செல்வவடி வேலே வாழி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நிதியும் பெறவருளு இறைவ னாக
இகமுறைவர் எந்நாளும் இறைஞ்சி ஏத்தும்
சந்நிதியான் ஆச்சிரமத் தார்கள் பாரில்
சகலருமே உய்வுபெற தளரா தென்றும்
முந்தியிரு பணிகளினை முனைப்போ டாற்று
மோகன்தாஸ் சுவாமிகளின் முயற்சி போற்றி
வந்தியவர் திருவடியின் வாழ்த்தைப் பெற்றே
வளர்செல்வ வடிவேலே வாழி வாழி.

பவமதறு சிவநெறியிப் பாரி லோங்கிப்
பரவவென அமைபரீட்சைப் பகுதி நோக்கை
அவரடைய செயலரென ஆற்ற முனைந்தே
அறிஞரொடு துறைஞரையும் அணைத்துச் சென்றே
துவளவிடா தாற்றியவை துலங்கு மாறே
சொலவரிய ஊக்கமொடு உழைத்து வந்தீர்
இவணரிய பணிகளினை யிகமே யாற்றும்
இரா.செல்வ வடிவேலே இனிதே வாழி.

தாயன்போ டுமைநாட தயவி னோடே
தகைமையினை ஆராய்ந்தும் தரணி நிலைமை
பாயன்போ டெடுத்தாண்டும் பரிவு காட்டி
படிதரமுக் கேற்றபடி பார்த்துப் பார்த்தே
ஆயிரமா யிரமிளைஞி இளைஞர்க் கெல்லாம்
அவனிபல வேலையவை அமையச் செய்தீர்
கோயிலெலா முறையிறைகள் குறைவி லருளால்
குலமதொடு நிறைவாழ்விற் கொழித்தே வாழி.

ஆலயங்கள் தோறுமருட் செறிவி னோடே
அவனடியை யேத்துமிதி காசம் புராணம்
மாலயமா யெவருமறி மாறே விரிவாய்
மயக்கமற ஆற்றிவரு மகிமை கண்டோம்
வாலயமாய்க் காணொளியின் வழியே பேசும்
வளதமிழைக் கண்டுமகிழ் வாழ்வும் பெற்றோம்
சீலமுடை பெருவாழ்விற் செழித்தே வாழ
திகழிறைகள் தாளிறைஞ்சித் தொழுதோம் நாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரின் சரிதமதை நவில வைத்தே
நளினமிகு காவியத்தை நாட்டுக் கீந்தீர்
ஆவலளி சந்நிதிகீர்த் தனையி னோடே
அவனடியின் புகழினையும் ஓத வைத்தீர்
தேவனொடு தேவியரும் திகழும் கோவிற்
திருப்புகழை யோதியதிற் திழைக்க விட்டீர்
பாவலனா யுலவிவரு பரிசுந் தந்தீர்
பசுந்தமிழ்போல் வாழியநீர் பன்நூா றாண்டே.

பணிவினால் உரையால் பழகும் பண்பால்
பலசபையின் முடிவுகளைப் பாங்கோ டெடுக்கும்
துணிவினால் தொண்டால் தூய வாழ்வால்
துணையினொடு நிறைவாழ்விற் துலங்கி யின்றே
மணிவிழா மங்கலத்தே மகிழும் வேளை
மாணதுறு நீவிரும மனைவி யோடே
அணிவிழாப் பலவுங்கண் டவனி வாழ
அருளதனை தில்லையிறை அளிக்க மாதோ.

தேவியுமை யொடுறைவைத் தீசர் வாழ்த்தும்
திருமிகு க. வைத்தீசர் திருவார் வாழ்த்தும்
மேவியிரு சந்நிதியான் மிதமார் வாழ்த்தும்
மிகுவன்பார் மோகன்ஸ்வா மிகளின் வாழ்த்தும்
ஆவியிரு மாணவரின் அன்பார் வாழ்த்தும்
அறிஞரொடு தொண்டரளி அழகார் வாழ்த்தும்
சேவைதரு மும்வாழ்வைச் செகத்தே காக்க
திருவருளால் பெருவாழ்விற் திழைத்தே வாழி.

வளமார வாழ உளமார
வாழ்த்துவோர்

தெய்வத்தமிழிசைக்கவிஞர்
நாயன்மார்கட்டு
**இராசையா குகதாசன்**
**குகதாசன் புவனேஸ்வரி**
**தம்பதிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்வு காலத்தின் இன்றைய தேவையாகும்

நமது நாட்டின் இன்றைய சூழல், சமய வாழ்வு மக்களிடையே மலர வேண்டுமென்பதை புலப்படுத்தி வருகின்றது. மனிதநேயம் அற்ற விலங்கு வாழ்வு வாழ்கின்றோம். 40 ஆண்டுகளுக்கு முன்னர் நம் பெரியோர் வாழ்ந்த அன்பு மயமான வாழ்வை இழந்து விட்டோம். எங்கும் வன்முறைச் சிந்தனை, பாலியல் துன்புறுத்தல்கள், பொருள் ஈட்டுதல் என்பதற்காக எதனையும் செய்யலாம் என நினைக்கும் இளைஞர்கள் இத்தகைய சூழ் நிலையில் தமது சைவ சமயம் எவ்வாறு வாழ வழிகாட்டியுள்ளது என்று சிந்திப்பது அவசிய மாகிறது.

உலகில் உள்ள எல்லோரும் நலமாக வாழ வேண்டுமென்றால் ஒழுங்கும், கட்டுப்பாடும் மிகவும் அவசியமாகவுள்ளது. ஒழுங்கு, அகத் தொழுங்கு, புறத்தொழுங்கு என இரு வகைப் படும். இதில் அக ஒழுங்கு சமயத்தினாலும், புற ஒழுங்கு சட்டத்தினாலும் ஆட்சி முறையின் சட்டத்தினாலும் தான் இயலும். அக ஒழுக்கம் கடவுள் உணர்வினாலும் புற ஒழுக்கம் ஆட்சி முறையின் சட்டத்தினாலும் நெறிப்படுத்துகின்றது. உதாரணமாக களவு எடுத்தவனின் கையையும் காலையும் தண்டித்து அல்லது துண்டித்து விடுவது ஆட்சியின் சட்டம். ஆனால் களவு செய்ய நினைப்பவனின் மனதைத் திருத்தி அதன் மூலம் கையையும் காலையும் நிறை காக்கும் காப்பினால் திருத்துவது சமய முறையாகும். எனவே எல்லா உயிர்களையும் வையத்து வாழ்வாங்கு வாழ வைப்பது சமய முறையாகும். எனவே எல்லா உயிர்களையும் வையத்து வாழ்வாங்கு வாழ வைப்பது சமய வாழ்வு தெளிவாக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் பல நல்ல உண்மைகளைக் கூறுபவை யேயாகும்.

சமயங்கள் கூறும் உண்மைகளில் முதன் மையாக விளங்குவது சைவசித்தாந்தம் ஆகும். இது சிவ பரம்பொருளின் முழு முதற் தன்மையைக் குறித்த சித்தாந்தங்களை நன்கு விளக்குகின்றது. சைவ சித்தாந்தம் குறித்து மேல் நாட்டு அறிஞர்கள் பின்வருமாறு குறிப் பிடுகின்றனர்.

சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது மிக விரிந்ததும், பெருஞ் செல்வாக்குடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெரு மதிப்பிற்குரியதும், இந்திய நாட்டினுள்ள சமயக் கொள்கைகளுக்கு எல்லாம் தலை சிறந்ததாகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெரு விளைவே சைவ சித்தாந்தமாகும்.

(டாக்டர் ஜி.யு.போப்)

பிற எல்லா ஆராய்ச்சி வகைகளையும் கொள்கை அல்லது வழிபாட்டு முறைகளையும் விட மேலானதாகச் சைவ சித்தாந்தம் சில சிறப்பியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது. மிகவும் பழமை வாய்ந்ததாய் அப் பழமையினாலாகிய பொமைகளைப் பெற்று விளங்குகின்றது. சமய உலகில் தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரும்பான் மையான சிறந்த கருத்துக்களுக்கெல்லாம் சைவ சமயமே நேரிதின் உரிமைத் தொடர் புடையதாகும். தமிழ் மக்களின் சமயமாகிய இதனை நோக்க அடுத்துள்ள ஏனைய பிற எல்லாம் ஒப்பியல் முறையில் அயலவருக்கு உரியனவும் அண்மையில் தோன்றியனவு மேயாகும். சைவ ஆராய்ச்சித் துறையில் கொள்கை – வாழ்க்கை என்பவற்றின் வெளிப் பாட்டு முறையிலும் மிகனச் சிறந்ததொன்றாக தென்னிந்தியா பெற்றிருப்பது சைவ சித்தாந்தமேயாகும்.

(ரெவடண்ட கெனடி)

பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (தளை) எனும் மூன்று பொருள்கள் என்பது சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். மூன்று பொருள்களும் என்றும் உள்ளன வேனும் கடள் ஒளி வண்ணராய், அறிவுருவாய், பிற உதவியின்றித் தாமே அறிபவராய், பேரின்பவுருவாய், அறிவித்தால் அறியும் உயிர்களிடத்து கருணை கொண்டு படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்து தாமும் தம் சக்தியும் என இரு திறப்பட்டு, மலரும் மணமும் போல இயைந்து நிற்பவராய் விளங்குவர்.

உயிர்கள் பலவாகவுள்ளன. அவை தாமே அறியும் தகுதியிலாதனவாய் சிற்றறிவு உடையனவாய், இயல்பாகவே பாசத்தால் கட்டுண்டனவாய், சூரிய வெளிச்சம் கொண்டு பொருள்களைக் காணும் கண்களைப் போல் இறை ஒளிஉணர்த்தஉணரும்இயல்புடையனவாய் சார்ந்த தன் வண்ணமாகிற படிகம் போன்று இறைவனைச் சார்ந்து அறிவையும் பேரின் பத்தையும் பெறத் தக்கனவாய், பாசத்தைச் சார்ந்து அறியாமையையும்பெருந்துன்பத்தையும் அடையும் இயல்பை உடையனவாகும்.

பாசம், ஆணவம், மாயை – கன்மம் என மூவகைப்படும். இவற்றை மும்மலங்கள் என்பர். அவற்றுள் ஆணவம், தான் ஒன்றேயாய் அனேக சக்தியுடையதால் இருப்பது தன்னையும் காட்டாமல் பிற பொருளையும் காட்டால் மறைந்து நிற்பது மோகம், மதம், அராகம், கசலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் செயல்களையும்உயிர்களிடத்தே விளைவிப்பது.

மாயை என்பது உலகம் தன்னிடம் ஒடுங்கு வதற்கும் தோன்றுவதற்கும் காரணமாயிருப்பது. இம் மாறை இறைவனருளால் உலம் தோன்றுவதற்கு முதற் காரணமாய் நின்று ஆணவத்தால் கட்டுண்டு இயங்காமலிருக்கும் உயிர்களை இயக்கத் துணை செய்து அவற்றை உயர்த்துவது. மாயையின் காரியமே தனு (உடம்பு), கரணம், புவனம், போகம் எல்லாம் தனு கரண புவன போகங்களாகிய முப்பத்தாறு தத்துவங்களின் துணை கொண்டே உயிர்கள் சிற்றறிவு விளக்கம் பெற்றன. அதனால் மாயையினை "விளக்கு" என அருளிச் சென்றார் நம் மெய்கண்ட தேவர்.

கன்மம் என்பது உயிர்கள் ஆவண மலத் தொடர்பால் செய்யும் வினைகளின் தொகுப் பாகும். இது நல்வினை, தீவினை வடிவாய் இன்ப துன்பங்கட்கும், பிறப்பு இறப்புகட்கும் காரணமாயிருப்பது. அது மூவகைப்படும். அவையாவன உயிர்கள் முற்பிறவியில் நல்வினை, தீவினை வாயிலாகத் தேடிவைத்தது சஞ்சித வினையாகும். அதனை இப்பிறவியில் அனுபவித்தது பிராரப்த வினையாகும். அனுப விக்கும் போதே உண்டாக்கிக் கொள்வது ஆகாமிய வினையாம் என்க.

**"உன்னை அறி வொன்றான்! என்னறிவில் ஆனந்தம்**
**தன்னைச் சிவமென்றான்! சந்தமும் – என்னை உன்னைப்**
**பாரா மறைத்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்**
**ஆராய்ந் தவத் முத்தாரம்"**

ஒவ்வொரு சமயமும் குறிப்பிட்ட காலங் களில் விரதம் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. "நல்லவை செய்வேன் அல்லவை தவிர்ப்பேன்" என்று சங்கற்பம் செய்து கொண்டு அவற்றைக் காப்பதே விரதம் ஆகும். கூடியவரை உணவைக் குறைத்து கடவுட் சிந்தனையுடன் அருள் நூல்களைப் படிப்பதும் நற்செயல்களில் ஈடுபடுவதும் விரதத்தின் முக்கிய அம்சமாகும். விரதத்தை உபவாசமென்றும் குறிப்பிடுவர். உப – சமீபத்தில் வாசம் – வசித்தல், அதாவது இறைவனுக்குச் சமீபத்தில் வசித்தல் என்பதே இதன் பொருள். உணவைக் குறைத்துத் தூய வாழ்க்கையை மேற்கொண்டால் இறைவனுக்கு சமீபத்தில் வசிக்கலாம் என்பது அனுபவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற்குத் தெளிவாகப் புரியக்கூடும். இவ் விரதங்களால் மக்கள் அடையும் பலன் அதிகம் ஆகும். முதலில் ஒருவனுக்கு ஆரோக்கிய வாழ்வு கிடைக்கிறது. நோய் துன்பம் இன்றி வாழ முடிகிறது. நீண்ட ஆயுள் பெற முடிகிறது. அறிவில் தெளிவும் நுட்பமும் உண்டாகின்றன. உணவைக் குறைப்பதால் ஆயுள் அதிகரிக்கும் என்பதை திருவள்ளுவர் "அற்றால் அளவறிந் துண்க அஃதும்பு, வெற்றான் நெடி துய்க்குமாறு" என்ற குறளால் அறியத்தருகிறார். ஆத்மா கடவுள் உணர்வுடன் நல்ல செயல்களில் ஈடுபடுவதால் அறிவுணர்வு தலைப்பட்டு, வம்பு வழக்குச் செலவுகள் குறையும். உணவுப் பொருட் செலவு மருத்துவச் செலவு, பாதுகாப்புச் செலவு, சுகாதாரச் செலவு முதலியனவும் குறையும். எனவே பொருளாதாரப் பற்றாக் குறையும் நம்மை விட்டு அகலும். ஆட்சியாளர் களும் நல்லுணர்வு பெற்று அறவாழ்வு நடத்தும் மக்களைச் சிரமமின்றி எளிமையாக ஆட்சி புரியலாம். ஒவ்வொருவரும் துன்பம் இன்றி இன்பமாக வாழலாம். இதனால் தனிமனித னுக்கும் சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் நன்மை ஏற்படுத்துகிறது. எனவே சமய வாழ்வை ஒவ்வொருவரும் மேற்கொண்டு செயற்படுத்தினால் உலக மக்கள் இம்மை மறுமை நலன்களைத் தவறாது பெறுவதோடு பேரின்பத்தையும் பெறுவர்.

ஐஸ்டின் போன்ற விஞ்ஞானிகளும் ஜி.யு.பேப்பைப் போன்ற கிறிஸ்தவர் பாதிரி யார்களும், ஜான் மார்ஷல் போன்ற மேலை நாட்டுச் சரிதித்திரப் பேராசிரியர்களும் சைவ சிந்தாந்தத்தின் உயரிய தத்துவக் கொள்கை களை மிகப் பெரிதும் பாராட்டியுள்ளனர். கொள்கை அளவோடு நில்லாமல் அனுபவத்திலும் நலம் பயப்பதாக உள்ளதை அறிந்து அறிஞர் பலரும் ஒப்புக்கின்றனர். இத்தகைய சமயம் வளர்ந்தும், தளர்ந்தும் வந்திருப்பதை வரலாறுணர்ந்தோர் நன்கறிவர். சைவம் பரவுவதால் அதற்கு ஒன்றும் பயனில்லை. ஆனால் அதனை மேற்கொள்ளும் மக்கள் அதிகமான பலனை அடைவார்கள். இவ்வரிய தத்துவ வளம் நிறைந்த சவைம் இக்காலத்தில் அதிகளவில் பரவமுடியாமைக்கு பல காரணங் கள் உண்டு. மிகவும் நுணுக்கமான கருத்தினை பாமரரும் புரிந்துகொள்ளும்படி எளிமையான சொற்களைப் பயன்படுத்தி விளக்க வேண்டும். சைவக் கோட்பாடுகளை, சைவ சித்தாந்தக் கருத்துக்களை கற்றறிந்தவர்கள் அந்நெறியைச் சரியாகப் பயன்படுத்தி சைவ வாழ்வு வாழாமையும் ஒரு காரணமாகும். சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பின்றி வாழ்தல் சைவ வாழ்வாகாது என்பதை உணருதல் வேண்டும். ஆலயங்களில் உண்மைச் சைவம் வளர்க்கப் படுதல் காலத்தின் அவசியத் தேவையாகும். இன்று நாம் அரக்க சிந்தனையுடன் வாழத் தலைப்பட்டு வருகிறோம்.

இளைஞர்களுக்கு சமயப் பெரியோர்களின் வரலாறுகளையும் சைவ சாத்திரத் தோத்திரக் கருத்துக்களையும் கற்பிக்க வேண்டும். அறநெறிப்பாடசாலைகள் மூலம் இப்பணிகளை ஆலய நிர்வாகம், சனசமூக நிலையங்கள், சபைகள், மன்றங்கள் செய்ய முடியும். நாள்தோறும் சைவக் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும். பாடசாலைக் கல்வியில் சமயம், பரீட்சைக்கு மட்டும் என்ற நிலையிலிருந்து மாறி வாழ்க்கைக்கு சமயம் என்ற நிலையில் பாடத்திட்டம் கற்பிக்கப்படுதல் அவசியமாகும்.

சைவராய் உள்ளவர்கள் சமய விசேட தீட்சை பெற்று இயன்றளவு அநுட்டானம், பூசை முதலியன செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் பிள்ளைகளுக்கு விபூதியின் மகத்துவத்தை உணர்த்துதல் வேண்டும். இளம் வயதில் சிவநெறியில் ஈடுபடச் செய்வதன் மூலம் நம் பிள்ளைகளை ஒழுக்கச் சீலர்களாக, சமுதாயத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிப்பவர்களாக வாழச் செய்ய முடியும். இது விடயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள், சமயிகள் கூடின கவனம் மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை மறந்து விடலாகாது என வினையமாக இக்கட்டுரை மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அனுட்டானம், பூசை முதலியவற்றை ஏதோ காரணங் களினால் செய்ய முடியாதவர்கள் திருமுறைப் பாராயணத்தைத் தவறாது மேற்கொண்டு முழுப்பயனை அடைய முடியும். அனைவரும் குறைந்தது வாரம் ஒரு முறையேனும் தவறாது திருக்கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும். வாரம் வழிபாடு, கூட்டு வழிபாடு என்பன ஆலயங்களில் கிரமமாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட வேண்டும். குருபக்திதான் நம்மையும் நாம் மேற்கொண்டு ஒழுகும் சமயத்தையும் வளர்ப்பது. நம் சமயாசாரியார்கள் அவர் களுக்கு முன்னிருந்த நாயன்மார்களைக் குருவாகப் போற்றி வழிபட்டார்கள். திருஞான சம்பந்தர் திருக்காளத்தி மலைக்குச் சென்ற போது கண்ணப்ப நாயனாரின்திருவுருவத்தைக் கண்டார். கண்டவுடனேயே கும்பிட்ட பயன் காண்பார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்து வணங்கி வழிபட்டார். திரு வாலங்காட்டை அடைந்த போது காரைக்கால் அம்மையார் வதியும் பதி என்பதை அறிந்து அவரிடத்திலுள்ள பக்தியால் அத்தலத்தை மிதிக்க அஞ்சினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள், அப்பர் சுவாமிகளுக்கு சூலை நோய் நீங்கிய தலமாகிய திருவதிகையை மிதிக்க அஞ்சிப் புறத்தே சித்தவட மடத்தில் தங்கினார். அதனால் சிவஞான தீட்சையாகிய திருவடி தீட்சையும் பெற்றார். அதேபோல் சீர்காழிப் பதியை நெருங்கிய உடன் திருஞானசம்பந்தர் தோன்றி அருளியதும் அவருக்கு அம்மையார் ஞானப்பால் அருளியதுமான பெருமையை எண்ணி அத்தலத்தை மிதிக்க அஞ்சி வலமாக வந்தார். காழிநாதரும் காதில் வெண்குழை யனாகக் காட்சி நல்கினார் . இது போன்ற பல நிகழ்ச்சிகளால் நாம் நமது சமய குரவர்களையும் சந்தான குரவர்களையும் போற்றிப் பரவ வேண்டும். பாடசாலைகளில் குருவணக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். நமது சமய வழி காட்டிகளின் குருபூசைத் தினங்களைக் கொண்டாட வேண்டும்.

சமயத்தின் அவசியமும் சைவத்தின் சிறப்பும் வேதத்தில் சைவத்திறம் விளங்குவதும் புதைபொருள் ஆராய்ச்சியால் சைவத்தின் தொன்மை துலங்குவதும், சங்க இலக்கியங் களில் சிவநெறிப் பழமை சிறப்பதும், இயற்கை அமைப்பில் சிவபெருமான் எழிலோடு காட்சி அளிப்பதும், உலகியல் வழக்கிலும் சைவம் உயர்ந்து வழங்குவதும், பிற நாட்டவரும், பிற மதத்தவருமான பாதிரிமார்கள் பைந்தமிழ்ச் சைவத்தைப் பாராட்டியுள்ளதும் சைவசித்தாந் தத்தின் அடிப்படைக் கொள்கை முப்பொருள் உண்மை என்பதும் சமய விரதங்களால் வரும் நன்மைகளும் சமயாசாரியார்களையும் போற்றி வழிபடுவதால் தான் சைவம் வளரும் என்பதுவும் தெரிந்தோம். இப் பணிக்கு அசைவ அன்பர்கள் யாவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே காலத்தின் இன்றைய அவசியத் தேவையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரும் பிள்ளைகளும்

**தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து**
**மன் உயிர்க்கு எல்லாம் இனிது - குறள் 68**

தம்மை விடத் தம் மக்கள் கல்வி அறிவு உடையவராகத் திகழ்வது இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் இன்பம் பயப்பதாகும். பெறுகின்ற பேறுகள் பல : அவற்றுள் சிறந்த பேறு அறிவு நிரம்பிய மக்களைப் பெறுவதுவே ஆகும். தம்மைக் காட்டிலும் தமது மக்கள் அறிவுடையவராக இருந்தால் அது கழி பேருவகை விளைவிக்கின்றது.

தாய், தந்தையர் நல்ல ;நோன்புகள் நோற்று, இறைவழிபாடு செய்து நன் மக்களைப் பெறுதல் வேண்டும்.

புகைப்படம் பிடிக்கின்றவர்கள் தம்மை நன்கு அழகுசெய்துகொண்டு தானே படம்பிடித்துக் கொள்கின்றர்கள். உயிரில்லாத படத்திற்கு அப்படி என்றால் மக்கள் உயிருள்ள படங்கள் அல்லவா? ஆகவே மக்களைப் பெறுகின்றவர்கள் தாம் மனமொழிமெய்களினால் தூயவராக நின்றால் தான் நன் மக்கள் தோன்றுவர். ஒரு பண்புடைய மகன் பிறந்தால், பிறந்த நாடு, நகரம், அந்தக் குலம், குடும்பம் அனைத்தும் தழைக்கின்றன.

மக்களைப் பெற்றோர் மிகவும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியது ஒன்றுள்ளது. பயிர் வளர்க்கின்றவர்கள் நீரும் உரமும் இடுவதுபோல் மக்களை வளர்க்கின்றவர்கள் அறிவுரைகளை அவ்வவ்போது இனிமையாக மக்களுக்குப் புகட்டவேண்டும். தாய் தந்தையர் முதலில் அறநெறியில் நிற்க வேண்டும்.

காரில் பயணஞ்செய்யும் முதலாளிகள் கார் ஓட்டுனருக்கு காது உண்டு என்று எண்ணாமல் மறைமுகமாகவுள்ள சில குடும்பக் கதைகளைப் பேசுவார்கள். அதுபோல் தம் வீட்டில் வளரும் குழந்தைகளுக்கும் காதும் அறிவும் உண்டு என்ற எண்ணம் வேண்டும். அக் குழந்தைகள் பெரியவர்களுடைய நடையுடை களைக் கூர்மையாகக் கவனிக்கின்றார்கள் என்பதை மறவாமல் சிந்திக்க வேண்டும்.

ஒரு தந்தை தம் இளம் மைந்தனைப் பார்த்து "கண்ணா! கந்தசாமி வந்து அப்பா எங்கே என்று கேட்டால் இல்லை என்று கூறு" என்று கூறுகின்றார். தம் மகனுக்குத் தந்தையே பொய் சொல்லக் கற்றுக் கொடுக்கின்றார். தந்தை கற்றுக்கொடுத்த பொய்யை மைந்தன் சில சமயம் தந்தையிடமே கூறத்தொடங்கி விடுகின்றான். "ஏன்டா பொய்சொல்லலாமா" என்று தந்தை அவனைப் பின்னர் கண்டிக்கின்றார். இது பிழை.

ஒரு தாய் தன் கணவனிடம் எதிர்த்து மரியாதைக் குறைவாகப் பேசுவாளாயின், அவளுடைய மகள் இதனைப் பிடித்துக் கொண்டு தன் கணவனிடம் தாமும் அவமரியாதை யாகப் பேசுவாள். அதனால் தான் "தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை" என்ற பழமொழி ஏற்பட்டது.

ஆதலால், மக்களை வளர்க்கும் தாய், தந்தையர் மக்கள் பொருட்டாவது மிகமிக நேர்மையாகவும், சீலமாகவும் நடந்துகொள்ள வேண்டும். நல்ல சூழ்நிலையில் வளர்ந்த பிள்ளைகள் தங்கள் ஆயுள்வரை ஒழுக்கமாக இருப்பார்கள்.

ஒரு சந்நியாசி இரு கிளிகளை வைத்தி ருந்தார். அவர் பறவை போல் சஞ்சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிபவர், ஆதலால் ஒரு கிளியை உத்தமமான ஒரு வேளாளனிடம் கொடுத்தார். மற்றொரு கிளியை ஒரு புலால் கடைக்காரனிடம் கொடுத்தார். சில நாட்களுக்குப் பின் அத் துறவியார் வேளாளனின் வீட்டிற்குச் சென்றர். அங்கு கூண்டில் வளர்ந்த கிளி "ஐயா! வாருங்கள். இருங்கள். பால் வேண்டுமா? உங்கள் வரவு நல்வரவு. நீங்கள் வருவதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ" என்று கூறியது. மறுநாள் இந்த புலால் காரனிடம் போனார். அங்கு கூண்டிலிருந்த கிளி "அடி, வெட்டு, பிடி, போடா, மடையா" என்று கூறியது.

சந்நியாசி இதனைக் கேட்டார். இரு கிளிகளும் ஒருதாய் வயிற்றில் பிறந்தவையே! ஆனால், விருந்தினரை உபசரிக்கின்ற உத்தமன் வீட்டுக்கிளி இனிய உரைகள் கூறிற்று. புலால் கடைக்காரனிடம் வளர்ந்த கிளி கர்ணகடூரமாக கொடுமொழிகளைக் கூறியது. வளர்க்கின்றவர்களின் குணமும், குற்றமும், கிளிகளிடம் எதிரொலியாக ஒலிக்கின்றன என்று கருதினார்.

ஆதலால் மக்களை எந்தமுறையில் நாம் பழக்குகின்றோமோ அதற்கு ஏற்றவாறுதான் மக்களின் குணம் அமைகின்றது.

சில தாய்மார் தம் அருமைக் குழந்தை களைப் பார்த்து, ராஜா! மாமா முகம் எப்படி இருக்கின்றது? மாமாவை எந்தக்காலால் உதைப்பது? என்றெல்லாம் கேட்கும்போது அக்குழந்தை முகத்தைக் கோணலாக வைத்தும் கால் நீட்டியும் காட்டினால் மகிழ்ச்சி யடைகின்றாள். இவ்வண்ணம் தம் மக்களை இளமையில் கோணலான பாதையில் வளர்ப்பது தவறாகும்.

"கண்ணா அண்ணாவைக் கும்பிடு வேலும் மயிலும் என்று சொல்லு. சுவாமி கும்பிடுவது எப்படி?" என்று கூறி நற்குணசீலராக வளர்க்க வேண்டும். சமயம் வந்தபோதெல்லாம் நீதி நெறி நிறைந்த சிறு கதைகளைச் சொல்லி அந்த இளம் உள்ளத்தில் நன்னெறி விதைகளைத் தூவவேண்டும். மக்கள்தான் எதிர்காலத்து அரும்பெரும் செல்வங்கள்.

அண்மையில் ஆரம்பப் பாடசாலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று மிகவும் வேதனை தந்தது. தரம் மூன்றில் கல்விபயிலும் மாணவன் ஒருவன் தனது வகுப்பில் படிக்கும் மாணவியை (சிறுமியை) தகாத வார்த்தைகளினால் திட்டித் தலைமயிரைப் பிடித்து அடித்திருக்கிறான். வகுப்பாசிரியை இருவரையும் பிடித்து நடந்த நிகழ்வைக் கூறி அதிபரிடம் ஒப்படைத் திருக்கிறார். குறித்த மாணவன் சரளமாக தகாத வார்த்தைகள் பேசுவான் என்பது தெரியவந்துள்ளது. அதிபர், மாணவனை அன்பாக நடாத்தி நீ பேசும் இந்த வார்த்தை களை உனக்குச் சொல்லித்தந்தது யார்? என்று கேட்டார். அந்தச் சிறுவன் தனது அப்பா, அம்மாவை தலைமயிரைப்பிடித்து அடிக்கும் கதையைக் கூறியிருக்கிறான். "சிறுவர் மனதில் நஞ்சை விதைக்கும் பெற்றோர் திருந்தியாக வேண்டும்." அதிபர் அந்தப் பெற்றோரை அழைத்துப் பேசியிருக்கிறார். அந்தத் தந்தை "சின்னவயதிலேயே இப்படியா செய்தான் என்று பிள்ளையை அடிக்க கை ஓங்கி யிருக்கிறார். பண்பான பெற்றோர்களாக பிள்ளைகளை நன்னெறியில் பொறுப்புடன் வளர்த்து வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்ல மக்களை உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலச் சிற்றாடை

ஒரு சமயம் தமிழ் மூதாட்டியாம் ஒளவையார் நடந்து சென்றுகொண்டிருந்தார். மாலை மயங்கி இருள் சூழ்ந்துகொண்டிருந்த நேரம் மழையும் பெய்யத் தொடங்கியது. மழையில் நனைந்தவராக குளிரால் நடுங்கிய படியே! ஒளவையார் சென்று கொண்டிருந்தார்.


அவர் எதிரிலே ஒரு சிறு குடிசை தோன்றவே அவர் கால்கள் தாமே அதனை நோக்கிச் சென்றன. அந்தக் குடிசையில் இருந்தவர்கள், தம் குடிசையை நோக்கி வருகின்ற மூதாட்டியைக் கண்டனர். அவரை ஏற்று அவருக்கு உதவ ஆவலுடன் எதிர் பார்த்து நின்றனர்.

ஒளவையார் குடிசைக்குள் நுழைந்ததும் அந்தப் பெண்கள், தம்முடைய நீலச் சிற்றாடை ஒன்றை அவருக்கு அளித்து, அவருடைய நனைந்த உடைகளை மாற்றச் செய்தனர். அந்த இரு பெண்களின் அன்பான உபசரிப்பு ஒளவையாரின் உள்ளத்திலே பலவித நினைவு களை எழச் செய்தன.

ஒளவையார் பாரிவள்ளலை காணச் சென்றிருந்தார். பாரியின் அளவற்ற தமிழன்பு அவரை ஆட்கொள்ள அங்கே பலநாட்கள் தங்கிவிட்டார். ஒருநாள் பாரியிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார். பாரிக்கு ஒளவையாரைப் பிரிய மனமில்லை. மேலும் சில நாட்கள் தங்கவைக்க எண்ணினான். தானே குதிரையில் மாறுவேடத்தில் சென்று ஒளவையாரிடம் இருந்த கைப்பையை திருடிக்கொண்டு வந்தான். "பாரியின் நாட்டில் திருடனா!" என்று வெதும்பி ஒளவையார் அவனிடம் அதைக் கண்டிக்க நினைத்து அவனிடத்தில் மீண்டும் வந்தார். பாரி, அவரிடம் தன் செயலைக் கூறி பொறுத்தருள வேண்டினான். அவனுடைய அன்பின் செயல் அவரை ஆட்கொண்டது. அந்த நிகழ்ச்சியை நினைத்துக்கொண்டார். அந்த அன்பின் சாயல் இந்தப் பெண்களின் செயலிலும் கண்டு உவந்தார்.

அன்பின் வயப்பட்டு உரிமையுடன் செய்யப்படும் செயல்களுக்கு இணையான செயல் எதுவுமில்லை. ஏழ்மை நிலையிலும் அன்பினால் செய்யப்படும் காரியங்களை நம்முடைய இலக்கியங்கள் அதிகளவு கூறியிருப்பது அறிவோமாக!

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் நீந்த களைக்கொட்டும் - சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட வேள்வி

**இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தார் பொருட்டு - குறள் 81**

விருந்து என்றால் புதுமை என்று பொருள். புதியவராக தம் வீடு தேடி வந்தவர்களுக்கு விருந்து என்று பேர். அவ்விருந்தினர் இரு வகையினராம். முன் அறிமுகத்துடன் வந்தவர், முன் அறிமுகமின்றி வந்தவர். இல்வாழ்வான் மனைவி மக்களைக் காப்பாற்றி வாழ்வது எதன் பொருட்டு எனில் தனது வீடு தேடி வருகின்ற விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவி செய்வதற்காகும்.

விருந்தினர்கள் வந்து தங்குவதற்கென்றே நம் முன்னோர்கள் வீடு கட்டுகின்றபோது திண்ணையென்று ஒரு பக்கத்தை ஒதுக்கி வைத்தார்கள். மழைக்கு ஒதுங்கவும், ஏழைகள் படுத்துறங்கவும், விருந்தினர் இருந்து இளைப்பாறவும் திண்ணை உபயோகமாகும்.

விருந்தினர் என்றால் யார்? மாமனோ, மைத்துனனோ வேறு உறவினரில் ஒருவரோ வந்தால் விருந்து வந்தது என்று கூறுகின்றனர். உறவினரும் சினேகிதரும் விருந்தினரல்லர். புதியவராக வந்தவரே விருந்தினராம். அங்ஙனம் வந்த விருந்தினரைப் புறத்தில் வைத்துவிட்டு இறவாத தன்மையைத் தரக் கூடிய அமிர்தமாயினும் உண்ணக்கூடாது என்பது நம் பண்பாடாகும்.

நாள்தோறும் தன்னை நோக்கிவந்த விருந்தினரை உணவு கொடுத்து உபசரித்துப் பாதுகாப்பவனுடைய இல்வாழ்க்கையானது வறுமையினால் துன்புற்று வருந்தாது விருந்தினரைக் கண்டவுடன் இனிய முகத்துடன் நல்வரவு கூறி அவர்களை வரவேற்க வேண்டியது இல்லாளின் கடமையாகும். அதைவிடுத்து வந்தவரிடம் சாப்பிட்டா வந்தீங்கள் என்பது தமிழர் பண்பாடு அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

விருந்தினரை உணவருந்தச்செய்து பின்னர் தாம் உண்ணுவது என்பது மிக உயர்ந்த பண்பு ஆகும். இத்தகையவர்களின் வீடு மகாலட்சுமி குடியிருக்கும் அரண்மனை யாகவே இருக்கும்.

இல்வாழ்வான் அவசியம் செய்யத் தக்கவை ஐம்பெரும் வேள்விகளாகும்.

பிரம வேள்ளி :- வேதமோதல்
பிதிர் வேள்வி :- பிதிர்க் கடனாற்றல்
வேத வேள்வி :- தேவர்களைக் குறித்தவை
பூத வேள்வி :- காக்கைக்கிடுதல் முதலியன.
மானுட வேள்வி :- விருந்தோம்பல்

விருந்திடுவோம், சிறப்படைவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றே செய்க அதையும் இன்றே செய்க!

ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். தான தர்மங்களைச் செய்துபழகாத அவனுக்கு ஒருநாள் ஒருநாள் தானதர்மங்களைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

இந்த எண்ணத்தில் அவன் தினமும் வறியவர்களுக்கு ஒரு பொடிபொன் (பொன்துகள் ஒன்று) கொடுப்பது என்று முடிவு செய்தான். அதன் பொருட்டு அவன் பொன் கட்டியை பொடிசெய்து வைத்துக் கொண்டான்.

தன் கருத்தை அவன் மனைவியிடம் சொன்னபோது அவள் அன்பரே தாங்கள் இவ்விதம் தினமும் சிறிது சிறிதாகக் கொடுப் பதற்குப் பதிலாக ஒன்றுசேர்த்து முழுவது மாகத் தானம் செய்து விடுங்கள் என்று சொன்னாள்.

பணக்காரன் தன் மனைவியின் சொல்லை மந்திரச் சொல்லாக ஏற்று அப்படியே செய்ய முடிவு செய்தான். அன்று முதல் அவன் தான் கொடுக்கநினைத்த பொன்துகள்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கத் தொடங்கினான். தான் இறப்பதற்கு முன்பு தான் தானம் செய்ய நினைத்த பொன்துகள்களை ஒன்றாக ஒரு பந்து போலத் திரட்டித்தானம் செய்துவிட வேண்டும் என்பது அவனது எண்ணமாக இருந்தது.

ஆண்டுகள் பல கழிந்தன. அவன் தான் தானம் செய்ய நினைத்த பொன்துகள்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு பொன் உருண்டை யாக்கித் தான் படுத்து உறங்கும் தலையணை க்குள் வைத்திருந்தான்.

இந்த நிலையில் ஒருநாள் அவன் நோய்வாய்ப்பட்டான். நோய் முற்றியது. உடல் பலவீனமடைந்தது. மரணப்படுக்கையிலிருந்த அவன் கை, கால்களை அசைக்கவும் இயலாத நிலைக்கு வந்துவிடுகிறான். அவன் நாக்கு பேச்சுவராமல் பேசும் சக்தியை இழந்துவிட்டது. விக்கல் எடுக்கிறது. அந்த நிலையில் மரண காலம் தனக்கு நெருங்குவதை உணர்ந்த அவன் முன்பு நான் நன்றாக இருந்த காலத்தில் தானம் செய்யாமல் போனேனே! சரி போன தெல்லாம் போகட்டும். இப்போதாவது தானம் செய்துவிடுகிறேன் என்று நினைக்கிறான்.

ஆனால் நினைத்ததைச் சொல்லவோ அவனுக்கு வாய் வரவில்லை. தலையணைக்கு உள்ளே இருந்த பொன் உருண்டையை வெளியில் எடுக்கவோ அவனுக்கு கையும் வரவில்லை.

ஆதலால் அவன் தன் அருகிலிருந்த மனைவியைப் பார்த்து மிகவும் சிரமப்பட்டு சைகை மூலம் தாம் முன்பே கலந்து பேசியபடி தினமும் தானம் செய்ய நினைத்த பொன்னை பந்துபோல உருட்டி என் தலையணைக்குள் வைத்திருக்கிறேன்! இனியும் நீ தாமதிக்காமல் தலையணைக்குள் இருக்கும் பொன் உருண் டையை எடுத்து தானம் செய்துவிடு என்றான்.

பணக்காரின் மனைவி கணவன் கையை உருட்டி உருட்டி சைகை மூலம் தெரிவித்த கருத்தை புரிந்துகொண்டாள். ஆனால் அவள் "கணவர் விரைவில் இறந்துபோக இருக்கிறார். என் பிள்ளைகள் பெரியவர்களான பிறகு என்னை வைத்துக் காப்பாற்றுவார்கள் என்று என்ன நிச்சயம் இருக்கிறது? ஆதலால் கணவர் சொல்வதுபோல் அந்த பொற் பந்தை எடுத்து தானம் செய்துவிடாமல் நான் இப்போது சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேண்டும். நான் உயிருடன் இருக்கிறவரையில் அந்தப் பொன் உருண்டையை நானே வைத்திருக்கப் போகிறேன். அதுதான் எனது எதிர்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்குப் பாதுகாப்பானது" என்று நினைத்தாள்.

அவள் அருகில் அவளது இரண்டு பையன்கள் நின்றிருந்தார்கள்.சிறிய பையன் தாயிடம் அம்மா! அப்பா பந்துபோல் கையை உருட்டி உருட்டிக் காட்டி ஏதோ சொல்ல முயற்சிக்கிறாரே அவர் என்ன சொல்கிறார் என்று வினவினான்.

மகனின் கேள்விக்கு அவள் உண்மையைச் சொல்ல விரும்பவில்லை. மகனிடம் அவள் மகனே! நீங்கள் இருவரும் பிறப்பதற்கு முன்பு நானும் உன் தந்தையும் விளாம்பழத்தை விரும்பிச் சாப்பிடுவது வழக்கம். அவர் விளாம்பழம் வாங்கிவருவார். நான் அதில் சர்க்கரை கலந்து பிசைந்து அவருக்கு உண்ணக் கொடுப்பேன். அந்தப் பழைய நினைவை இப்போது நினைத்துக்கொண்டு விளாம்பழம் சாப்பிட விரும்புகிறார் என்று பொய் சொன்னாள்.


பிள்ளைகள் இருவரும் அப்பாவின் கடைசி ஆசையை நிறைவேற்ற முடிவு செய்து விளாம்பழம் கொண்டுவரப் புறப்பட்டனர். அது விளாம்பழத்திற்குரிய காலம் அல்ல. பையன்கள் மிகவும் சிரமப்பட்டு விளாம்பழம் இருக்கும் ஒரு மரத்தைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் அவர்களுக்கோ மரம் ஏறத் தெரியாது. பழத்தை எப்படிப் பறிப்பது என்று கவலை கொண்டனர். அப்போது மரத்திலிருந்த குரங்கு பையன்கள் முகம் வாடியிருப்பதைப் பார்த்து தானும் அவர்களைப் போலவே முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு "அழகு" காட்டியது.

அதைப் பார்த்த சின்னவன் அண்ணா நாம் வருந்துவதைப் பார்த்து இந்தக் குரங்கும் வருந்துவது போல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கிறது. தாம் கல் எடுத்து இந்தக் குரங்கை அடிப்போம். அதற்குப் பதிலாக விளாம்பழத்தைப் பறித்து தம் மீது போடும் என்றான்.

மனிதர்கள் செய்வதைப் பார்த்து தானும் செய்யும் குரங்கு விளாம்பழத்தை எறிந்தது. விளாம்பழத்தைப் பிள்ளைகள் தாயிடம் கொடுத்தார்கள். தாய் சர்க்கரை கலந்து கணவனுக்கு சாப்பிடக் கொடுத்தாள். விளாம் பழத்தை அதிகமாகச் சாப்பிட்ட அவன் இறந்துபோனான்.

நல்ல காரியங்களை உடனுக்குடனே செய்யவேண்டும். ஏனென்றால் நாளை என்பது நம்முடையதோ யமனுடையதோ நாம் அறியோம். என்றோ செய்யலாம் என்று நினைப்பதை நாளையே செய்யவேண்டும். நாளை செய்யலாம் என்று நினைப்பதை இன்றே செய்ய வேண்டும்.

அன்றறிவாம் என்னாது அறம் செய்க
மற்றது பொன்றுங்கால் பொன்றாத்துணை.
– திருக்குறள் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு சேவை

கோதாவரி நதிக்கரையில் ஓர் ஆச்சிர மத்தில் வேததர்மன் என்ற ஒரு குரு இருந்தார். அவருக்குப் பல சீடர்கள் இருந்தார்கள்.

ஒருநாள் குரு எல்லாச் சீடர்களையும் அழைத்து நான் போன பிறவியில் எத்தனையோ பாவங்களைச் செய்துள்ளேன். என் தவத்தி னால் இந்தப் பாவங்கள் எவ்வளவோ அழிந்துவிட்டன. இருந்தும் இன்னும் சிறிது மீதி இருக்கின்றது. இந்தப் பாவங்களின் பலனை நான் இந்தப் பிறவியில் அனுபவிக்காவிட்டால் இன்னொரு பிறவியில் நான் அனுபவிக்க வேண்டும். ஆகவே காசிக்குச் சென்று இந்தப் பாவ பலனை அனுபவிக்கப்போகிறேன். அப்பொழுது என்னைக் கவனித்துக் கொள்ளவும், பணிவிடை செய்யவும் ஒரு சிஷ்யன் தேவை. யார் தயாராக இருக்கின்றீர்கள் எனக் கேட்டார்.

அப்பொழுது "சாந்தீபகன் என்ற சிஷ்யன் மட்டும் எழுந்து நின்று "குருவே என்ன செய்யவேண்டும் நான் தயார்" என்றான்.

நான் இருபத்தொரு ஆண்டுகள் குருட னாகவும், நொண்டியாகவும், குஷ்டரோகி யாகவும் இருப்பேன். உன்னால் எனக்கு பணிவிடை செய்யமுடியுமா? என்று கேட்டார்.

"குருவே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் உங்களைக் கவனித்துக்கொள்கிறேன். எப்படியாவது உங்கள் பாவங்கள் உங்களை விட்டு விலகினால் போதும்." என்றான்.

குரு காசியில் விசுவேஸ்வரைத் தரிசனம் செய்து குருடராகவும், நொண்டியாகவும், குஷ்டரோகியாகவும் மாறினார். சாந்தீபகம் குருவை நல்ல முறையில் கவனித்துவந்தான். நோயின் கடுமையால் குரு சாந்தீபகனை கடித்துப் பேசிவந்தார். ஆனால் இவனோ எதையும் பொருட்படுத்தாமல் குருசேவை செய்துவந்தான்.

இதைக் கண்டுமகிழ்ந்த காசி விசுவநாதர் சாந்தீபகன் முன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன் என்றார். குருவின் உத்தரவு இல்லாமல் நான் ஒருவரமும் கேட்கமாட்டேன். இதோ நான் குருவைக் கேட்டுவிட்டு வருகிறேன் என்று குருவடம் சென்றான்.

காசி விசுவநாதன் எனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்கிறார். நீங்கள் முன்பு போல தேக ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமென்று கேட்கட்டுமா என்று கேட்டான்.

"அட மடையா! என் உடல் குணமானால் என் பாவம் தொலையாது" என்றார்.

குரு "ஒரு வரமும் தேவையில்லை என்று சொல்கிறார்." என வந்து சொன்னான்.

"நீ குருவிற்குச் செய்யும் தொண்டு எனக்குச் செய்யும் தொண்டாகும். நீ உன் வாழ்வில் உயர்நிலையடைவாய்" என காசி விசுவநாதர் வாழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் பார்வை

பாரதியாரின் பாடல்களை மேலோட்ட மாகக் கற்றாலேயே அவர் சமுதாயத்தின் மீது கொண்டிருந்த அக்கறை தெளிவாகப் புலனாகும். பாரதியார் தம் காலத்து நிலையை **"நெஞ்சு பொறுக்குதில்லையே"** என்ற கவிதையில் படம் பிடித்துக் காட்டினார். அந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டதா? இல்லை. அப்படியே தான் இருக்கின்றது.

தனிமனிதன் சமூகத்தில் ஒருவன்: குடும்பத்திற்கும் ஒருவன்: தனி மனிதன் தன் கடமையைச் சரிவர மேற்கொண்டால் குடும்பம் சிறக்கும். பல குடும்பங்கள் அடங்கிய சமூகம் சீர்படும்: பல சமூகங்கள் அடங்கிய சமுதாயம் சிறந்து திகழும். பாரதி தனி மனிதன் கடமை களாக நான்கினைக் கூறுகின்றார்.

கடமையாவன தன்னைக் காட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல் பிறர் நலம்
வேண்டல்

..........................................

உலகெல்லாம் காக்கும் ஒருவனைப்
போற்றுதல் எனப்படும்
இந் நான் கேயிப் பூமியில்
எவர்க்கும் கடமையெனப்படும்.

**"தன்னைக் கட்டுதல்"** என்பது மனதைக் கட்டுதல், ஐம்பொறிகளை அடக்கிமனதைக் கட்டுதல் என்று ஞானிகள் கூறும் பொருளில் பாரதி குறிப்பிடவில்லை. பாதரசம் விழுந்தால் அங்கும் இங்குமாக உருண்டு ஓடும் இவ்வாறு பல பொருட்களின் மேல் சபலப்பட்டு அலையும் மனதை அடக்கினால் போதும் என்பது பாரதியாரின் கருத்து. மனம் சில சமயம் ஒரு பொருளைப் பற்றிக் கொண்டு ஊசலாடும்: அடுத்ததை நோக்கி அடுத்தடுத்து உலவும்: விட்டுவிடு என்று கூறினால் விடாது போய் அதன்மீது விழும்.புதியனவற்றைக் கண்டால் புலனழிந்து அவற்றின்மீது வெறி கொண்டு விழும்:பிணத்தினை விரும்பும் காக்கை போல, அழுகுதல் சாதல் அஞ்சுதல் முதலிய இழிபொருட்களில் தன்னைப் பறி கொடுக்குத் இன்பத்தை நாடி எண்ணிலாப் பிழை செய்யும் என்றெல்லாம் மனதினைப் பெண்ணாக உருவகித்து மனத்தின் தன்மைகளை எடுத்துக் காட்டி,

**பேயாய் உழலும், சிறுமனமே!**
**பேனாய் என்ன சொல் இன்று முதல்**
**நீயாம் ஒன்றும் நாடாதே**
**நினது தலைவன் யானே காண்.**

என்று மனத்தை நன்னெறிப்படுத்த விழைகிறார் புரட்சிக் கவிஞர்.

பிறர் துயர் தீர்த்தல் என்பது மற்றொரு கடமையாகக் கூறப்படுகிறது. அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டால் எனக்கு இன்பநிலை வந்து விடும் என்று, இன்பநிலை காண வழிகாட்டுகிறார் கவிஞர்.

"மண்ணி லார்க்கும் துயரின்றிச் செய்வேன்
வறுமையென்பதை மண்மிசை மாய்ப்பேன்"

என்று பிறர் துயர் தீர்ப்பதைக் கடமையாக உரைக்கின்றார். பிறர் நலன் பொருட்டே பாரதி இறைவனைப் பல இடங்களில் வேண்டுகிறார். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதனை இறுதிக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதை தெளிவாக எடுத்துரைக் கின்றார். எத்தனையோ விதங்களில் சமுதா யத்தில் பல்வேறு கேடுகளைக் காண்கின்றார் பாரதியார். நாட்டு மக்களிடையே காணப்படும் கேடான நிலைமைகளை எடுத்துக் காட்டு கின்றார்.

பாரதியார் கருத்துப்படி கிருதயுக சமுதாய அமைப்புக்கு அரணாக அமைந்தவை நான் மறைகளும் சாத்திரங்களுமாகும்.ஆனால் இறைவனை இணைத்து இந்த வேதங்களில் பல பொய்மைகள் புகுந்து விட்டதாகக் கருதுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதங்கள் கோத்து வைத்தான் – அந்த**
**வேதங்கள் மனிதர் தம் மொழியிலில்லை**
**வேதங்கள் என்று புவியோர் – சொல்லும்**
**வெறுங் கதைத் திறன்களில் அவ்வேதமில்லை**
**என்று அவற்றைச் சாடுவதை இதில் காண்பார்.**

இத்தகைய போலிச் சாத்திரங்களை நம்பி மக்கள் தம் வாழ்லை பாழடித்து வருவதை இன்றும் காண்கிறோம். விஞ்ஞானம் வளர்ந்து விட்ட இக்காலத்தில் கூட பேய்களிருப் பதாகவும் அவை மரத்தில் குளத்தில் வீட்டின் முகட்டில் நடமாடுவதாகவும் எண்ணி அஞ்சிஅஞ்சி சாவதையும் **"மந்திரவாதி"** என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே இவர்கள் மனக்கிலி பிடித்து ஆடி நிற்பதை என்னென்று சொல்வது? அஞ்சி அஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பொருள் இல்லை. உலகினிலே எனும் பாரதிகூற்றுத்தான் நினைவுக்கு வருகிறது.

தன்னாட்டுப் பற்றும் தன்னரசுப் பற்றும் தன்மொழிப் பற்றும் இருக்க வேண்டிய இடத்தில் அவையெல்லாம் போலி வடிவம் எடுத்துகூத்தாடுகின்றது. இத்தனை துன்பங் களை ஏற்பட்டு விட்ட போதிலும் சாதிவெறி எனும் சாம்ராஜ்ஜியம் மறைந்த பாடில்லை. நமக்குள்ளேயே ஒரு பகுதியினரை தீண்டத் தகாதவர் என்று ஒதுக்கி வைக்கும் மனநிலை மாறாத ஒரு சமுதாயத்துக்கு சுதந்திரம் என்பது ஏன்?

பாரதியார் சாதிக் கொடுமையைத் தகர்தெறியக் குழந்தையை அடிப்படையாகக் பொண்டு தொடங்கினார்.பிஞ்சு மனங்களில் அவர் விதைத்த அறிவுரை விழலுக்கிறைத்த நீராக ஆயிற்று. மூத்தவர்களின் நடத்தைக் கோலங்களை நேருக்கு நேர் காணும் குழந்தைக்கு இந்த அறிவுரை கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய் ஆயிற்று.

**சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!**
**நீதி உயர்ந்த மதி கல்வி – அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்.**

என்ற பாடல் குழந்தையின் உள்ளத்தில் ஆழப்பதியத் தக்க வகையில் தான் உணர்ச்சி யோடு அமைந்துள்ளது. ஆனால் அது நீருக்குள் பாசி போல் வேர் கொள்ளாமல் கிடக்கின்றது. நாடோறும் சாதிப்பிரிவினை நிரந்தரமாகவே இருக்கும் சூழ்நிலைதான் வளர்ந்து கொண்டு வருவதைக் காண்கிறோம். ஆரோக்கியமான சமுதாயம் உருவாவதற்கு இந்தச் சிந்தனை உதவாது.

பாரதியாரின் மேல் மனத்தில் எப்போதும் சமூகத்தில் நிலவும் கெடுகள் தோன்றிக் கொண்டிருந்தன. அவர் உள்மனம் அதற்குரிய கழுவாயைச் சிந்தித்துக் கொண்டிருந்தது.இதன் காரணமாகவே எதைப்பற்றி பாடினாலும் சமுதாயத்தைப் பற்றிய எண்ணம் நிழலிடுவதைக் காணலாம். ரஷ்யப் புரட்சியை "மாகாகாளி பராசக்தியின் கடைக்கண் நோக்கு" என்றே கருதுகின்றார். அதனால் தான் அங்கு "ஆகாவெண் றெழுந்தது பார் யுகப் புரட்சி" என்று சங்கநாதம் செய்கிறார்.

பாரதியாரை நினைக்கும் இந்நாளில் பாரதி கண்ட கனவுகள் நனவாக அனைவரும் எழுந்திடல் வேண்டும். வெற்றுக் கோசங்கள் எதையும் செய்து விடாது இதய சுத்தியுடன் செயற்படிக் கூடியவர்கள் ஒன்றிணைந்து தமிழ்ச் சமுதாயத்திற்குபதிய பாதை காட்டவேண்டும். **"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"** என்பது எக்காலத்திலும் எந்த விடயத்திற்கும் பொருந்தி நிற்கும். தனி மனித நலன்களுக்காக ஒரு சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லலாமா? இளைஞர்களே பாரதியின் சிந்தனையில் இருந்த ஆழமான கருத்துக்களை எண்ணிப் பாருங்கள். செயற்படுங்கள். தமிழர் வாழ்வு சிறக்க வழி பிறக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் அறையில் சைவம்

பண்டைக்காலம் முதல் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையில் சைவம் வளர்ந்ததும் பின் சிறிதளவில் மறையத் துவங்கியதும் வரலாற்று ஆசிரியர்களின் குறிப்பால் அறியப்படுகிறது. இந்தியாவின் மிகப்பழைய நாகரிக நகரங்கள் என்று ஆராய்ச்சியாளரால் கூறப்படும் மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் 600 க்கு மேற்பட்ட சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன. சிந்துவெளியிலும் மற்றும் வடஇந்தியாவில் பற்பல இடங்களிலும் கிடைத்துள்ளன. இவை அனைத்தையும் ஒன்றுபடுத்திய சேர்ஜான் மார்ஷல் என்ற அறிஞர் சைவசமயம் "மார்க்கல் காலம்" அல்லது அதற்கு முற்பட்ட காலம் முதல் இன்றளவும் உள்ள மிகப்பழைமையான சமயம் என்று எடுத்துக் காட்டியுள்ளார். சங்க காலத்திலும் "ஆலமர்செல்வன்" முக்கண்ணன்" என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட சிவபிரானே சிலப்பதிகாரத்திலும் மணி மேகலையிலும் முதலிடம் பெற்றிருக்கிறார். முதற் பல்லவர் காலத்திலும் கோச்செங்கட் சோழன் ஏறத்தாழ எழுபது சிவன் கோவில் களைக் கட்டினான் என்று வரலாறு கூறுகின்றது.

இவ்வாறு சோழர் ஆட்சியிலும், பல்லவர் ஆட்சியிலும் செழித்தோங்கிய சைவத்தினுள் சாதிவேறுபாடு தோன்றி வளர்ந்து வயிரம் பாய்ந்து விட்டது. கி.பி 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மூடக் கொள்கைகளாலும், சாதி வெறியினாலும், சமய வெறியினாலும் சைவம் தன் ஆற்றலை இழந்து எதிரிக்குப் பணிந்தது.

இவ்வித காரணங்களால் சைவ மதத்தை சொல்லிப்பிழைப்பவரும் பலராகி விட்டனர். "அன்பே சிவம்" என்ற கொள்கை புதைக்கப்பட்டு அதன் மீது அறிவுக்குப் பொருத்தமற்ற கதைகள் கட்டப்பட்டன. இக் கேட்டினால் பெரும்பாலான சைவமக்கள் திருநீறு அணிவதோடு அமைந்தனர். கல்விச் செருக்காலும், செல்வச்செருக்காலும் சைவர் பலர் "சைவர்" ஆகி தம் சமயத்தைச் சேர்ந்த பலருடன் பழகுவது இல்லை.

திருநீறணிந்தும் உள்ளத்தில் பல தீய எண்ணங்களை உலவ விடும் வேடதாரிகளை அப்பர் சுவாமிகள் வன்மையாகக் கண்டிக் கின்றார்.

**"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்**
**மறைய நின்றுளன்; மாமணிச்சோதியான்**
**உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே!"**

என்றபடி, சிவநேசர்கள் அன்பினால் காணக்கூடிய அருட்பெருஞ்சோதியை அறிவிலிகள்,

"உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருந்தியேனும்
கள்ளத்தே நிற்றி அம்மா! எங்ஙனம் காணுமாறே?"

என்று பரிதவிக்கிறார்களே! என்ப தற்காக அப்பர் வருந்துகின்றார்.

**"கங்கை ஆடிலென்; காவிரி ஆடிலென்;**
**கொங்கு தண்கும ரித்துறை ஆடிலென்;**
**ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்;**
**எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே"**

கங்கையிலும், காவிரியிலும், கன்னியா குமாரியிலும், தானா ஈஸ்வரன் இருக்கிறான்? கடவுள் இல்லாத இடமில்லை என்ற உண்மையை உணர்ந்து ஒழுகினால் மோசத்திற்கு இடமேது?

"சாத்திரம் பல பேசும் சழக்கர்கான்!
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?"

என்று வினாவுகிறார்.

"கோசம், புல்லும், கையில் கூர்ச்சமும்
தோலும் பூண்டு, துயரம் உற்(று) என்பயன்?
நீல மாமயி லாடு துறையனே!
நூலும் வேண்டுமோ நுன் உணர்ந் தோர்கட்குே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடிக் குலங் கோத்திரங் களையும், சாத்திரங்களையும் கொண்டு பெருமை பேசும் சாதித் திமிரைக் கண்டிக் கிறார்.

சைவ மதத்தை வளர்க்கப் பாடுபட்ட வர்களில் பல பெண்மணிகளுக்கும் இடமுண்டு. அத்தகைய சைவப் பெண்மணிகளில் திலகவதியார், காரைக்கால் அம்மையார், மங்கையற்கரசியார் முக்கியமானவர்கள் எந்தச்செயலைச் செய்து முடிப்பதென்றாலும் பெண்கள் துணையை நாடினால் அஃது எளிதில் மடியும் ஆதலால் இந்த சைவ சமயக் கோட்பாடுகளை நாம் இல்லற வாழ்க்கை யிலேயே கையாள வேண்டும். நமக்கு பிறக்கும் குழந்தைகளுக்குச் சிறந்த சைவப் பெயர்களை இட வேண்டும். பெண்பிள்ளைக்கு **"இலக்குமி"** எனப் பெயர் வைக்கும்போது வீட்டில் உள்ள யாவரும் அப்பெயரை உச்சரிக்கும் போது வீட்டில் தெய்வீக சக்தி தோன்றும். இதை விடுத்து **'ஆஷா'** எனப் பெயர் வைக்கும் போது அவலம் தான் ஏற்படும். பிள்ளைக்கு பெயர் வைக்கும் விடயத்தில் குடும்ப பெண்கள் கவனமாக இருக்க வேண்டும்.

தெருவில் போகும் போது பார்க் கிறவர்களுக்கு **"இது சைவர் வீடு"** என்று தெரியும் படி வீடு அமைக்கப்பட வேண்டும். சைவர்களின் வீடமைப்பு முறை கலாசார வடிவம் மட்டுமல்ல சுகாதாரத்தை அடிப் படையாகக் கொண்டதாகும். இன்றைய நவீன உலகில் ஆடம்பரத்திற்கு ஆளாகிவிட்டோம். வீட்டினுள் மலசலகூடம் அமைத்து மகிழ் கின்றோம். அதுவும் சமையலறைக்கு அருகிலேயே அமைக்கப்படுகிறது. இம்முறை யிலுள்ள குறைபாட்டை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காலையில் வீட்டுவாசலில் மாக்கோலம், திருநீறு. மஞ்சள், குங்குமம் இட்டு விளங்கச் செய்ய வேண்டும். திங்கள், வெள்ளி, கிருத்திகை, திருவாதிரை முதலிய நாட்களில் மாவிலை கட்ட வேண்டும். செம்மண் இருதலும் நலம் மாவிலை தூய்மை செய்யும் பூச்சிகள் சேராது காக்கும்.

வீட்டிற்கு அன்பையும், அறத்தையும், அறிவையும் உணர்த்தும் நல்ல படங்கள் மாட்டப்பட வேண்டும். கீழ்த்தர உணர்வை உண்டாக்கும் சினிமாப் படங்கள் கூடாது.

பூசை அறை இருத்தல் இன்றியமை யாதது. வழிபாட்டிற்கு என்று ஒரு பூசை படமேனும் வேண்டும். இயலாதாயின் சுவரில் படங்களை மாட்டித் திரையிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளையார் பூசை அன்றாடம் செய்தல் வேண்டும். அதற்காக வீட்டில் இரண்டொரு பூச்செடிகளை வளர்க் கலாம். அலங்காரத்திற்காக வளர்க்கப்படும் சில குரோட்டன் தாவரங்கள் நுளம்பு தங்கும் குகையாக உள்ளது. இதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு அதிகமாகும். முன்னோர் வீட்டு வளவினுள் பழவகை மரங்களை நட்டு வளர்த்தார்கள். அவர்களின் எதிர்காலச் சிந்தனையையும், திட்டமிடலும் எண்ணி எண்ணி வியக்கலாம்.

முன்னைய வீடமைப்பு வீட்டை பசுச் சாணத்தால் மெழுகக் கூடிய முறையில் அமைக்கப்ப்டிருந்தது. இன்று பிள்ளையார் பிடிப்பதற்குக் கூட பசுச் சாணம் எடுக்க முடியாத நாகரிக வளர்ச்சிக்கு உட்பட்டு விட்டோம். நவீன வீடுகளில் தொற்று அதிகமாக ஏற்படுவதனால் அதிகளவு தொற்று நீக்கிகளும் வந்து விட்டன. வெளியில் இருந்து வீட்டிற்கு வந்தால் குளிக்கும் பழக்கமும் அவசியமாகும். சைவம் பரிசுத்தமானது. சைவர் வீடுகளும் தூய்மையாகத் துலங்க வேண்டாமா?

சமையல் அறைதான் உண்மையாகவே வளர்க்கின்றது. சமையலறை தான் நாயன்மார் பலருக்கு பெருமையைத் தேடித்தந்தது. இல்லத்தின் வாழ்வரசியாய் இருக்கும் பெண்மணியின் உயிர்நாடியான இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையலறை தான் தன் கணவனையும், தன் மக்களையும், உற்றார் உறவினர்களையும் உணவால் மகிழ்விக்கும் இடம் சமையலறை யன்றோ?

**"உண்டி முதற்கே உணவின் பிண்டம்"**

என்பது நம் முன்னோர் வாக்கு வெளி உலக வாழ்வில் ஈடுபட்டு பசியோடு வரும் கணவனை மனைவி சமையல் அறைக்குத்தான் பரிவோடு அழைத்துச் செல்வாள். இங்ஙனமே பள்ளிக்குச் சென்று திரும்பும் தன் பிள்ளை களையும் அத்தாய் சமையலறைக்குத் தான் அன்போடு அழைத்துச் செல்வாள். தான் மிகுந்த கவனத்தோடு சமைத்த பொருள்களை அன்போடு தன் கணவனுக்கும் பிள்ளை களுக்கும் படைப்பாள். அருமையான சாப்பாடு என கணவன் அன்போடு சொல்லும் போது மனைவியின் முகம் மலர்ச்சியடைகின்றது.

மனைக்கு வந்த விருந்தினரை மகிழ்விக்கவும் சமையலறை உதவுகிறது. மகளிர் ஆட்சி செலுத்துமிடம் முழு இல்லமாக இருப்பினும் அவ்வில்லத்தை வாழ்விப்பது சமையலறையே ஆகும். வீட்டாரும், உறவினரும், நண்பரும் ஆக எல்லோரையுமே பேருண்டி யாலும் சிற்றுண்டியாலும் மகிழ்விக்கும் இடம் சமையலறையே எனலாம்.

இங்ஙனம் எல்லோரையும் இன்புறுத் துதற்கு அடிப்படையாக அமைவது யாது? அன்பேயாகும். ஆந்த அன்ப தான் சிவம் என்று சொல்லப்படும். அந்த அன்பினால் தான் மனைவி பல மணிநேரம் அடுப்பின் நெருப்புக்கு முன்னிருந்து பொறுமையாகச் சமையல் செய்கின்றாள். குழம்பு வைப்பதிலும், ரசம் வைப்பதிலும் இவ்வாறே ஒவ்வொறு கறி வைப்பதிலும் மிகக் கவனத்தோடு இருந்து இனிமையாகச் செய்கின்றாள். அவற்றை கூட்டும்போது உப்பு, காரம் முதலியன பொருந்தியிருக்கின்றனவா என்பதை ஆவலோடு பரிசோதிக்கின்றாள். தான் சமையலில் நற்பெயர் எடுக்க வேண்டுமே என்ற கவலை அவளை ஆட்டிப்படைக்கின்றது. இந்தச் சமையலறை தான் பெண்ணுக்கு அமைந்த சிறந்த அடிப்படையாகும்.

சமையல் தொழில் பெண்களுக்கே சிறப்பாக உரியதாயினும் அறிவுடைய ஆடவரும் அதில் அடிக்கடி பங்குகொள்ள வேண்டும். ஓய்வு நாட்களில் பல குடும்பங்களில் சமையலறையில் கணவனும் மனைவியுமாக இருந்து உணவு தயாரித்தல் நடைபெறுகிறது. இப்படியான நிலைப்பாடு கணவன் மனைவி உறவை அன்பு மயமாக்க உதவிடும். இத்தகைய குடும்பங்கள்எம்மதத்தினராயினும்அவையெல்லாம் சைவக்குடும்பங்களேயாகும். **"எங்கெல்லாம் அன்பிருக்கிறதோ, அங் கெல்லாம் சிவம் இருக்கின்றது."** எனவே அன்பை வசப்படுத்தும் சமையலறை சிவ நெறியை வலுப்படுத்தும் கருவறையாகும்.

சுமையலறை எமக்கு மட்டுமா சொந்தம்! ஏன நவீன பெண்கள் கேட்கின் றார்கள். உங்கள் வினா தவறானது. இயற்கை ஒரு நியதிக்கு உட்பட்டது. இந்த நியதி தவறு மாயின் அனைத்தும் பிழையாக முடிந்துவிடும். இயற்கையை வெற்றி கொள்ள முயலும் சில விஞ்ஞான ஆய்வுகளினால் ஏற்பட்டுவரும் சூழல் சமநிலைப் பாதிப்பை அனைவரும் அறிவோம். பெண்கள் நன்கு கல்வி பயில வேண்டும். பொருளாதாரம் காரணமாக வேலைக்குச் செல்லலாம், இன்னும் பல துறைகளில் இமாலய சாதனை செய்ய வேண்டும். திருமணம் செய்வதும், குழந்தையை பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, அந்தக் குழந்தையை அன்பாக வளர்க்கவும் வேண்டும். குடும்பத்தை பல்கலைக்கழகமாக மாற்றும் பெரும் சக்தி பெண்கள் தான் என்பதை மறந்து விடக் கூடாது. இந்தக் கருத்துக்களையே முன்வைத்து பாரதி **"மாதர் அறங்களை முன்னர் இருந்ததை விட மேன்மை யடையச் செய்திட வேண்டும்"** எனக் குறிப்பிட்டதை நினைத்துப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்து உறுப்பினர் அனைவரும் அன்பாய் இருப்பதற்கு சமையலறையே அடிப்படையாகும். இவ்வாறே உற்றார், உறவினர்களை விருந்தால் மகிழ்விப்பதும் சமையலறையே ஆகும். **"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்"** என்பது போல சமையலறையின் மூலம் அன்புச் செல்வம் சமுதாயத்தில் பரவுகிறது; அதாவது வீட்டில் தொடங்கும் சைவமே நாட்டிலும் காணப்படும். சமையலறையில் மலரும் அன்பு வீட்டில் பரவுகிறது – பின்பு நாட்டிலும் பரவுகிறது.

இங்குள்ள பாடசாலைகளில் சமையலறையில் ஒவ்வொரு வேளையில் பலநூறு மாணவர்களுக்கு உணவு தயாரிக்கப்படுகிறது. **"தம்மைப் பெற்று வளர்த்து அன்பைச் சொரியும் பெற்றோரை விட்டு, நம்மை நம்பி வரும் இப்பிள்ளைகளுக்கு இனிய உணவை அளிப்பது நமது கடமை"** என்று தாயன்பு கொண்ட எரிகின்ற அடுப்புகளுக்கு முன் ஒவ்வொரு நாளும் பல மணிநேரம் நின்று வேலை செய்யும் சமையற்காரர்களே அன்பின் திருவுருவங்கள் என்று சொல்லலாம். அவர்கள் படைக்கும் இனிய உணவினால் தான் கிராமத்து இளம் பிள்ளைகள் துள்ளி விளையாடுகின்றார்கள் – படிக்கின்றார்கள் – ஆடுகிறார்கள் – பாடுகின்றார்கள். எனவே சமையலறை சைவத்தால் தான் உலகமே இயங்குகின்றது என்பது முக்காலும் உண்மை.

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் எத்துணை இன்றியமையாதன என்பதனை இன்று மக்கள் எல்லோரும் உணர்வார்கள். அவ்வாறே சமயப்பற்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். ஏனெனில், ஒரு நாட்டோடும், மொழியோடும் சமய உணர்வும் பிரிவின்றி பிணைந்து கிடக்கின்றது. ஒரு நாட்டின் நாகரிகமும், ஒரு மொழியின் சிறப்பும் சமய உணர்வுடன் இணைகின்ற போது தான் பல மடங்கு ஓங்கித் திகழ்கின்றன.

இன்று நம் தமிழர் தாயகத்தில் மறுமலர்ச்சி எண்ணம் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். நாம் மறுமலர்ச்சியை ஏற்படுத்த தவறுவோமேயானால், நம் மொழியும், பண்பாடும் பல்வேறு தீய சக்திகளால் ஒழிக்கப்படாமல் போனாலும் – ஊறுபடுத்தி ஒளியிழக்கச் செய்யக் கூடும் என்று அனுபவத்தால் உணர்ந்து அஞ்சுகிறேன்.

ஒரு நாட்டின் இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் மூன்று பெருஞ்சக்திகள் – பிறந்தவீடு – பார்க்கும் உலகம் – பயிலும் பாடசாலை. இந்த மூன்றிலும் உள்ள குணம் குறைகளின் எதிரொலியே இளைஞனின் இதயத்துடிப்பு. எனவே அறியாமை நிறைந்த வீடும் – அநீதி நிறைந்த உலகும் – அவலம் நிறைந்த பாடசாலையும் இளைஞர் சமுதாயத்தை அழிக்கும் கொடிய படைகள். இக்குறைகளை நீக்கவே – நமது தேசிய வாழ்க்கையை ஒளி பெறச் செய்யவே – மறுமலர்ச்சி எண்ணம் தேவை என்று கருதுகின்றேன்.

இந்நாளில் பயனற்ற தேர்வு, முறையற்ற பயிற்சிகளாலும் பெரும்பாலும் மாணவர்களிடையே ஆழ்ந்த படிப்பு அருகிவருகிறது. சென்ற தலைமுறையில் தமிழ்ப் பாடத்திட்டம் எவ்வாறு அமைந்திருந்தது. இன்று எவ்வாறு உள்ளது என்று ஆராய்ந்து பார்த்தால் ஆழ்ந்த படிப்புக்கு என்ன நடந்தது? என்பது புரியும். இராமாயணமும், பாரதச்சுருக்கமும் முழுமையாக பாடத்திட்டத்தில் இருந்தன. இவை வெறும் இலக்கிய பாடமாக அமையவில்லை. வாழ்க்கையை கற்றுக் கொடுத்த பாடங்களாக அமைந்தன. இன்று நிலைமை எப்படியுள்ளது? எனச் சிந்திக்க வேண்டும்.

இன்று நம் தாயகம் முழுவதும் இளைஞர்களின் ஒழுக்கமின்மை குறித்தும், ஒழுக்கக் குறைவு குறித்தும் கண்டனங்கள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. இந்நிலைக்கு யார் பொறுப்பு? இதை முதியோர் உலகு பொறுமையுடன் எண்ணிப் பார்க்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது **"இளைஞனும் அல்லேன் முதியோனும் அல்லேன்"** என்று கூறிக் கொள்ளக் கூடிய பருவத்தில் ஏறத்தாழ நிற்கும் எளியேனின் பணிவார்ந்த வேண்டுகோள்.

அரசியல் துறையிலும் – ஏன் – சமயத் துறையிலும் தமது ஒழுக்கக் கேடான செயல்களை ஊரும் உலகமும் சுட்டிக் காட்ட **"வாழ்க்கை"** நடத்தும் பலர் "இளைஞர்களா? முதியவர்களா? ஆழ்ந்த படிப்புணர்ச்சிக்கும் உயர்ந்த ஒழுக்கத்திற்கும் உலை வைக்கும் வகையாய் இன்று பல துறைகளிலும் சிறப்பான நிலைகள் பலவற்றிலும் இருப் பவர்கள் சிறுவர்களா? முதியவர்களா? அண்மையில் ஒரு அந்தண அன்பர் என்னிடம் கூறினார் **"கலியுகத்தின் அடையாளம் பார்ப்பானும் நாத்திகம் பேசுவான்"** என்பதாகும். எனக்கு, பல சமயங்களில் தோன்றும் இன்னொரு கருத்து,**"கலியுகத்தின் அடையாளம் உணர்ந்தோ உணராமலோ ஆசிரியர்கள் மாணவர்களைக் கெடுப்பதும், தெரிந்தோ, தெரியாமலோ தலைவர்கள் தொண்டர் களைக் கெடுப்பதும்"** என்பதே. மாணவனாய், ஆசிரியனாய், பெற்றோராயும் இருப்பவன் என்ற முறையில் என் உள்ளத்து உணர்ச்சிக்கு யான் கொடுக்கும் சொல் வடிவம் தனிப்பட்ட எவரையும் புண்படுத்தும் நோக்கம் உடைய தன்று; யாதொரு துறையையும் தாழ்த்தும் கருத்தும் கொண்டதன்று; அவ்வாறு யாரும் கருதி வருந்த வேண்டாம் எனப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சமயம் வெறும் சடங்கு அன்று. அது வாழ்க்கை தனி மனித வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் கட்டியாளும் கடவுள் தத்துவம் என்பதை எளியோனாகிய யான் ஆழ்ந்து உணரும் உணர்ச்சியின் காரணமாக மனம் நொந்து கூறும் துயர மொழிகள் இவை. யான் மேலே குறிப்பிட்ட துறைகளில் விதிவிலக்காய் வாழும் சான்றோர்களும் உண்டு என்பதனை அறிவேன். **"உண்டாலம்ம இவ்வுலகம்"** அவர்களால் என்பதனையும், இல்லையேல் **"மண்புக்கு மாய்வது மண்"** என்பதனையும் மனமார உணர்ந்து அச் சான்றோர்கட்குத் தலை வணங்குகிறேன்.

பெரும்பாலான இன்றைய நிலை என யான் கருதுபவை பொய்யாயின், அது குறித்து பெருமகிழ்வே கொள்வேன். உண்மையாயின், உணர்ந்து செயல்படுவோர் அருள் வாழ்வின் புது உலகம் பிறக்கும். இதை எடுத்துக் கூறுவதற்கு காரணம் இன்றைய இளைஞரே நாளைய முதியவர் என்பதாலும்,**"காலங் கெட்டுப் போச்சு"** என்று கலங்குவோர் அது முன்னே கெட்டது முதியவர்களிடத்தில், பின்னே கெட்டது சிறியவர்களிடத்தில் என்னும் உண்மையையும் சேர்த்துச் சிந்திக்க வேண்டும்.

**"முன்னோர் சென்ற வழிப்பின்னேர்; குற்றம் உணர்வான் குணவான்"** என்னும் முதுரைகள் நம்மை வாழ்விக்கவல்லன அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர மகாலிங்க மலை

ஸ்ரீ வல்லிபுத்தூரில் வசித்தவர் விஷ்ணு சித்தர். அங்குள்ள நந்தவனத்தை பராமரித்து பெருமாளுக்கு மலர் மாலை தரும் தொண்டினைச் செய்து வந்தவர்.

மதுரையை ஆண்ட வல்லபதேவன் என்ற மன்னனுக்கு பரம்பொருள் யார்? ஏன்ற சந்தேகம் எழுந்தது. இச்சந்தேகத்தை தீர்த்து வைத்தார் விஷ்ணுசித்தர். இதனால் மனம் மகிழ்ந்த மன்னன் விஷ்ணு சித்தரை கௌரவப் படுத்த நினைத்தான். அவரை தனது பட்டத்து யானையில் ஏற்றிக்கொண்டு மதுரை நகரெங்கும் வலம் வந்தான். தன்பக்தனுக்கு அளிக்கப்படும் பெருமையைக் காண்பதற்கு "பெருமாளும்" அங்கே வந்தார். அவர் கருட வாகனத்தில் காட்சி அளித்தார்.

இந்தக் காட்சியை இங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கானோர் கண்டு தரிசனம் செய்தனர். விஷ்ணுசித்தருக்கும் திருமாலின் தரிசனம் கிடைத்தது மகிழ்ச்சியே என்றாலும், பேரழகு மிக்க பெருமாளுக்கு அவரைக் கண்டவர்களின் கண்திருஷ்டி கழித்து "நீ பல்லாண்டு வாழ்க" என்று பாடினார். தனக்கே திருஷ்டி கழித்த விஷ்ணுசித்தரின் செயலைக் கண்டு மகிழ்ந்த திருமால்,"விஷ்ணுசித்தரே நீரே பக்தியில் பெரியவர்" என்று வாழ்த்தினார். அதுவரையில் விஷ்ணுசித்தர் என அழைக்கப் பட்டவரை பெரியாழ்வார் என திருநாமம் சூட்டி மக்கள் வாழ்த்தினர். இத்தகைய பெருமை பெற்றவரின் அவதார தலம் ஸ்ரீ வல்லி புத்தூர்.

ஸ்ரீவல்லிபுத்தூருக்குச் சிறப்புச் சேர்க்கும் அடுத்த விடயம் **"சூடிக் கொடுத்த அம்மை ஸ்ரீ ஆண்டாள்"** கோவிலும் அங்குள்ளது. ஸ்ரீ வல்லிபுத்தூருக்குச் சென்று தரிசனம் செய்வ தற்காக மதுரையிலிருந்து புறப்பட்டு விருது நகர் எனும் ஊருக்கு வந்தேன். அங்கு எனது உறவுகள் "சுந்தர மகாலிங்க மலை" எனும் தலம் பற்றி சுவையாக பல விடயங்களை கூறினார்கள். அதனைக் கேட்டதும் சுந்தர மகாலிங்க மலைக்குச் செல்ல வேண்டும் என உவகை உந்த மோட்டார் வாகனத்தில் புறப்பட்டேன்.

விருதுநகரிலிருந்து ஸ்ரீ வல்லிபுத்தூருக்குச் செல்லும் இராஜபாளையம் நெடுஞ்சாலையில் பயணம் ஆரம்பித்தது. இந்தச்சாலையில் விருதுநகரிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் சுந்தரமகாலிங்க மலை உள்ளது. இப்பகுதி தமிழ்நாடு வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. பெரிய சாலையிலிருந்து பிரிந்து செல்லும் சாலையினுள் நுழைந்ததும் குளிரான காற்று சுகமாக வரவேற்றும், சாலையின் இரு மருங்கிலும் தென்னந்தோப்பு குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு உணவுப் பொருட்கள்,உடையுடன்மலையின்அடிவாரத்தை அடைந்தோம்.

மகாலிங்க மலையின் உச்சியிலிருந்து ஆரம்பிக்கும் நீர் ஊற்று அடிவாரத்தில், வருபவர்களின் காலில்பட்டு, காலைச் சுத்தப்படுத்தி, மேலே அழைத்து செல்வதாக உணர்ந்தேன். மலையில் சுமாரான பாதை கற்களை அடுக்கி அமைக்கப்பட்டுள்ளது. பாதையின் ஒரு பக்கத்தில் நீர் ஓடி வருகிறது. (நீர் வீழ்ச்சி) குறிப்பிட்ட இடங்களில் நீராடு வதற்கு ஏற்றவகையில் நேர்த்தியாக மலைக் கற்கள் அடுக்கப்பட்டுள்ளன. நீராடுவதற்காக மக்கள் கூட்டம் குவிந்து காணப்பட்டது. மலையின் நடுப்பகுதிக்குச் சென்றால் சிறப்பாக நீராடலாம் என முடிவு செய்து மலையில் ஏறத்தொடங்கினோம். சபரி மலைக்கு ஏறுவது போல உணர்ந்தேன். மூலிகை மரங்களின் வாசனை ஒருபுறம், இடையிடையே தங்கிச் செல்வதற்கு அமைக்கப்பட்டுள்ள கல்லாலான மேடைகளிலிருந்து, இருந்து ஏறிச் சென்றோம்.

மகாலிங்க மலை கடல் மட்டத் திலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. சுமார் 6 கிலோமீற்றர் தூரம் ஏறிய பின்னர் பிரம்மியமான நீர்வீழ்ச்சியொன்று தென் பட்டது. அங்கு நீராடி உணவு உண்ட பின்னர் மலைஉச்சி கோவிலுக்குச் செல்வது என முடிவு செய்து கொண்டு நீர்வீழ்ச்சியில் மூழ்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கள் நீண்டகாலம் வாழ்ந்தார்கள் எனப்படிக்கும் போது எப்படி? இது, முடிந்தது என வினா எழும். நீண்ட ஆயுள் முறையே காரணமாகும். நீர்வீழ்ச்சிகள் ஆறுகளில் (காலை சூரிய உதயத்திற்கு முன்) குளித்தமை ஒரு பிரதானமான காரணமாகும். நீர் வீழ்ச்சியின் நீர் மூலிகை நீராகும். நீரின் நிறமும், நறுமணமும் நம்மை கவரும். இத்தகைய நீரில் நீராடி, இந்நீரை குடிக்கும் போது ஆயுள் அதிகரிக்கவே செய்யும். மகாலிங்க மலை நீர்வீழ்ச்சியும் புத்துணர்வை தந்தது.

நீராடி முடிந்த பின்னர் மலை உச்சிக்கான எமது பயணம் ஆரம்பித்தது. மேலேயிருந்து வழிபாடு முடிந்து கீழே வருபவர்களும், கீழே இருந்து பொருட்களைத் தலையில் சுமந்து கொண்டு மேலே செல்பவர்களையும் பார்த்த வண்ணம் மலையேறினோம். ஒருபடியாக மாலை 4.00 மணியளவில் மலையின் உச்சிக்கு சென்றடைந்தோம்.

மலை உச்சியில் அழகிய சிவனாலயம் அமைந்திருந்தது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஆலயச் சுற்றுப்புறத்தில் இருந்தார்கள். நாமும் உள்உணர்வு உந்த ஆலயத்தினுள் சென்றோம். மூலத்தானத்தில் “சிவலிங்கம்” அமைக்கப் பட்டிருந்தது. பரிவாரக் கோயில்களாக விநாயகர், முருகன், சக்தி ஆலயங்களும் பைரவர் ஆலயமும் அமைந்திருந்தன. பழங்காலத்து ஆலய அமைப்பு முறை காணப்பட்டது. கற்தூண்கள் மன்னர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஆலயம் என்பதை உறுதிப்படுத்தியது. பாண்டி மன்னனால் இவ்வாலயம் அமைக்கப்பெற்றது எனக் கூறுகிறார்கள்.

ஆலயத்தைப் பற்றிய காட்டுப்பகுதி “பழக்காடாக” திகழ்கிறது. மாமரங்கள், கொய்யாப்பழங்கள், நாவல் மரங்கள், நெல்லி மரங்கள் முக்கியமாகக் காணப்படுகின்றது. பக்தர்களும் பசிப்போக்கும் அருங்கனியாக அமைவதுடன், இங்குள்ள (நிரந்தரமாக வாழ்பவர்கள்) மக்கள் இப்பழங்களைப் பறித்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். இக்காட்டுப் பகுதியில் கொடிய விலங்குகள் இருப்பதாகவும் சொல்கிறார்கள்.

இந்த ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து கொள்ள முற்பட்ட போது ஆச்சியமான செய்திகள் கிடைத்தன. ஆலயத்திலிருந்து வடக்கு நோக்கிய திசையில் சமாதிகள் அமைந்திருந்தன. இந்த ஆலயச் சூழலில் வாழ்ந்த 18 சித்தர்களின் சமாதி எனக் கூறப்படுகிறது. இவற்றுக்கு அப்பால் காட்டினுள் கோவனம் மட்டும் கட்டிய நிலையில் அடர்ந்த தாடியுடன் பலர் தியான நிலையில் இருப் பதைக் காண முடிந்தது. இவர்கள் இவ்வாலயச் சூழலில் நீண்ட காலமாக இருக்கிறார்கள். இவர்கள் பற்றிய எந்தச் செய்தியும் அறிய முடியவில்லை. ஆலயப் பூசகரின் தகவலின் படி நீண்ட காலமாக இங்கு வாழ்கிறார்கள் என்பதும் சக்தி மிக்கவர்களாக இருப்பதாகவும், ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கொடுப்பதை வாங்குவது இல்லை என்றும், காட்டினுள் வாழ்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். ஆமாவாசை அன்று இரவு ஆலயத்தில் விஷேட பூசை நடைபெறுகிறது. இப்பூசையில் கலந்து கொள்வதற்கு பக்தர்கள் வருகிறார்கள். அன்று மட்டும் “தவசிகள்”ஆலயத்திற்கு வருகிறார்கள். நள்ளிரவு பூசையில் கலந்து கொள்கிறார்கள். பக்தர்களுக்கு விபூதி, பழங்களை பிரசாதமாக வழங்குகிறார்கள். ஆனால் யாரும் பேசுவது இல்லை. மௌனமே மொழியாகும்.

அவர்களைக் காண வேண்டும் என்ற ஆவலில் சமாதிகள் அமைந்துள்ள சூழலுக்குச் சென்றேன். சிலர் நிஷ்டையில் இருந்தார்கள். வேறு சிலரின் செய்கைகள் விநோதமாக அமைந்திருந்தன. “நிஷ மூலமும், நதி மூலமும்” அறிய முடியுமா?

ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் இரவு அங்கு தங்கி அடுத்தநாளே கீழே செல்கிறார்கள். உணவு சமைத்து வழங்கும் தொண்டினை சில அன்பர்கள் செய்கிறார்கள். இரவு மலை உச்சியில் ஆலயச் சூழலில் தங்கியிருந்த அனுபவம் மெய்சிலிர்க்கச் செய்கிறது. “சுந்தர மகாலிங்க மலை” எனும் பெயருக்கு ஏற்ப அழகான, ஆனந்தமான உணர்வுகளை அள்ளி வழங்கும் மலையில் பல விடயங்கள் புதைந்து கிடக்கின்றன என நினைக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகை பாவங்களை அகற்றும்

"நான் பொய் ஒழுக்கம் உடையவன்; எனது நெஞ்சமும் வஞ்சகமானது; எனது அன்பும் போலியானது; என்றாலும் இப்படிப் பட்ட தீவினையை உடைய நான் அழுதால் உன்னை அடையலாம்" என்பது இறைவனை அடைவதற்கு மணிவாசகர் சொல்வதாகும். அடிகளார் சொல்வதைப் பார்த்தால், இறைவனை அடைவதற்கு இது ஒரு எளிய வழியாய் இருக்கிறதாகத் தெரிகிறது.

மனிதன் அழுவது இயல்பு; சர்வ சாதாரணம் என்றும் கூட சொல்லலாம். உடல் நோயுற்று வேதனைப்படும் பொழுதும், உற்றார் உறவினர் பிரிந்தபோதும், பிறர் துன்புறுத்தியதால் மனம் நொந்தபோதும், மனிதன் அழுவதை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட அழுகையில் நாம் இறைவன் திருவடியை அடைய முடியுமா? முடியாது. ஒருவரும் அடைந்தும் இல்லை. ஆகவே, எப்படிப்பட்ட அழுகை வேண்டும்.

சிலர் பக்திப் பெருக்கினால் இறைவனைப் பற்றிய பேச்சைக் கேட்கும் போதும், அழுகி றார்கள். அப்படியே பக்தி ததும்பிய பாடல் களைப் பாடும்பொழுதும் கேட்கும் பொழுதும் அழுகிறார்கள்; ஆனால் அந்தச் சூழ்நிலை மாறியபொழுது, பழைய மனிதர்களாகவே காட்சியளிக்கிறார்கள். என்றாலும் இந்த அழுகை, முன்னை அழுகையை விடச் சிறப்பானது. இந்த உள்ளம் உருகும் நிலை இறை உணர்வு பெறுவதற்குரிய முதல்படி என்று சொல்ல வேண்டும்.

**"யானே பொய், என் நெஞ்சம் பொய், என் அன்பும் பொய்"** என்று அடிகளார் சொல்லும் பொழுது தமக்கு முன் திரைபோல் ஆண்டவனை மறைத்த ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் தன்னைவிட்டு அகன்றன என்பதனைக் காண்கின்றோம். மும்மலங்களும் நீங்கும்போது மனிதன் மாசற்றவனாகத் திகழ்கிறான். கறைபட்ட மனம் கண்ணீரால் கழுவப்பட்டுத் தூய்மையடைந்து, நல்ல கண்ணாடியில் காண்பது போல தன் மனக் கண்ணில், தன் உண்மைச் சாயலையும், இறைவடிவையும் காண்கிறான். மனம் மாசு படிந்திருப்பதைத்தான் பாவம் நிறைந்த உள்ளம் என்று வேறுவிதமாகச் சொல்லு கிறார்கள். பாவத்திற்குச் சரியான இலக்கணம் கூறுவது சிறிது கடினம்தான். ஏனெனில் ஒருசாரார் பாவம் என்று கருதுவதை இன்னொரு சாரார் பாவம் என்று கருதுவதில்லை! அதைப் புண்ணியம் என்று கூட சொல்லுவார்கள். நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு பாவத்தின் இலக்கணம் வித்தியாசமாகத்தான் இருக்கு மென்றாலும், கடவுள் நம்பிக்கையுள்ள எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய இலக்கணம் ஒன்று உண்டு. எந்தக் காரியங்கள் இறைவனை நாம் அணுகவிடாது தடுக் கின்றனவோ, அவைகள் எல்லாம் பாவம் என்பதாகும். ஆகவே பாவத்தையும், மும் மலங்களையும் அகற்றுவதற்கு அழுகை தேவை என்று மணிவாசகர் திட்டவட்டமகத் தெளிந்து **"அழுதால் உனைப் பெறலாமே"** என்று உருக்கமாகப் பாடியுள்ளாார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்த்துச் சிலர் மனதில், "என்ன இது! அவ்வளவு எளிய முறையாகத் தோன்றவில்லையே?" என்று ஐயப்படலாம். ஞானம், யோகம், கருமம் என்று சொல்லப்படுகிற வழிகளை விட இது இறைவனை அடைவதற்கு எளிய வழி என்று அநுபூதிமான்கள் சொல்லி இருக்கின்றனர்.

இந்த அழுகையின் தத்துவத்தை இன்னொரு கண்கொண்டு கூடப் பார்க்கலாம். உண்மையாக இறைவனை அடைய வேண்டும் என்று ஒருவன் மனங்கசிந்து அழுவானே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானால், நிச்சயமாக இறைவன் கன்றின் குரலைக்கேட்டு கதறும் பசுவைப் போல ஓடி வருகிறான் என்பது அநுபூதிமான்களின் அனுபவம். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து, பாவிகளை ஈடேற்ற எப் பொழுதும் காத்திருக்கிறான். என்பது பெரியோர்களின் வாக்காகும். பூனைக்குட்டி கத்தியவுடன் எப்படித் தாய்ப்பூனை எங் கிருந்தாலும் வந்து தன் குட்டியைக் கௌவிக் கொண்டு செல்கிறதோ, அவ்வாறு இறைவன் தன் அளவற்ற கருணையால் காப்பாற்று கிறான் என்பதும், அநுபூதிமான்கள் கண்ட, காட்டிய உண்மையாகும். குழந்தையின் கரத்தைப் பிடித்து கரடுமுரடான பாதையில் ஒரு தகப்பன் அழைத்துச் செல்வது போல, இறைவன் நம்மையும் நடத்துகிறான். வேண்டுவது எல்லாம் அவனைக் காண வேண்டும், அவன் திருவடியை அடைய வேண்டும் என்ற அவா; இந்த அவா நிறைவேறாததால் எழுகின்ற அழுகை, மனைவி மக்கள் மாண்டபோது, ஆற்றுப்பெருக்காக மனிதன் கண்ணீர் விடுகின்றான். ஆனால் இறைவனை அடைய வேண்டும் என்று அவன் கண்ணீர் விடு வதில்லையே.

உண்மையான அழுகைக்கு எல்லாச் சமயங்களிலும் சமயகுரவர்கள் தனிச் சிறப்பிடம் அளித்திருக்கிறார்கள். குறிப்பாக கிறிஸ்தவ சமயத்தில் ஒரு பாவி தன் பாவத்தை நினைத்து அழுவானேயானால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டு இறைநிழலில் வாழ்கின்றான் என்பது அவர்களுடைய சித்தாந்தம்.

எனவே அரிய மானிடப்பிறப்பு மேன்மை யடைய இறைவனைக் கசிந்து உருகி கண்ணீர் மல்கி அழைப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மீண்டும் இருட்டறை வாழ்வு வேண்டாம்"

பிறப்பு என்பது இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவதா வாழ்வின் நோக்கம் அதுதான். தாயின் கருப்பையில் இருக்கும்போது அங்கு வெளிச்சமில்லை. இருள்தானே! சூரிய ஒளியில் – பூமியில் வந்து பிறக்கிறோம். வாழும் வாழ்க்கை சிறப்பானதாக அமையுமாயின் மீண்டும் இன்னொரு தாயின் இருண்ட கருவறைக்குள் புக நேரிடாது. ஆனால் மனிதப் பிறவியின் நோக்கத்தைப் பாவ காரியங்களைச் செய்து மீண்டும் மீண்டும் இருண்ட வாழ்வைத் தேடிக் கொள்கின்றோம்.

பூமியில் வெளிச்சத்தில் வாழ்ந்தாலும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் எனும் அறியாமை இருளில் மூழ்கி விடுகிறோம். இந்த அறியாமை இருளிலிருந்து வெளியே வர வேண்டும் எனும் உயர்ந்த எண்ணத்துடன் கொண்டாடப்படும் உயர்ந்த பண்டிகைதான் தீபாவளி.

தீபாவளி நரகசதுர்த்தி என்று அழைப்பர். ஐப்பசி மாதத்தில் சூரியன் துலா ராசியில் இருப்பார். அப்போது தேய்பிறையின் கிருஷ்ண பட்சம் பதினான்காம் நாளில் தீபாவளி கொண்டாடப்பெறுகிறது. திரியோதசி இரவு சதுர்த்தசி காலை கொண்டாடப்பெறுவதினால் இது நரகசதுர்த்தி என வழங்கப்படுகிறது.

முற்காலத்தில் நரகாசுரன் அருந்தவத்தால் பிரம்மனை வழிபட்டு பெரும் வரங்களைப் பெற்று அவ்வரங்களின் மகிமையினால் எல்லோருக்கும் துன்பம் விளைவித்து வந்தான். கிருஷ்ணபகவான் நரகாசுரனை தம் சக்கராயுதத்தால் அவன் உடலைப் பிளந்தார். அப்போது நரகாசுரன் கிருஷ்ணபகவானை வணங்கி, "நான் செய்த பாவங்களைப் பொறுத்துக் கொண்டு கொடியவனாகிய நான் இறக்கும் இந்நாளை மக்கள் அனைவரும் தொல்லை நீங்கிய மங்களகரமான நாளாகக் கொண்டாட வேண்டும். இந்நாளில் என்னை நினைத்து நீராடி புதிய துணிகள் அணிந்து ஆலய வழிபாடு செய்பவர்கட்கு அசுவமேத யாகம் செய்த பலனும் கிட்ட வேண்டும்" என்று வேண்டினான். பகவானும் அவ்வாறே அருளினார். அத்தினமே தீபாவளியாகக் கொண்டாடப் படுகிறது.

தீபாவளி தினத்திற்கு பலவிதமான காரணங்கள் புரான இதிகாசங்களில் காணப் படுகிறது. மகாபலிச்சக்கரவர்த்தி முடிசூடிக் கொண்டது தீபாவளி என்றும், இராமபிரான் வனவாசத்தை முடித்து அயோத்திக்குத் திரும்பியது அத்தீபாவளித் திருநாளில் தான் எனவும் கூறலாம்.

புராணங்களிலும், இதிகாசங்களிலும் தேவர், அசுரர் எனப்படுபவர்களிடையே நிகழும் சண்டை சித்தரிக்கப்பட்டு முடிவில் தெய்வ அருளால் தேவர்கள் வெற்றி பெற்றார்கள். எனக் கூறப்படுகிநது. இந்த வரலாறுகள் உண்மைதானா? என்ற ஆராய்ச்சியை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டுச் சிந்தியுங்கள். நமக்குள் தேவ அசுர யுத்தம் இல்லையா? சமூகத்தில் இல்லையா? தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையே நிகழும் சண்டையே தேவ – அசுர யுத்தமாகும். மனித மனதில் ஏற்படும் அதர்ம – அசுர எண்ணங்கள் நீங்கி ஒளி பிறக்க வேண்டாமா? இதற்குரிய எழுச்சியை ஏற்படுத்தும் திருநாள் தீபாவளியாகும்.

தீபங்கள் ஒளி தருபவை. அவற்றை வரிசையாக வைத்தால் ஆவளி என்று பொருள். இறைவன் நாமத்தை வரிசையாகச் சொன்னால் நாமாவளி ஆகிவிடும். இவ்வாறு தீபங்களின் வரிசை தீபாவளியாகிறது. தீபாவளி என்பது மன இருளை எதிர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தும் படையெடுப்பு. புற இருளை தீபங்கள் நீக்கிவிடும். அக இருளை நீக்குவதற்கு ஞான தீபங்கள் இந்நாளில் ஏற்றி வைக்க வேண்டும். ஞான தீபங்களாகத் திகழ்பவை நமது முன்னோர்கள் ஆக்கிய அறம் பற்றிய கருத்துக் களாகும். இவற்றைப் பொருள் உணர்ந்து கற்றுக் கொள்வதுடன் அதன் வழி நடக்கவும் திடசங்கற்பம் பூணுதல் வேண்டும்.

தீபாவளி தினம் பட்டாசு வெடித்து, மது, மாமிசம் புசித்து கொண்டாடும் நாள் அல்ல! தரமற்ற – நரக சிந்தனைகளிலிருந்து விடுபட்டு தரமான – தேவ சிந்தனைக்கு வருவதன் மூலம் வளம் நிறைந்த வாழ்வு அமைவதற்காக தீபாவளியை உரிய முறையில் இனிதாகக் கொண்டாடுவோம்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம் - 2012

101 ஆவது சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு கிராமப் பெண்களின் வளர்ச்சி என்பது முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது. கடந்த 100 ஆண்டுகளாக பெண்களின் உயர்வு, பெண் அடிமைத் தனத்தை அகற்றுதல், பெண்கல்வி போன்ற பல விடயங்கள் கருதப்பட்டு இன்று பெண்கள் சமூகம் வளர்ச்சியடைந்து தங்களின் உரிமைகளை சட்டம் மூலமாகவும், சமூக அந்தஸ்து மூலமாகவும் ஏறத்தாழப் பெற்றுவிட்டார்கள். அதற்குச் சாட்சியாக அலுவலகங்கள், பல்கலைக் கழகம், ஆட்சிபீடங்களின் உயர்பதவிகள் எங்கும் பெண்கள் ஆட்சி நடைபெறுகிறது. இத்தகைய சூழ்நிலையில் இன்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

பெண்கள் இன்று வேலைகளுக்கு அலுவலகம் செல்வதனால் அவர்கள் குடும்ப வாழ்வில் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. அலுவலகங்களில் பிரச்சினை, பத்திரிகைகள் இவற்றை விலாவாரியாக எழுதி வருகின்றன. உரிமைகளும் ஏன்? விடுதலையையும் அடைந்துள்ள பெண்கள் உங்கள் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். தமிழர்களின் உயர் விழுமியம் **"நமது குடும்ப வாழ்வு"** தான் குடும்ப வாழ்வில் விரிசல் ஏற்பட்டால் நிம்மதி காணாமல் போய்விடும். மாதர் அறங்களை முன்னர் இருந்ததை விட மேன்மையடையச் செய்ய வேண்டும் என்பது பாரதியின் புதுமைப் பெண். குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வேலைப் பளுவினால் உங்கள் பிள்ளைகளைக் கவனிக்க முடியாமல்ப் போகிறது. இதனால் பிள்ளைகள் நெறி தவிர்ந்த வாழ்விற்கு கட்டுப்பாடின்றிச் செல்லும் சூழல் ஏற்படுத்தப் படுகிறது. அதற்கான காரணம் பெண்கள், பிள்ளைகளை கவனிக்க முடியாமல் இருப்பது தான். பொருளாதாரம் தேவை என்பது எவ்வளவு முக்கியமானதோ அதை விட பன்மடங்கு முக்கியமானது நல்ல குடும்பமாக வாழ்தல் என்பதை மறந்து விடாதீர்கள்.

அலுவலகத்தில் மகளிருக்கு ஏற்படும் பிரச்சினைகள் பல உண்டு. இவற்றை எதிர்கொண்டு பெண்கள் வெற்றியடையாவிடின் பெண்கள் வாழ்வு கேள்விக்குறியாக மாறிவிடும். பெண்கள் எல்லா வகையிலும் தங்களைக் காத்துக் கொள்வது அவசியமாகும். அதனால் தான் மறைவள்ளுவன் **"சிறை காக்கும் காப்பு – என் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை"** என்று குறிப்பிட்டான். உங்களை நீங்கள் காத்துக்கொள்ள வேண்டும். உங்கள் செயற்பாடுகள் ஆண்களுக்கு சகோதர உணர்வை ஏற்படுத்த வேண்டும். சினிமாக்காரிகளைப் போல வெளிப்பகட்டு காட்ட வேண்டும் என்று நினைத்தால் விபரீதமாகத் தான் விளையும். எந்த ஆணாவது சினிமா Hero போல உடை அணிந்து திரிகின்றானா? சற்று சிந்தியுங்கள். பெண்கள்தான் அங்கங்களை வெளியே தெரிய ஆடை அணிகிறார்கள். இந்தச் செயல் 75 வயது ஆணையும் கிளர்ச்சி கொள்ளவே செய்யும்.

தமிழர்களின் உயர்பண்பு தாயைத் தெய்வமாக வழிபடுதல், நமது புராண இதிகாசங்கள் பெண்மையை, தாய்மையைப் போற்றி நிற்கிறது. அந்த சிறப்பான பெண்மைக் குணங்களோடு கிடைத்திருக்கும் உயர்ந்த இடத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் தமிழ்ப் பெண்களுக்கு இன்றைய மகளிர் தினத்தில் எனது வேண்டுகோளாகும். பாலியல் வன்முறையில் ஈடுபடும் அரக்கர்களை ஈவு இரக்கமின்றித் தண்டிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

**"தற்கொண்டான் பேணி
தகை சான்ற சொற்காத்து சோர்வினால் பெண்"**

என்பதே பெண்ணின் இலக்கணமாகும் என்பதை மறந்துவிடாதீர்கள். உரிமைகளைப் பெறுவது என்பதைவிட பெற்றுக்கொண்ட உரிமைகளை, வாய்ப்புக்களைக் காத்துக் கொள்வதற்கு பெண்கள் இத்தினத்தில் திட சங்கற்பம் பூண்டு கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்பினால் பண்பினை ஓங்கச் செய்வோம்"

யாழ் பிரதேச செயலகப் பகுதியில் இயல், இசை, நாடகம் சிறப்பாக வளர்ச்சி கண்டுள்ளது. தமிழில் உருவாகிய சிறந்த நாடக நூல் மனோன்மணியம். நாடகம் என்றால் சேக்ஸ் பியரின் யூலியசீசர் என்று நம்மவர்கள் சொல் வார்கள். நம்மிடமுள்ள சிறந்தவற்றை மறந்து விடுகிறோம். மனோன்மணியம் படிப்பதற்கு எழுதப்பட்ட நூல். நடிப்பதற்கு மிகுந்த தொல்லை தரும் ஒரு தோற்றம்; ஒரு கரு; ஒரு வளர்ச்சி; ஒரு முடிவு என்ற முறையில் நாடகம் அமைக்க முடியுமென்று மனோன்மணியத்தில் அந்தரனார் காட்டியுள்ளார்.

தமிழ் மொழியும் தமிழினமும் தற்காலத்தில் பெற்றுள்ள நிலை என்ன? வளர்ச்சி கண்டுள்ளதா? வளர்ச்சி என்றால் என்ன? வளர்ச்சியை இரண்டு வகையாக்கலாம் ஆழ்ந்து செல்கின்ற வளர்ச்சி, பரந்து செல்கின்ற வளர்ச்சி. இந்த இரண்டு வளர்ச்சியும் ஒருசேர ஏற்பட்டால் அது உண்மையான பயனுடைய வளர்ச்சி என்று கருதலாம். இன்று தமிழ்மொழி அகல வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால் ஆழ வளர்ச்சி காணவில்லை.

நமது முந்தையரை விட இன்று குறிப்பாக இளம் சமூகத்தினருக்கு அறிவு பரந்து விரிந்து அகன்று சென்றுள்ளது. எல்லாத் துறையிலும் அகன்ற வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த அறிவு அகண்ட அளவிற்கு ஆழமாகவில்லை எனக் கருதுகிறேன்.

சங்ககால இலக்கியமாகட்டும் அதற்குப் பின்னர் தோன்றிய இடைக்கால இலக்கியமா கட்டும், அங்கே நீங்கள் காணுகின்ற அறிவின் ஆழம் - அல்லது அனுபவத்தின் ஆழம் - அல்லது அனுபவத்தின் தெளிவு இவை பிற்கால இலக்கியங்களில் உள்ளனவா என்று ஆராய்ந்து பார்த்தால் கொஞ்சம் சந்தேகம் தட்டத்தான் செய்யும். இன்றைய அவசர உலகில் எல்லாம் எண்ணிக்கை முறையில் செல்கின்ற காரணத்தினால் எதனையும் நின்று ஆழ்ந்து சிந்திக்கும் மனோநிலையோ, சூழ் நிலையோ இல்லாமல் போய்விட்டது. பரந்து விரிந்து செல்லச் செல்ல ஆழம் குறுகிக் கொண்டே வந்துவிட்டது. இன்று பரந்து விரிந்து எந்தக் கலையையும் நம்முடைய மொழியிலே சொல்லலாம் என்ற அளவிற்கு தமிழ்மொழி வளர்ச்சியடைந்திருக்கிறது என்பது உண்மை.

உணர்ச்சி உலகிலிருந்து தலைவன், தலை வியை அற்புதமான கவிதைகளில் வடித்த ஒரு சூழ்நிலையிலிருந்து இன்று ஏனைய நாட்டாரின் அறிவுத்திறமையில் கண்ட உண்மைகளை எல்லாம் நம்மொழியில் சொல்லக்கூடிய வளர்ச்சி கண்டுவிட்டோம். இந்த வளர்ச்சி ஆழ்ந்து செல்லுமானால் மகிழ்ச்சி பரந்த சூழ்நிலையில் மட்டும் நின்று விடுமானால் ஏனைய மொழிக்கு ஏற்பட்ட நிலை நமக்கு ஏற்பட்டு விடும் என நம்புகிறேன்.

விஞ்ஞான உலகத்தை இலத்தீன், கிரேக்க வார்த்தைகள் தான் நிரப்பியிருக்கிறது. இப்போது அந்த மொழிகள் எங்கே? அந்த நாகரீகங்கள் எங்கே? எல்லாப் பாதைகளும் ரோம் நகருக்கு செல்லும் என்று பழமொழி செய்தார்களே? அந்த ரோமானியர்கள் எங்கே? ஏன் அவையெல்லாம் பொய்மைக் கனவாய் பழங்கதையாய் போய்விட்டன. நடந்து கொண்டிருந்தவர் ஜெட் வேகத்தில் பறக்க ஆரம்பித்தான் இந்த வளர்ச்சி தேவைதான் மறுப்பதற்கில்லை.

தமிழன் இவற்றைவிட பிரதானமாக மனம் வளர்ச்சி ஒன்றை வைத்து வளர்ச்சியைக் கணக் கிட்டான். அந்த மனம் அகன்றுள்ளது போன்று இன்று தமிழகத்தில் வந்துள்ளதா? விஞ்ஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து – சொல் வளர்ந்து எல்லாம் வளர்ந்த; ஆனால் மனம் – நாம் மட்டும் வளரவில்லையே! அதுதான் வருத்தத்துக்குரியது. வளர்ச்சி எல்லாத் துறையிலும் இருக்க வேண்டுமென குறிப் பிட்டது இதைத்தான். சாக்கிரடீசும், அரிஸ் டோட்டலும், பிளேட்டோவும் தோன்றிய கிரேக்கமொழியைக் காணவில்லை ஏன்? இதனைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். பிளேட்டோ "ரிபப்ளிக்" என்ற நூலை எழுதி சமுதாயமும் அரசும் எப்படி இருக்க வேண்டும் என்று உபதேசம் செய்துகொண்டிருந்தபோது கிரேக்க மக்கள் – பெண்கள் தனது கணவனை சிங்கக்குகைக்குள் இட்டு வேடிக்கை பார்த்துக் கொணடிருந்தால், இத்தகைய ஒரு சூழ்நிலை யில்தான் மனவளர்ச்சி ஏற்படாமல் இன்றைய தமிழினம் காணப்படுகிறது.

எங்கும் எதிலும் நெறிப்பிறழ்ந்த செயல் – ஒழுக்கக்கேடு – அரிஸ்டோட்டலையும், பிளாட்டோவைம் வைத்து அவர்கள் எழுதிய மொழியைக் கொண்டு வளர்ச்சிக் கணக்கு போட முடியுமா? சாதாரண மனிதனை வைத்து வளர்ச்சிக் கணக்குப் போட வேண்டும்.

இன்றைய நிலை என்ன? நீதி, நிர்வாகம் சரியில்லை. சகல மட்டத்திலும் ஒழுக்கக்கேடு, ஊழல், தனிமனித சுயநலம் உச்சக்கட்டத்தில் உள்ளது. மனித நேயமில்லை. இந்த நிலை வளர்ச்சி நிலையா? ஏன் இப்படி? மனம் இருள் சூழ்ந்து கிடக்கிறது. பழைய சங்க நூல்களின் கருத்துக்களை மறந்துவிட்டோம். காதல் – காமமாகிவிட்டது. நீதிக் கருத்துக்கள் மறைந்து விட்டன. நெஞ்சுக்கனல் நெகிழ்ந்து உருகவில்லை. மனம் வெளுக்கவில்லை.

அன்றைய தமிழன் அறிவு, உணர்வு இரண் டிலும் உணர்வே முக்கியம் – மனிதநேயம் முக்கியம். மனம் விரிந்தால் தான் நாடு வாழ முடியும். அறிவு, எனக்கு இது என்ன செய்யும் என்று தான் தொடங்கும் முல்லைக்கு தேர் கொடுத்ததும், புறாவுக்காகவும் உடல் சிதைந்த செயலும் அறிவுக்கண்ணுக்கு தவறாகவேபடும். இந்த வரலாற்று உண்மையை உணர மனித நேயம் தேவை. அறிவின் துணைகொண்டு அணுவை உடைத்தான் விஞ்ஞானி. அதைப் பிறர் தலையில் போட்டுத்தான் வாழ வேண்டுமென்று கருதினான். அரசியல்வாதி (வன்முறையாளர்கள்) ஏன்? மனம் விரியாமல் அறிவு மட்டுமே விரிந்த ஒரே காரணம் தான். இம் மாதிரி வளர்ச்சியை அன்றைய தமிழன் விரும்பவில்லை. இப்பொழுதாவது கொஞ்சம் பழமையை நினைத்துப் பார்ப்போமேயானால், உணர்வைக் கொஞ்சம் வளர்ப்போமேயானால் ஒருவாறு வாழமுடியம்.

**ஏவவும் செய்கலான், தான் தேறான் – அவ்உயிர்**
**போஒம் அளவும் ஓர் நோய்**

**– குறள் 848 –**

பிறர் ஏவினாலும் செய்யமாட்டான். "இது நல்லது" என்று தானும் தெளியமாட்டான். இத்தகைய அற்ப அறிவினன் தான் இறக்கும் வரை, பிறருக்கு ஒருபெரும் நோயேயாவான்.

வான்வெளிப் பயணமும் இருக்கட்டும் பண்பாட்டு வளர்ச்சியும் ஏற்படட்டும். இதுவே உண்மையான வளர்ச்சி. இவ்வளர்ச்சி ஏற்பட அன்பு செய்வீர். இதனால் நம் பண்பாடு உலகம் முழுவதும் ஓங்கச் செய்வீர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தொண்டே வாழ்வாய், வாழ்வே தொண்டாய்"

ஏழாம் நூற்றாண்டின் ஞானக்கதிரவனாக உலாவந்த ஞானச்சுடர் அப்பரடிகள் "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்!" என்று முடியாட்சிக்கு எதிராய் முதற்குரல் எழுப்பியவர் அப்பரடிகள். சாதிச்சகதிக்குள் மூழ்கிக்கிடந்த சைவசமயத்தை புனருத்தாரணம் செய்தவர் அப்பரடிகள்!

சமயகுரவர் அப்பரடிகள் எங்கே துன்பம் இருந்ததோ, எங்கே அவலம் இருந்ததோ அங்கெல்லாம் பயணம் செய்தவர்! பார் வாழத் திருவீதிப்பணி, திருக்கோளில் உழவாரம் என இப்படித் தொண்டே வாழ்வாய், வாழ்வே தொண்டாய் என வாழ்ந்து காட்டியவர் அப்பரடிகள்!

சமுதாயத்தின் மேடுபள்ளங்களை சரிப் படுத்தவும், நெறிப்படுத்தவும் முடியாமல் அன்று தொட்டு இன்று வரை, பொருளியல் தத்துவங்களும், ஆட்சியமைப்பும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இந்தநிலை மாறிடத் தர்மகர்த்தா முறையினை முதன்முதலில் உலகுக்குச் சொன்னவர் அப்பரடிகள்.

தமிழக வரலாற்றில் ஏழாம் நூற்றாண்டு, ஒரு பொற்காலம்! **"அருள் கடிந்து எழுகின்ற ஞாயிறே போன்று"** அப்பரடிகள் உலாவந்த காலம். அப்பரடிகள் சிவனடிக்கே பதித்த நெஞ்சுடையவர்; நடையரா பெருந்துறவு பூண்டவர்; தொண்டின் திருவுருவமேயாக நடமாடியவர். இன்று இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய சீர்திருத்தம் என்று பேசப்படும் அனைத்தையும் ஏழாம்நூற்றாண்டிலேயே சிந்தித்துச் செயலாற்றிய பெருமை அப்பரடிக்கு உண்டு.

உலக வரலாற்றில் முடியாட்சியை எதிர்த்து 14, 15 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் கிளர்ச்சிகள் தோன்றின. அமெரிக்காவில் கி.பி 1783 ஆம் ஆண்டிலும், பிரான்சு நாட்டில் கி.பி 1789 ஆம் ஆண்டிலும், சோவியத் ருஷ்யாவில் 1917 ஆம் ஆண்டிலும் தான் மக்கட் புரட்சி தோன்றியது. ஆனால், நமது அப்பரடிகளோ ஏழாம் நூற்றாண்டிலேயே பல்லவப் பேரரசை எதிர்த்து மனிதகுலத்தின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடியவர்.

மனிதன் அரசுக்கு அடிமையல்ல. மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கவே அரசு. அதிலும் சமயம், தனிமனிதனின் விருப்பார்வத்தைப் பொறுத்தது. இதில் தலையிட அரசுக்கு அதிகாரமில்லை என்று அப்பரடிகள் ஏழாம் நூற்றாண்டிலேயே உரிமை முழக்கம் செய்து வெற்றியும் பெற்றவர்.

அப்பரடிகள் சாதிகளை எதிர்த்தவர்; தீண்டாமையை எதிர்த்தவர்; மூடத்தன்மையான சடங்குகளை எதிர்த்தவர்; பல்வேறு சமயத்துறைகளிடையே இணைப்பைக் கண்டவர்; மதப் புரோகிதர்கள் வழி வேற்றுமைகளை உருவாகுதலை தவிர்த்தவர்; ஒருமை நிலையை உண்டாக்கியவர். நாடு முழுவதும் நடையாக நடந்து நாளும் நன்மையளிக்கும் அருள்நெறிக் கொள்கைகளை பரப்பி வந்த பெருந்தகையாளர்.

திருநெறிய தமிழ்நெறிக்கு புத்துளிர் அளித்த அண்ணல், அப்பரடிகள் திருஞானசம்பந்தருடன் சேர்ந்து நின்று அசைவன, அசையாதன அனைத்திலும் சிவம் பெருக்கிய உத்தமர். தமிழ்நாட்டில் திருத்தொண்டு வளர்வதற்காக அவதரித்தருளிய தமிழாளியர் பன்னிரு திருமுறைகளில் 4, 5, 6 ஆம் திருமுறைகளை அருளிச் செய்தவர். அப்பரடிகளின் திருமுறைகளை ஓதுவோர் திருநிறை செம்மையே செம்மை எய்துவர். இஃது உண்மை; உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பரடிகள் திருநெறிய தமிழ்க் கவிதை யுலகிற்கு தாண்டகம் என்ற புதுவகை யாப்பை வழங்கியருளியுள்ளார். இதனால் **"தாண்டக வேந்தர்"** எனச் சிறப்பித்து பேசப்படுகிறவர். திருஞானசம்பந்தரால் "அப்பர்" என்று அழைத்துச் சிறப்பிக்கப்பட்டவர். அந்தணரில் சிறந்த அப்பூதியடிகள் திருவடிப் போதுகளைப் பற்றிக்கொண்டு உய்தி பெற்றவர்.

"ஈழத்து இராமேஸ்வரம்" என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடை சிவன்தேவஸ்தானத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நூற்றாண்டு களாக சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தில் பெருந்தொண் டாற்றிய அமரர் சிவக்கன்று மருதப்பு சுவாமிகள் அப்பரடிகள் மீது அளவுகடந்த பக்தி கொண்டிருந்தார். அப்பூதியடிகளுக்கு நாவுக்கரசர் ஒரு குறியீடாகதர் திகழ்ந்தது போன்று மருதப்புசுவாமிகளும்நாவுக்கரசரினால் ஈர்க்கப்பட்டிருந்தார். மக்களிடம் "பிடி அரிசி" பெற்று ஆலயத்தில் திருத்தொண்டாற்றினார். பின்னர் மக்களே முன்வந்து கொடுத்த நிதியில் ஆலயத்தின் திருப்பணிகள் செய்யப்பட்டன. நாவுக்கரசரின் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற இலட்சியம் மருதப்பு சுவாமிகளின் மனதில் ஏற்படுத்திய பற்றுறுதியை என்ன வென்று சொல்வது? மருதப்பு சுவாமிகளினால் ஆரம்பிக்கப்பட்ட பணிகளைத் தொடர்வது ஒக்றே மக்கள் செய்ய வேண்டிய செயலாகும்.

அன்பு, மனிதகுலத்திற்கும் சி, உயர் குலத் திற்கும் சரி, இயல்பாய் அமைந்த அடிப்படைப் பண்பு – குணம். இந்த அன்பு காட்டுமிடம் நோக்கி வேறுவேறு பெயர் பெறுகிறது.

கடவுளிடத்தில் காட்டப்படும் அன்பு, பக்தி என்று கூறப்பெறும். அன்பினால் ஆன்மா நினைந்தும் உணர்ந்தும் கடவுளிடம் காட்டப் படுவது பக்தி. தூய சிந்தனை பிறக்க இறையன்பு வேண்டும். மனம், புத்தி, வாக்கு, செயல் எல்லாம் இறைவனை நோக்கி நடப்பதே பக்தி நிறைந்த வாழ்க்கை.

காந்தத்தை நோக்கி இரும்பு நகர்கிறது. அல்லது காந்தத்தால் இரும்பு ஈர்க்கப்படுகிறது. மனைவி கணவனை காதலிக்கிறாள். கொடி, கொப்பைப் பற்றிக்கொண்டு படர்கிறது. ஆறுகள் அலைகடலை நோக்கி ஓடிக் கலக்கின்றன. அதுபோல **"தைல தாரை"** போல இடையறாது இறைவன் திருவடிகளை சிந்தனை செய்வது பக்தி. **"இறைவனை நோக்கி ஆன்மா அழுதலே பக்தி"** நாம் வாழும் இந்தக் கலியுகத்தில் ஏற்ற நெறி பக்தி நெறியாகும். எரியூட்டப்பெற்ற நெருப்புக் கூட இடைவிடாது விசிறியும் ஊதியும் எரியும்படி செய்யத் தவறினால் அணைந்து போகும்.

அது போலவே நாம் அரிதில் முயன்று கிடைத்த ஞானம், வைராக்கியம், பக்தி முதலியவற்றை வாசனாமலம் அளித்துவிடும்! கொட்டும் மழையில் நனைவதில் குளிர் அதிகமாக இருக்காது. ஆனால் மழை ஓய்ந்த பின் மரத்தடியில் நின்றால் மரக்கிளைகளில் இருந்து விழும் சொட்டுக்கள் அதிக குளிரையும் நடுக்கத்தையும் தரும். அதுபோல மூலமல மாகிய ஆணவத்தைக் காட்டிலும் வாசனாமலம் வேகமாகத் தாக்கவல்லது. அதனால் ஆயுட்காலம் முழுவதும், ஜீவன் முத்தி நிலையிலும் கூட, பக்தி நலஞ் செறிந்த உறுதிப் பாடுடைய வாழ்க்கையைப் பேண வேண்டும்.

இந்த உலகத்தை நடத்துவது, இயக்குவது நம்பிக்கையும் புத்தியுமேயாகும். கடவுள், மனம், வாக்குகளைக் கடந்த பொருள். கடவுள் காணப்படாத பொருளன்று வாளா இருத்தல் தற்கொலைக்குச் சமம்.

நம்பிக்கையுடன்கடவுளைத்தேட வேண்டும். பக்தி செய்ய வேண்டும். இதன் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளைக் கண்டுவிடலாம். எவ்வளவு தான் பக்தி உயர்ந்ததாயினும் பக்தி இலட்சியமல்ல. பக்தி ஒரு சாதனமே!

அப்பரடிகளின் அருள்நோக்கால் இந் நிலை மாறவேண்டும். அப்பரடிகள் ஞானத் தலைவர். பக்திகொண்டு ஒழுகியவர். திருத் தொண்டே சார்பெனக் கருதி ஒழுகியவர். அவர்தம் வாழ்க்கையிலும் வாக்கிலும் திருத்தொண்டு மேவியிருந்தது. உடலுறுப் புக்கள் அனைத்தையும் திருத்தொண்டில் ஈடுபடுத்தும் வகையில் திருஅங்கமாலைப் பதிகம் அருளிச்செய்தார். திருநாவுக்கரசர், திருக்கோயில் தொண்டுகளைச் செய்யும்படி தூண்டுகிறார். பழங்காலத்தில் திருக்கோயிலில் தொண்டு முறையில் நிகழ்ந்த பணிகள் அனைத்தும் இன்று தொழில்களாக மாறி விட்டன.

அப்பரடிகள் உலகியல் சார்பு எதுவும் இல்லாதவர்; சிவன் தன் திருவடிகளே பற்றெனக் கொண்டு வாழ்ந்தவர். அவர் தம் படைக்கலம் ஐந்தெழுத்துக்கள். இதனை,


படைக்கலமாக உன் நாமத் தெழுத்தஞ் சென் நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன், எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன், தொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்தானே!

என்ற பாடலால் அறியலாம்.

"இடைக்கலம் அல்லேன்! எழு பிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்" என்ற சொற் றொடரால் பக்திமையில் உள்ள உறுதிப்பாடு விளங்குகிறது. அப்பரடிகள் சிவன் எம் பிரானுக்கு இராப்பகல் என்ற வேற்றுமை யின்றித் தொண்டு செய்தவர். சிவனை, தலைவனை நினைந்தொறும் நினைந்தொறும் அகங்குழைந்து மெய்வருந்தி அழுதவர். அதனாலேயே அவர் கண்கள் "மழை வாரும் **இணைவிழி**" என்று மாதவச் சிவஞான முனிவர் போற்றினார்.

**"தொழு தெழுந்து ஆடிப்பாடி**
**தோத்திரம் பலவும் சொல்லி**
**அழுமவர்க்கு அன்பர் போலும்**
**ஆவடு துறையனாரே!"**

என்ற அருள்வாக்கு உபதேசம் அல்ல. அவர் வாழ்ந்து முறை; நம்மனோர் பின்பற்ற வேண்டிய முறை, அப்பரடிகளின் அடிச்சுவட்டில் பக்தியும் தொண்டும் வளர்ந்தால் நாடு வளரும். சிவநெறி வளரும்; செந்தமிழ் வளரும்; அல்லன அகலும்; அறம் வளரும்; அன்பும் அமைதியும் இன்பமும் வளரும்; அன்பே அமையும்; பெருவாழ்வு தோன்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உற்ற நண்பன் வாமதேவனுடன்...



மூத்த மகளின் திருமணத்தில் குடும்பத்துடன்...



மணமேடையில் பெற்றோருடன்...



தேசபந் விருது பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுவிஸ் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களுடன்...


தேசபந் விருது பெறும் போது....





கம்பன் கழக அமைப்பாளருடன் மணிவிழா நாயகன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் உயிர்நாடி

மனித இனத்தின் நாகரிகத்தை அளக்கும் சிறந்த அளவுகோல் சமயம். சமயத்தின் மூலமே மனிதன் தனக்கும், தன்னைப் படைத்துக் காத்தவரும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை நன்கு அறிகின்றான்.

பொதுவாக சமயம் என்பது நம்மை யார் என உணர வைக்கிறது. நமக்குள்ள துன்பங்கள் யாவை என்பதை புலப்படுத்துகிறது. அத்துடன் பாவங்கள் ஏன் நேர்கின்றன என்பதைச் சுட்டுகிறது; அவற்றைக் களைவதற்கு வழிகள் யாவை என்று கூறுகிறது; அவ்வழியிலே நம்மைச் செலுத்துகிறது; அவ்வழியிலே இட்டும் செல்லும் குருவை அடைவிக்கிறது; முடிவிலே இன்பத்தில் ஆழ்த்துகிறது. இத்தகைய ஒரு சமயம் சைவசமயம். வேதாகமங்கள் பொது வாகவும் சிறப்பாகவும் கூறும் எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே உடையதே சைவசமயமாகும். சமயக் கருத்துக்களை நேர் முகமாக கூறும் நூல்கள் சமய சாத்திரங்கள். அவற்றை அனுபவ வாயிலாக தெரிவிக்கும் நூல்கள் தோத்திரங்கள்.

சைவசமயத்தின் பதிப் பொருளுக்கு கடவுள் என்ற பெயர் உண்டு. எல்லாப் பொருள் களையும் தன்னுள் அடக்கி யாவற்றையும் கடந் திருப்பது கடவுளுடைய தன்மை. புறத்தே விரிந்திருப்பதோடன்றே எல்லாப் பொருள் களின் உள்ளேயும் உறைந்திருத்தலால் கடந்திருத்தல் – உள்ளிருத்தல் என்ற இரண்டும் கடவுளின் இயல்பாகும். சைவசமயத்தில் முழு முதற் கடவுள் அழித்தற் தொழிலைச் செய்யும் ஒருவனே என்று சிவஞானபோதம் கூறும். அந்த ஒருவர் சிவபெருமானே என்று தோத்திர நூல்கள் மறுக்கக் கூறும். அந்தச் சிவன் தென்னாட்டவர்க்கும் மட்டுமன்றி என்னாட்ட வருக்கும் இறைவன் என்பததை அறுபூதி மான்கள் கூறியிருப்பதை அறிவோம்.

எல்லா உயிர்களும் சிவசம்பந்தம் உடையவையே. ஆயினும் இதை உணராததற்குக் காரணம் அவற்றுடன் இயல்பாகவே பற்றி நிற்கும் பாசம். இப்பாசம் விடுவதற்கு கருவியாகவே உடம்பும் நுகரத்தக்க பொருளும் படைக்கப்பட்டி ருக்கின்றன. இறைவன் உள் நின்று உணர்த்த உயிர் உணர்கிறது, தொழில் புரிகிறது. ஆயினும் தான் உணர்வதாக, தொழில் புரிவதாக மயங்குகிறது. உயிர் எந்தப் பொருளைச் சார்ந்து நிற்கிறதோ அந்தப் பொருளின் வண்ணமாகக் காட்சியளிக்கிறது. யான் – எனது என்ற செருக்கு அற வேண்டும். அது அறுவதற்கு இறைவன் திருவருள் துணை வேண்டும். இதனை அழகாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**"பற்றுக் பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு"**

என்று இதற்காக இலக்காக விளங்கியவர் விறன்மீண்ட நாயனார் சேக்கிழார் கூறுகிவார்.

**"செய்பற் கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார்**
**செய்ய கழல் பற்றி**
**எய்பற் றினையும் அறவெறிந்தார்**
**எல்லைதெரிய ஒண்ணாதார்**
**மெய்யத் தர்கள்பால் பரிவுடையார் எம்பி**
**ரானார் விறன்மிணடர்."**

உயிருக்கு இயல்பான பண்பு அன்பு. அதை நாம் குழந்தையிடத்து காணலாம் பணக்கர வீட்டுக் குழந்தை ஏழை வீட்டுக் குழந்தையோடு அன்புப் பாராட்டுகிறது. ஆனால் ஆணவம் மிக்க "பெரியோர்கள்" அவ்வன்புக்குத் தடையாக இருக்கிறார்கள். அப்பெரியோர் களோடு பழகப்பழக அன்பு சுருங்குகிறது. அவ்வன்பு சுருங்காமல் பெருதற்கு நூலோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறியை போதித்திருக்கிறார்கள். ஆகவே தான்

**"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை"**

என்று எந்த நிலையிலும் அன்பின் இன்றியமையாமையைக் கூறி, அன்பும் அறமும், பண்பும் பயனுமெனப் பின்னிக் கிடப்பதனை வள்ளுவர் வலியுறுத்தகிறார்.

**"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்திவர உங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு"**

என்று அறத்தின் திறத்தை விதந்தோதி இருக்கிறார். **"அறநெறி முதற்கே அரசின் கொற்றம்"** எனச் சங்கமும் **"அறநெறி பிழைத்தார்க்கு அறம் கூற்றாதலை"** ச் சிலம்பும், **"அருள் தரும் திறத்து அநனன்றி வலிய துண்டாமோ"** எனக் கம்பரும், தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் தலை காக்கும் என்று வியாசரும், யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை, யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைபிடி, யாவர்க்குமாம் "பிறருக்கு இன்னுரை தானே" என்று திறத்தை வலியுறுத்தியுள்ளார்கள். ஆகவே சைவத்தின் உயிர்நாடிகளாக அன்பும் அறனும் இடம் பெறுகின்றன.

இவ்வன்பு – பெற்றோர், உடன் பிறந்தோர், மனைவி, மக்கள், சுற்றம், அயலார், ஊரார், நாட்டார் என்று விரிந்து மேலும் விலங்கு, பறவை, கொடி என்று மற்ற உயிர்களிடத்தும் படர்ந்தும், உயிரினங்கள் அனைத்திலும் இறைமையை உணரத் தலைப்பட்ட காலத்து மெய்யுணர்வு தோன்றும். அவ்மெய்யுணர்வு மேலிடவும், பாசபந்தம் நீங்க, மக்கள் பேரானந்த நிலை பெறுவர்.

இன்றைய சமூகம் பொருளீட்டுவதை நோக்கமாகக் கொண்டு அன்பு, அருள், தியாகம் என்பதை எல்லாம் மறந்து நிற்கிறது. ஆசைப்பட்ட உலகில் அன்புக்கு இடமேது? அதர்மச் செயல்கள் தலைவிரித்து ஓடுகிறது. இளம் சமூகத்தில் சாதி, சமய வேறுபாடுகள் காணப்படுவது குறைவு. ஆனால் இன்று பிஞ்சு மனங்களிலும் நஞ்சாய் சாதி, சமய வித்துக்கள் ஊன்றப்பட்டு, அன்பெனும் ஆணிவேர் அழுகத் தொடங்கி விட்டது. இதன் விளைவாக வன்முறையில் நாட்டம் கொண்ட, சமூக விழுமியங்களை மறந்த, ஒழுக்கக் கேடான அமைப்பு உருவாகி விட்டது. இதிலிருந்து விடுபடுவதற்கு சமயம் காட்டும் அன்புநெறியை எப்படியாவது இளம் சமூகத்தினரிடம் புகுத்த வேண்டும்.

சைவ ஆலயங்கள் சமூக விழுமியங்களைக் கட்டிக்காக்கும் அறச்சாலைகளாக விளங்க வேண்டும். ஆலயங்கள் அன்பை வளர்க்குமிடமாக திகழ வேண்டும். சைவ நற்சிந்தனைகள், ஏழைகளுக்கு உதவுதல் எனும் இரண்டு வழிகளை கடைப்பிடிக்க வேண்டும். சமூகத்தை ஒதுக்கிவிட்டு சமயத்தை வளர்ப்பதும் பளனில்லை, வளர்க்கவும் முடியாது. ஆலயங்களில் "பிரசாதம்" வைப்பது ஆலயத்திற்கு வரும் ஏழைகளிற்கு வழங்குவதற்குத்தான். இப்படியான சமூக சிந்தனை உடைய நமது சைவசமயத்தில் சில "சமயி" களால் உருவாகி வரும் முறையற்ற செயல்கள் கண்டிக்கப்படுதல் அவசியமாகும், தேவை ஏற்படின் தண்டிக்கவும் வேண்டும்.

தமது ஆலயங்களில் காவற்தெய்வமாக உள்ள வைரவர் இறைவனால் படைக்கப்பட்டு ஆவணத்திற்கு ஆளாகிய பிரமாவிற்கு தண்டனை வழங்கினார் என்பது வரலாறு.

முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் கடவுள் யார் என்று அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. உடனே திருமாலிடமும் பிரமாவிடமும் சென்று தமது சந்தேகத்தைக் கேட்ட போது அவர்கள் இருவருக்கும் தலைக்கனம் ஏற்பட்டது. இருவருமே தாம்தான் முழுமுதற்கடவுள் எனக் கூறினார்கள். உலகிற்கு உண்மை விளங்கு வதற்கு சிவபெருமான் ஜோதி வடிவு எடுத்தார். ஜோதி வடிவத்தைக் கண்ட திருமால் உண்மையை உணர்ந்து கொண்டார். ஆனால் பிரம்மா, சிவனைப் போலவே எனக்கும் ஐந்து தலைகள் உள்ளன. என அகந்தையாகக் கூறினார். அதனுடன் இல்லாமல் உச்சியிலுள்ள தலையினால் சிவநிந்தனை புரிந்தார். சிவனின் முன் சக்தியின் கோபத்தீ குழந்தை யாக உருவெடுத்தது. சிவன் அக்குழந்தையை இதயத்தில் அமர்த்தி வைத்து ஞானமூர்த்தி யாக – ஸ்ரீ வைரவராக – இதயத்திலிருந்து வெளிவரச் செய்தார். சிவபிரானின் கட்டளைப்படி வேத வடிவமான நாளை தமது வாகனமாக்கி நிர்வாண கோலத்துடன் காட்சி கொடுத்தார். சிவபிரானின் அருளாணைப்படி பிரமாவின் ஒரு சிரசினைக் கொய்து அவரது அகந்தையை அடக்கினார்.

தமது மன இருளை நீக்கக் கூடிய ஞான மூர்த்தி வைரவர். அவரை பக்தியுடன் வழிபாடு செய்து அன்புள்ளவர்களாக மாற வேண்டும். ஆலயங்களில் முறைப்படியாக பூசைகள் நடைபெற வேண்டும். ஆலய விழாக்களில் ஆடம்பரங்களுக்கு இடம் கொடுக்காமல் பயனுடைய நிகழ்வுகளை நடாத்துதல் வேண்டும். புராணங்கள், இராமாயணம், பாரதம் போன்ற நூல்களை இக்காலத்திற்கு ஏற்றவாறு தக்க மாறுதல்களுடன் பிரசாரம் செய்ய வேண்டும்.

தமிழ் வேதமாக இருக்கின்ற தேவார, திருவாசகங்களை பண்ணுடன் ஓத வேண்டும். அறநெறிப் பாடசாலைகளை நடாத்த வேண்டும். இதன் மூலம் நல்லதொரு இளம் சமூகத்தை உருவாக்க வேண்டும்.

மங்கையற்கரசியார், குலச்சிறையார் காலத்தின் சுருங்கிவிட்ட அளவைவிட, இக்காலத்தில் சைவம் மோசமாகி விடவில்லை. எச்சரிக்கையாக இருந்து நல்ல சிந்தனையை வளர்த்து சைவம் தழைத்தோங்கி அன்பு நிறைந்த சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியதே இன்றைய அவசர அவசிய தேவையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைப்பாலை விட முனைப்பால் சிறந்த தன்றோ?

**"பாட்டுத்திறத்தாலே – இவ்வையத்தைப் பாலித் திடவேணும்"**

என்ற "கவிதை வெறி " கொண்ட பாரதியின் சிந்தனையில், கற்பனையில் எண்ணற்ற உயர் நோக்கங்கள் குமிழியிட் டெழுந்ததை அவர்தம் பாடல்களையும் கட்டுரைகளையும் கற்போர் நன்கு அறிவர். பொதுமக்கள் கடவுளை வழிபடுவதற்குத் திருக்கோயில்கள் இன்றியமையாதவை வழிபாட்டிற்கு இன்றியமையாத நல்ல சூழ்நிலையையும் தூய்மையையும் போற்றிக் காப்பவை அது போலவே பொதுமக்கள் தம்குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்தவர்கள், இவர்கள் கல்வியில் பயிற்சி பெறுவதற்கு எல்லா நிலைகளிலும் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் இன்றியமையாதவை என்பதை,

**"வீடு தோறும் கலையின் விளக்கம்**
**வீதி தோறும் இரண்டொரு பள்ளி**
**நாடு முற்றிலும் உள்ளன. ஊர்கள்**
**நகர்களெங்கும் பலபல பள்ளி"**

என்ற கவிதையில் புலப்படுத்துவார். வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னால் வரும் இளைஞர்கள் பெற்றுப் பயன்பெற வேண்டும். தம்மையும் உயர்த்தித் தாம் பிறந்த நாட்டையும் உயர்த்த வேண்டும் என்பது பற்றி பாரதி கனவு கண்டான். வறுமையின் காரணமாக இளைஞன் ஒருவன் கல்வி பெறுவதற்குத் தடை ஏற்படக்கூடாது என்பதையும் சிந்தித்துள்ளார். கவிஞர் செல்வர்களும் அரசும் இதற்கு வழிவகை செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவது போல்

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தன் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்.
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழக் கெழுத்தறி வித்தல்

தருமங்கள் யாவிலும் சிறந்தது. **"ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"** என்பது பாரதியின் முடிந்த முடிவு நமது நாட்டுச் செல்வந்தர்கள் இந்தக் கவிதை வரியை உணரவேண்டும். வெறும் ஆடம்பரங்களுக்கு செலவு செய்வதை நல்லவற்றுக்குப் பயன் படுத்த வேண்டும்.

ஆலயங்கள் நல்ல முறையின் வழிபாட்டிற்குரிய இடமாகத் திகழவேண்டும். ஆனால் இன்று நமது நாட்டில் நடப்பது என்ன? விண்ணுயர் கோபுரங்கள் கட்டுகிறோம் தடல்புடலான திருவிழாக்கள் ஒரு லட்சத்திற்கு மேலான பணச்செலவில் சினிமாக் கலாசார நிகழ்வு.......! இவற்றினால் விளைவது என்ன? **"திருவிழாவில் சண்டை"** இது தானே செய்தியாகக் கிடைக்கிறது. இந்தப் பணத்தில் ஊரிலுள்ள சனசமூக நிலையத்தை திருத்தி நல்ல கல்விக் கூடமாக மாற்ற முடியாதா? நமது பூமியில் எத்தனை பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இன்றிக் கிடக்கின்றன. யாராவது ஒரு பாடசாலையை திருத்தி அமைக்க முன்வந்திருக்கிறார்களா? **"நெஞ்சு பொறுக்குதில்லையே......!"** பாரதியின் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றன. எல்லாவற்றையும் அரசு செய்ய வேண்டும் என்பது சரியானதல்ல பொதுமக்களும் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச்**
**சேர்ப்பீர்"** என்றும்,

**பிறநாட்டு நல்லறிஞர் சரித்திரங்கள்**
**தமிழ் மொழியின் பெயர்த்தல் வேண்டும்**
**இறவாத புகழுடைய புது நூல்கள்**
**தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.**

என்று பாரதி யோசனை கூறுகின்றார். தமிழில் எல்லாக்கலைகளையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக் கொள்வதில்லை. தமிழ் மொழியின் எல்லாவற்றிற்கும் தக்க கலைச்சொற்கள் இல்லாத காரணத்தால் இவ்வாறு எண்ணுகின்றனர். எந்த மொழியிலும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றாலன்றிப் புதிய கலைக்கு வேண்டிய சொற்களும் சொற்றொடர்களும் அமைவதில்லை. பொருள்களை, கருத்துக்களை எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால் இவை தாய் மொழியின் கற்பித்தலைத் தொடங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால் தான் அனைத்தும் சீர்ப்படும்.

காப்பெற் சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை என்னும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை இப்படி பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்த நிலையைத் தாய்மொழி பயிற்று மொழியாக அமைவதிலும் சந்திக்க வேண்டும். ஆங்கிலக் கல்வி பற்றிய பாரதியின் சிந்தனையை நினைவு கூறவேண்டும். மொழியைக் கற்கக் கூடாது என்பது சரியானதல்ல, சிங்களம் வேண்டாம் என்றோம். சொன்னவர் அம்மொழியில் புலமையுடையவர்களாக இருப்பதைக் காணுகிறோம். ஆங்கில மோகத்தினால் தாய்மொழியை புறக்கணிக்க கூடாது. இன்று நம் தமிழ் பகுதிகளில் தாய்த்தமிழ் வளர்ச்சி எப்படியிருக்கிறது?

இலக்கிய இலக்கண வளமும், சொற் களஞ்சியப் பேறும் பெற்றுள்ள தமிழ் மொழியின் நீர்மையை அறிந்து பிறகலைகளையும் தமிழ் மொழியின் வடித்துத் தரும் பணியில் ஈடுபடுவோர்கள் தமது தமிழ்மொழி அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும் என்ற உண்மையை அறிவர் அப்பொழுது தான் **"சொல்லும் திறமையும் தமிழ் மொழிக் கில்லை"** என்ற வசையும் நீங்கும். தமிழ் மொழியும் வளர்ந்து மேலும் வளம் பெறும்.

**உள்ளத்தில்உண்மையொளி உண்டாயின**
**வாக்கினிலே ஒளியுண்டாகும்..........**

என்ற பாட்டடியில் **"கவிஞர் ஞானம் கனிந்த நலம்"** தெளிவாகப் புலனாகும்.

**"பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்**
**பாரை உயர்த்திடல் வேண்டும்"**

என்று கவிஞர் அறிவியல் கல்விக்கு ஆற்றுப்படுத்துகின்றார். தாய்மொழி மூலம் அக்கல்வி பெற வாய்ப்பு அமைக்கப் பெறுமானால் பருத்தி புடைவையாய்க் காய்ந்தது போன்ற பலனை நல்கும். விலைப் பாலை விட முனைப்பால் சிறந்ததன்றோ?

"பாரதி போற்றுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களுக்கு

வாழ்க்கையைப் பற்றிய அனுமானமோ, வாழ்க்கையில் ஒரு பிடிமானமோ இல்லாமல் நீரோடும் திசையில் வளையும் நாணல்போல் புறப்பட்ட இடமும் தெரியாமல், போகும் இடமும புரியாமல் போய்க் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு 21ம் நூற்றாண்டு உருவங்கள் தெரியாத ஒரு கனவாகவே இருக்கிறது. இன்றைய சமூகம் இளைஞர்களின் தகுதிக்குறைவுகளைச் சுட்டிக்காட்டத் தயாராக இருக்கிறதே தவிர அவர்களைத் தகுதிப்படுத்த தயாராக இல்லை. இளைஞனுக்கென்று ஒரு தனி முகமில்லை இளைஞனுக்கென்று ஒரு தனி நிறமில்லை. தாய் தந்தையர் அவன் தங்கை போல் நிறம் கொண்டவனாய் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஆசிரியர்களோ அவன் தங்கள் பாடத்திட்டத்தின் நிறம் கொண்டவனாய் இருந்தால் போதுமென்று எதிர்பார்க்கிறார்கள். சித்திரை மாதத்து ஓடையைப் போல் நம்பிக்கை வற்றிப் போன இந்தக் காலத்து இளைஞர்கள் – குறிப்பாக யாழ்ப்பாண இளைஞர்கள் வாழ்க்கைக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய இளைஞர்கள் கொண்டிருக்கும் விரக்திக்கு – ஒரு வகையான கலாசார சீரழிவுக்கும் – அவர்களது அவநம்பிக்கைக்கும் காரணம் அவர்கள் மாத்திரமல்லர்!.

வேர்களில் புழு விழுந்தால் இலைகளின் மேலென்ன வழக்கு அவர்களின் கண்களைப் போலித்தனமான கலைகளும் – அவர்களின் மற்றப்புலன்களை வெறும் கிளர்ச்சி ஏற்படுத்தும் கோரிக்கைகளும் விலைக்கு வாங்கிவிட்ட பிறகு இளைஞர்களில் தவறு காண்பது சரியில்லை என்று நினைக்கிறேன்.

திருக்குறள் படித்தால் உடனே திருத்திட வேண்டுமென்பதும் தேசிய கீதம் பாடினால் நாட்டுப்பற்று வந்துவிடும் என்பதும் மூட நம்பிக்கைகள் என்பதை நான் அறிவேன். இளம் வயதில் வாழ்க்கையோடு முட்டி மோதி அது தந்த காயங்களையும் தழும்புகளையும் சுமந்து கொண்டே முள்ளில் நடந்தவன் என்ற முறையில் அன்புக்குரிய இளைஞர்களே உங்களுடன் யதார்த்தமாக சிலவற்றை அன்புரிமையுடன் கூறுகிறேன்.

இளைஞர்களே! ஆட்டுவித்தால் ஆடும் பொம்மைகளாய், சாவி கொடுத்தால் சுற்றும் சக்கரங்களாய் நீங்கள் இருந்தால் உங்கள் வாழ்வு நகர முடியாத மோட்டார் சைக்கிள் ஆகிவிடும்.

இளைஞர்களே வாழ்வில் வெற்றி பெற்ற அனைவரினதும் வாழ்க்கைச் சரிதையைப் படியுங்கள் ஒரு சிறந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வாழ்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். சமய அடியார்களும், சாக்கிரடீஸ் போன்ற தத்துவ ஞானிகளும், அப்துல்கலாம் போன்ற விஞ்ஞான அறிஞர்களும், அன்னை திரேசா போன்ற சமூகத்தொண்டர்களினதும் வாழ்வைப் படியுங்கள். உங்களுக்கென்று சுயமான இலட்சியத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். உனது 17வது வயதிலிருந்து 20 வயதுக்குள் உனது திசை – இலட்சியம் எது என்பதை நீ தீர்மானிக்க தெரிந்து கொள்ளாவிட்டால் உனது வாழ்க்கைப் பயணத்தில் நீ பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வரவேண்டி இருக்கும்.

நமது நாட்டுக் கல்வி முறை அறிஞர்களை உருவாக்கவில்லை. மூளைக்குள் நுழைய மறுப்பவற்றை பல மாணவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து நுழைக்க முயலுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் இங்கு மருந்தும், பொறியியல் என ஒரு குறுகிய வட்டம். அனைவருக்கும் இது ஏற்புடையதல்ல. பல்துறைசார்ந்த கல்வி இங்கு இல்லை. இதுவும் மாணவர்களை தேர்வு என்றால் கலங்க வைக்கிறது. இந்தத் தேர்வு முறை சரியானதா என ஆராயப்பட வேண்டும். ஆனால் தேர்வு தான் உன் தலைவிதியை இங்கு தீர்மானிப்பதனால் அதற்கு உன்னைத் தயார்ப்படுத்தியாக வேண்டிய பொறுப்பு உனக்கு உண்டு. தனது ஆயுளின் ¼ பங்கை கல்விக் கூடங்களில் செலவிட்ட பிறகும் வாழச்சொல்லிக் கொடுக்காத – வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்காத – ஒரு சொட்டுத் தன்னம்பிக்கையைக் கூட ஊட்ட முடியாத இந்தக் கல்வி முறை – இரண்டு காலம் திணித்த திணிப்பை மூன்று மணி நேரத்தில் அவசரமாய் வாந்தி எடுக்கச் சொல்லும் அநியாயம் தான் அறியாததல்ல.

உலகில் சிறந்த கணித மேதைகள் பலருக்கு கணிதம் தவிர வேறு தெரியாது. பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. ஆனால் அவர்கள் அத்துறையில் சாதனையாளர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். கணித மேதை இராமானுஜர் அந்தக் காலத்தில் "மெற்றிக்குலோசன்" பரீட்சை சித்தியடையாதவர். எனவே உங்களது ஆற்றல் மிகையாக உள்ள துறையில் ஈடுபட்டு வெற்றியடைய வேண்டும். இதனையொட்டிய இலட்சியத்தை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். கல்வியின் நோக்கம் வேலை வாய்ப்பு மட்டுமல்ல, வேலை வாய்ப்பு என்பது கல்வியின் ஓர் அம்சம். கல்வி ஓர் மனிதனை வாழ்க்கைக்கு தயாராக வளர்த்து அனுப்ப வேண்டும். அவன் கல்விச் சாலையை விட்டு வெளியே வரும்போது இனிமேல் தான் நிறைய கற்க வேண்டும் என்ற வேட்கையை அவனுக்குள் விதைத்து அனுப்ப வேண்டும். இக்கல்விச் சாலையை விட்டு வெளியேறுகிறீர்கள். அனுபவத்தைத் தேட புறப்படுகிறீர்கள் தேடப் போகிறீர்கள்.

நல்ல நட்பு, நல்ல கல்வி, நல்ல இலட்சியம், நல்ல வாழ்க்கையைத் தரும். அதற்காக உழைக்கப் புறப்படுங்கள்.

குடும்பம் உனக்கென்ன செய்தது என்பதை விட குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் நீ என்ன செய்தாய்? என்று உன்னை நீயே கேட்டுக் கொள். சுகம் பெறுவாய்!

மனித குலத்தின் வாழ்க்கை ஓயாத மாற்றித்திற்குரியது. மாற்றத்திற்குக் காரணம் வளர்ச்சி, வளர்ச்சிக்கு உந்து சக்தி – ஒன்று, காலத்தின் பரிணாம வளர்ச்சி, பிரிதொன்று மாற்றம். மாற்றங்கள் வளர்ச்சிக்குத் துணை, அரண். எந்த ஒன்றும் தேங்கிவிட்டால் அழிந்து விடும், பயனற்றுப்போகும்.

மனித குலம், மாற்றங்களை விரும்பினால் வளர்ச்சி பொருந்திய வாழ்க்கை முறையை அலாவுதல் வேண்டும். இந்த உலகம் எப்படியிருந்தது என்று எவரும் கூறலாம். ஆனால் இந்த உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற, சொல்லுகின்ற, அமைகின்ற திசையில் மக்கள் செல்ல வேண்டும்.

அறிவு தேக்கமடைந்து போனால், உலக வாழ்க்கை ஸ்தம்பித்து விடும். அறிவு வளரும் தன்மை அது. நாள்தோறும் அறிவை வளர்த்துக் கொள்ளும் சமூகத்தில் தான் வளர்ச்சிக்கு வழியுண்டு, வாயில்கள் உண்டு மாற்றங்களும் ஏற்படும்.

வளரும் சமூதாயத்தில் பரிமாண வளர்ச்சியில் தோன்றுவதே புதுமை. புதுமை செயற்கையன்று. இயல்பான வாழ்க்கைப் போக்கில் – பரிமாண வளர்ச்சியில் தோன்றும் புதுமைகள் விவாதங்களைக் கடந்தவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"முன்னைப் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பற்றியதாய்"** என்றார் மாணிக்கவாசகர்.

பின்னைப் புதுமை, இனி எதிர்வரும் புதுமை. நம்முடைய சமூதாயத்தில் புதுமையை வரவேற்கும் இயல்பில்லாதவர்கள் பல ஆயிரம் பேர்கள் உண்டு. அவர்களையும் கடந்து தான் புதுமை வளர்ந்து வருகிறது இனியும் வளரும்.

ஆக்கபூர்வமான மாற்றங்களினால் புதுமையை உருவாக்கும் மிகப்பெரிய பங்கு இளைஞர்களிடத்'தே உள்ளது என்றால் மிகையாகாது. மாற்றங்களை பலவிதமான கிளைகளாக ஆராயலாம். வாழ்க்கையின் அடிப்படை மாற்றம் என்பதைக் கருதினால் நவீன தொழில்நுட்பம் முதலிடம் பெறுகிறது. பாலர் வகுப்பு முதல் பட்டப்படிப்புகள் வரை தொழில்நுட்பம் முக்கிய இடம் பிடிக்கிறது.

பாலர் பாடசாலைகள் நவீன கற்றல், கற்பித்தல் முறைக்கு மாற்றமடைந்து வருகிறது. சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் முதல் ஆரம்ப எண்ணும், எழுத்தும் கல்வி வரை தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நவீன சீனக்கல்வி முறை இதற்கு உதாரணமாக அமைகிறது. ஒலி, ஒளி பேழைகள் மூலம் சிறுவர்களுக்கான காட்டூண்கள் உருவாக்கப் பட்டு அதனைக் கொண்டு சிறுவர்களுக்கு விருப்பத்துடன் கூடிய கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

இடைநிலை, நடுநிலை வகுப்புகளில் தொழில்நுட்பம் என்பது ஒரு தனிப்பாடமாகப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கற்கும் கல்வியை, பயிற்சியுடன் இணைத்துக் கற்பிக் கும் முறை வளர்ந்து வருகிறது. மேல்நாடு களில் இம்முறை முற்றுமுழுதாக அறிமுக மாகியுள்ளது. நம் நாட்டில் தொடக்கப் பட்டிருப்பது "மாணவர்களும் தொழில் நுட்பமும்" என்பதில் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

பொருளாதாரம், மருத்துவம், கட்டடக் கலை போன்ற உயர் கற்கை நெறிகளில் மாணவர்கள் வெற்றி பெறுவதாயினும் தொழில்நுட்ப அறிவு முழுமையாகத் தேவை யானதாகும். உலகில் பொருளாதாரக் கணக்கீடுகள், பங்குச் சந்தையில் மாற்றங்கள் உடனுக்குடன் தீர்மானிக்கப்படும். நவீன பொருளாதார உலகில் வாழ்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உலகில் கணணி மென்பொருள், தகவல்துறை தொழில்நுட்பம் இவைதான் "வல்லரசுகளை: உருவாக்கப் போகின்றன.

மருத்துவமனையில் காணப்பட்ட மாற்றம் தொழில்நுட்ப வளர்ச்சியின் தேவையை உணர்த்துகிறது. சிறுநீரகம், இதயம், மூளை போன்ற பகுதிகளில் ஏற்படும் கோளாறுகளை இனங்காண்பதும், அதற்கான சிகிச்சைகள் யாவும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் நுட்பமாகச் செயற்பட்டு வருகிறது.

பழமையான நம்சொத்துக்கள், பயனுள்ள நூல்கள், சித்த மருத்துவம் போன்றவை தேய்ந்து காணாமல் போகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. புத்தகம் கட்டுதல், நூலகம், சேமிப்பு போன்ற பலவழிகளில் தொழில் நுட்பம் பயன்பட்டு வருவதனால் நம் பழைய பொக்கிஷங்கள் சிதையாமல் காப்பாற்றப் படக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

வளர்ந்து வரும் அறிவை இளைஞர்கள் திறமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த ஒன்றினதும் பயன், அவற்றை சரியாகப் பயன்படுத்துவதில் தான் உள்ளது.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனும் நிலை இருக்கக்கூடாது இளைஞர்களே நவீன தொழில்நுட்பத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சிக்கு பங்கு செய்யப் புறப்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடக நடிகனாக...



நாடக நடிகனாக...




சைவபரிபாலன சபை நிகழ்வில்...




இரா.செல்வவடிவேல் அவர்களின் தனியார்கல்வி நிறுவனம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இளைஞர்களே! உங்களோடு சில நிமிடங்கள்"

இளைஞர்களே! உங்களோடு மனம் திறந்து பேசுகின்றேன்: பேசமுயற்சிக்கின்றேன். நாளைய சமுதாயத்தின் மன்னர்கள் நீங்களே வெறுமனே உசுப்பேற்றுவதற்காக இதனைச் சொல்லவில்லை. உண்மை அதுதான்! இளைஞர் சக்தி தவறான பாதையில் செல்லக்கூடாது. உங்களுடைய தவறான பயணம் முழுச்சமூகத்தையும் சீரழித்து விடும்.

இளைஞர்களே உங்கள் மனதில் நல்ல இலட்சியம் உருவாக்கப்படல் வேண்டும். அந்த இலட்சியத்தைச் சுற்றிய தேவையற்ற பகுதிகளைச் செதுக்கி அகற்ற வேண்டும்.ஒரு கல்லிலிருந்து வேண்டாத பகுதிகளை வெளியேற்றி விட்டால் மாசுக்களை நீக்கி விட்டால் உள்ளிருந்து அழகான சிற்பம் வெளிப்படுகிறது. நாம் பொழுது போக்கிப் பாழாக்கும் ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கி அழிவை நோக்கி எடுத்து வைக்கும் அடியாகும். பாட்டில் பாட்டிலாக விதவிதமான கள், சாராயம்...... மதுவகைகளைக் குடித்து விட்டு விதவிதமான கறிகளைச் சுவைத்து, பலபல பெண்களோடு உறவு கொண்டு எழுந்து நோய் வந்து நொந்து மூச்சு இளைத்து, வாதம் கபம் வந்து கடூரமாக இருமி இறந்து போகிற மூடத்தனம், வெறிபிடித்த மாதிரி மரணத்தை நோக்கி பார்த்து ஓடுகின்ற தன்மை, இவை தான் வாழ்வின் இலட்சியமா?

இன்றைய இளைஞர்கள் அறிவுடையவர்கள் என்பதில் மறுப்பில்லை. ஆனால் செதுக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். செதுக்க வேண்டிய பல பகுதிகள் உண்டு. சாதி, வறுமை, அறியாமை, பழியுணர்ச்சி, பகைமை.... போன்றவற்றை முதலில் நீக்கியாக வேண்டும். அப்போது தான் நல்ல ஊர் உருவாகும். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பது பழமொழி. அதற்கு இடம் கொண்டு பொருள் கொள்ள வேண்டும். உயிரோடிருக்கும் போதே உன் தவறுகளைத் திருத்திக் கொள்.

இளைஞர்களே உங்கள் வாழ்வை உயர்த்துங்கள். இதற்கு முதலில் நல்ல கல்வி அவசியம். இப்போது பாடசாலைக்கு செல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். இயற்கையில் ஒருவருக்கு அறிவு நன்கு அமையப் பெற்றிருந்தாலும், பல நூல்களைக் கற்ற கல்வியறிவு இல்லையென்றால், அவன் இயற்கை அறிவை, அறிஞர்கள் பெரிதாக மதித்துப்போற்ற மாட்டார்கள். கல்லாதவர்! உயர்ந்த குடியில் பிறந்தாலும் உயர்ந்தவரல்லர்:கற்றவர் தாழ்ந்த குடியில் பிறந்தாலும், தாழ்ந்தவரல்லர். உயர்குடி, தாழ்குடி என்பது கற்றலை அடிப்படையாகக் கொண்டது.

வாழ்க்கை உணவினால் மட்டும் ஆனதல்ல. வாழ்க்கைக்கு களிப்பும், மகிழ்ச்சியும் தேவை. இன்றைய பொழுது போக்கு சாதனங்கள் நமது கலாச்சாரப் பண்பாடுகளைச் சீரழிக்கின்றன. களிப்பும் மகிழ்ச்சியும் இசை, நாடகம், திரைப்படம் ஆகியவைகளால் கிடைக்கும் என்று எங்கும் திரைப்பட மயக்கம், அந்தத் திரைப்படங்கள் இளைஞர்கள் தீய வழியில் செல்வதற்கு காரணமாக அமைகின்றன். இன்றைய திரைப்படங்களில் காமக்களியாட்டம், வன்முறை நிகழ்ச்சிகளே அதிகம் இடம்பெறுகின்றன. திரைப்படம் ஒரு நல்ல கலையே. திரைப்படத்தில் நல்ல இசை, மற்றும் கலையம்சங்களும் உண்டு. பணம் சம்பாதிக்கும் நோக்கம் ஒன்றையே கொண்டு இன்றைய திரைப்படங்கள் உருவாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துப்பாட்டு என்ற பெயரில் இசையும் நலிகின்றது. இளைஞர்களின் உணர்ச்சிக்கு முறுக்கேற்றி பணம் சம்பாதித்தல் என்பது மட்டும் தான் இன்றைய திரைப்படங்கள் செய்கின்றன. இவற்றைப் பார்த்து உங்கள் வாழ்வைச் சீரழிக்காதீர்கள். நல்லதோர் மனிதப்பிறவி: அதனைப் பயனுடைய முறையில் அனுபவிக்க வேண்டும்.

தமிழ் முத்தமிழாகவே பிறந்தது. தமிழிசை வளரக்க இசை கிராமம்தோறும் கலைப்பயிலகங்கள் உருவாக வேண்டும். இளைஞர்கள் நாடகமன்றங்கள் அமைத்து நல்ல நாடகங்களை எழுதி நடித்துப்பயில வேண்டும். முன்புபோன்று பௌர்ணமி தினங்களில் கலை நிகழ்வுகள் நடைபெற வேண்டும். மக்கள் வாழ்க்கையைச் சுமையாக கருதாமல் நடத்துவதற்குக் கலை துணை செய்யும்.

இன்றைய இளைஞர்கள் மாதா, பிதா, குருவை மதிக்கும் பண்பை இழந்து வருகிறார்கள். பெரியோரை மதிக்காத தன்மை, காட்டுமிராண்டிக் கூட்டத்தை உருவாக்கி விடும். நமது இதிகாச புராணங்கள் பெரியவரை மதிப்பதன் தேவையை விளக்குவதற்காகவே உருவாகின. நல்ல பண்புகளை எடுத்துக் கூறின. பெரியவர்களின் தவறுகள் இளைஞர்களைப் பாதிக்கிறது என்பதும் உண்மையே. ஒவ்வொருவரும் தமக்கு விதிக்கப்பட்ட பண்பாடுகளை மறக்கக் கூடாது. நல்ல குருவை மாணவன் என்றும் மனதில் வைத்திருப்பான்.

நமது நாட்டில் நடக்கும் அரசியலை இளைஞர்கள் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள ணேடும். நல்ல அரசு அமையா விடின் எந்தநாடும் எந்தத்துறையிலும் முன்னேற்றமடைய முடியாது. நடந்துவிட்ட யுத்தத்தின் வடுக்கள் என்றும் இருக்கவே செய்யும். இந்த வடுக்களை மட்டும் காட்டி அரசியல், ஆதாயம் அடைய முற்படு பவர்களை இனங்கண்டு அவர்களை அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். இது இளைஞர்கள் சக்தியினால் தான் செய்ய முடியும்.

கியூபாவின் ஆட்சித்தலைவராக பிரடல்காஸ்ட்ரோ விளங்கினார். தனக்கு வயோதிபம் வந்து விட்டது என்பதால் ஆட்சியை அடுத்தவருக்கு கொடுக்க வேண்டும் என்று கருதி அதனைச் செய்தார். தென் ஆபிரிக்காவின் விடுதலைக்கு காரணமாகவிருந்த நெல்சன்மண்டேலா, இரண்டாம் முறை ஆட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்தார். இந்தத் தலைவர்களையும் நமது நாட்டு நிலைமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நரை வந்த பின்னர், மரணத்தை அண்மிக்கும் காலத்திலும் அரசியல் பதவியில் பற்றுறுதி இதுதானா நாட்டைக் காக்க நினைப்பவர்களின் செயல்! இளைஞர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும். அனுபவத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தடவை தனது பேச்சில் "மாணவர்களே! அரசியலைத் தெரிந்து கொள்ளுங்கள்; கல்வியை முடித்துக் கொண்டு அரசியலுக்கு வாருங்கள்". எனக் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. ஒரு நாட்டின் ஆட்சி, நீதியைச் சார்ந்தது. அந்த நீதி சார்ந்த ஆட்சி முறையை காப்பாற்ற முன்வரவாருங்கள்.

இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியில் தனிப்பட்ட முறையிலும், கூட்டுமுறையிலும் பங்கேற்க வேண்டும். நமது நாடு சட்டத்தால் ஆளப்படுவது. ஆதலால் சட்டத்திற்கு மதிப் பளித்து ஒழுக வேண்டும். நடந்து கொள்ள வேண்டும். சட்டமும் விதிமுறைகளும் மதிக்கப்படும் நாட்டில் தான் மக்களாட்சி முறை பயன் தரும். சட்டத்தை முட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்குவது அராஜகத்திற்கு வழிவகுக்கும். இன்று வீதி ஒழுங்கு பேணப்படுவதில்லை. பொது இடங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற பண்பு தெரியாமல் நடந்து கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது வேதனை தருகிறது.

இளைஞர்களின் மனநிலையில் மீண்டும் ஆரோக்கியமான நிலை வர வேண்டும். இதற்கு இளைஞர்களுக்கு நல்ல ஆன்மீகம் புகட்டப்படல் வேண்டும். நமது நாடு சமயநெறிகளில் செழித்து வளர்ந்த நாடு. யாழ்ப்பாணகலாசாரம், கந்தபுராண கலாசாரம் எனப் போற்றப்பெற்றது, என்பதை நினைக்க வேண்டும். ஆன்மீகம் என்பது கடவுள் நம்பிக்கை மட்டுமல்ல சமயநெறி சார்ந்த சடங்குகளும் அல்ல.

ஆன்மீகம் என்பது ஆன்மாவின் உயிரின் தரத்தை உயர்த்திக் கொள்ளும் கொள்கை, வாழ்க்கைமுறை, அன்பு, பொறுத்தாற்றும் பண்பு, மனிதர்கள் மீது விருப்பு, வெறுப்பற்ற உளப்பாங்குடன் பழகுதல், பிரிதின்நோய், தன்நோய் போல் போற்றுதல் ஆகிய உயர்பண்புகளைப் பெறும் முயற்சி முதலியன ஆன்மீகம்.

இந்த முயற்சியுடைய வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கை இவைகளைத் தனியே பெறமுடியாத நிலையில் பெறுதலுக்குரிய சாதனம் கடவுள் வழிபாடு!. கடவுளை **"எண்குணத்தான்" "குறைவிலாநிறைவு" "கோதிலா அமுது"** என்றெல்லாம் போற்றுவர்.


கடவுளை வழிபடுதல் என்பது கடவுள் வழிநிற்றல் வாழ்தல் என்பதாகும். கடவுளை முன்னிட்டு வழிபாடு நிகழினும் அந்த வழிபாடு கடவுளுக்கல்ல: ஆன்மாக்களுக்கே! அன்பின் பழுத்த மனம் பெறுதல் ஆன்மீகம், பிறருக்கென முயலும் வாழ்க்கை நெறி, ஆன்மீகநெறி, தியாகங்கள் செய்வது, ஆன்மீக வாழ்க்கையின் அடையாளம், தியாகமில்லாத வழிபாடு பயனற்றது.

நாம் அனைவரும் ஆன்மாவில் சிறந்து விளங்குவதே இலட்சியம்!

**"ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்**
**உலகு இன்பக் கேணி"**

என்ற சிந்தனை நமது வாழ்வாக மலரவேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களே காதல் செய்வீர்!

தூய அன்பின் காதலின் வெளிப்பாடு எவ்வாறு அமையும், அமைய வேண்டும் என்று சிந்திப்பது அவசியமாகிறது. இறைவன் எல்லோருக்கும் இரண்டு கண்களையே வழங்கியிருந்த போதிலும், எல்லோருடைய கண்களும் ஒரேமாதிரியாகப் பார்ப்பதில்லை. ஒரு மனிதனின் கண்களுக்கு இனிமையாகத் தோன்றக்கூடியது மற்றொருவரின் கண் களுக்கு இனிமையாகத் தோன்றுவதில்லை. எனவே அழகு என்பது காண்பவரின் கண்களைப் பொறுத்ததாகவே இருக்கிறது.

இவ்வாறு ஒவ்வொருவரும் தன் கண்ணுக்கினியவற்றை விரும்புவதனாலே கிரேக்க நாட்டிலும் "ஒரு தேவதை ஆணையும் பெண்ணையும் முதலில் ஒன்றாகவே படைத்து, ஆனால் மற்றொரு தேவதை அவர்கள் இருவரையும் வெவ்வேறாகப் பிரித்துவிட்டது." அதன் காரணமாக அவர்கள் தங்களின் மற்றொரு பாதியைக் கண்டுபிடிக்கும் வரையில் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்று ஒரு கதை உண்டு.

வெறும் கண்கள் இணைவதால் பயனில்லை. இருவரதும் மனசும் இணைய வேண்டும். இன்றைய இளம் தலைமுறை தவறுவிடும் இடம் இதுவேயாகும். கண்ணுக்கு அழகாகத் தெரிபவர்கள் மனதளவில் இருண்ட இயல்பு கொண்டவர்களாக இருந்துவிடலாம். காதலில் ஏமாற்றம் வந்துவிட்டால் சகிக்கமுடியாது. ஒருவரை ஒருவர் பாசத்தால் ஈர்த்துக்கொள்ள வேண்டும். இதனையே கம்பனும்,

பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து ஒருவரையொருவர் தம் உள்ளம் ஈர்த்தலால் வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்

என்று இராமன் - சீதை காதல் வாழ்வை எடுத்துரைக்கின்றார்.

இன்று ஆணும், பெண்ணும் கொள்ளும் காதல் "கைக்கிளை" யாகவே காணப்படுகிறது. அதாவது ஒருவன் தான் கண்ட பெண்ணை அளவுக்கதிகமாக நேசிக்கின்றான். ஆனால் அவளோ, அவனை விரும்பவில்லை. இத்தகைய கைக்கிளை நிலை காரணமாக "காதலில் வன்முறை" தோன்றி வருகிறது. காதலிப்பதற்கு முன்னர் இருவரது நிலையும் ஒன்றுதானா? என்பது முடிவாக வேண்டும். இருவரும் ஒருமைப் பட்டு ஒருவர் மற்றவரைக் காதலித்தால் அதனை "பெருந்திணை" என்றும் தமிழர் கூறுவர். ஒருதலைக் காதலில் ஒருவர் மற்றவரைக் கவர ஒரேவழி தம் அன்பை மற்றவர் மீது அளவுக்கதிகமாகச் சொரி வதுதான். ஆண், வலிமை மிக்கவனாதலின் தான் விரும்பிய பெண்ணைக் கவர்ந்தோடி அவள்மீது தன் அன்பைச் சொரிந்து அவளைத் தனக்குரியவளாக தான் நேசிப்பதுபோன்று அவளும் தன்னை நேசிப்பவளாய் ஆக்கி இல்வாழ்க்கை நடத்துகின்றான். இவ்வாறே முற்காலத்தில் நிகழ்ந்தது. ஆனால் இன்று பணமும் பதவியும் தன்னை விரும்பாதவனையும் விரும்பச்செய்யும் மாய ஆற்றல்களைப் பெற்றுவிட்டன. இதன் விளைவு இருவருக்கும் வாழ்க்கையில் தோல்வி! வாழ்வின் வசந்தத்தை இழந்த ஏக்கம்!! இதனால் தகாத உறவுகளை நாடி ஓடும் அவலம்.

இன்றைய இளம் தம்பதியரில் பெரும்பாலானவரிடம் மன ஒற்றுமையற்ற இல்வாழ்க்கைதான் காணப்படுகிறது. நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்குகள் குவிவது இதனைத் தெளிவாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றது. விவாகரத்தும் சட்டப்படி பெற்றுவிடுகிறார்கள். இதன்பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்களா? என்றால் பெரும்பாலும் இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக் கின்றது. தமிழர்களின் இனிய குடும்ப வாழ்வு அழிந்து வருவது கண்டு இரத்தக் கண்ணீா வடிக்க வேண்டியிருப்பது மட்டுமல்ல வளமாக வாழவேண்டிய இளம் சமூகம் பொருந்தாத உறவை பெரும்பாலும் தாமே ஏற்படுத்தி துன்பப்படுவதைக் காணும்போது சிரிப்பதா? அழுவதா? என்று புரியவில்லை. கவியரசு கண்ணதாசனின் ஒரு திரைப்படப் பாடலில் பின்வரும் வரிகளை எண்ணிப் பார்க்கின்றேன்.

பெண்குரல் :- பெற்றவர்கள் பார்ப்பதில்லை பெருமை என்னவோ?

ஆண்குரல் :- அவர்கள் மற்றவையும் பார்ப்பதினால் நன்மையல்லவோ? நன்மையல்லவோ?

"எத்தனை மலர்கள் தாவும் பட்டாம் பூச்சி"

சென்ற கட்டுரையில் குறிப்பிட்டதை இந்த இடத்தில் நினைவுபடுத்த விரும்பு கிறேன். "ஆண் கெட்டுப் போனால் சம்பவம், ஆனால் பெண் கெட்டுப்போனால் சரித்திரம்" ஆண்களின் தவறுகளுக்கு இயற்கை தண்டனை கொடுக்கவில்லையே என்பது எனக்கும் ஆதங்கமாகவே உள்ளது. எனவே பெண்களே உங்கள் வாழ்க்கைத் துணை யைச் சரியாகத் தெரிவு செய்யுங்கள். இன்பமாக வாழுங்கள்.

பெண் வழுக்கி விழுந்து அவளை அவமதிக்கும் இக்கால உலகம் ஆண் வழுக்கி விழுந்துவிடின் அவ்விதம் செய்வதில்லை. மதிப்பிற்குரிய மனிதன் போன்றுதான் அவன் எல்லோருடனும் சேர்ந்து பழகுகின்றான். அவனிடம் பணம் இருந்தாலோ அவனுடைய அந்தரங்கச் சாக்கடை வாழ்வெல்லாம் அழகிய திரையில் மறைக்கப்பட்டு அவனும் பெருமைக்குரிய பெரு மனிதனாக விளங்குகின்றான். இந்நிலை மாறவேண்டும். கற்பை இழந்தவள் போன்று கற்பை இழந்தவனும் அவன் எவ்வளவு செல்வமும், செல்வாக்கும் உள்ளவனாக இருந்தபோதிலும் "தலையின் இழிந்த மயிர்" போன்று சமூகத்தால் ஒதுக்கித் தள்ளப்படல் வேண்டும்.

காதல் சரியானதாக அமையாவிடின் அதிலுள்ள பேரபாயம் உணரப்பட வேண்டும். பெண்கள் தான் அதிகளவு எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று மீணடும் மீண்டும் வலியுறுத்த வேண்டி உள்ளது. அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கலாச்சாரச் சீரழிவு பற்றி யாவரும் அறிவோம். இங்கு பெண்கள் தான் பாதிப்படைந்து வருகிறார்கள் என்பது வெளிப்படை. ஆனால் எப்படித்தான் எடுத்துரைத்தாலும், இடித் துரைத்தாலும் இப்போதைய நாகரிக நங்கையர் காதில் ஏதும் விழுவதாக இல்லை. சிங்காரித்துக்கொண்டு வெளியில் சுற்றித் திரிதலும், ஆண் இனத்துடன் கலந்து நடமாடுவதிலும் அவர்கள் இன்பம் காண்கிறார்கள். அவ்விதம் செய்வதால் எத்தனை இளைஞர்களின் உள்ளங்களைக் கெடுக்க ஏதுவாவதோடு தாங்களும் கெட்டுத் தொலைய வழி ஏற்படுகிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. சிநோ,பௌடர் பூசி மினுமினுக்கும் சேலையுடன், மிடுக்கு நடையுடனும், உடலின் பகுதிகள் இடை யிடையே வெளியே தெரியக்கூடியதாக சாலையின் நடுவில் செல்லும் பொழுது மரியாதையுள்ள ஆண்கள் தாம் ஒதுங்கிச் செல்ல வேண்டியதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு செல்லும் போது பெண்கள் தாம் இவ்விதம் தவறாக நடந்து கொள கிறார்கள். ஆண்கள் அவ்விதம் நடந்து கொள்வதே இல்லையென்று எண்ணிக் கொள்ள வேண்டாம். "அகில உலகத்திலும் ஆண்களைப் பிடிக்க பெண்களால் கணனிகள், பொறிகள், படுகுழிகள் ஆகியவை நிரப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பெனார்ஷா கூறுவது போன்று நானும் கூறவில்லை. பெண்களைத் தங்கள் மாயவலையில் சிக்கவைக்க ஆண் இனமும் வேலைசெய்கிறது என்றுதான் கூறுகிறேன். பஸ்களிலும், பீச்சுகளிலும், கட்டடங்களிலும், கடைத்தெருக்களிலும், பொது இடங்களிலும் பெண்களைப் பார்த்து தங்களுக்குள்ளே கேலிச்சிரிப்பு சிரித்து நையாண்டி செய்து கொள்வதற்காக ஆண்கள் கூட்டம் அலங்காரமாக உடை உடுத்திக்கொண்டும், சீட்டியடித்துக் கொண்டும், இரவில் மோட்டார் சைக்கிளில் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருப்பதைக் கண்டு நம் நெஞ்சம் நெகிழ்கிறது. அவர்களின் இக்காம உணர்ச்சியைத் தூண்டி கண்களால் செய்யப்படுவது ஒருவகை விபச்சாரமேயன்றி வேறில்லை.

ஆதலின் ஆணும் பெண்ணும் தங்களுக்கு உரிய காலத்தில் இறைவன் தங்களுக்கு அளிக்கும் இன்பக் கிளர்ச் சியைக் கட்டுப்படுத்தி செயலாற்ற வேண்டும். கட்டுப்படுத்திச் செயலாற்றுவதென்பது மன அடக்கத்துடன் திகழ்ந்து இல்லற வாழ்வில் புகுவதேயாகும். ஆனால் அவ்விதம் செய்வதற்குப் பதிலாகச் சிலர் அந்த வேட்கையைத் தணிப்பதற்காக மருந்துண் கின்றனர். இதனால் ஏற்படும் தீய பலன்களை அவர்கள் அறியாது செயலாற்றுவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். உயிர் நிலையில் வன்மை இருந்தால்தான் ஒருவனுக்கு அறிவுத் தெளிவு, நினை வாற்றல், வீரம், மனஉறுதி, அழகு ஆகிய எல்லாவித நலன்களும் ஏற்படும். இல்லையேல் ஒன்றுமே இல்லை.

தங்களின் பால் உணர்ச்சியால் ஏற்படும் ஆற்றலைத் தங்களின் குறிக்கோளின் மீது செலுத்திச் செயலாற்றுகின்றவர்கள் பெருவெற்றி பெற்றுவிடுகிறார்கள். உலகில் அரும்பெரும் செலாற்றிய 'பெரியோர்கள் எல்லாம் அவ்விதம் செய்தவர்களாதான்.

சிலர் புலனடக்கம், புலனடக்கம் என்று கூறிக்கொண்டு திருமணம் செய்யாது இருக்கின்றனர். புலனடக்கம் என்றால் தீய வழியில் செல்லாது அறிவு வழியில் அளவோடு சென்று அடக்கமாக இருப்பதைக் குறிக்குமே அன்றித் திருமணம் முடிக்காது இருப்பது என்று பொருள்படாது. ஒவ்வோர் ஒறுப்பையும் ஒவ்வோர் தொழில் ஆற்றுவதற்காக படைத்திருக்கும் இறைவன் இன உறுப்பையும் அதற்குரிய தொழிலை ஆற்றுவதற்காகவே படைத்துள்ளான். அதனுடைய தொழில் இன்பம் நுகர்வதும் மக்கள் உற்பத்திசெய்வதும் ஆகும். இதை உணராது தம்முடைய வேட்கையைத் தணிப்பதற்கு மருந்துண்பதோ, மணம் முடிக்காதிருப்பதோ பெரிதும் தவறுடையது என்பதில் ஐயமில்லை. எனவே தவறான புலனடக்கத்தை கடிந்தும் தாம் அத் தவறினைச் செய்யாததற்காக திருமூலர் "அஞ்சும் அடக்கில் அசேனமாம்" என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

சிலர் போலித் துறவுறம் பூண்டு தங்களுக்கே தாங்கள் இழிவையும் அழிவையும் உண்டுபண்ணிக் கொள்கின்றனர். ஏன் அவர்கள் இவவாறு வெளியே ஒரு கோலமும் உள்ளே ஒரு கோலமும் கொண்டு திரியவேண்டும் என்பதுதான் விளங்கவில்லை. இல்லறம் நடத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிவுடையதா? போலித்துறவறம் பூண்டிருப்பது பெருடையுடையதா? என்று கேட்கின்றேன்.

துறவறம் என்பது எளிதானதல்ல. மாமுனிவரான விசுவாமித்திரர் கூட மேனகையைக் கண்டு மயங்கிவிட்டார் என்று நாம் புராணக் கதையில் படித்துள்ளோம். காட்டில் கடும்தவம் செய்த அம் மாமுனிவருக்கே இதுதான் நிலையென்றால், உலகில் பலவித மாய ஆற்றல்களுக்கு நடுவே வாழ்ந்துகொண்டு துறவறத்தைக் கொண்டிருப்பது மிகமிகச் சிரமமான செயலாகும். கோடியில் ஒருவர் அப்படி இருக்கலாம். உலகில் வாழ்ந்தும், உலகியலில் ஈடுபட்டும் பற்றுநீங்கிவாழும் வாழ்வு தவம்செய்வதைவிட எவ்வளவோ சிறந்ததாகும். துறவறத்தைவிட இல்லறம் எவ்வளவோ மேலானது என்பதை



"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்

போஒய்ப் பெறுவது எவன்"

என்று திருவள்ளுவம் எடுத்துரைக்கின்றது.

ஆதலில் இல்லறம் என்பதே எல்லா வற்றிலும் மேலானது. அது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட இன்ப வாழ்வாகும். அந்த இன்பவாழ்வு அமைவது ஆண், பெண் இருபாலாரினதும் கைகளிலேயே உள்ளது. காதலால் ஒருமித்து ஆதரவுப்பட்டதே இல்வாழ்க்கை. எனவே இளைஞர்களே! காதல் செய்வீர்! இன்பமாக வாழ்வதற்காக காதல் செய்வீர்!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலும் சுவையும் வேறாகும்?

ஆயிரம் நரம்புகளையுடைய மகதி யாழில் வல்லவராகிய நாரதர் முனிவர் தமக்கு அரிதில் கிடைத்த தேவ மாங்கனியை சிவபெருமானது திருவடியில் வைத்து வணங்கினார். பின்னர் விநாயகரும், முருகனும் தந்தையை வணங்கி அக்கனியைத் தமக்குத் தருமாறு வேண்டினர்.

"நீங்கள் இருவரும் ஒருகனியைக் கேட்பதனால் உங்களில் எவர் அகில உலகத்தையும் முதலில் வலம்வருகிறீர்களோ அவருக்கே இப்பழம் உரியதாகும்" என்று சிவபெருமான் கூறினார். முருகன் மரகத மயில்மீது பறந்தார். விநாயகர் சிவன் பார்வதியை வலம்வந்து கனியைப் பெற்றார். இக்கதையை அறியாதவர் யாரும் இருக்கமாட்டார்கள்.

கனி பெற்ற வரலாறு நுண்பொருள் கொண்டதாகும். ஒரு காலத்தில் பிருதுவி முதல் அளவிலா உலகங்களையும் ஒருநாளில் சுற்றிவருகின்றவன் எவனோ அவனே தேவர் யாவரிலும் பெரியோன். அவரே பரப்பிரமம் என்று தேவர் முதல் பதினெண் கணத்தவர்களுங் கூடிய சபையிலே பேசித் தீர்மானித்தார்கள். அவ்வாறு சுற்றிவருவதற்கு அரிபிர மாதியருந்தம்மாலாகாதென இருந்துவிட்டனர். இதன் பின்னணியிலேயே இக் கனிபெற்ற கதை வருகிறது.

ஒரு கனியை இருவரும் கேட்டால் கனியைப் பகிர்ந்து தரமுடியாதா? அல்லது அகில உலகங்களையும் ஒரு கணத்தில் ஆக்கியும், அழித்தும் ஆடல் புரிகின்ற இறைவன் மற்றொரு கனியை உண்டாக் கித்தர முடியாதா? காரைக்கால் அம்மையார் கேட்டபொழுதெல்லாம் கனி வழங்கிய வள்ளலால் வழங்கமுடியாது என்று ஒன்று உள்ளதா?

தம்பியே கனி பெறுக என்று தமையனாரும், தமயனே கனி பெறுக என்று தம்பியும் ஒற்றுமைப்பட்டிருக்க முடியாதா? அகில உலகங்களையும் ஒரு நொடியில் வலம்வரும் முயற்சிக்கு ஒரு கனி ஊதிய மாகுமா? சகல வல்லமையும் உடைய கணபதிக்கு உலகை வலம்வரும் வல்லமை இல்லையா? சிவத்தை வலம்வருவதே உலகை வலம்வருவதாகும் என்பதை அறிவின் வடிவாய் ஆறுமுகவேல் அறியாததா? இவ்வாறு இக்கதையில் பல ஐயங்கள் ஏற்படுகின்றன அல்லவா!

"சிவம்" என்ற ஒன்றினுள் எல்லாவற்றையும் காணும் தன்மை ஒன்று. எல்லாவற்றினுள்ளும் சிவத்தைக் காணும் தன்மை மற்றொன்று.

இதனைத்தான் ஆனைமுகன், ஆறுமுகன் என்று இரு வடிவங்களாக நின்று ஒரு பரம்பொருள் நமக்கு உணர்த்தியது.


அரும்பு – சரியை, மலர் - கிரியை, காய் - யோகம், கனி – ஞானம் எனவே சிவத்தின் கண் இருந்த கனி ஞானமாகும். ஞானத்தில் விருப்பம் ஏற்படவேண்டும் என்பதைத் தெரிவிக்க விநாயகரும் வேலவரும் விரும்பினார்கள். ஞானத்தைச் சிதைக்கமுடியாது என்பதால் சிவன் கனியை இரண்டாக்கவில்லை. சிவத்திற்கு புறம்பாக வேறு இல்லை என்பதை தெளிவாக்க விநாயகர் சிவனை வலம்வந்து ஞானமாகிய கனியைப பெற்றார். எல்லாம் அவனே" என்பதைத் தெரிவிக்க வடிவேற் பெருமான் உலகை வலம்வந்து தாமே ஞானக்கனியாக நின்றார். ஞானமே முருகன் ஞானபண்டிதன் ஞானந்தான் உருவாகிய நாயகன் ஞானமாகிய கனியை தாங்கும் விநாயகர் ஞானாகரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவிப்பு நிகழ்வின்போது...



சொற்பொழிவின்போது...



குருவுடன் தம்பதி சமேதராக...



ஆசிரிய சேவையில் 25வது ஆண்டு வெள்ளிவிழாவில்
தாயின் ஆசீர்வாதம் பெறல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வலோகங்களையும் ஒரு நொடிப் பொழுதில் வலம்வரவும், எல்லாவற்றையும் அறியவும், படைக்கவும், காக்கவும், அழிக்கவும், மறைக்கவும், அருளவும் வல்லவர் முழுமுதற்கடவுளாம் முருகக் கடவுள் ஒருவரே என்று தேவரும் யாவரும் தெளிந்து உய்யும் பொருட்டே இக் கதை உருவானதாகும்.

விநாயகர் வேறு, முருகன் வேறு என்று நினைக் வேண்டாம். ஐங்கரனும், ஆறுமுகனும் ஒனறே. பாலும் சுவையும் வேறாகுமா?













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லோர் தொடர்பு

ஓர் ஊருக் சாமியார் வந்தார். அவர் நன்றாகப் பேசக்கூடியவர். சத்சங்கத்தைப் பற்றி அடிக்கடி வற்புறுத்திச் சொல்வார். அவர் அன்று சில நண்பர்களை அழைத்து நான் ஓர் அற்புதம் செய்து காட்டுகிறேன் என்றார். என்ன அற்புதம் என்று கேட்டார்கள். அவர் அவர்களை ஓர் குளக்கரைக்கு அழைத்துச்சென்றார். ஒரு சிறிய கல்லை எடுத்து குளத்தில் போட்டார். அது நீரில் அமிழ்ந்து விட்டது.

கல் எங்கே என்று சாமியார் கேட்டார். நீரில் அமிழ்ந்து விட்டது என்றார்கள். "கல் நீரில் மிதக்குமா?" என்று கேட்டார் சாமியார். மிதக்காது என்று விடை வந்தது. இத்தனை சிறிய கல்லே நீரில் அமிழ்ந்துவிட்டதே. ஒரு பெரிய கல்லை தண்ணீரின்மேல் மிதக்கச்செய்ய முடியுமா? என்றார் குரு. முடியவே முடியாது" என்றனர்.

நான் மிதக்கச் செய்கிறேன். நீங்கள் ஒருமணிநேரம் கழித்து வாருங்கள் என்று கூறிவிட்டு தன்னுடைய சிஷ்யர்களை அழைத்து அங்கே கிடந்த பெரிய மரக்கட்டையை உருட்டி குளத்தில் மிதக்கச்செய்தார். அந்தக் கட்டையின்மேல் பெரிய குண்டுக் கல் ஒன்றைத் தூக்கிவைக்கும்படி சொன்னார். கட்டை சிறிது தண்ணீரில் ஆழ்ந்தாலும் அதன் மேலிருந்த கல் அமிழவில்லை. ஒரு மணி நேரத்தில் ஊர்மக்கள் சாமியாரின் அற்புதத்தைக் காண வந்துவிட்டார்கள். குளத்தில் குண்டுக்கல் தாழாமல் மிதந்ததைக் கண்டார்கள். ஆனால் ஆச்சரியப்படவில்லை. சாமியார் மக்களைப் பார்த்துக் கேட்டார். கல் நீரில் அமிழ்ந்துபோகாமல் நீரின்மேல் இருக்கிறதா? இல்லையா? ஆம். இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லையே கட்டை மிதக்கிறது. அதன்மேல் கல் இருப்பதனால் அது நீரில் அமிழவில்லை. அப்படியானால் கல் கட்டையாக மாறிற்றா? அதன் பாரம் குறைந்துவிட்டதா? இல்லை.

"கல் கல்லாகவே இருந்தாலும் கட்டையின் சார்பினால் நீரின்மேல் மிதக்கிறது அல்லவா?"

"ஆம்"

"இப்படித்தான் இயல்பாக பிரபஞ்சச் சேற்றுள் அமிழ்கிற தன்மை படைத்தவராக ஒருவர் இருந்தாலும் இதில் அமிழாமல் மிதக்கும் உண்மைத் துறவிகளைச் சேர்ந்தால் அவர் பிரபஞ்சச் சேற்றில் ஆழாமல் இருக்க வழிபிறக்கும்."

இப்போது சாமியார் பேச்சைக்கேட்டு யாவரும் வியந்தார்கள்.

கல் தனியாக இருப்பதனால் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், குறைந்த பாடமுடையதாக இருந்தாலும் தண்ணீரில் ஆழ்ந்துவிடும். ஆனால் எவ்வளவு பாரமுடையதாயினும் மிதக்கும் கட்டையோடு சேர்ந்தால் அதுவும் மிதக்கும். அதுபோல எவ்வளவு பொல்லாதவராக இருந்தாலும் நல்லவர்களைச் சேர்ந்தால் அவர்களும் அறியாமை என்னும் நீரில் ஆழமாட்டார்கள். சத்சங்கம் அவ்வளவு சிறப்பானது என்று சாமியார் சொன்னார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியத்திற்கு வழிகாட்டிய இந்துசமயம்

பாரத நாட்டில் தொன்றுதொட்டு சாருவாகம், பௌத்தம், சமணம், மாயா வாதம், வைணவம், சைவம் போன்ற சமயங்கள் இந்துமதம் என்று பெயர் பெறுகின்றன. இவைதவிர இந்துமதம் என்று ஒன்று தனியாக உண்டா? இவ்வினாவிற்கு ஆம் என்பதுவே பதிலாகும். இந்துமதத்தின் சில கோட்பாடுகளை மட்டுமே சாருவாகம் முதல் உள்ள சமயங்கள் தமது அடிப்படையாகக் கொண்டுள்ளன.

சைவசமயம் மட்டுமே இநதுமதத்தின் முழுவடிவமாகத் திகழ்கின்றது. சைவத்தின் சிறப்புக்கள் பலவாயினும், வீடுபற்றிய சிந்தனைகளுக்கு எத்துணை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதோ அதற்கு இணையாக மனிதன் இகத்தில் இன்பமாக வாழ்வதற்கும் வழிகாட்டியுள்ளது.

மனிதன் இன்பமாக வாழ்வாங்கு வாழ்வதற்கு அவனது உணவுப் பழக்கம் முக்கியமானதாகும்.'

உடம்பான் அழியில் உயிரார் அழிவார்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்ந்தேனே

- திருமந்திரம்

உடம்பை வளர்க்கும் உயாபம் அறிந்தேன். உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்று உடம்பை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதன் அவசியத்தைத் திருமூலர் அழகாகக் குறிப்பிடுகின்றார். உடம்பை வளர்க்கும் உபாயம் என்ன? சத்துள்ள உணவு வகைகளைச சாப்பிடுவதுதான். உணவு என்பது நம் உடலுக்கு சக்தியைத் தருகிறது. வளர்ச்சிக்கு உதவும். உறுப்புக்கள் சிதைவடையாமல் பாதுகாக்கிறது. நோய்த்தடுப்பு சக்தியை வழங்குகிறது. உணவு உட்கொள்வதில் கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்களில் முக்கியமானவை உணவை உட்கொள்ளும் நேரம், தெரிவு செய்யப்படும் உணவு, உட்கொள்ளப்படும் உணவின் அளவு என்பனவாகும்.

ஆனால் நம்மில் பலர் உணவு விடயத்தில் கூடிய அக்கறை காட்டுவதில்லை. இதனால் நோய்களுக்கு உட்பட்டுத் துன்பப்படுகிறார்கள். உணவு உட்கொள்வதில் மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. ஏனைய விலங்குகள் ஒவ்வொருநாளும் அன்றைய தேவைக்கு மட்டும் உணவைத் தேடுகின்றன. மனிதன் மட்டும் வாழ்க்கை முழுவதற்குமான உணவைத் தேடும் முயற்சியில் அன்றைய உணவை சரியாக உட்கொள்வதில்லை. "பசி, காமம்" இரண்டும் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட வேண்டியவை. "பசி" யின் தாக்கம் பத்தையும் பறந்துபோகச் செய்துவிடும் என்பது பெரியவர் வாக்கு. எனவே பசிக்கு உணவு என்பதைக் கருதவேண்டும். "ருசிக்கு" உணவு என்பது பலரது எண்ணம். இதன் விளைவு வாழ்வதற்கு உணவு என்பதை மறந்து உணவிற்காக வாழ்வு என்னும் நிலைக்கு ஆளாக்கப்பட்டு முடிவில் இறந்துபோகும் நிலைக்கு வந்தபின்னர் "சூரிய நமஸ்காரம்"


உணவு உட்கொள்ளும் நேரம் ஒருங்காகப் பேணப்படுவது அவசியமாகும். நமது ஆலயங்களில் பூசை நடைபெறு வதைக் கவனித்துப் பாருங்கள். காலைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை, உச்சிக்காலப் பூசை, மாலைப்பூசை, இவற்றுக்கு நேர நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. உதாரணமாக காலைப்பூசை 8.00, உச்சிக்காலம் 12.00, மாலைப்பூசை 5.00 மணிக்கு. இந்த நேரங்களில் இறைவனுக்கு உணவு (நைவேத்தியம்) வைக்கப்படுகின்றது. இது ஏன்? இறைவன் உணவு உட்கொள்வது போன்ற பாவனை தானே! ஆனால் தொடர்ந்து செய்யப் படுகிறதே! ஏன்? மக்கள் இந்த நேரஒழுங்கைப் பின்பற்றி தமது உணவை குறித்த நேரத்தில் உட்கொள்ளவேண்டும் என்பதற்காகவே என்பதறிக! நேரஒழுங்கை மீறி எந்நேரமும் உணவு நேரம்தான் என இருப்பவர்கள் விரைவில் நோய்வாய்ப் படுவார்கள்.

ஒருவர் தினமும் தனக்கு தேவைப்படும் சக்தியைப் பெறுவதற்காக மட்டும் உணவை உட்கொள்ள வேண்டும். அளவுக்கதிகமாக உட்கொள்ளக்கூடாது. திரமணவீடுகளில் சிலர் கழுத்துக்குமேல் மூக்குவரை உணவு உட்கொண்டு தள்ளாடி எழுவதைக் காணமுடியும். இவர்களின் எதிர்காலத்தை யார்தான் கணிக்கமுடியும்.

உணவைத் தெரிவு செய்வதில் ஆசியநாட்டு மக்கள் பெரும் தவறு செய்கிறார்கள். நாம் அதிகளவு அரிசிச் சோறும் கோதுமையும் உட்கொள்கிறோம். தேவையான புரதம் கனிப்பொருட்கள் விற்றமின்களை எடுப்பதில்லை. மேல்நாட்டில் உணவு தெரிவுசெய்யும் முறையே அலாதியானது. உணவு எவ்வளவு கலோரியைத் தரும் என்பது சுட்டிகளில் பொறிக்கப்பட்டிருக்கும். இதனைக் கருதி உணவின் அளவைத் தீர்மானிக்கிறார்கள். நாம் நோய் வந்தபின்னர் தான் 1 கப் சோறு, 3 இடியப்பம், நார் உணவுப் பொருள் என்று தேடத் தொடங்குகிறோம். நமது ஆலயங்களில் வழங்கப்படும் "பஞ்சாமிர்தம்" விற்றமின், கனிப்பொருள் கூட்டுக்கொண்ட நிறையுணவு. மோதகம் என்பது மாச்சத்து. தேங்காய் வெல்லம் கொண்ட சத்துணவாகும். முருகனுக்கு தேனும் தினைமாவும் நைவேத்தியமானது எப்படி? இந்துசமயத்தவரின் சிந்தனை வாழ்க்கையுடன் தொடர்பானது. நமது முன்னோர்கள் வாழ வழிகாட்டியவர்கள். காட்டில் ஞானிகள் முனிவர்கள், நீண்டகாலம் வாழ்ந்த அதிசயம் தான் என்ன? அவர்களுடைய உணவுப்பழக்கமும் வாழ்க்கைமுறையும் அன்றோ! அதனை நாமும் கடைக்கொள்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும்

மானுட வாழ்க்கை தற்செயலாக ஏற்பட்டது அல்ல. அ∴தொரு விபத்தும் அல்ல. இயற்கை நியதி திட்டமிட்டுப் பரிணாம வளர்ச்சியில் வாய்த்தது. இந்த வாழ்க்கை அற்புதமான ஆற்றல் மிக்க புலன்களுடனும் பொறிகளுடனும் அமைந்தது இந்த வாழ்க்கை.

இப்படி அமைந்ததொரு வாழ்க்கை பயனுடையதாக புகழ்மிக்கதாக அமைய வேண்டாமா? அறிவு அறியும் கருவிகள், செயல் செய்யும் பொறிகள் அனைத்தும் அமைந்த வாழ்க்கையின் நோக்கம் தான் என்ன? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா?

உடம்பொடு உயிர் இணைந்த நிலையில் வாழ்வுக்கு உயிர்ப்பாக இருப்பது மூச்சுக்காற்று. மூச்சுக்காற்று அடங்கினால் உயிர்ப்பு நின்றால் மரணம். அதனால், உடலில் உயிர்ப்பு நிலை இருக்கும் பொழுதே தகாதனவற்றை எல்லாம் புறத்தே தள்ளி நல்லன கொள்ள வேண்டும்.

தேடி, சோறு நித்தம் தின்று, சின்னஞ்சிறு கதைகள் பேசி, வேடிக்கை மனிதராய் மாண்டுபோகக் கூடாது. புகழ் மிக்க வாழ்க்கை வாழ்தல் வேண்டும். திருக்குறள் அறத்துப்பால் இல்லற வியலின் முடிவில் "புகழ்" என்று ஓர் அதிகாரம் வைக்கப்பட்டது ஏன்? புகழ் பெறுதல் என்பது எளிதன்று. இமயத்தின் உச்சியில் ஏறுவதிலும் கடினமானது பேச்சால், எழுத்தால் பாராட்டு வரலாம். அது புகழன்று, பதவிகளால் சுற்றி நின்று பயனடைவோர் வானளாவப் புகழலாம். அதுவும் போலியானது. சிலர் தம்மைத் தாமே விளம்பரப்படுத்திப் புகழ் சேர்க்க முற்படுகின்றார்கள். இவை யாவும் புகழாகுமா?

செயல்வழிச்சாதனைகள் செய்வது தான் புகழ்பெறுதற்குரிய வழி! அந்தச் சாதனைகள் கூட நாட்டில் வரலாற்றை நகர்த்துவதாக அமைய வேண்டும். மானுடத்தை அரித்துத் தின்று அழிக்கும் சாதிப்பிரிவினைகள், கொடிய நோய்கள், வறுமை இவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணியே புகழ் மிக்க பணி! அதுவே வாழ்க்கையின் குறிக்கோளாக இலட்சியமாக அமைய வேண்டும்.

சென்ற காலத்தில் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்த சிலர் சாதித்த சாதனை களாலேயே இன்று நம்முடைய வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. இலட்சியமுடைய மனிதரைத்தேடினும் காணக்கிடைப்பதில்லை. ஒரு சிலர், சின்னஞ்சிறு செயல்களையே இலட்சியம் என்று கருதிக் கொண்டிருக் கிறார்கள். வேறு சிலர் பணம் சம்பாதிப் பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளனர். கற்றவர்களும் அறிஞர்களும் வீரர்களும் பணம் சம்பாதிப்பதை ஒரு நாளும் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ள மாட்டார்கள். சின்னஞ்சிறு செயல்களும் பணம் சம்பாதிப்பதும் இலட்சியம் ஆக மாட்டாது. வாழ்க்கையின் படிக்கற்கள் என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

**"குறிக்கோள் இலாது கேட்டேன்"** என்று பாடுகின்றார் அப்பரடிகள். உடலுக்கு ஆன்மா: மரத்திற்கு வேர்: மனிதனுக்கு இலட்சியம் வாழ்க்கையில் மனிதன் அடிமையாக இருக்க கூடாது. எடுத்துக் கொண்ட இலட்சியத்தில் நிலையாக நின்று உழைத்திட தளர்ச்சியில்லாமல் அந்தத் திசையில செல்ல அறிவு வேண்டும். இலட்சியத்தின் வழியில் நடைபெறும் பணிகளை செய்யும் காரியங்களை அறிவியல் பார்வையுடன் ஆய்வு செய்து, குறைகளை நீக்கச் செய்து, கொண்டே போக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சிய வாழ்க்கையை விரும்புவர்கள் தங்களுடைய சூழ்நிலைகளின் காரணமாகப் பலவீனம் அடைந்து விடக்கூடாது. சூழ்நிலை களையும் சரிப்படுத்திக் கொண்டு அவற்றைக் கருவிகளாக அமைத்துக்கொள்ள வேண்டும். அறிவியல் என்பது எதையும் ஆராய்ந்து தெளிந்து முடிவுகளை எடுப்பது. விருப்பங் களின் படியும் ஓசைகளின் அடிப்படையிலும் உணர்ச்சிகளின் நிலையிலும் முடிவு எடுக்கக் கூடாது.

மனிதன் தனியே வாழ்ந்து விட முடியாது. அவன் பலருடன் கூடி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதனால் கூடிவாழ்கிறான். அப்படிக் கூடிய வாழ்வு அன்பின் அடிப்படையில் உறவுகளின் அடிப்படையாலும் அமைதல் வேண்டும். ஆனால் நாடகம் நடத்துகிறான். சுய நலத்திற்காகவும் பயத்தினாலும் கூடிவாழ்து போல ஒப்புக்காக வாழ்கிறான். அவன் அன்புடன் கூடிய உறவு வாழ்க்கையை கூடி வாழ்தலைப் பெரும் பேறாகக் கருது வதில்லை. இத்தகைய மனிதக்கூட்டத்தில் அன்பு கடைச் சரக்காகும்.

“ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும்” என்ற சமுதாய நியதி, ஒழுங்கு, ஒழுக்கம் வெற்றி பெற்றால் தான் சமுதாயம் உருவாகும். இன்று நம்பிக்கையும் நல்லெண்ணமும் நிறைந்த ஒரு இலட்சிய நோக்கமுடைய சமுதாயத்தைக் காண்பதற்கு, தடைகள் பலப்பல உள்ளன. அவற்றுள் தலையாயது பணம். அடுத்த தடைகளாக அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய தீய பண்புகளின் படைக்கலங்களாக உள்ளவை பூட்டுக்கள், களவு , காவல் சுவர்கள், வேலிகள், பட்டங்கள், பதவிகள் முதலியன. இவையெல்லாம் ஒருங்கிணைந்து கொண்டு சமுதாயம் அமை வதற்குரிய அடிப்படைகளைத் தகர்க்கின்றன. மனிதனைப் பிரிந்து வருகின்றன.

ஊர் என்பது தனது வரைவிலக்கணப்படி இப்போது இல்லை. ஆரோக்கியமில்லாத போட்டிகள், இலாபவேட்டைகள், தலைமைத் தனத்திற்கு ஆசை, பாலியல் வேட்கை, முதலியன ஊரை நாள்தோறும் அழித்து வருகின்றன. இவற்றை நாளும் எதிர்த்துப் போராடி சமுதாயத்தை விரிவாக்க வேண்டும். இலட்சியத்தை உருவாக்க வேண்டும். ஊர் திருந்தினால் நாடு திருந்தும்.

இலட்சிய சமுதாயத்தை உருவாக்கு வதற்கு இலட்சியத்துடன் செயற்பட வேண்டியவர்கள் யார்? ஊர் பெரியவர்கள் இதனைச் செய்வார்களா? என்றால், இல்லை என்பது தான் விடை. இன்னும் சின்னஞ்சிறு கதைகள் பேசி, சாதிச்சண்டைக்கு வித்திட்டு இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளா தன்மையுடன் வேடிக்கை மனிதராகப் பெரும்பாலான பெரியவர்கள் இருக்கிறார்கள்.

ஊர் இளைஞர்கள் செய்வார்களா? என்றால், ஆச்சரியக் குறிதான் வந்து நிற்கிறது. புதிய சிந்தனையுடன் சமுதாயத்திற்கு புதிய குருதியைப் பாய்ச்ச வேண்டிய இளைஞர்கள்! தமது சக்தியை அநியாயமாக வீணே செலவிடுவது கண்டு, நெஞ்சு பொறுக்கு தில்லை......!

இந்த நாட்டு இளைஞர்களே – தமிழ் இளைஞர்களே: உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. நல்ல ஆரோக்கியமான ஊர்கள் தோன்றுவதற்கு உழைக்க வேண்டும். உனது சக்தியை நல்ல வழிகளில் பயன் படுத்த முன் வரவேண்டும். ஊர்ப் பாட சாலைகள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் அனைத்தும் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தை அடைவதற்கு உதவ வேண்டும். வீட்டிற்கும், நாட்டிற்கும் பயனுடையவர்களாக நீங்கள் மாற வேண்டும். இளைஞர்களே உங்களுக் காக மீண்டும் தொடர்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகம் செய்வோம்

தமிழர் தாயகப் பகுதியில் யுத்த மேகங்கள் அகன்று ஒளிக்கற்றைகள் ஊடுருவி இருக்கின்றது. யுத்தம் தந்த வடுக்களை மறந்து வாழ்வை மேம்படுத்துவதற்கான சிந்தனை மாற்றம் அவசியமாகிறது.

மனிதன் பிறக்கும் போது விலங்கு, வாழும் வாழ்க்கை முறையினால் மனிதனாகி தெய்வநிலையை – சான்றோனாய் மாற்ற மடைய வேண்டும். ஆனால் இன்றைய மனிதன் உணரச்சிவசப்படுகிறான்: கலகம் செய்கின்றான்: கொலைசெய்கிறான் சுயநலத்தோடு பொதுநலத்தை மதிக்காமல் தனது செயற்பாட்டை செய்து வருகின்றான். **“வாய்த்தது நந்தமக்கு ஈரோர்பிறவி மதித்திடுமே”** என்று அப்பரடிகள் கூறிய வார்த்தைகள் நினைவு வருகிறது.

இன்றைய சூழலில் பலதுறைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசிய மாகும். கல்வி, உழைப்பு, பொருளாதாரம் ஆகிய விடயங்கள் பிரதானமாகப்படுகிறது.

கல்வி தெரியாததை தெரிந்து கொள்வதற்கு மட்டுமன்றி கல்வி ஆன்மாவின் சக்தியை தூண்ட வேண்டும். நம்பிக்கை தரக்கூடிய கல்வி அவசியம். கல்வியில் பொதுக்கல்வி, சிறப்புக்கல்வி உண்டு. பொதுக்கல்வியில் பொதுஅறிவு, சமூக வாழ்விற்கு பங்களிப்புச் செய்தல், மொழிக்கல்வி என்பன அடங்கும். தாய் மொழிக்கல்வி அவசியமானதாகும். ஒருவரின் சிந்தனை மொழியாக தாய்மொழியே அமையும். சிங்களம், ஆங்கிலம் வேறு மொழிகள் கற்பதில் எந்தவித தவறுமில்லை. ஆனால் தாய்மொழிக் கல்வி மிக மிக அவசியமாகும். சிறப்புக் கல்வி, கற்பவரின் நிலைக்கேற்ப மாறும். மருத்துவம், பொறியியல்துறை, கணக்கியல்துறை போன்றவை இதற்கு உதாரணமாகும். மாணவன் தனது விருப்பத்தின் பேரில் சிறப்புக் கல்வியை தெரிவு செய்து கொள்வதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும். இதில் பெற்றோரின் வற்புறுத்தல் இருக்கக் கூடாது. வாழ்விற்கு ஆதாரம் பொருளாதாரம். **“பொருள் இல்லாவிடில் இவ்வுலகில்லை”** என்பது வள்ளுவம் கூறும் கருத்தாகும். பொருளாதாரம் என்பதன் முழுப்பொருள் பணமுடைய வராதல் அல்லர்: சொத்துடைய வராதல் அல்லர்: வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். பொருளுக்காக வாழ்க்கை அல்ல: வாழ்க்கைக்காகவே பொருள் எனும் நிலைப்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய பொருளாதார உயர்வு ஏற்பட்டு வாழ்க்கைத் தரமும் உயர்ந்து விளங்கினால் தான் பாதுகாப்புக் கிடைக்கும். சமாதானமும், அமைதியும் ஏற்படும். மோட்டார் வாகனம், மாடிக்கட்டடங்கள், அகன்ற பாதைகளும் பொருளாதாரம் ஏற்படுத்தித் தந்த வசதிகளாகும். இவற்றின் மூலம் நமது நிலையை உயர்த்திக் கொள்ள சரியா திட்டம் அவசியமானதாகும். இலங்மையில் உணவுக்குப் போராடும் ஏழ்மைநிலை இல்லை. ஆனால் வசதிகளற்ற வாழ்க்கை முறை கொண்ட வறிய மக்கள் வாழ்கின் றார்கள். கிராமங்களில் உற்பத்தி வீழ்ச்சி யடைகின்றது.நகர் நோக்கிய படையெடுப்பு அதிகரிக்கின்றது. இதனை தடுக்கவும் வேண்டும். ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் இதயம் கிராமங்களே.

மக்களுக்கு நல்ல தொழல் வாய்ப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். சூழலுக்கு ஏற்ற தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும். கண்ணாடித் தொழில், உப்பளங்கள் மீளவும் புனரமைக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பனைவளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் நவீனமயப்படுத்தப்படல் வேண்டும். இவை முழுமையாக வெற்றி பெற மக்களின் உழைப்பு அவசியமானதாகும். சாதனையாளர்கள் உழைப்பினால் உயர்ந்தவர்கள். மற்றையவர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது அவர்கள் உழைத்து முன்னேறினார்கள். உழைப்பின் முக்கியத் துவத்தை தமிழ் மூதாட்டி ஒளவையார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமே கண்ணாயினார்.**

மாற்றத்தை ஏற்படுத்த முயன்றனர். மரபை மறுத்து வரும் புதுமை எளிதில் மக்கள் சமுதாயத்தில் கால்கொள்வதில்லை. இன்று நமது தமிழ்ச் சமூகம் சிந்தித்து செயற்பட்டு பாரதிதாசனின் புதியதோர் உலகம் செய்வோம்.

ஒரு பழமை, புதுமையை ஈன்றுதர மறுக்குமாயின் அந்தப் பழமையில் ஏதோ குறையிருக்க வேண்டும். கபீர்தாசனில் இருந்து கண்ணதாசன் வரை, குருநானக் இருந்து குணங்குடிமஸ்தான் வரை,









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குருவுக்குப் பாத பூஜை செய்யும் போது....



நாடக நிகழ்வின் போது...



பேத்தியுடன் மணிவிழா நாயகன்...



மகளுடன் தமிழ் நாட்டின் திருநலைங்காடு கோவிலில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்கை வசந்தி குடும்பத்தினருடன்....



மகளுடன் தமிழ்நாட்டில் ....



2014ம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கௌரவிக்கப்பட்டபோது....



சைவசமய அபிவிருத்திக் கழகத்துடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "புவியை நடத்துக! பொதுவில் நடத்துக"

நாம் எங்கே போகிறோம்? எங்கே போக வேண்டும் என்று சொல்லாமல், வழிகாட்டாமல், எங்கே போகிறோம் என்று கேட்பதற்குக் காரணம் என்ன?

குற்றங்கள் தெரிந்தால் குணங்களை வளர்த்துக்கொள்ள முடியும். நாம் வழி தவறி விட்டோமா? அல்லது வழித்தடத்தில் தான் செல்லுகிறோமா? சிந்திக்க வேண்டிய காலம் இதுதான்.

சிந்தனையாலும், கருத்தாலும், அறிலும், நாகரிகத்தாலும், பண்பாட்டாலும், படைப்பாற்றலாலும், நடக்க வேண்டிய பொறுப்பு மனிதனுடையது. அவன் தான் நடக்க வேண்டிய தடத்தை தெரிந்து கொள்ள வேண்டும். புவிஅவனை நடத்தக்கூடாது. அவன் புவியை நடத்த வேண்டும். **பாவேந்தர் பாரதிதான் "புவியை நடத்துக! பொதுவில் நடத்துக"** என்று சொன்னார்.

இன்றைக்கு நமது இளைய சமூகத்தைப் பற்றி அடுத்து வருகின்ற தலைமுறையினரைப் பற்றி நமக்கு கவலை இருக்கிறதா? அதற்குரிய திட்டங்களைத் தீட்டுகின்றோமா? அப்படியே தீட்டினாலும், அந்ததிட்டத்தினுடைய பயன்கள் இளைஞர்களிற்கு போய்ச் சேருகிறதா? இவையெல்லாம் சிந்திக்க வேண்டியன. சிந்தனை செய்து முடிவிற்கு வரவேண்டிய பொறுப்பு நாட்டை நிர்வகிப்பவர்களின் பொறுப்பாகும்.

தமிழர்கள் நீண்டகால வரலாற்று பெருமை மிக்கவர்கள். வரலாற்றுப் பெட்டகங்கள் ஏராளம் உண்டு. இந்த வரலாற்றுப் படிப்பினைகளை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். வரலாற்றுப் படிப்பினைகளை ஏற்றுக்கொண்டு புதியன கண்டு போர்க்குணத்தோடு போராடி நமது இன்றைய நிலைக்கு மாற்றம் காணவேண்டும்.

இலக்கிய உலகத்திற்குள் நுழைந்தால், தமிழ் இலக்கியங்கள் ஒரு பூங்கா என்று சொல்லலாம். இராம கதையை எடுத்துக் கொண்டால், கம்பன் அற்புதமாக ஒரு நாட்டை எண்ணிப் பார்க்கின்றான். அவனுடைய கோசலை நாடு அப்படி இருந்ததா? தெரியாது அவன் கண்ட இலங்கை நாடு அப்படியிருந்ததா? சொல்ல முடியாது ஆனாலும் கம்பன் தன்னுடைய இலட்சிய நாடு ஒன்றை காதையில் நினைவூட்டுகின்றார். **கள்வரும் காவல் செய்வாரும் இல்லாத நாடாக இருக்க வேண்டும்** என்று ஆசைப் படுகின்றான். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்: கற்றோர் நிறைந்திருக்க வேண்டும். மக்களுக்கு வழிகாட்ட கூட்டமும் திட்டமும் இருக்க வேண்டும். இன்று நமது நிலை எப்படியுள்ளது?

பழைய காலத்தில் சாதி வேற்றுமைகள் நெகிழ்ந்து கொடுத்தன. இன்று அவை நெகிழ்ந்து கொடுக்காமல் இறுக்கமடைந்து வருகின்றன என்பதை அன்பு கூர்ந்து எண்ணிப்பாருங்கள். 20140 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருவள்ளுவர்

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"**

என்று சொன்னார். பிறப்பில் உயிர்களிடையே வேறுபாடுகள் இல்லை, அனைவரும் சமம் என்று சென்னார். அதையே வழிமொழிந்த அப்பரடிகள் **"இந்த நாட்டில் சாதி இல்லை சாதிகளைச் சொல்பவர்கள் சாழாக்கர்கள்"** என்று மிகக் கடுமையாகச் சாடினார்.


நம்முடைய நாடு ஜனநாயக நாடு, மக்கள் ஆட்சி நடைபெறுகின்ற நாடு. ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் கோட்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை. நண்பர்களுக்கிடையில், கணவன் மனைவிக் கிடையில் குடும்பச் சூழ்நிலையில் கடை வீதியில், ஊரில், நாட்டில், மாகாணசபையில், பாராளுமன்றத்தில், எங்கும் ஜனநாயக மரபுகள் செழித்து வளர வேண்டும். சொல்லுவது சிலராக இருக்க வேண்டும். பிறர்வாய் கேட்பது அதிகமாக இருக்க வேண்டும். ஜனநாயக வடிவம் போதாது, ஜனநாயக உணர்வு தேவை. ஜனநாயக வாழ்க்கையின் மரபில் அலட்சியம் கூடாது. நாட்டில் யாரையும், எந்தப்பகுதி மக்களையும், அவர்களின் கருத்துக்களையும் அலட்சியப் படுத்தக்கூடாது. எல்லோரிற்கும் மதிப்புத் தரவேண்டும். அரசியல் என்பது ஒரு ஞானம். அது ஒரு அறிவியல், அரசியல், அறிவு, மக்களாட்சி முறையில் வாழுகின்ற நாட்டு மக்களிற்கு தவிர்க்க முடியாது. அரசியல் அறிவு, அரசியல் போராட்டங்கள், அரசியல்கட்சிகளுக்கே சொந்தமானவை அல்ல. நம்முடைய நாட்டில் அரசியலை அரசியல் கட்சிகளிடமே ஒப்படைத்து விடுகிறார்கள். படித்தவர்கள், பேராசிரியர்கள், சிந்தனையாளர்கள் இவர்கள் கூட அரசியலைப் பற்றிக் கூற கூச்சப்படுகிறார்கள் - பயப்படுகிறார்கள். தப்பித்தவறி பேசிவிட்டால் கட்சிக்காரர்களுக்கு கடுஞ்சினம் ஏற்படுகிறது. அன்பு கூர்ந்து மன்னித்துக் கொள்ளுங்கள். அரசியல் சிந்தனை அந்த நாட்டில் அனைத்து மக்களிற்கும் என்றைக்கு ஏற்படுகிறதோ அன்றைக்கே மக்களாட்சி முறை வளரும்.

ஜனநாயகம் என்பது ஒருமுறை மட்டுமல்ல அது ஒரு வாழ்க்கை முறை உணர்வு செறிந்தது, ஒழுங்கு செறிந்தது. இன்று எங்கு பார்த்தாலும் போட்டா போட்டிகள்! தலைமைக்கும் பெருமைக்கும் போராட்டங்கள்! இலட்சியத்தைப் பறி கொடுத்து விட்டுக்கூட பெருமை தேடுவார்கள் போலத் தெரிகிறது. இலட்சியம் பெரிது இலட்சியம் தூய்மையானது, இலட்சிய வாழ்க்கை உயர்ந்தது, பதவிகளும் பெருமையும் வரலாம் - போகலாம் இலட்சியத்தை தியாகம் செய்து விட்டு தயவுசெய்து பதவிகளைத் தேட வேண்டாம். இளைஞர்களே எழுந்திரு! புதியதோர் உலகைப் படைக்க எழுந்து வா: உனக்குத் தேவையான கல்வி ஏது என்று நிர்ணயம் செய்! தற்சார்பான கல்வியைப் பெறு! வேலையைத் தேடாதே! வேலையை உருவாக்கு! கைவருந்தி உழைப்பவர் தெய்வம் என்று நம்பு. வரலாற்றுப் போக்கோடு ஓடிவிடலாம் என்று நினைக்காதே! நீ வரலாற்றை நிகழ்த்தி, நின்று போராடிப் புதிய வரலாற்றைப் படைத்து சாதனை செய்! உன்னுடைய காலம் இந்த நாட்டினுடைய பொற்காலமாக அமையட்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறம் புகுமுன் சிந்தியுங்கள்

தமிழ் இளைஞர்களே, யுவதிகளே - இளைஞர் என்பது இருபாலரையும் குறிக்கும். ஆண், பெண் எனும் வேறுபாடு இன்றி இந்தக் கட்டுரையை வாசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைய இளைஞர்களின் வாழ்வை தீர்மானிக்கும் அல்லது வாழ்க்கை முறையைத் தெரிவதற்கும் உதவுபவை நட்பும், வாழ்க்கைத் துணையுமாகும்.

ஒருவர் வாழ்வின் நண்பன் அமைவது இறைவன் கொடுத்த வரம். நட்பைத் தெரிவதில் தவறு நடந்து விட்டால் வாழ்க்கைப் பாதை திசைமாறிவிடும்.

இவ்வுலக வாழ்க்கையில் ஒரு மனிதன் உண்மையாக ஈட்ட வேண்டிய அரிய பொருள் நட்பேயாகும். நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலுக்கும் அதைப்போன்ற பெருந்துணை வேறு எதுவும் இல்லை. நட்பு இருவகை, ஒன்று அறிவுடையார் நட்பு, மற்றொன்று அறிவிலார் நட்பு. அறிவுடையார் நட்பு – வளர்பிறை போல நாள்தோறும் வளரும், அறிவிலார் நட்பு – தேய்பிறை போரஈ நாளுக்கு நாள் குறையும். படிக்கப் படிக்க நூல்கள் நயத்தை மேலும் மேலும் தந்து கொண்டேயிருக்கும். பழகப்பழகப் பண்புடையோர் நட்பு, இனிமையை நல்கிக் கொண்டேயிருக்கும்.

நல்ல நட்பை எவ்வாறு அறிவது என ஒரு வினா எழும். இதற்கு டாக்டர்.மு.வரத ராசனின் கட்டுரை ஒன்றில் பல ஆண்டு களுக்கு முன்னர் வாசித்த உதாரணம் பதிலாக அமையும் எனக் கருதுகிறேன். கற்கண்டுத்துண்டை வைத்தால் எறும்புகள் அழையாமல் வந்து ஒட்டிக்கொள்ளும், ஆனால் அதன் மேல் சிறிய கற்துண்டை இட்டதும் வந்த எறும்பு மறைவதைக் காணலாம். இவ்வாறு சிரித்து விளையாடி மகிழ்வதற்கு மட்டும் வரும் நட்பு, நட்பல்ல, இன்பத்திலும் துன்பத்திலும் கலந்து, நண்பர் தவறு இழைக்க நேரும்பொழுது தயங்காமல் கண்டித்து, அறிவுரை கூறுபவனே உண்மை நண்பன் ஆவான்.

"உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவது ஆம் நட்பு"

என்று கூறுகிறார்.

ஆடையை இழக்க நேரிடுகையில் மனிதன் தன் கைகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்வதில்லை. அவன் பேசாமலேயே அவனது கைகள் விரைந்து சென்று பாலியல் உறுப்புக்களை மூடி மானத்தைக் காத்தக் கொள்கின்றன் இதுபோல, நண்பனுக்கு இடையூறு ஏற்பட்ட பொழுது அவன் கேளாமலேயே வலியச் சென்று அவனது இடரைப் போக்கி உதவி செய்ய வேண்டும். இலக்கியங்கள் நல்ல நட்புக்குப் பல உதாரணங்களைக் காட்டியுள்ளன. கண்ணனுக்கும் குசேலருக்கும் இடையில் ஏற்பட்ட நட்பு, துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் இடையில் மலர்ந்த நட்பு இப்படிப் பலவற்றைக் கூறிட முடியும்.

நண்பனைத் தெரிவு செய்வதற்கு முன் ஒருதடவைக்கு பல தடைவ யோசனை செய்ய வேண்டும். நட்பு மலர காரணம் இருக்க முடியாது. தூய அன்பு ஒன்று தான் நட்பை உருவாக்க முடியும். இத்தகைய நண்பர்கள் இரண்டொருவர் மட்டுமே இருக்க முடியும்.ஆனால் இன்று நட்பென்ற பெயரில் ஒவ்வாத குணமுடைய பலர் இணைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பதைக் காண முடிகிறது. இத்தகைய இணைப்புக் கோஷ்டி சண்டைக்கும், கூடிக் குடிப்பதற்கும் தான் உதவும். இதனால் ஏற்படும் துன்பங்களையும், நீதிமன்றம் நோக்கிய படையெடுப்பும் தான் மிஞ்சி நிற்கிறது.

ஆக்கத்திற்கு பயன்பட வேண்டிய இளைஞர் சக்தி பலனற்று போவதற்கு முதல் காரணம் தவறான நட்புத்தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

இன்றைய இளைஞர், யுவதிகளின் அடுத்த பிரச்சனை வாழ்க்கைத் துணையைத் தேடுதல் என்பதாகும். முதலில் நீண்டகாலம் வாழ வேண்டும் என்று நினைக்கிறார்களா? என்பது தான் சந்தேகமாகவுள்ளது. இன்று காதல் என்ற பெயரில் நடைபெறும் காமக் களியாட்டம் பண்பாட்டை விரும்பும் அனைவரினாலும் அருவருப்பாகப் பார்க்கப் படுகின்றது.

ஆணும், பெண்ணும் விரும்பிக் காதல் கொள்ளும் தூய நிலை என்பது தமிழர் நாகரிகமாகும்.

ஆண் ஆண்மை, வீரம், துணிவு ஆகியவற்றின் பிரதி விம்பம் என்றால், பெண் மென்மை,இரக்கம்,அன்பு ஆகியவற்றின் திருவுருவமாக விளங்குகிறாள். ஆண் இல்லாத போது பெண் இல்லை. பெண் இல்லாத போது ஆண், மேன்மை பெறமாட்டான். தாமஸ்ஆட்வே என்ற அறிஞன், “பெண்மையே அழகுருவாகிய பெண்மையே!! மனிதனை மேன்மைப்படுத்துவதற்காக இயற்கை உன்னைப் படைத்துள்ளது. நீ இன்றேல் நாங்கள் விலங்கினங்களாகவல்லவா இருப்போம். சுவர்க்கத்தைப் பற்றி நாங்கள் எண்ணிக்கொண்டிருப்பதெல்லாம் வியத்தகு அழகு. தூய்மை, உண்மை, அழியா மகிழ்ச்சி, அணையா அன்பு ஆகியவற்றையெல்லாம் உன்னிடமன்றோ காணப்படுகின்றன என்று கூறிக் கூத்தாடுகின்றான்.

இவ்வாறு மாபெரும் புனித எண்ணத் தோடு ஆணினத்திற்கு அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அளிப்பதற்காகவே பெண் ணினத்தை இறைவன் உண்டு பண்ணி யிருத்தலினால் பெண்மையை, **“கட்புலனாய தோர் அமைதித் தன்மை”** என்று கூறினார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். ஆனால் பிற்கால ஆசிரியர்களோ பெண்ணைப் பேயென்றும், மாயை என்றும், வெறுக்கத் தக்கது என்றும், வீடு பெறுவதற்குத் தடைக் கல்லாக நிற்பதென்றும் இன்னும் என்ன வென்னவோ பிதற்றிப் போயினர்.

பெண்களைப் பற்றிய இந்த விமர்சனம் வந்ததற்கு காரணம் யாது? என்று சிந்திக்க வேண்டும்.

**“பெண்ணிற் பெருந்தக்க யாவுள**
**கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்”**

எனக் கூறிய வள்ளுவப் பெருந்தகையைப் பெற்றது நம்நாடு. “கற்பு எனும் உறுதிநிலை இருக்கப்பெற்றால் பெண்ணை விடப் பெருமையுடையவைவேறு என்ன இருக்கின்றன?” எனக் கூறுகிறார். **“கற்பு எனும் திண்மை”** என்று எவ்வளவு வன்மையாக அதனை அவர் எடுத்துரைக்கின்றார்.

பெண்களின் கற்பைப் போற்றாதோர் இவ்வுலகில் எவருமில்லை. **“கற்புடைய பெண் இரத்தினத்தை விட மேலான மதிப்புடையவள்”** என்று பைபிள் மறை முழங்குகின்றது. தங்கத்தை விட மேலானது என்ன? சூரிய காந்தம். சூரிய காந்தத்தை விட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலானது என்ன? அறிவு. அறிவை விட மேலானது என்ன? பெண். பெண்ணை விட மேலானது என்ன? ஒன்றுமே இல்லை எனக் கூறிய ஆங்கிலக் கவிஞர் சாங்ரோ, "கற்பை இழந்தவள் வேறு எந்த இழி செயலையும் செய்யத் தயங்க மாட்டாள்" என்றும் கூறுகிறார்.

ஆதலின் கற்பென்பதை எவ்வளவு விலை மதிக்க முடியாத ஆபரணமாக இறைவன் தங்களுக்கு அளித்துள்ளான் என்பதை ஒவ்வொரு பெண்ணும் அறிந்து செயலாற்ற வேண்டும். அதற்குச் சிறிதேனும் மதிப்பளியாது தங்களின் இச்சையை எவ்வாறாவது நிறைவு செய்வதற்காகப் பல்லைக் காட்டிப் பசப்பித் திரியும் ஆணிடத்திடம் பெண் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.இதற்கு பெண்ணிடம் இருக்க வேண்டியது மன அடக்கம் தான்.

ஆண்களின் இதயத்தை விட பெண்களின் இதயம் காதலால் அதிகம் பாதிக்கப்பெறுகிறது. ஆனால் கௌரவம் என்பதானது அந்தக் காதல் வேகத்தை தணிக்கின்றது. எனவே தான் பெண்ணினத் திற்கு இறைவன் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்கு தனித்தன்மைகளை நல்கினான். அவையே பெண்ணின் காமத்தை தவிர்க்கும் தடைச் சுவராகும். இவற்றை இறைவன் நல்கியிராவிட்டால் உலக நிலையே வேறு விதமாக மாறியிருக்கும்.

எனவே ஒரு பெண் தன்னுடைய கௌரவத்தை, தன் குடும்ப கௌரவத்தை மனதிற் கொண்டு மன அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அதுவே அவளுக்கு மாபெரும் அரணாகும்: "இதனையே மகளிரைக் காவல் செய்து காக்கும் காப்பு முறையால் யாது பயன்: அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சிறந்தது" என்று வள்ளுவப் பேராசான் கூறுகிறார்.

ஆனால் இதனையறியாது சில பெண்கள் தங்களின் காதல் வெல்ல வேண்டுமென்ற ஆவலினால் அம்முயற்சியில் பொதிந்துள்ள பேராபத்தையும் அறியாது அறிவுக்கண் மழுங்கப் பெற்று அசட்டுத் துணிச்சலுடன் விஞ்ஞானத்தை நம்பி செயல்பட்டு தம் கற்பை இழந்து விடுகிறார்கள். கிரேக்கர்கள் காதல் கடவுளைக் குருட்டுக் கடவுளாகப் படைத்தது ஏன்? என்று புரிகிறதா?

இந்த அசட்டுத் துணிச்சல் ஒருவேளை நல்லதாக முடிந்துவிடின் நல்லது தான், ஆனால் தீதாக முடிந்து விட்டால் அவளுடைய நிலை என்ன? ஆண், அவளை மேலும் மோசம் செய்து விட்டாள் அவளுடைய கதி என்னாவது? அதனைப் பெண் சிந்திக்க வேண்டும்.

ஒரு பெண் தனது புனித கற்பை இழந்து விடுவாளாயின் மீண்டும் அவளை கற்புடையவளாக்க உலகில் எந்த ஆற்றலினாலும் இயலாது. இறந்தவர்களைக் கூட உயிர் பெற்று எழச்செய்து விடலாம். சுடுகாட்டுக்குச் எடுத்துச் செல்லப்பட்டவர்கள் கூட உயிர் பெற்று வீடு திரும்பினர் என்று கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் கற்பை இழந்த பெண் மீண்டும் கற்பைப் பெற்றாள் என்று நாம் கண்டு அறியோம்: கேட்டும் அறியோம்: அவளுடைய அவலநிலையை ஆங்கிலப் பெருங்கவிஞர் ஸேக்ஸ்பியர் இதயத்தைப் பிழியும் வண்ணம், "ஐயோ அவள் வீழ்ந்து விட்டாளே! இருட்கடலில் மூழ்கிவிட்டாளே!! அவளை மீண்டும் தூய்மைப் படுத்தி பரந்து விரிந்து கிடக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கடலில் ஒரு துளி நீரேனும் இல்லையே" என்று எடுத்துரைக்கிறார்.

அவளுடைய இழந்த கற்பை தான் மீட்க முடியாவிட்டாலும் அவளுடைய அவமானத்தையேனும் போக்க முடியுமா? முடியும் எப்படி? அதற்கு அப்பெருங் கவிஞரே பதில் கூறுகிறார். "அவளுடைய அவமானத்தை மறைப்பதற்கான அழகிய திரை என்ன வென்றால் இறப்புத் தான்" என்று. ஆம் கற்பை இழந்தவள் உலகில் ஓர் அவமானச் சின்னமாக விளங்குகிறாள். அவள் உலகிற்கே ஒரு சாபக் கேடாக இருக்கிறாள். குடும்பப் பெண்கள் அவளின் கண்ணில் விழிப்பது கூட, அவள் தங்கள் முன் எதிர்படுவது கூட தீ நிமிர்த்தம் என்று கருதுகிறார்கள். எந்த ஆணும் அவளை மண முடித்துக் கொள்ள விரும்புவதில்லை. ஆனால் ஆண் விலங்குகள் அவளைச் சுற்றி வளையமிட்டு அவளைத் தங்களின் காம நுகர்ச்சிப் பொருளாக ஆக்க முயல்கின்றனர். அவளும் அவர்களைக் கெடுக்கிறாள். அவர்களும் அவளை கெடுக்கிறார்கள். பின்னர் இருவரும் பலவித நோய்வாய்ப்பிட்டுஅழிந்தொழிகிறார்கள்.

கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் உரியதன்று. ஆணுக்கும் உரியதேயாகும். அவ்வாறே முற்காலத்தில் கருதப்பட்டு வந்தது. கறபை இழந்த பெண்ணும் ஆணும் ஒரே விதக் குற்றத்தையே செய்கின்றனர். எனவே தான் அவர்கள் இருவரையும் கல்லெறிந்து கொல்லுமாறு யூதர்களின் சட்டமும், சவுக்கால் அடிக்குமாறு இஸ்லாமியச் சட்டமும் ஆணையிகின்றன. இதனால் அந்த நாடுகளில் விபச்சாரம் என்ற பேச்சே இல்லை. அந்த நாட்டில் இதற்கு சட்டமும், தண்டனையும் வேண்டாமா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் துடைக்கும் அருள் நூல்கள்

அருள் என்ற பதத்திற்கு கொடை, சக்தி, சாத்வீகம் என்ற பல பொருள்கள் உண்டு. அருள் என்பது அன்பின் முதிர்ச்சியில் உண்டாவது. அதனால் தான் **"அருள்என்னும் அன்பீன் குழவி"** என்றார் வள்ளுவப் பெருந்தகை. அன்பு என்பது தொடர்புடையாரிடத்தும் அருள் என்பது தொடர்பில்லாதாரிடத்தும் தோன்றும் ஒருவகை உள்ள நெகிழ்ச்சியாகும். இத்தகைய அருள் உள்ளம் படைத்த பெரியோர்களால் எழுதப்பட்ட நூல்கள் "அருள் நூல்கள்" எனப்படும். இவற்றை இறையருளைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்த நூல்கள் என்றும் கூறலாம் அல்லது அருளாகிய சாத்துவீக குணத்தை உண்டாக்குவதற்கு ஏதுவான நூல்கள் என்றும் கூறலாம்.

அருள் நூல்களைப் பலமுறை கற்பதனால் அவற்றிலுள்ள சிறந்த கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதாலும் ஏற்படக்கூடிய பயனை அரும்பயன் எனலாம். ஏனெனில் அஃது இம்மைக்கும் மறுமைக்கு பயனளிக்கவல்லது.

அருள் வள்ளல்களும் சமய குரவல்களும் நமக்கு அளித்துச் சென்ற அழியாக்கருவூலமாகிய நூல்களே அருள் நூல்கள் எனப்படும். அவை சமய நூல்களும், திருக்குறள் போன்ற நீதி நூல்களாகும். சமய நூல்கள், வேதங்கள், ஆகமங்கள், பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், பற்பல புராணங்கள் முதலியவை சைவசமய நூல்களென்று கூறப்படும். அவ்வாறே இராமாயணம், பாரதம், நாலாயிர திவ்விய பிரபந்தம், பாகவதம், ஸ்ரீ வசனபூஷணம், பலவித வியாக்கியானங்கள் போன்றவை வைணவ நூல்கள் எனப்படும். பஞ்ச சீலத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தபிராணின் உபதேச மொழிகளும் ஜாதகம், பீதகம் போன்ற கதைக்கோவைகளும் பௌத்த சமய நூல்கள் ஆகும். மகாவீரர் முதலிய அருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் உபதேச மொழிகளை சமணர், அருள் நூல் என்பர். விவிலிய நூலாகிய கிறிஸ்தவ வேதம், அருள்நூல் என்று அழைக்கப்படுகிறது. அதில் மலைப்பொழிவைச் சிறந்த பகுதியாகக் கருதுகின்றனர். இஸ்லாமியர் தமது குரான் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் தூயநூல்கள் என்பர். சீனப்பெருமக்களோ, மகான் கன்பூஷியசைக் காட்டிலும் சிறந்த அருள் வாக்குடையார் வேறு யாருமில்லை என்று கூறுவர். எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, சிறந்தது பகவத்கீதைஆய என்பர். காந்தியடிகளும், அவர் சீடர்களும். உலகப் பெரியார்கள் அனைவரும் தத்தம் அருள் நூல்களில் உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தியுள்ளனர் என்பது புலனாகிறது.

எல்லாத் துறையிலும் முன்னேறும் மனிதன், அற்றல் மிக்கவனாக இருக்கிறான். ஆனால், அணுகுண்டைக் கண்டுபிடித்த அவனது அறிவு ஆன்மாவைப் பற்றி மட்டும் அறியாமலே இருக்கிறது. உயிர் என்பது என்ன? அஃது எப்படியிருக்கும்? அஃது எங்கிருந்து வருகிறது? அது தான் வினை முடிந்த பின் எங்கே செல்கிறது? என்பன போன்ற விடயங்கள் மாத்திரம் தெரியவில்லை. அவை எக்காலத்தும் யாருக்கும் தெரியலாகாது என்று எந்தச் சக்தி மறைத்து வைத்திருக்கிறதோ, அந்தச் க்தியையே நாம் அருள் என்றும் கடவுள் என்றும் கூறுகிறோம். அச்சக்திற்கு மிக அண்மையில் நம்மைக் கொண்டு சேர்த்து, அதன் அருளுக்கு பாத்திரமாவதற்கு வழி காட்டுவது தான் அருள் நூல்களின் பயன். அவை, கடவுளது பெருமையையும், புகழையும் விரித்துக்கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்னும் குரங்கைத் தன் விருப்பம் போல் செல்லவிடாது ஒரு நிலைப்படுத்துவது எல்லோருக்கும் இயலாது. அத்தகையதோர், அருள் நூல்களைப் பயின்று வந்தால் சிந்தைக்கும் மனதுக்கும் நல்ல பயிற்சி ஏற்படும். ஒருமைப்பாடுள்ள மனத்தின் துணையால் அரிய காரியங்களையும் சாதிக்க முடியும்.

மனமானது தான் சார்ந்ததன் வண்ணமாதாலைப் போலவே நாவும் பயின்றதன் வண்ணமாகவே பேசும். அதனால் தான் "செந்தமிழிழும் நாப்பழக்கம்" என்று சொல்லப்படுகிறது. சிறந்த நாமா வளிகளையும், நூல்களையும் ஓதிப் பழக்கப்படுத்திக் கொண்டால், நம்மையும் அறியாது நமது நாவானது இறைவனது பெருமையையும், அருள் பெருஞ் செயல்களையும் பற்றியே பேசும். அதனாலேயே, "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றும் "நாராயணாவென்னா நாவென்ன நாவே" என்னும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

ஒரு தொழிலை திறம்படச்செய்து முடிக்க நல்ல பயிற்சி இன்றியமையாதது. அதைப் போலவே ஒருவருடைய ஆன்ம சக்தி வளர்வதற்கு அருள்ள நூல்களின் அறிவு இன்றியமையாதது. அருள் நூல்களின் அறிவு உடல் நலத்திற்கும் அறிவின் தெளிவுக்கும் உகந்ததாகும். மேலும், நமது அமைதியான வாழ்வுக்கும் சமூக ஒற்றுமைக்கும் இவ்வறிவு அவசியமாகும்.

சிறிது காலத்துக்கு முன் வாழ்ந்து வந்த பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று உண்டு. அவரது வயதான காலத்தில் ஒருநாள் வழுக்கி விழுந்ததனால் கால் எலும்பு முறிந்தது. சென்னை வைத்தியசாலையில் முறிந்த எலும்பு ஒன்று சேராது என்று மருத்துவரால் கைவிடப்பட்டது. ஒருநாள் முருகப்பெருமான் அவரது கனவில் தோன்றித் தனது வேலாயுதத்தினால் அவரது எலும்பைக் கட்டியது கண்டு மகிழ்ந்தார். மறுநாள் விழித்தெழுந்த போது தன்னுடைய கால் எலும்பு உண்மையாகவே கூடியிருந்ததைக் கண்டு மகிழ்ந்தார். இறைவனை மனமார வாழ்த்தினார். இதைக் கண்ணால் கண்டவர்களும் உள்ளனர் இதற்கெல்லாம் காரணம் அருள் நூல்களைப் படித்து இறையருள் பெற்றதாகும்.

அருள் நூல்கள் மருந்தாக உதவுவதுடன் பொன்னும், பொருளும் தரவல்லவையுமாகும். எப்படியெனில், வன்றொண்டர் பெருமான், தமிழால் பாட்டிசைத்தே இறைவனிடம் பொன்னும் பொருளும் வேண்டப் பெற்றார் என்பது தேவாரத்தினின்றும் புலனாகிறது. அருணகிரிநாதர் தொழுநோயினின்றும் விடுபட்டு, முருகனது புகழ் மாலையைப் பாடக் காரணமாக இருந்தவையும் அருள் நூல்களாகும்.

துறைமங்கலம், சிவப்பிரகாச சுவாமிகள், நாவலர் நூல்களிலும், ஏனைய அருள் நூல்களினாலும் ஊறித்திளைத்த காரணத்தினாலேயே நால்வர் நான்மணிமாலை போன்றவற்றை இயற்றிப் புகழுடல் பெற்றார். அவ்வாறே இராமலிங்க சுவாமிகளும் சமய குரவரது நூல்களில் திளைத்து, அவற்றிலுள்ள அரிய கருத்துக்களை தம் அருட்பாக்களாக வடித்துக் கொடுத்தார்.

இக்காலத்தில் ஆண்கள் அருள் நூல்களை ஓதுகையில் தமது பதவி உயர்ந்து, வாணிகம் பெருகி, வருவாய் மிக வேண்டுமென்று கருதலாம். பெண்களோ, தமக்கும் தமது குடும்பத்தினர்க்கும் தமது நண்பர்கட்கும் அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த சகோதரி செல்வராணி குடும்பத்தினர்...



உற்றநண்பன் அமரர் க.இராசதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்கள் யாவும் கைகூடி நலம்பெற வேண்டுமென விரும்புவர். மேலும் அவர்களது கணவன்மார் தம் வாழ்க்கை சிறந்து விளங்க வேண்டும் என்பதும் அவர்களது பெருவிருப்ப மாகும். மணமாகாத பெண்கள், திருப்பாவை, திருவெம்பாவை போன்றநூல்களை ஓதி இன்மை இன்பத்தையும் நல்ல கணவரையும் பெற வேண்டுமென்று விரதமும் அனுட்டிப்பர்.

தமிழ் நாட்டின் பெண்கள் ஔவையார் நோன்பு என்ற நோன்பினை இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள். இவ்விரதம் இராக் காலத்தில் ஆண்கள் இல்லாத இடத்தில், பல பெண்கள் ஒரு இடத்தில் கூடி இருந்து கடைப்பிடிக்கிறார்கள். இவ்விரதத்தில் அரிய பாடல்கள் பாடப்படுகின்றன. இவ்விரதத்தின் போது விசேடமான உணவும் தயாரிக்கப்படு கின்றது. இவ்வுணவை விரதம் பூர்த்தி செய்து அதிகாலையில் பெண்கள் மட்டுமே உண் கிறார்கள். இவ்விரதம் பெண்கள் அனுட்டிக்கும் போது ஆண்கள் மறந்தும் அந்த இடத்திற்கு போகமாட்டார்கள். பெண்களின் திண்ணிய எண்ணத்தின் பயனாகவும், தூய விருப்பத்தின் காரணமாகவும் நிறைந்த வாழ்வு வாழ் கிறார்கள்.

பூசையின் அங்கமாக நாம் பாடுகின்ற பாடல்களை கூச்சமின்றி நமக்குத் தெரிந்த இசையில் பாடி பழக்கப்படுத்திக் கொண்டாலி அவை எளிதில் மனப்பாடமாகும். சில பாடல்களைத் தாலாட்டாகவும், அபிநயப் பாட்டாகவும் பாடலாம். இராகம், தாளம் முதலியவை சாத்திரப்படி சரியாக அமைய வேண்டும் என்னும் நியதியும் இல்லை. உள்ளத்தை உருக்கும்படியும் பொருள் வினங் கும்படியும் பாடுதல் வேண்டும். புத்தகத்தைப் படிக்கத் தெரியாது கேள்வி வாயிலாகவே பல பாடல்களைக் கேட்டு மனப்பாடம் செய்தவர்கள் உண்டு. இப்படிப்பட்ட நல்ல பக்தியான சூழ்நிலை அமைந்த வீடுகளில் வீண்சண்டை, பூசல், மனப்போராட்டம் முதலியவை இருக் காது.

ஔவையாரிடம் ஒருவர் படிக்க வேண் டிய அருள்நூல்கள் எவை என்று வினாத் தொடுத்தார். அதற்கு தமிழ் மூதாட்டி கூறிய விடையை இங்கு காண்பது சிறப்பாக அமையும் எனக் கருதுகிறேன்.

"மூவர் தமிழும் முனிமொழியும் கோவைத் திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் எனக் கொள்" குழந்தை களுக்கு பக்திச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமானதும், அவசரமானது மான காலத்தில் வாழ்கிறோம். சிறுகுழந்தை களுக்கு தங்களைப் போன்ற குழந்தையாகிய முருகனது கதையைக் கூறி அவனது புகழைச் சொல்லும் பாடல்களைக் கற்பிக்கலாம். வைஷ்ணவர்களானால் கண்ணனைப் பற்றி எடுத்துரைக்கலாம்'. சிறுவயதில் இப்பழக் கத்தை ஏற்படுத்திக் கொண்டால் மனதில் தெளிவும் வாக்கினில் ஒளியும் ஏற்படும். அப்படிப் பழகியவருடைய வாக்கு, சொல்லும் வாக்கு அல்லது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வாக்காக அமையும். அத்தகையோர் வாக்குகளுக்கு வியாதிகளும் விஷ தோசமும் அடங்கும். அதனையே மந்திரம் என்று கூறுவார்கள். இக்கருத்தினை உணர்த்தவே,

"நிறைமொழிமொந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்று தொல்காப்பியர் விளக்கம் கொடுத்தார்.

நமது அருட்பாக்கள் துயர் துடைக்கும் மந் திரங்களாகத் திகழ்கின்றன. தேவாரப் பதிகங்கள் என்றால் முதல் பாட்டில் தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 அல்லது 11ம் பாட்டு முடியப் படித்தால் பயனுண்டு என்றதொரு பழைய நம்பிக்கையும் மரபும் உண்டு. அக்காலச் சூழ்நிலையில் இது உகந்ததாக இருந்திருக்கலாம். மன இறுக்கமும் காலக் கெடுபிடியும் உள்ள இக்காலத்தில் பதிகம் முழுவதையும் படிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது தேவையா என்று நினைக்கத் தோன்றுகிறது. என்றாலும் ஒரு சில பதிகங் களைப் பொறுத்தமட்டில் முழுமையாகத் தேவைப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. இம் முழு வடிவில்தான் இப்பதிகங்கள் மந்திர ஆற்றலைப் பெறுகின்றன.

ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட வகைத் துன்பத்தை விரிவாக எடுத்துச் சொல் கிறது. அப்பாடலின் முடிவில் குறிப்பிடப்பட்ட அத்துன்பம் சாதாரண மக்களைப் பற்றி வாட்ட லாம். ஆனால் அதே துன்பம் அடியார்களைப் பொறுத்தமட்டில் வாட்டாது என்று கூறுவதோடு பிறருக்குத் துன்பம் செய்யும் இவை அடியார் களைப் பொறுத்தமட்டில் துன்பம் செய்யாமல் இருப்பதுடன் நன்மையே செய்யும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் திருஞான சம்பந்தப் பெருமான்.

அப்பர் பெருமானின் பதிகங்களும் துன்பம் துடைக்கும் மந்திரங்களாகும். கோளாறு பதிகம் , விடம்தீர்த்த பதிகம், துயர் துடைக்கும் மறையுடையார் என்ற பதிகம், செல்வம் வேண்டி நிற்கும் இடரினும் தளரினும் என்னும் பதிகம் , வயிற்று வலி போக்கும் கூற்றாயினவாறு போன்ற பதிகங்களைப் பாடி துன்பம் நீங்கலாம் என்பது முற்றிலும் உண்மை.

இவற்றைப் படிப்பதற்கு காலம், நேரம், குறித்து – மடியுடுத்திக் கிழக்கு முகமாக நிற்றல் ஆகிய நிற்றல் எதுவும் தேவையில்லை, ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் எந்த நேரமாயினும் சரி, படுத்துக் கொண்டும் கூட இவற்றைப் படிக்க லாம். இவற்றைப் படிக்கத் தேவைப்படுவது இவை மந்திரங்கள் என்ற உறுதியான நம்பிக்கை ஒன்றுதான். தவறாமல் நாள்தோறும் மன உறுதியோடு கற்பார் விரைவில் அப்பயன் அடைவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. சந்தேகமுடைய வர்களை மனதில் கொண்டு "ஆணை நமதே" என்றும், திருவெண்காட்டுப் பதிகத்தில் "ஐயுற வேண்டாம்" என்றும் இறைவனின் "தலைமக னாகி நின்ற தமிழ்ஞான சம்பந்தன்" அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

**மறை உடையாய் தோல் உடையாய்**
**வார் சடை மேல் வளரும்**
**பிறை உடையாய் பிஞ்ஞகனே**
**என்று உனைப் பேசின் அல்லால்**
**குறை உடையார் குற்றம் ஓராய்**
**கொள்கையினால் உயர்ந்த**
**நிறை உடையார் இடர்களையாய்**
**நெடுங்காலம் மேயவனே.**

இப்பாடலில் "உன்னைப் புகழ்ந்து பேசும் வேதங்களை புலியின் தோலையும் தவறு இழைத்த சந்தரனையும் ஒன்றாக மதிக்கும் நீண்ட சடையுடைய சிவபெருமானே என்று உன்னைப் புகழ்ந்து பாடும் அடியார்களுக்கு குற்றங்களை ஆராயாமல் உயர்ந்த குறிக் கோளையும், கடைப்பிடிப்புக்களையும் உடைய அடியவர்களது தயரத்தைப் போக்க வேண்டும். நெடுங்களத்துப் பெருமானே" எனும் கருத்து வெளிப்படுகிறது. இப்பதிகம் அனைத்து இடர்களும் நீக்கும் ஆற்றல் கொண்டது.

இவ்வாறே நமது நிறைமொழி மாந்தர்கள் அருளிய அருள்நூல்கள் பற்பல பயன்களை விளைவிக்கும். முதலில் கோயிலுக்கு செல்ல வேண்டும். பின்னர் ஆலய அமைப்புப் பற்றியும் விதிமுறைகள் பற்றியும் தெரிந்து கொள்ளலாம் என்பது அடியேனின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இன்றைய மாணவர்கள் இந்துசமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களை பரீட்சைக்குப் படிக்கிறார்கள், சித்தியும் அடைகிறார்கள் ஆனால் இவர்களால் சமூகத்திற்கு விளைந்த நன்மை என்ன? எழுதிப் படித்ததோடு சமயம் முடிந்துவிட்டது. இவ்வாறு இல்லால்,



"கற்பதனால் ஆய பண் என்கொல்? வால்அறிவன்
நல்லதாள் தொழா ஆர் எனின்"

எனும் நீதிக் கருத்தை மனதில் கொண்டு துன்பம் நீங்கி இன்பமாக வாழ்வதற்கு துயர் துடைக்கும் அருள் நூல்களை படிப்போம். பயன் அடைவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிக்குத் துணை

இன்று நம் தமிழ் சமுதாயம் அரசியல் ரீதியில் கீழ்மை நிலையில் நிற்பது அகில உலகமும் அறிந்த உண்மை. தமிழ் மக்களின் நிலைப்பாட்டை நடுநிலையில் நின்று கூர்ந்து நோக்கினால் தமிழ் இனத்தின் சிறுமைக்கு தமிழ் இனமே பெரும் பொறுப்பு என்பது தெரிகிறது. அனைத்து துறையிலும் நமது செயல்கள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவது அவசியமாகும்.

கொழும்பு சென்று வரும் வேளையில் பஸ் பயணத்தில் கூட நமது செயலுக்கு நாமே பொறுப்பு, பஸ் பணயத்தில் இரவு முழுவதும் "சினிமாப் பாட்டு" ஒலிக்கிறது. ஒரு கலியாண விருந்துச் சாப்பாட்டில் சோறும் பருப்பும் மட்டுமே மீண்டும் மீண்டும் பரிமாறுவது போல் ஒரே இரசனையான பாடல்களையே ஒலிபரப்புகிறார்கள். ஆனால் அப்பாடல்கள் விருந்தில் சோறும் பருப்பும் போல கூட இருக்காமல் தனிப் பருப்பை மட்டும் இலையில் இடுவது போல காதல் பாடல்களை (காமப் பாடல்கள்) மட்டும் ஒலிபரப்புச் செய்கிறார்கள். பாடல்கள் ஆரம்பத்தில் காதல் பாட்டுப் போலவே இருந்தாலும் தொடர்ந்து அவதானித் தால் அவை "புளுபிலிம்" போல பாலுணர்வை அதிகரிக்கும் தரமானவையாகவே இருந்தன. இப்படியான பாடல்களை கூடச் சாதாரணமாக ஓரளவு நேரத்திற்கு ஒலிபரப்பினால் குறை யில்லை. தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரம் எனும்போது இப்பாடல்களை ஒலிபரப்புபவர் – கேட்பவர் – இது பற்றி தம் அதிருப்தியை வெளிப்படுத்தாது உடன்பாடுபவர் என நம் தமிழ் சமுதாயத்தின் பிரயாணிகள் தகுதி எப்படிப்பட்டது?

இதில் சிலர் "இப்படியான பாடல்களால் தான் வண்டி ஓட்டுநர் நித்திரையாகாது விழிப்புடன் செயற்படுவார்" என்று சமாதானப்படுத்துகின்றனர்! நான் பயணம் செய்த பஸ்ஸில் அவதானித்தபோது வண்டி ஓட்டுனர் பாடல் ஒலிபரப்புவதற்கான வேலையை செய்கின்றாரே ஒழிய அவர் பாட்டுக்களை கேட்பதாகத் தெரியவில்லை. அவரது அபிமான நண்பர்கள் இரண்டு மூன்று பேர் எஞ்சின் மீதிருந்து சுவாரசியமாகக் கதைக்க ஓட்டுனர் தன் கடமையைத் திறமையாக நிறைவேற்றுகிறார். நான் என் அனுபவத்தை சிலரிடம் கூறியபோது அவர்களும் என்னைப் போல உபத்திரப்பட்டதை உணர்வு பூர்வமாகக் கூறி ஆறுதல் பட்டார்கள். காமப் பாட்டு, காதல் பாட்டு என்பன தவிர தேசியப் பாட்டு, நீதிப்பாட்டு, இலக்கியப் பாட்டு, பக்திப் பாட்டு என்பன போல பல தரப்பட்ட பாடல்கள் உள்ளன. எம் தமிழ் மொழியிலே "புளுபிலிம்" தரத்திலுள்ள பாடல்களை மட்டும் ஒலிபரப்பியும் காட்டும் மகிழும் தரத்தில்தான் இலங்கைத் தமிழர் உள்ளனரா?

கொழும்புப் பிரயாணத்தில் இப்படியான பாடல்களை ஒலிபரப்பியும் கேட்டும் ரசிப்பதும் மட்'டுமல்ல வேறு பல விடயங்களிலும் உள்ளனர். சிறுமைகளை அவதானித்துப் பார்த்தால் தமிழ் மக்களின் சிறுமைக்கும் துன்பத்திற்கும் தமிழ் மக்கள் பெரும் பொறுப்பாளியாக உள்ளார்கள் என்ற இரகசியம் வெளிப்படும்.

தூர பயணங்கள் செல்லும்போது அதுவும் காட்டின் வழியே செல்லும்போது இறைவனின் திருநாமத்தை சொல்லுவதே என்றும் துணையாக அமையும். எனது மதிப்பிற்குரிய பெரியவர் ஒருவர் அறியத்தந்த விடயம் ஒன்றை எழுதுவது இவ்விடத்தில் சிறப்பாக அமையும் என்று கருதுகிறேன். நீண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்கு முன்னர் நடந்த சம்பவம் தமிழ் நாட்டு அறிஞர் திரு. கி.வா.ஜகந்நாதனை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். அவர் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருமுறை மகாநாட்டில் கலந்துவிட்டு மட்டக்களப்பில் நிகழ்வொன்றிற்கான யாழ்ப்பாணத்திலிருந்து காரில் மட்டக்களப்பு நோக்கி பயணித்தார்.

அவருடன் சில நண்பர்களும் உடன் சென்றார்கள். செல்லும் பாதையின் இரு மருங்கிலும் அடர்ந்த காடு. இரவு நேரம் அன்று அமாவாசை. கும்மிருட்டு கார்ச்சாரதி பொலன்னறுவை வந்ததும் "இரவு இங்கே தங்கி விடியற்காலையில் எழுந்து மட்டக்களப்பிற்கு போகலாமா?" என்று கேட்டார். சிரமத்தைப் பாராமல் நேரே மட்டக்களப்பிற்கு போய் விட்டால் அங்கே இளைப்பாறிக் கொள்ளலாம் என்று முடிவு செய்து பயணம் தொடர்ந்தது. பயணத்தின்போது கி.வா.ஜ அவர்கள் கந்தர் அலங்காரம் செய்யுளைப் பாடியும் பொருள் கூறியும் இலக்கண உரையாடலுடன் பயணம் நிகழ்ந்தது.

கார் வரவர வேகமாகப் போவது தெரிந்தது. அதைப் பற்றிச் சிந்திக்காமல் முருகனின் சிந்தனை தொடர்ந்தது. மட்டக்களப்பை அடைந்தவுடன் காரை ஓட்டி வந்தவர் கி.வா.ஜ. அவர்களைக் காலில் விழுந்து வணங்கி வீபூதி தரும்படி கேட்டார். அந்தச் சாரதி "உங்களால் நாம் இன்று எல்லோரும் பிழைத்தோம்" முருகன் திருவருள்தான் நம்மைக் காப்பாற்றியது என்றார். நாம் ஓர் ஆபத்திலும் அகப்பட்டுக் கொள்ளவில்லையே! அப்படியிருக்க என்ன சொல்லுகிறீர்கள்? நான் காரை நாற்பது மைல் ஐம்பது மைல் வேகத்தில் ஓட்டினேன். பிறகு 60, 70, 80 என்று முடுக்கினேன். நீங்கள் அதனைக் கவனிக்கவில்லையா? இரண்டு இடங்களில் யானை வந்தது. காட்டுக்குள் கிளையை ஒடித்துக் கொண்டிருந்த யானை காரின் ஒலியைக் கேட்டு வீதிக்குள் வந்திருந்தால் ஆபத்து நேர்ந்திருக்கும். எனக்கு நடுக்கம் ஏற்பட்டது. உங்களுடைய அலங்காரப் பாடல் மனத் தைரியத்தைத் தந்தது. பிறகு வேகமாகக் காரை ஓட்டினேன் என்று சாரதி கூறினான்.

உடன் வந்தவர் சாரதியைப் பார்த்து உனக்குத் தைரியம் தந்த பாடல் எது என்றார்.

துட்டநோய் அணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும் , கந்தன் தன்நூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி
தான் கற்று அறிந்தவரே .

இதுதான் பாட்டு. இறைசிந்தனை மிகுந்த பாடல்கள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல வழிக்கும் துணையாகும்.


எனவே பயணத்தின்போது துணைவரக் கூடிய பாடல்களையும் ஒலிபரப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யா/ தனியார் கல்வி நிறுவன விஞ்ஞான ஆசிரியர்



ஆசிரியர் "திலகம்"

உயர்திரு இரா.செல்வ வடிவேல்

அவர்களின்

# மணிவிழா - 2015

## செல்வநாதம் நூல் வெளியீடு

காலம்

28.06.2015 ஞாயிற்றுக்கிழமை

நேரம்

காலை 8.00 மணி

இடம்

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி

தலைவர்

பேராசிரியர் க.தேவராசா
(யாழ் பல்கலைக்கழகம்)
(மணிவிழாச் சபை தலைவர்)

மணிவிழா நாயகர்கள்

ஆசிரியர் "திலகம்"

உயர்திரு இரா.செல்வ வடிவேல்

திருமதி.சியாமளா செல்வ வடிவேல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- மணிவிழா சபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல்

- மங்கல இசையுடன் விழா நாயகர்களை நீராவியடி ஆலயத்தில் இருந்து அழைத்துவரல்
- மங்கல விளக்கேற்றல்
- மங்கல இசை
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
  செல்விசதீஸ்குமார் டிலக்ஷனா (K.T.C நிறுவன மாணவி)
  செல்வி திருக்கேதீஸ்வரன் தாரணி (K.T.C நிறுவன மாணவி)
- வரவேற்புரை – திரு.P.N.சுதர்சன் ஆசிரியர்
  (அமைப்பாளர் மணிவிழாச்சபை)
- ஆசியுரைகள்
  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
  (நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர்)
  பிரமச்சாரிய ஜாக்கிரதசைதன்யா சுவாமிகள்
  (சின்மயாமிஷன்)
  மோகனதாஸ் சுவாமிகள்
  (சன்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமனாறு)
  கலாநிதி ஆறு திருமுருகன்
  (தலைவர் துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பளை)
- தலைமையுரை
- கவிதாஞ்சலி – திரு.T.தயாபரன் ஆசிரியர்
- தொடக்க உரை
  திரு.ஞான திருக்கேதீஸ்வரன் ஆசிரியர்
  (செயலாளர் மணிவிழாச்சபை)
- வாழ்த்துரைகள்
  திரு.இ.வசந்தசேனன் (ஓய்வுநிலை நீதிபதி)
  (தலைவர் யாழ்ப்பாண சைவ பரிபாலன சபை)
  வைத்திய கலாநிதி ஸ்ரீ.பவானந்தராஜா
  (பிரதிப் பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை)
  திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்
  (பிரதேச செயலாளர் யாழ்ப்பாணம்)
  திருமதி அருள்நங்கை சண்முகநாதன்
  (விரிவுரையாளர் உயர்கலைக் கல்லூரி)
  திரு.N.விஜயசுந்தரம்
  (வலம்புரி ஆசிரியர்)
  திரு.செ.திருநாவுக்கரசர்
  (அதிபர் நாவலர் மகா வித்தியாலயம்)
  திரு.சண்.வாமதேவன்
  (ஓய்வுநிலை அதிபர்)
  பேராசிரியர் தி.வேல்நம்பி
  (தலைவர், தமிழ்ச்சங்கம் யாழ்ப்பாணம்)
  திரு. இரா.அருட்செல்வம் (அமைப்பாளர் மணிவிழாச்சபை)
  (A.T.C கல்வி நிலைய அதிபர்)
  திரு. செ.சுப்பிரமணியம்
  (தலைவர், தர்மகர்த்தாசபை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்)
  திரு.N.தனேந்திரன்
  (தலைவர் கொட்டடி சனசமூக நிலையம்)
  திரு.T.கருணாகரன் (சமுர்த்தி முகாமையாளர்)
- மலர் வெளியீடு
- வெளியீட்டு உரை
  வாழ்நாள் பேராசிரியர் திரு.அ.சண்முகதாஸ்
- முதல் பிரதி பெறுபவர்
  திரு.க.சோமசுந்தரம்
  (தலைவர் ஐயனார் தேவஸ்தானம் காரைநகர்)
- நூல் நயப்புரை திரு.ச.லலீசன்
  (பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
- விழா நாயகர்களை கௌரவித்தல்
- ஏற்புரை
- நன்றியுரை
  திரு.N.பிரேம்குமார்
  சுகாதாரப் பரிசோதகர்
  (உபசெயலாளர் மணிவிழாச்சபை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழாச் சபையின் நிறைவுரையாக...

தனியார் கல்வி நிலைய ஆசிரியர் உயர் திரு.இரா.செல்வவடிவேல் அவர்களது பெருமைகளை எழுத்து வடிவில் முன்வைக்க செல்வநாதம் என்ற மலர் ஒன்று வெளியிட வேண்டும் என்ற விருப்பம் எமக்குத் தோன்றியது. இவளவு அழகாகவும் நேர்த்தியாகவும், மலர்வெளிவர எமக்குத் துணை செய்தவர்களுக்கு நான்நன்றிகூறாமல்இருக்கமுடியாது. இம்மலர் சிறப்புறுவதற்கு ஆசிச்செய்திகளையும், வாழ்த்துரைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் வழங்கி மணி விழா நாயகரின் சமய, சமூக கல்விப் பணிகளும், அவர் மனிதத்துவமும் பூரணமாக எல்லோர் மனதிலும் நிலைபெற உதவியோருக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.இம்மலரில் ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் மட்டுமன்றி விழா நாயகனால் எழுதப்பட்ட கட்டுரைகளும் இடம்பெற வேண்டும் என மணிவிழாச் சபை விரும்பியமையினால் அக்கட்டுரைகளை இணைத்துக்கொள்ள விழா நாயகனுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இம்மலரை அழகுற உருவாக்க வேண்டும் என்ற பெரு விருப்பை நிறைவேற்றித் தந்த சாயி பிறிண்ட் நிறுவனத்தாருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். இம் மலரை மிகச் சிறப்பாக வடிவமைத்து எமது கையில் ஒப்படைத்த இதழ் ஆசிரியருக்கு எமது நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மணிவிழாச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி உலகின் கலங்கரை விளக்கு

# KTC

# கல்வி நிலையம்


ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில்.

SUPER GRADE
ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

தரம் 1 – 3 – திருமதி தாட்சா திருக்கேதீஸ்வரன்
N.லக்சியா

தரம் 4 – 5 – ஒன்றிணைந்த பாடம்
திருமதி வசந்தி இராமநாதன்

தரம் 5 – புலமைப்பரிசில் வகுப்பு
திருமதி வசந்தி இராமநாதன்
திரு.R.K.செல்வம்
திரு.S.காண்டீபன்



**தரம் 6, 7, 8**

| | |
|---|---|
| தமிழ், சமயம் | ஞான.திருக்கேதீஸ்வரன் |
| கணிதம் | N.நக்கீரன், K.டினேஸ் |
| ஆங்கிலம் | K.சுரேஸ் |
| விஞ்ஞானம் | K.டினேஸ் |
| குடியுரிமை, புவியியல் | B.பாலமைந்தன் |
| வரலாறு | Mrs.வசந்தி இராமநாதன் |
| சுகாதாரம் | M.சிவரூபன் |

**தரம் 9, 10, 11**

| | |
|---|---|
| தமிழ் | ஞான.திருக்கேதீஸ்வரன் |
| கணிதம் | இரா.அருட்செல்வம்<br>N.நக்கீரன் |
| விஞ்ஞானம் | K.டினேஸ், S.சங்கர் |
| வரலாறு | ப.சுரேஸ் |
| சமயம் | M.சிவரூபன் |
| ஆங்கிலம் | K.மயூரன் |
| வர்த்தகம் | K.ரமேஸ் |
| குடியுரிமை, புவியியல் | S.சபரீ |

4+ (பாலர் வகுப்பு) அநேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க திங்கள், ஞாயிறு வரை மாலை 3.30 மணி முதல் 6 .30 மணி வரை நடைபெறும்.

**ஆசிரியை - திருமதி தாட்சாயினி திருக்கேதீஸ்வரன்**

**கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் கல்வி கற்பிக்கப்படும்.**

**எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி கற்றோரே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.T.C INSTITUTE

## INUVIL

**தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகள்**
**நடைபெறுகின்றன**

**எமது ஆசிரியர் குழாம்**



| | |
|---|---|
| கணிதம் | – இரா.அருட்செல்வம் |
| | – S.பிரகாஷ் |
| விஞ்ஞாம் | – S.சிவசங்கர் |
| | – T.சதீஸ் |
| | – இரா.அருட்செல்வம் |
| தமிழ் | – N.பாலா |
| | – T.தர்மா |
| | – றஜீபன் |
| வரலாறு | – S.சுரேஷ் |
| | – M.தக்சாயினி |
| ஆங்கிலம் | – P.N.சுதர்சன், செல்வி சாங்கீதா |
| சுகாதாரம் | – டிலக்ஷன் |
| சமயம் | – றஜீபன், கிருஸ்ணா |
| வர்த்தகம் | – ரூபன் |
| ICT | – ரூபன் |

**ஆரம்ப வகுப்புக்கள்**

| | |
|---|---|
| செல்வன் கிருஷ்ணா | – கணிதம் |
| செல்வி றாதிகா | – தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் |
| செல்வி விநோதினி | – சமயம், தமிழ் |

**சிங்களம்**

திரு.நாகராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி உலகில் 25வருட கால உன்னத சேவையில்

# விக்னேஸ்வரா கல்வி நிலையம்


தனித்துவம் மிக்க ஆசிரியர்களின் தரமான சேவை

## தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள்

### எமது ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| கணிதம் | : திரு சண்.வாமதேவன் |
| விஞ்ஞானம் | : திரு.கு.மதுசுதன் |
| | திரு.க.சுரேஷ் |
| தமிழ் | : திரு.ஆ.நவநீதகிருஷ்ணன் |
| | திரு.வி. பிரசாத் |
| ஆங்கிலம் | : திரு.அ.சுதர்சன் லெம்பேட் |
| | த.சசிரூபன் |
| | திரு.ச.தர்ஷா |
| வரலாறு | : திரு.ப.சுரேஷ் |
| | சி.யோகராணி |
| புவியியல் | : திரு.ப.மகிந்தன் |
| குடியுரிமை | : கங்காதரன் |
| சுகாதாரம் | : திரு.ஆ.பவானந்தன் |
| சமயம் | : திரு.ர.சயிதன் |
| | த.இந்துமதி |
| வர்த்தகம் | : சி.சிவசோதி |



**விக்னேஸ்வரா கல்வி நிலையம்**

**இல 109, பொற்பதி வீதி,**

**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

# சக்திவேல் ஹாட்வெயர்

# SAKTHIVEL HARDWARE



கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு,

கோண்டாவில், (இனுவில்)

TEL: 021 492 1213,14,15, 077 410 9071,
0776247130. Fax: 021 224 1436.




சாயி பிறிண்டேர்ஸ் - கோண்டாவில். 077 2209474.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org